644
342
OFFICE OF THE REGISTRAR ... 9-8-1959 MADRAS

உ

ஓம் ஶ்ரீ: [illegible]

ஆபஸ்தம்ப மஹர்ஷி அருளிய

# க்ருஹ்யஸூத்ரம்.

தமிழுரையுடன் கூடியது.

இஃது
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி அவர்களின்
ஆஜ்ஞையை முன்னிட்டு
வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபையால்

கும்பகோணம்
சாரதா விலாஸ ப்ரஸ்ஸில்
அச்சிடப்பட்டு, கும்பகோணத்தில் வெளியிடப்பட்டது.

இ நன் விலை] 1952. [ரூ. 2—8—0

காபிரைட் ரிஜிஸ்டர்ட்.

RL
NS2
68305

உ

𑌓𑌂 𑌨𑌮𑌃 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑍇 ॥

ஆபஸ்தம்ப மஹர்ஷி அருளிய

# க்ருஹ்யஸூத்ரம்.

தமிழுரையுடன் கூடியது.

இஃது

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்களின்

ஆஜ்ஞையை முன்னிட்டு

வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபையால்

கும்பகோணம்

சாரதா விலாஸ பிரஸ்ஸில்

அச்சிடப்பட்டு, கும்பகோணத்தில் வெளியிடப்பட்டது.

இதன் விலை] 1952. [ரூ. 2—8—0

காபிரைட் ரிஜிஸ்டர்ட்.

ஸ்ரீ:

முத்ரை.

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்ய, ஸ்ரீமச்சங்கர பகவத் பாத ப்ரதிஷ்டித, ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிப ஜகத்குரு

ஸ்ரீமச் சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீபாதர்களால்

செய்யப்படுகின்றது

# நாரயணஸ்ம்ருதி.

---

லோகக்ஷேமத்திற்குத் தர்மானுஷ்டாநம் மூலகாரணம். தர்மானுஷ்டாநத்திற்கு ச்ரத்தை முக்யமானது. தர்மஸ்வரூபம் தெரிந்தால் ச்ரத்தை ஏற்படும். ஸாமான்ய ஜநங்களுக்கும் தர்மஸ்வரூபம் தெரிவதற்கு ஸூத்ரங்களின் பாஷாமயமான அநுவாதம் அவச்யமாகிறது என்கிற இக்கருத்தைக்கொண்டு, வேத தர்ம சாஸ்த்ர பரிபாலன ஸபையார் ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரத்திற்குத் தமிழ் அநுவாதத்தை முத்ரணம்செய்து ப்ரசுரிக்க முன்வந்திருப்பதை அறிந்து மிகவும் ஸந்தோஷிக்கிறோம்.

மோக்ஷ க்ஷேமார்த்தமான இந்த ஸத்கார்யத்தில் ப்ரவ்ருத்தித்திருப்பவர்களும், இந்த அனுவாத க்ரந்தத்தை வாசித்து தர்மத்தில் ச்ரத்தைகொள்ளும் ஆஸ்திகர்களும், ஸ்ரீ சந்த்ரமௌளீச்வர க்ருபையால் உத்தரோத்தர ச்ரேயஸ்ஸுகளையடையவேண்டியது.

முகாம், சாத்தனூர்
நந்தன-ஸூ ஆடி-மீ
13௳ ஸோமவாரம்.

நாராயணஸ்ம்ருதி:

# முகவுரை.

ஆபஸ்தம்பமஹர்ஷி அருளிச் செய்த கல்ப ஸூத்ரங்களில் "க்ருஹ்ய ஸூத்ர''மும் ஒரு பாகம், அதில், "விவாஹம்'', "உபநயநம்'', "ஜாதகர்மம்'', "நாமகரணம்'', "சௌளம்'', "பும்ஸவநம்'', "ஸீமந்தம்'', "க்ருஹப்ரவேசம்'', "ச்ராத்தம்'' முதலியவைகளின் ப்ரயோகம் சொல்லப்படுகிறது. வேதத்தில் விதிக்கப்பட்ட அக்நிஹோத்ராதி ச்ரௌதகர்மாக்களை எல்லோரும் அநுஷ்டிக் காமல் போனாலும், "விவாஹம்'' முதலிய கர்மாக்களை அநேகமாக எல்லோரும் இன்றும் அநுஷ்டித்து வருகிறார்கள். நித்யங்களாகவும், நைமித்திகங்களாகவும், "செய்யாது போனால் மஹத்தான ப்ரத்யவாயத்தைக் கொடுக்கக்கூடியவை'' களுமான அக்நிஷ்டோமம் முதலிய அநேக "ச்ரௌதகர்மாக்க''ளை நாம் கைவிட்டுவிட்டு மறந்து விட்டதால் "விவாஹம்'' முதலிய இந்தக் கர்மாக்கள் தான் நமது மதாநுஷ்டானத்தில் இன்று முக்யமான ஸ்தானத்தைப் பெற்றி ருக்கின்றன. நமது மதத்தில் பக்திச்ரத்தையுள்ள எந்த ஆஸ்திகனும் இவை களின் ஸ்வரூபத்தையும், செய்யும் முறைகளையும் தெரிந்துகொள்ளவேண்டி யது ஆவச்யகமானது. வைதிகமதத்தைச் சேர்ந்தவர்கள் எல்லோருமே எளிதில் தாங்கள் செய்யும் கர்மாக்களின் ப்ரயோகத்தைத் தெரிந்துகொள்வதற்காக, 'வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபை''யார் ஆபஸ்தம்ப க்ருஹ்யத்தைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுகிறார்கள். இதனால் தார்மிக உலகுக்கு மஹத்தான உபகாரம் ஏற்படும்.

ஆபஸ்தம்பமஹர்ஷியின் க்ருஹ்யஸூத்ரங்களைத் தெரிந்துகொள்வதற்கு முன் பொதுவாகக் கர்மாக்களின் ஸ்வரூபத்தையும், க்ருஹ்யகர்மாக்களின் விசே ஷித்த நிலையையும் தெரிந்துகொள்ள வேண்டியது அவச்யமாகிறது.

## கர்மாக்கள்.

பகவானின் அருளைப்பெற நமது மதத்தில் மூன்றுவித ஸாதனங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகள் கர்மாக்கள், பக்தி, ஜ்ஞாநம் என்று மூன்று விதமாக இருந்து வருகின்றன. இவைகளில் "பக்தி'', "ஜ்ஞாநம்''இவை மாநஸிகமானவை. ஈச்வரனைப் பற்றித் தெரிந்து கொள்வதும், அவரி டத்தில் அன்புமூலம் மனதை ஒன்றுபடுத்தி த்யாநம் செய்வதும் மனதால் மட்டும் செய்யப்படவேண்டிய கார்யங்கள். "கர்மாக்கள்'' மனது முதலிய அந்தக்கரணங்களின் உதவியோடு பாஹ்யேந்த்ரியங்களாலும் செய்யப்பட வேண்டிய கார்யம். உலகிலுள்ள த்ரவ்யங்களைக்கொண்டு வெளியில் செய்யப்

படவேண்டிய கார்யம். இதைத்தான் கர்மாவென்றும், யாகம்என்றும் சொல்லி வருகிறோம். மீமாம்ஸகர்கள் "தேவதையை உத்தேசித்து த்ரவ்யத்தை த்யாகம் பண்ணுவது யாகம்'' என்று யாகங்களுக்கு லக்ஷணம் சொல்லி, கர்மதத்வம் ''வெளியில் செய்யப்படும் கார்யம்'' என்றும், "உலகில் உள்ள த்ரவ்யத்தை அபேக்ஷித்து நிற்கிற'' தென்றும் வெளியிட்டார்கள். "அக்நயேஸ்வாஹா'' என்று சொல்லி ஆஜ்யத்தால் செய்யவேண்டிய கர்மாவில் "அக்நி'' என்ற தேவதை, "ஆஜ்யம்'' என்ற உலகில் உள்ள த்ரவ்யம், ஹோமம் என்ற கார்யத்தைச் செய்ய மனஸ் முதலிய அந்த:கரணம், மற்ற ஜ்ஞாநேந்த்ரிய கர்மேந்த்ரியங்கள் இவை அவச்யமானவைகளாக இருக்கின்றன. இந்த ஹோமத்தைச் செய்ய வெளியில் உள்ள அக்நியின் அபேக்ஷை இருப்பதும் கவனிக்கத்தக்கது.

அந்தந்தக் கர்மாக்களில் உத்தேச்யமாக வரும் அந்தந்தத் தேவதைகள் இங்கே பலனைக் கொடுக்கிறார்கள். இவைகளைச் செய்யும் முறை சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருப்பதால் அங்கே சொல்லப்பட்டபடியே இவைகளைச் செய்யவேண்டும்.

## கர்மாக்களின் நோக்கம்.

இவ்வித கர்மாக்கள் செய்வதன்மூலம் "தர்மம்'', "அர்த்தம்'', "காமம்'', ''மோக்ஷம்'' என்ற நான்குவித புருஷார்த்தங்களையும் அடையலாம், என்பது ஹிந்துமதத்தின் அடிப்படையான கொள்கை. உலகில் வாழுங்காலத்தில் மனிதன் பல வழிகளில் வாழ்க்கையை நடத்தவேண்டி வருவதால் "தர்மம்'', "அர்த்தம்'', "காமம்'' என்ற மூன்று புருஷார்த்தங்களை மனிதவர்க்கத்திற்கு ஸம்பாதித்துக் கொடுக்க ஏற்பட்ட கர்மாக்கள் கணக்கற்று இருக்கின்றன.

## கர்மாக்கள் இருவகையானவை.

இவ்வித கர்மாக்களின் ஸ்வரூபம், அதைச்செய்யும் வழி, அவைகளின் ப்ரயோகம், இவை வேதத்தை அடிப்படையாகக்கொண்டவை. "ச்ரௌதம்'', ''ஸ்மார்த்தம்'' என்று இக்கர்மாக்கள் இருவிதமானவை. வேதத்தின் ப்ராம்ஹணபாகத்தால் விதிக்கப்பட்டு, வேதமந்த்ரங்களாலேயே செய்யப்படவேண்டியவை ச்ரௌத கர்மாக்கள். அவ்விதம் ப்ராம்ஹணபாகத்தால் விதித்து விளக்கப்படாமல், வேதமூலமான ஸ்ம்ருதிகளால் விதித்து விளக்கப்பட்டு, வேதமந்த்ரங்களால் செய்யப்படவேண்டியவைகளாக இருப்பவை ஸ்மார்த்த கர்மாக்கள்.

ச்ருதி, ஸ்ம்ருதி இரண்டும் நமக்கு மூலப்ரமாணமாக இருந்துவருவதால் ஸாக்ஷாத்தாக வேதங்களின் ப்ராம்ஹண பாகங்களில் விதிக்கப்படும் கர்மாக்களை ஆதரிப்பதுபோல் வேதங்களை அடிப்படையாகக்கொண்ட ஸ்ம்ருதிகளில் விதிக்கப்படும் கர்மாக்களையும் நாம் ஆதரித்தாகவேண்டும். மேலும் வேதங்களில் ஸாக்ஷாத்தாக விதிக்கப்படும் கர்மாக்கள் "கார்ஹபத்யம்'', "தக்ஷிணாக்நி'', "ஆஹவநீயம்'' என்ற மூன்று அக்நிகளைக்கொண்டே செய்யப்படவேண்டியவைகளாக இருக்கின்றன. ஸ்ம்ருதிகளில் விதிக்கப்படும் கர்மாக்கள் அநேகமாக ஒரே அக்னியில் செய்யப்படவேண்டியவைகளாகவும் இருக்கின்றன.

## க்ருஹ்ய கர்மாக்கள்.

மேற்கூறப்பட்ட இரண்டுவகை கர்மாக்களில் "க்ருஹ்ய கர்மாக்கள்" ஸ்ம்ருதிகளில் விதிக்கப்பட்ட கர்மாக்கள். வேதமந்த்ரங்களைக்கொண்டே இவைகளைச் செய்யவேண்டும். ஒரே அக்நியைக்கொண்டே இவைகளைச் செய்யவேண்டும்.

## க்ருஹ்ய கர்மாக்களின் நோக்கம்.

ஸகல புருஷார்த்தங்களையும் ஸாதித்துக்கொடுக்கக்கூடிய சக்தி கர்மாக்களுக்குப் பொதுவாக இருந்தாலும், க்ருஹ்ய ஸூத்ரங்களில் சொல்லப்படும் கர்மாக்களுக்குள்ள விசேஷத்தை நாம் தெரிந்துகொள்ள வேண்டியது அவச்யமாகிறது.

வாழ்க்கையைப் "பரிசுத்த"மாக்கி "தைவிக"மாக ஆக்குவதற்கே க்ருஹ்ய கர்மாக்கள் ஏற்பட்டிருகின்றன. "மநு" முதலிய மஹர்ஷிகள் "ஜாதகர்மா முதலிய கர்மாக்களால் த்விஜர்களுக்குப் பிதா மூலமாகவோ, மாதா மூலமாகவோ ஏற்படும் ஸகல பாபங்களும் போக்கடிக்கப்படுகின்றன"

'𑌗𑌾𑌰𑍍𑌭𑍈𑌰𑍍𑌹𑍋𑌮𑍈𑌰𑍍𑌜𑌾𑌤𑌕𑌰𑍍𑌮𑌚𑍌𑌡𑌮𑍌𑌞𑍍𑌜𑍀𑌨𑌿𑌬𑌨𑍍𑌧𑌨𑍈𑌃 ।
𑌬𑍈𑌜𑌿𑌕𑌂 𑌗𑌾𑌰𑍍𑌭𑌿𑌕𑌂𑌚𑍈𑌨𑌃 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌨𑌾𑌮𑌪𑌮𑍃𑌜𑍍𑌯𑌤𑍇' ॥

என்று கூறுகின்றனர். மேலும் இந்தக் கர்மாக்களைச் செய்யும் ஸந்தர்ப்பத்தையும், இந்தக் கர்மாக்களில் ஸம்பந்தப்படும் மந்த்ரங்களின் தாத்பர்யத்தையும் கவனித்தால் வாழ்க்கையை நன்கு நடத்தி, வாழ்க்கையின் பயனை அடைய, இந்தக் கர்மாக்கள் மிகவும் அவச்யமானவை என்று தெரிகிறது. மனிதனின் வாழ்க்கையில் மிகவும் முக்யமான ஸம்பவங்களில் இங்கே கர்மாக்கள் சொல்லப்படுகின்றன. "பிறப்பு", "படிப்பு", "ஒரு ஸ்த்ரீயுடன் சேர்ந்து வாழ்க்கையை நடத்த ஆரம்பிப்பது" இவை வாழ்க்கையில் உள்ள மிகவும் முக்யமான ஸம்பவங்கள். "பிறப்பு" காலத்தில் "ஜாதகர்மா" சொல்லப்படுகிறது. "படிப்பை" ஆரம்பிக்கும் காலத்தில் "உபநயனம்" சொல்லப்படுகிறது. ஒரு ஸ்த்ரீயை வாழ்க்கைக்குத் துணையாகக் கொள்ளுங் காலத்தில் "விவாஹம்" என்ற கர்மா சொல்லப்படுகிறது.

**ஜாதகர்மாவில்** பிறந்த உடனேயே குழந்தையின் பிறப்பைத் தைவிகமாக்க மந்த்ரங்களால் குழந்தையைத் தொடவேண்டும். மந்த்ரத்தாலேயே குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்கவேண்டும். இதற்காக ஏற்பட்ட மந்த்ரங்களில் பாலைக் குடிக்கும் குழந்தைக்கு "ஆயுஸ்", "வர்ச்சஸ்", "யசஸ்", "பலம்" இவை ஏற்படவேண்டுமென்று ப்ரார்த்திக்கப்பட்டிருக்கிறது.

**உபநயன கர்மாவில்** படிப்பிற்காக ஆசார்யனை அடைய விஸ்தாரமான கார்யங்கள் சொல்லப்படுகின்றன. இங்குள்ள மந்த்ரங்களில் வருங்காலத்தில் மாணவன் க்ஷேமத்தை அடைய, தெளிவாயும் கூர்மையாயும் உள்ள புத்தி வேண்டுமென்று ப்ரார்த்திக்கப்படுகிறது.

விவாஹத்தில் பெண்ணைப் பர்த்தா முதலில் பார்ப்பது முதல் அநேக கார்யங்கள் சொல்லப்படுகின்றன. இங்குள்ள மந்த்ரங்களில் தம்பதிகளின் பரஸ்பர ப்ரேமை அழிவில்லாததாக இருக்கவேண்டுமென்றும், இருவரிடத்திலும் பிரிக்கமுடியாத ஒற்றுமை ஏற்படவேண்டும் என்றும் ப்ரார்த்திக்கப் படுகிறது.

“பெயரிடுவது'', “அந்நத்தைச் சாப்பிட ஆரம்பிப்பது'', “கர்ப்பத்தை உண்டாக்குவது'', ''கர்ப்பம் பூர்ணமாக வளருவது'', “புதிதாக க்ருஹத்தை நிர்மாணிப்பது'' முதலிய ஒவ்வொரு ஸந்தர்ப்பத்திற்கும் கர்மாக்கள் இங்கே சொல்லப்படுகின்றன. அந்தந்த வர்ஷம் புதிதாகத் தாந்யம் விளைந்து வந்ததும் அதை உபயோகிக்க ஆரம்பிக்கும் காலத்தில் “ஆக்ரயணம்''என்ற கர்மா சொல்லப்படுகிறது. சுருங்கச் சொன்னால், ஹிந்து மதத்தின் மேன்மை இந்தக் கர்மாக்கள் மூலம் மிகவும் ப்ரகாசிக்கிறதென்று கூறலாம். “வாழ்க்கை வெறும் லௌகிகமானதல்ல, வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சமும் தைவசம்பந்த முள்ளது, ஆகவே வாழ்க்கையின் எந்த அம்சத்தையும் தைவ பலத்தைக் கொண்டுதான் நடத்த முடியும்'', ''தைவாநுக்ரஹமில்லாமல் எந்த அம்சத்தையும் நாம் நிர்வஹிக்கமுடியாது'' என்ற உயர்ந்த கொள்கை இங்கு ஒவ்வொரு கர்மாக்களிலும் காணப்படுகிறது. ஹிந்து மதத்தினரின் ஸமூக சரித்ரத்தில் எவ்வளவு முன்னேற்றம் பின்னேற்றம் இவை இருந்தாலும் தனிப்பட்ட மனிதன் என்ற முறையில் அவரவர்கள் தங்கள் தங்கள் வாழ்க்கையை இந்தக் கர்மாக்களை அனுஷ்டிப்பது மூலம் பரிசுத்தப்படுத்திக்கொண்டு, தைவிகத் தன்மையை உணர்ந்துவருவதால்தான் ஹிந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் கோடிக்கணக்கான வர்ஷங்களுக்குப் பிறகும் ஒரே விதமாக இருந்து வருகின்றனர்.

ஆகவே, ''பரிசுத்த''மாகவும் ''வெற்றிகரமா''கவும் வாழ்க்கையை முழுவதும் நடத்த உதவவே க்ருஹ்ய கர்மாக்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த க்ருஹ்ய கர்மாக்களை நிரூபிக்க ஏற்பட்டவைகளே க்ருஹ்ய ஸூத்ரங்கள்.

## அநேக க்ருஹ்யஸூத்ரங்கள் ஏன் ஏற்பட்டிருக்கின்றன?

வேதங்களில் சொல்லப்படும் ''ச்ரௌத'' கர்மாக்களை நிரூபிக்கும் மஹர்ஷிகள் ஒவ்வொரு வேதத்தைப் பின்பற்றி அவைகளை நிரூபிக்கிறார்கள். உதாஹரணமாக ருக்வேதத்தைப் பின்பற்றி 'ஆச்வலாயனரும்', யஜுர் வேதத்தைப் பின்பற்றி 'ஆபஸ்தம்ப'ரும்', ஸாம வேதத்தைப்பின்பற்றி “த்ராஹ்யாயன''ரும், அதர்வவேதத்தைப் பின்பற்றி 'கௌசிக'ரும் கல்பஸூத்ரங்களை எழுதியிருக்கிறார்கள். ஒரே வேதத்தை அடிப்படையாகக்கொண்ட அநேக கல்பங்கள் ''சாகா'' பேதம் காரணமாக ஏற்பட்டிருப்பதையும் பார்க்கிறோம். உதாஹரணமாக ஒரே ருக் வேதத்தைப் பின்பற்றியே “சாங்காயனர்'' முதலிய மஹர்ஷிகளும், ஒரே யஜுர் வேதத்தைப் பின்பற்றி போதாயானர், ஸத்யாஷாடர் முதலிய மஹர்ஷிகளும், ஒரே ஸாமவேதத்தைப் பின்பற்றி ''லாட்யாயனர்'' முதலிய மஹர்ஷிகளும் ஸூத்ரங்களை எழுதியிருக்கிறார்

கள். இவ்விதம் ஸூத்ரங்களைச் செய்த மஹர்ஷிகள் எல்லோரும் தங்கள் தங்கள் ஸூத்ரங்களில் ச்ரௌத கர்மாக்களை நிரூபிப்பதுபோல் க்ருஹ்ய கர்மாக்களையும் நிரூபிக்கின்றனர். அதனால் ஒரே வேதத்தில் பல ஸூத்ரங்களும், அந்தந்த வேதங்களுக்குத் தனித்தனியான ஸூத்ரங்களும் ஏற்பட்டிருக்கின்றன. ஜாதகர்மா முதலிய கர்மாக்களின் தத்வங்களை எல்லோரும் பொதுவாக ஒப்பினாலும் அந்தந்த வேதங்கள், சாகைகள், அந்தந்த வேதிகளிடையில் உள்ள ஸம்ப்ரதாயம் இவை காரணமாக "மந்த்ர பேதம்", "செய்ய வேண்டிய சில கார்யங்களில் பேதம்" முதலியவைகளைப் பார்க்கிறோம். இதனால் அந்தந்த ஸூத்ரத்தைச் சேர்ந்தவர்களுக்கு அந்தந்த ஸூத்ரங்கள், அவைகளில் உள்ள மந்த்ரங்கள் அவச்யமாகின்றன.

## ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்.

இந்த ரீதியில் அமைந்துள்ள க்ருஹ்யஸூத்ரங்களில் ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரமுமொன்று. இவர் யஜுர் வேதத்தில் ஒரு சாகையைப் பின்பற்றி கல்ப ஸூத்ரங்கள் எழுத ஆரம்பித்து, ச்ரௌத கர்மாக்களை நிரூபித்தபிறகு இங்கு க்ருஹ்ய கர்மாக்களை நிரூபிக்கிறார். ஆபஸ்தம்பரின் காலம், அவர் இருந்த தேசம், அவரது ஸூத்ரங்கள் அமைந்திருக்கும் நிலை இவைகளை நமது ஸபையின் "ஆபஸ்தம்ப தர்ம ஸூத்ரத்"தின் தமிழ் மொழிபெயர்ப்பின் முகவுரையில் விஸ்தாரமாகப் பார்க்கலாம். அதனால் அவைகளை இங்கு மறுபடியும் நிரூபிக்கவில்லை.

க்ருஹ்யஸூத்ரம் 23 கண்டங்கள் உள்ளது. அங்கு ஸர்வகர்மாக்களுக்கும் பொதுவான பூர்வோத்தராங்கங்களை முதலில் நிரூபித்துவிட்டு, "விவாஹ" ப்ரயோகத்தை 2-12 முதல் 8-10 வரை நிரூபிக்கிறார். பத்தாவது கண்டம் முதல் 11-வது கண்டம் முடிய "உபநயந"த்தை நிரூபிக்கிறார். 12-ஆம் கண்டம் முடிய "ஸ்நாநம்" சொல்லப்படுகிறது. பதின்மூன்றாவது கண்டத்தில் "அதிதி பூஜையில்" "மதுபர்க்க"மும், 14-ல் "ஸீமந்தம் பும்ஸவநம்", 15-ல் "ஜாத கர்மா" "நாமகரணம்" இவைகளும், 16-ஆவது கண்டத்தில் "அந்நப்ராசநம்" "சௌளம்" இவைகளும், 17-ஆவது கண்டத்தில் "க்ருஹப்ரவேசமும்" 18-ஆவது கண்டத்தில் "ஸர்ப்பபலி", 19-ல் "ஆக்ரயணம்" இவைகளும், 19, 20-ஆவது கண்டங்களில் "ஹேமந்த ப்ரத்யவரோஹணம்" "ஈசாநபலி" இவைகளும், 21, 22-ஆவது கண்டங்களில் "மாஸிச்ராத்தம்" "அஷ்டகை" இவைகளும் நிரூபிக்கப்படுகின்றன. ஆங்காங்கே சில காம்ய ப்ரயோகங்களும் நிரூபிக்கப்படுகின்றன.

## வ்யாபாரிகளுக்கு "பண்யகர்மா".

சரக்குகளை ஏராளமாக உற்பத்திபண்ணி பிறகு அவைகளை விற்கமுடியாமல் வ்யாபாரிகள் கஷ்டப்பட்டால் அவர்களின் கஷ்டத்தைப் பரிஹரித்து சரக்கு விற்பனையாகும்படி செய்ய, "பண்ய கர்மா" என்பதை 23-25ல் நிரூபிக்கிறார்.

## வேலை நிறுத்தம் செய்துவிட்டு ஓடிவிட்ட தொழிலாளிகளைத் திரும்பவும் தொழிலுக்கு வரச்செய்யக் கர்மா.

23-67ல் வேலை நிறுத்தம் செய்துவிட்டு ஓடிப்போய்விட்ட தொழிலாளிகளைத் திரும்பவும் வேலைக்கு வரச்செய்ய ஒரு கர்மா சொல்லப்படுகிறது.

## க்ருஹ்ய ஸூத்ரமும், மேனுட்டாரும்.

ஹிந்து மதத்தினரின் அன்ருட வாழ்க்கையுடன் ஸம்பந்தப்பட்டுள்ள க்ருஹ்ய ஸூத்ரங்களைப்பற்றி "Herman **Oldenberg" "Buhler" Pr of "Knauer" "Max Muller", Pr of "Garbe", "Von Bradke", Stenzler W, Caland** முதலிய மேனுட்டு ஆராய்ச்சிக்காரர்கள் பலவித சர்ச்சைகளில் இறங்கி, அநேகவிதமான முடிவுகளை வெளியிடுகிருர்கள். ஜர்மனி தேசத்து அநேக பத்திரிகைகளில் ஒரு நூற்ருண்டுவரை "க்ருஹ்ய ஸூத்ரங்கள்" "க்ருஹ்ய கர்மாக்கள்" இவைகளைப்பற்றின சர்ச்சைகள் மிகவும் நடந்திருக்கின்றன. வைதிககர்மாக்கள்(ச்ரௌதகர்மாக்கள்)மிகவும் விஸ்தாரமானவைகளாக இருப்பதால் அவைகளைச் செய்யமுடியாத நிலையில் சுருக்கமாக அமைந்துள்ள இந்த க்ருஹ்ய கர்மாக்கள் ஏற்பட்டிருக்கலாம் என்றும், வேதங்களில் க்ருஹ்யகர்மாக்களைக் காண முடியாதென்றும் சரித்ர ஆராய்ச்சியில் இறங்கியவர்கள் சிலர் கூறுகிருர்கள். இதனுல் க்ருஹ்ய ஸூத்ரங்களைப்பற்றிய சில சர்ச்சைகளை இங்கு நாமும் செய்யவேண்டிய அவச்யம் ஏற்படுகிறது.

## வேதங்களும், க்ருஹ்ய கர்மாக்களும்.

க்ருஹ்ய கர்மாக்களை விதிக்கும் க்ருஹ்ய ஸூத்ரகாரர்களே வேதங்களில் ஸாக்ஷாத்தாக விதிக்கப்படும் ச்ரௌத கர்மாக்களையும் நிரூபிக்கிருர்கள். அப்படி நிரூபிக்கும் மஹர்ஷிகள் ஓரிடத்திலாவது ச்ரௌதகர்மாவில் சக்தியில்லாதவனுக்கு க்ருஹ்ய கர்மாக்கள் சொல்லப்படுகின்றன என்று சொல்லவில்லை. அதனுல், த்விஜர்களுக்கு "ச்ரௌத கர்மா" "க்ருஹ்ய கர்மா" இரண்டுமே அவச்யமானவைகளாக ஆகின்றன. க்ருஹ்ய கர்மாக்களை வேத மந்த்ரங்களைக் கொண்டே செய்யவேண்டுமென்று க்ருஹ்யஸூத்ரகாரர்கள் விதிப்பதால், வேதங்களில் க்ருஹ்ய கர்மாக்களுக்கு மூலாதாரமிருப்பதாக ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். க்ருஹ்ய ஸூத்ரங்களிலேயே க்ருஹ்ய கர்மாக்களின் விதி காணப்பட்டாலும், க்ருஹ்ய ஸூத்ரங்களும் ஸ்ம்ருதிகள் என்ற முறையில் வேதங்களையே தமக்கு மூலாதாரமாகக் கொண்டிருப்பதால் க்ருஹ்ய கர்மாக்களுக்கு வேதங்களில் ஆதாரமிருப்பதாகக் கொள்ளவேண்டும். அதனுல் சரித்ரரீதியில் வாதம் பண்ணுபவர்கள் வேதங்களில் க்ருஹ்ய கர்மாக்களைப்பற்றின ப்ரஸ்தாபமில்லை யென்ருே, வேதகாலங்களில் க்ருஹ்ய கர்மாக்களின் அநுஷ்டானம் கிடையாதென்ருே கூறுவது ஆதாரமற்ற கூற்று என்று தீர்மானமாகிறது. க்ருஹ்ய கர்மாக்களைச் செய்வது மூலம் சுத்தம் ஆனவனுக்கு ச்ரௌத கர்மாக்கள் விதிக்கப்படுகின்றன

என்று க்ருஹ்ய ஸூத்ர வ்யாக்யாதாக்களும் கூறுகின்றனர். அதனால் ச்ரௌத கர்மாக்களுக்கும், க்ருஹ்ய கர்மாக்களுக்கும் ஒரு வழியிலும் விரோதமில்லை.

**மேலும்,** இப்பொழுது அத்யயநத்தில் இருந்துவரும் வேத பாகங்களில் பெரும்பான்மையான பாகம் ச்ரௌத கர்மாக்களைப்பற்றியே சொல்லிக் கொண்டிருந்தாலும் இன்று அத்யயநத்திலுள்ள வேதங்களின் மந்த்ர பாகத்திலும் ப்ராஹ்மண பாகத்திலும் பலவிடங்களில் க்ருஹ்ய கர்மாக்களின் ப்ரஸ்தாபமிருந்துவருவதை யாரும் மறுக்க முடியாது.

உதாஹரணமாக, ருக்வேதத்தின் ஐதரேய ப்ராம்ஹணம் (8—10—9)

'𑌸𑌤𑍍𑌯 𑌗𑍃𑌹𑌾𑌨𑍁 𑌵𑌶𑍍𑌵𑌾𑌸 𑌗𑍃𑌹𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌗𑍍𑌨𑍇𑌃'

என்று க்ருஹ்யாக்நியைக் குறிப்பிடுகிறது.

சதபத ப்ராம்ஹணம் (11—5—4)

'𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌮𑌾𑌗𑌾𑌮𑌿𑌤𑍍𑌯𑌾𑌹 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣 𑌏𑌵𑍈𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌨𑌿𑌵𑍇𑌦𑌯𑌤𑌿। 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌾𑌰𑍍𑌯𑌸𑌾𑌨𑍀𑌤𑍍𑌯𑌾𑌹 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣 𑌏𑌵𑍈𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌪𑌰𑌿𑌦𑌦𑌾𑌤𑌿 𑌅𑌥𑍋 𑌆𑌹 𑌕𑍋 𑌨𑌾𑌮𑌾𑌸𑍀𑌤𑌿 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌰𑍍𑌵𑍈 𑌕𑌃 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌮𑍇𑌵𑍈𑌨𑌂 𑌤𑌤𑍍𑌕𑍃𑌤𑍍𑌵𑍋𑌪𑌨𑌯𑌤𑍇'

என்றாரம்பித்து உபநயந மந்த்ரங்களை விளக்கி அங்குச் செய்யவேண்டிய கார்யங்களையும் விதிக்கிறது.

அதே சதபத ப்ராம்ஹணத்தில் (14—9—4—17)

'𑌅𑌥 𑌯 𑌇𑌚𑍍𑌛𑍇𑌤𑍍 𑌪𑍁𑌤𑍍𑌰𑍋 𑌮𑍇 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑍋 𑌵𑌿𑌜𑌿𑌗𑍀𑌤𑌃 𑌸𑌮𑌿𑌤𑌿𑌂𑌗𑌮𑌃 𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌿𑌤𑌾𑌂 𑌵𑌾𑌚𑌂 𑌭𑌾𑌷𑌿𑌤𑌾 𑌜𑌾𑌯𑍇𑌤 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌵𑍇𑌦𑌾𑌨𑌨𑍁𑌬𑍍𑌰𑍁𑌵𑍀𑌤 𑌸𑌰𑍍𑌵𑌮𑌾𑌯𑍁𑌰𑌿𑌯𑌾𑌦𑌿𑌤𑌿'

என்று ஆரம்பித்து "கர்ப்பாதானம்" "ஜாதகர்மா" இவைகளை விஸ்தாரமாக விளக்குகிறது.

மேலும், க்ருஹ்ய ஸூத்ரகாரர்கள் தங்களுடைய கர்மாக்களை நிரூபிக்கும் காலத்தில் தங்களுடைய நிரூபணத்திற்கு ப்ரமாணமாக பல இடங்களில் மந்த்ர பாகங்களையும் ப்ராம்ஹண பாகங்களையும் உதாஹரிப்பதைப் பார்க்கிறோம்.

உதாஹரணமாக, ஆச்வலாயந மஹர்ஷி "பாகயஜ்ஞங்"களுக்கு ப்ரமாணமாக '𑌯𑌃 𑌸𑌮𑌿𑌧𑌾 𑌯 𑌆𑌹𑍁𑌤𑍀' (ருக்வேதம் 8-19-5) என்ற மந்த்ரத்தை எடுக்கிறார். இந்த ருக்கிற்கு வ்யாக்யாநமாக அமைந்துள்ள ப்ராம்ஹணத்தையும் விஸ்தாரமாக **இதிப்ராம்ஹணம்** என்று நிரூபிக்கிறார்.

போதாயநமஹர்ஷி

'𑌸𑌰𑍍𑌵𑍇𑌣 𑌵𑍈 𑌯𑌜𑍍𑌞𑍇𑌨 𑌦𑍇𑌵𑌾𑌃 𑌸𑍁𑌵𑌰𑍍𑌗𑌂 𑌲𑍋𑌕𑌮𑌾𑌯𑌨𑍍 𑌪𑌾𑌕𑌯𑌜𑍍𑌞𑍇𑌨 𑌮𑌨𑍁𑌰𑌶𑍍𑌰𑌾𑌮𑍍𑌯𑌤𑍍'

தைத்திரீய ஸம்ஹிதை (2—6—7) என்ற வேதபாகம் பாகயஜ்ஞத்தைப் பற்றிக் கூறுவதாக அபிப்ராயப்படுகிறார். மேலும், கீழ்க்கண்ட வேதபாகங்களில் பலவித க்ருஹ்யகர்மாக்களின் ப்ரஸ்தாபமிருந்து வருவதை நாம் பார்க்

கிறேம். போதாயநாதிகளான சில க்ருஹ்யகாரர்களும் இந்த அபிப்ராயத்திற்கு அநுகூலமாகவே நிரூபிக்கிறுர்கள்.

‘𑌯𑌾𑌂 𑌕𑌾𑌮𑌯𑍇𑌤 𑌦𑍁𑌹𑌿𑌤𑌰𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌸𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑌿 𑌤𑌾𑌂
𑌨𑌿𑌷𑍍𑌟𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌦𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌿𑌯𑍈𑌵 𑌭𑌵𑌤𑌿 𑌨𑍈𑌵 𑌤𑍁 𑌪𑍁𑌨𑌃
𑌆𑌗𑌚𑍍𑌛𑌤𑍀𑌤𑌿 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌵𑍇𑌕𑍍𑌷𑍋 𑌵𑌿𑌧𑌿𑌃’

(3—3) என்ற வேதபாகம் விவாஹ கர்மத்தைச் செய்யவேண்டிய நக்ஷத்ரத்தைக் குறிப்பிடுவதாக ஆபஸ்தம்பர் கூறுகிறுர்.

‘𑌦𑍇𑌵𑌾 𑌵𑍈 𑌪𑍁𑌷𑍍𑌟𑌿𑌂 𑌨𑌾𑌵𑌿𑌨𑍍𑌦𑌨𑍍 𑌤𑌾𑌂 𑌮𑌿𑌥𑍁𑌨𑍇𑌽𑌪𑌶𑍍𑌯𑌨𑍍’

(தை. ஸம்—2—1—9) என்ற ப்ராம்ஹணம் விவாஹ தத்வத்திற்கே அடிப்படையாக இருப்பதாகப் போதாயநர் தெரிவிக்கிறுர். போதாயந ஸூத்ரகாரர் தமது க்ருஹ்யத்தில் ஒவ்வொரு நிரூபணத்திற்கும் ஸம்பந்தப்பட்ட மந்த்ரங்களேயோ ப்ராஹ்மணங்களேயோ உதாஹரிக்காமலிருப்பதில்லே.

புண்யாஹவாசநத்தை நிரூபிக்கும்பொழுது போதாயநர் கையாளும் ப்ரமாணம் வேதத்தின் ப்ராம்ஹணம் தான் என்பதை யாரும் மறுக்கமுடியாது. வேதங்களில் காணப்படும் பாகயஜ்ஞ என்ற பதம் க்ருஹ்ய கர்மாக்களேயே குறிப்பிடுகின்றது என்று தெரிகிறது. அதனுலேயே க்ருஹ்யகாரர்கள் தாங்கள் நிரூபிக்கும் கர்மாக்களுக்கு பாகயஜ்ஞம் என்று பெயரிட்டு நிரூபிக்கின்றனர்.

மேலும், க்ருஹ்ய கர்மாக்களுக்கு உபயோகப்படும் மந்த்ரங்கள் அநேகமாக அந்தந்த வேதங்களின் மந்த்ர காண்டங்களிலேயே படிக்கப்படுகின்றன. ருக்வேதம், அதர்வ வேதம் இவைகளில் விவாஹம், அபரகார்யம் இவைகளின் மந்த்ரங்கள் ஸம்ஹிதையிலேயே படிக்கப்பட்டிருக்கின்றன. யஜுர்வேத ஆரண்யகத்தில் அபரகார்ய மந்த்ரங்கள் படிக்கப்பட்டிருக்கின்றன. ஸாமவேதிகளுக்கான க்ருஹ்ய மந்த்ரங்கள் "ஸாமவிதாந ப்ராம்ஹணம்" என்ற ப்ராம்ஹணத்திலேயே சொல்லப்பட்டிருக்கின்றன. யஜுர்வேதிகளின் க்ருஹ்ய கர்மாக்களின் விவாஹாதிகளின் மந்த்ரங்கள் யஜுர்வேதிகளின் நான்கு காண்டங்களில் ஒன்றுன வைச்வதேவ காண்டத்தில் படிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, வேதங்களிலேயே க்ருஹ்ய கர்மாக்களுக்கும் ப்ரமாணமிருப்பதை யாரும் மறுக்கமுடியாது.

மேலும், மூன்று அக்நிகளேக்கொண்டு செய்யும் ச்ரௌத கர்மாவிற்கு ப்ராம்ஹணமிருப்பது போல க்ருஹ்ய கர்மாக்களுக்கும் தனியாக ப்ராம்ஹணம் இருந்துவந்து காலக்ரமத்தில் அது மறைந்துவிட்டதென்று தெரிகிறது. அதனுலேயே ஆபஸ்தம்பர்

‘𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋𑌕𑍍𑌤𑌾 𑌵𑌿𑌧𑌯𑌃 𑌤𑍇𑌷𑌾𑌮𑍁𑌤𑍍𑌸𑌨𑍍𑌨𑌾𑌃 𑌪𑌾𑌠𑌾𑌃 𑌪𑍍𑌰
𑌯𑍋𑌗𑌾𑌦𑌨𑍁𑌮𑍀𑌯𑌨𑍍𑌤𑍇’

என்று ஸ்ம்ருதிகளில் சொல்லப்படும் தர்மங்களுக்கு மூலபூதமான ப்ராம்ஹணம் இருந்து மறைந்து விட்டதென்று கூறுகிறுர். அதனுலேயே ஆபஸ்தம்ப மஹர்ஷி சில இடங்களில் ப்ராம்ஹணாவேக்ஷாவிதி: என்று வேதத்தை நேருக்கு நேராகத் தமக்கு உதாஹரணமாக எடுத்தாலும்

'अथ कर्माण्याचाराद्यानि गृह्यन्ते'

என்று சிஷ்டாசாரத்தைத் தாம் நிரூபிக்கப்போகும் கர்மாக்களுக்கு ப்ரமாண மாகக் கூறுகிறார். சிஷ்டர்களுடைய ஆசாரம் வேதங்களை ஆதாரமாகக் கொண்டு ஏற்பட்டதென்பது எல்லோரும் ஒப்புக்கொண்ட அடிப்படை. ஆகவே, வேதங்களையும் க்ருஹ்ய கர்மாக்களையும் பிரித்துப்பேச இடமில்லை.

## மந்த்ரப்ரச்நம் வேதபாகத்தைச் சேர்ந்ததே.

யஜுர்வேதத்தில் விவாஹாதிகளின் மந்த்ரங்கள் ஒரே இடத்தில் சேர்ந்து படிக்கப்பட்டிருக்கின்றன. இது வைச்வதேவ காண்டத்தைச் சேர்ந்தது. இதற்கு மந்த்ரப்ரச்நம் என்று பெயர். இங்கு மந்த்ரங்கள் அமைந்துள்ள வரிசைக் க்ரமத்திலேயே ஆபஸ்தம்பர் க்ருஹ்யஸூத்ரத்தில் கர்மாக்களை நிரூபிக்கிறார். ஒரு சிலர் இந்த மந்த்ரப்ரச்நம் வேதத்தைச் சேர்ந்ததா இல்லையா என ஸந்தேஹிக்கின்றனர். ஸூத்ரங்களில் மந்த்ரங்களின் அடிவரவை (ப்ரதீகம்)எடுக்காமல் உத்தரேண உத்தரயா என்று ஸூத்ரகாரர் மந்த்ரங்களை எடுப்பதைக்கொண்டு இவர்கள் ஸம்சயப்படுகிறார்கள். உண்மையில் இதுவும் வேதபாகத்தைச் சேர்ந்ததே. இங்கே காணப்படும் மந்த்ரங்கள் அநேகமாக ருக்வேதத்திலும், அதர்வ வேதத்திலும் காணப்படுவதால் மந்த்ரங்களை ஆபஸ் தம்பர் ஸ்ருஷ்டித்ததாகக் கூறமுடியாது. மந்த்ரங்களின் வரிசை க்ரமத்தை ஆபஸ்தம்பர்தான் ஏற்படுத்தினார் என்றுகூற பலமான ப்ரமாணமொன்று மில்லை. ஆபஸ்தம்பரை ஸம்ஹிதாகாரராக யாரும் குறிப்பிடவில்லை. மேலும், இங்கே படிக்கப்படும் மந்த்ரத்தைப்பற்றிச் சர்ச்சை செய்கையில்

'ऊढं व सावाहनीया वैश्वदेवकाण्डे पाठे पाठे उत्त्र्यनुवाके समाम्नाता'

என்று ஸாயணபாஷ்யகாரர் மந்த்ர ப்ரச்நம் வைச்வதேவ காண்டத்தைச் சேர்ந்ததென்று ஸ்பஷ்டமாகச் சொல்லிவிட்டார். ஸுதர்சநபாஷ்யகாரரும் மந்த்ர ப்ரச்நத்தில் விவாஹாதி மந்த்ரங்களுக்கு முன்னால் வைச்வதேவ மந்த்ரங் களுக்குப் பாடமிருக்கின்றதென்பதை ஸ்தாபிக்கும் காலத்தில்,

'तथास्य ब्रह्मयज्ञे पारायणे चाप्येतेषां वंशक्रमेणाध्ययनं वेदितव्यम्'

என்று மற்ற வேதபாகங்களுக்கு ப்ரஹ்மயஜ்ஞம் பாராயணம் இவை இருப்பதுபோல் இந்தப் பாகத்திற்கும் ப்ரஹ்மயஜ்ஞம் பாராயணம் இவை உண்டென்று சொல்லுகிறார். மேலும், தைத்ரீயாரண்யகமே மந்த்ரப்ரச்நம் வேதமென்பதைத் தெரிவிக்கிறது. வேதம், முன்னால் முழுவதும் படிக்கப்பட்ட மந்த்ரத்தை மறுபடியும் முழுவதும் திருப்பிச் சொல்லும் பழக்கம் கிடையாது. மந்த்ராதியை மட்டும்தான் சொல்லும். மந்த்ரத்தின் ஆதி மட்டும் சொல்லப் பட்டிருந்தால் வேதத்திலேயே முன்னால் பாடமிருந்திருப்பதாகக் கொள்ள வேண்டும். ப்ரக்ருதத்தில் ஆரண்யத்தில் சதமிந்நு சரத: என்ற மந்த்ரத்தின் அடி காணப்படுகிறது. இதன் முழுமந்த்ரம் மந்த்ரப்ரச்நத்தில்தான் படிக்கப் பட்டிருக்கிறது. இந்த வேதத்தின் எந்தப்பாகத்திலும் இதன் முழு மந்த்ரம்

இல்லை. அதனுல் மந்த்ரப்ரச்நத்தில் படிக்கப்பட்டதையே வேதம் இங்கு அடியைமட்டும் சொல்லுகிறது. இதனுல் மந்த்ரப்ரச்நம் வேதபாகத்தைச் சேர்ந்ததாக ஏற்படுகிறது.

## க்ருஹ்ய ஸூத்ரங்களும் தர்ம ஸூத்ரங்களும்.

க்ருஹ்ய ஸூத்ரங்களில் நிரூபிக்கப்படும் உபநயநாதிகள் தர்ம ஸூத்ரங்களிலேயே விதிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் க்ருஹ்யகர்மாக்களைச் செய்த தன்மூலம் ப்ரம்ஹசாரியாகவோ, ஸ்நாதகனுகவோ, க்ருஹஸ்தனுகவோ ஆனவன் அனுஷ்டிக்கவேண்டிய தர்மங்கள் தர்மஸூத்ரங்களிலேயே விஸ்தாரமாகச் சொல்லப்படுகின்றன. க்ருஹ்ய கர்மாக்களைச் செய்ய அவச்யமான "ஸ்நாநம்" முதலியவைகளும் தர்மஸூத்ரங்களிலேயே சொல்லப்படுகின்றன. இதனுல் க்ருஹ்யஸூத்ர கர்மாக்களும் தர்மஸூத்ர தர்மங்களும் பிரிக்கமுடியாதபடி சேர்ந்திருப்பது வெளியாகிறது. அதனுல் சில மஹர்ஷிகள் க்ருஹ்யஸூத்ரங்களிலேயே அவச்யமான தர்மங்களையும் சொல்லிவிடுகிருர்கள். உதாஹரணமாக "காடக", "மானவ" க்ருஹ்யஸூத்ரக்காரர்கள் ப்ரம்ஹசர்ய தர்மத்தை க்ருஹ்யத்திலேயே சொல்லிவிட்டார்கள். வைகானஸ ஸூத்ரகாரர் ஆஹ்நிக தர்மங்களையும் மற்றத் தர்மங்களையும் க்ருஹ்யத்திலேயே சொல்லிவிட்டார். ஆபஸ்தம்பர் முதலியவர்கள் க்ருஹ்யஸூத்ரங்களில் கர்மாவைமட்டும் சொல்லிவிட்டு, தர்ம ஸூத்ரங்களிலேயே ஸகல தர்மங்களையும் சொல்லுகின்றனர். க்ருஹ்யஸூத்ரங்கள் அந்தந்தச் சாகிகளுக்குமட்டும் ஏற்பட்டதாகையால், தர்மங்கள் எல்லா சாகிகளும் அனுஷ்டிக்கவேண்டிய பொதுத் தர்மமாக இருப்பதால், தர்மஸூத்ரங்களிலேயே தர்மங்களைத் தர்மஸூத்ரமும் செய்யும் க்ருஹ்யஸூத்ரகாரர்கள் தெரிவிக்கிருர்கள். எப்படியும் தர்மங்களும் க்ருஹ்ய கர்மாக்களும் ஒன்றுசேர்ந்தே நிற்கின்றன.

## க்ருஹ்ய ஸூத்ரகாரர்கள் கர்மாக்களை நிரூபிக்கும் பொழுது பின்பற்றும் முறைகள்.

உபநயனம், விவாஹம் முதலிய கர்மாக்களை நிரூபிக்கும் அந்தந்த ஸூத்ரகாரர்கள் வெவ்வேறு முறைகளைப் பின்பற்றுகிருர்கள். அதனுல் "உபநயநம்" "விவாஹம்" என்ற பெயரைப் பொதுவாக அங்கீகரித்தாலும் பூர்வோத்ராங்கங்கள், ப்ரதான கர்மாவின் ஸ்வரூபம், அதன் மந்த்ரங்கள் இவைகளைப் பலவழிகளில் நிரூபிக்கிருர்கள். இதனுல் ஒரு ஸூத்ரகாரரின் "உபநயந" ப்ரயோகம்போல் மற்ற ஸூத்ரகாரரின் ப்ரயோகமிருப்பதில்லை. இப்படி வேறுபட்டு நிரூபிக்கும் ஸூத்ரகாரர்கள் எல்லோரும் அவரவர்கள் ஒரு வேத பாகத்தைப் பின்பற்றி நிரூபிப்பதால், எல்லா ஸூத்ரகாரர்கள் வழிகளும் அங்கீகரிக்கத்தக்கவைகளாகவே ஆகின்றன. ஆனுல் அந்தந்த ஸூத்ரத்தைச் சேர்ந்தவர்கள்தான் அந்தந்த க்ருஹ்ய ஸூத்ரப்படி கர்மாக்களைச் செய்யலாம். பூர்வோத்தராங்கங்கள் யஜுர்வேதத்தின் ப்ராம்ஹணங்களிலேயே நிரூபிக்கப்படுகின்றன. அக்நியை ப்ரதிஷ்டை செய்வது, பரிஸ்தரணம் போடுவது, ப்ரோக்ஷணீ ஸம்ஸ்காரம், ஆஜ்ய ஸம்ஸ்காரம் இவைபோன்ற பூர்வாங்கங்களை எல்லா ஸூத்ரகாரர்களும் ஒப்புக்கொள்ளுகிருர்கள். ப்ரதான

ஹோமத்திற்குப்பிறகு செய்யவேண்டிய ப்ராயச்சித்தம் வரையிலுள்ள கர் மாக்களைச் சொல்லுவதிலும் ஒற்றுமை காணப்படுகிறது. ஆனால் சிலர் இக் கார்யங்களைச் செய்ய ஏற்பட்டுள்ள ச்ரௌத மந்த்ரங்களை உபயோகப் படுத்துகிறார்கள். சிலர் மந்த்ரமில்லாமல் செய்யச் சொல்லுகிறார்கள். உதா ஹரணமாக, பூர்வாங்கங்களை நிரூபிக்கும் ஆபஸ்தம்பர் உபாகுவ ஙிணகு ஊஸவ தணீஷீம் என்று "பவித்ரகரணம்" முதல் எல்லாவற்றையுமே மந்த்ர மில்லாமல் செய்யச் சொல்லுகிறார். ஆனால் த்ராஹ்யாயனர்

'உவவிஸ்ரு உபகுாமெ௱ வூாஷெஶஊாசெ்ரு வூஹிநதி ந நவெநவவி த்ரூஷேூா செவஷிவ்ரு ளஐதி சுஹ்ரா௱நூஜ்ஜ்ரு விஷேூா ஊகுநஸா வஙிதெஷூ ஐதி' (1-2-12, 13)

இவ்விதம் மஹர்ஷிகள் பூர்வோத்தராங்கங்களிலும் ப்ரதான கார்யத்திலும் வேறுபட்டுப் பேசுவதற்கு அவரவர்களின் ஸம்ப்ரதாயமே காரணமாக இருந்து வருகிறது.

க்ருஹ்ய கர்மாக்களை நிரூபிக்கும் காலத்தில் இவைகளைப் "பாகயஜ்ஞம்" என்று பொதுவாக எல்லா ஸூத்ரகாரர்களும் குறிப்பிடுகிறார்கள். உதாஹர ணமாக, த்ரய: பாகயஜ்ஞா:, என்று ஆச்வலாயநரும், 'சத்வார: பாகயஜ்ஞா:' என்று பாரஸ்கரரும்,

'ஊயாதஃ வாகயஜ்ஞாநு வ்ராவ்ராஸ்ராஃ, வகூாஸஃ வாகயஜ்ஞாஃ'

என்று சாங்காயநரும், ஸ்தாலீபாக............பாகயஜ்ஞா: என்று வைகாந ஸரும், க்ருஹ்ய கர்மாக்களை "பாகயஜ்ஞம்" என்று குறிப்பிடுகிறார்கள். ஆனால் ஆபஸ்தம்பர் இந்தப் பாகயஜ்ஞம் என்ற பெயரை அடிப்படையாகக்கொள்ளா மல் **ஆசாராத்யாநி க்ருஹ்யந்தே** என்று சிஷ்டாசாரமூலம் அநுஷ்டிக்க வேண்டியவைகளாக ஏற்பட்ட கர்மாக்கள் என்று கூறுகிறார். "லௌகிகாநாம் பாகயஜ்ஞ சப்த:" என்று பூர்வோத்தராங்கங்களைப் பாகயஜ்ஞ விதிப்படியும் செய்யலாம் என்று கூறி அதற்கான விதிப்ரகாரங்களையும் நிரூபிக்கிறார். இதனால் பாகயஜ்ஞ விதிப்படி செய்யப்பட்டால்தான் பாகயஜ்ஞம் என்ற பெயர் ஏற்படு மென்றும், ஸூத்ரகாரர் நிரூபித்துள்ள பக்ஷாந்தரப்படி செய்தால் இவைகள் பாகயஜ்ஞங்கள் ஆகா என்று அபிப்ராயப்படுவதும் நன்கு வெளியாகிறது. போதாயனரும் க்ருஹ்ய கர்மாக்களுக்கு, "பாகயஜ்ஞம்" என்ற பெயரை அங்கீ கரித்தே பேசுகிறார். வைகாநஸர் தமது க்ருஹ்யத்தில் "ஸ்தாலீபாகம்" "அக்ர யணம்" "அஷ்டகை" "பிண்ட பித்ருயஜ்ஞம்" "மாஸிச்ராத்தம்" "சைத்ரீ" "ஆச்வயுஜீ" என்றுள்ள ஏழு கர்மாக்களைமட்டும் "பாகயஜ்ஞ"ங் களாகக் குறிப்பிட்டுவிட்டு, "ருது ஸம்கமனம்" "கர்ப்பாதானம்" "பும்ஸ வனம்" "ஸீமந்தம்" "விஷ்ணுபலி, "ஜாதகர்மம்" "உத்தானம்" "நாம கரணம்" "அந்நப்ராசனம்," "ப்ரவாஸாகமநம்" "பிண்டவர்த்தனம்" "சௌளம்" "உபநயநம்" "பாராயணம்" "வ்ரதபந்தவிஸர்கம்" "உபா கர்மம்" "ஸமாவர்த்தனம்" "பாணிக்ரஹணம் இவைகளைப் பாகயஜ் ஞங்களாகக் குறிப்பிடாமல் **ஸம்ஸ்காரா: சாரீரா:** என்று இவைகளுக்கு

"சரீரஸம்ஸ்காரங்கள்" என்ற பெயரைக்கொடுக்கிறார். கர்மாக்களை நிரூபிக்கும் காலத்திலும் **வராஹ க்ருஹ்யகாரர்** ஜாதகர்மாவை முதலில் நிரூபிக்கிறார்கள். **பாரத்வாஜர்** முதலிய க்ருஹ்யகாரர்கள் உபநயநத்தை முதலில் நிரூபிக்கிறார்கள். **வைகாநஸர்** ஆஹ்நிகதர்மமான ஸ்நானத்தை முதலில் நிரூபிக்கிறார். க்ருஹ்ய கர்மாக்களை நிரூபிக்கும் காலத்தில் உபநயநத்தையே முதலில் நிரூபிக்கிறார். **ஆச்வலாயனர்** வைச்வதேவத்தை முதலில் நிரூபிக்கிறார். **ஜைமிநி** க்ருஹ்யகாரர் "பும்ஸவநத்"தை முதலில் நிரூபிக்கிறார். ஆபஸ்தம்பர், போதாயநர், சாங்காயநர், பாரஸ்கரர் முதலியவர்கள் விவாஹத்தை முதலில் நிரூபிக்கிறார்கள். இப்படி அவரவர்கள் அந்தந்தக் கர்மாக்களை முதலில் நிரூபிப்பதற்கு அந்தந்தக் கர்மாக்களுக்கு அவரவர்கள் கொடுக்கும் முக்யத்வமே காரணம். ஆச்வலாயநாதி மஹர்ஷிகள் க்ருஹ்ய ஸூத்ரத்திலேயே அபர ப்ரயோகத்தையும் சொல்லிவிடுகிறார்கள். ஆபஸ்தம்பர் அதைத் தனி ஸூத்ரங்களில் வெளியிடுகிறார். ஆகவே, க்ருஹ்ய ஸூத்ரத்தை எழுத ஆரம்பித்த மஹர்ஷிகள் அவரவர்களுக்கு மூலமாக உள்ள வேத பாகங்கள், நேரில் கிடைக்காத இடங்களில் அவைகளைப் பின்பற்றி ஏற்பட்டுள்ள அநுஷ்டானம் இவைகளைப்பற்றி அந்தந்தக் கர்மாக்களுக்கு ஒரு முக்யத்வத்தைக் கொடுத்து "கர்மஸ்வரூபம்", அதன் பூர்வோத்தராங்கங்கள், இவைகளை வெளியிடுகிறார்கள்.

## முடிவுரை.

க்ருஹ்ய கர்மாக்கள் வைதிக ஹிந்துவின் வாழ்க்கையோடு பிரிக்கமுடியாத ஸம்பந்தமுள்ளவை. அவைகளை அநுஷ்டித்து வந்ததாலேயே நம்முன்னோர்கள் க்ஷேமத்தோடு வாழ்ந்துவந்தார்கள். அவைகளை இன்னும் அநுஷ்டித்து நாமும் க்ஷேமத்தோடு வாழ்ந்துவருகிறோம். நம் வருங்கால ஸந்ததிகள் க்ஷேமத்தோடு வாழும்படிசெய்ய அவர்களுக்கு இந்தக் கர்மாக்களில் ச்ரத்தை உண்டுபண்ணவேண்டியது அவச்யமாகிறது. அதனால் நாமும் க்ருஹ்ய கர்மாக்களை நன்றாகத் தெரிந்துகொண்டால்தான் நன்கு தெரிந்துகொண்டு கர்மாக்களைச்செய்து நன்மையை அடைந்து, பிறருக்கு உபதேசம் செய்து, பிறரும் நன்மையை அடையச்செய்யலாம். உலகில் உள்ள ஒவ்வொரு ஹிந்துவும் தன் தன் கர்மாக்களை அநுஷ்டித்து க்ஷேமத்தை அடையவேண்டுமென்ற நோக்கத்தோடு ஏற்பட்டுள்ள இந்த க்ருஹ்ய ஸூத்ரத்தை எல்லோரும் படித்து நன்மை பெறக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

*அக்நிஹோத்ரம் ராமாநுஜ தாதாசார்யார்.*

---

குறிப்பு:—ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்—ஸூத்ரம் மாத்ரம் க்ரந்தலிபி, தமிழ் உரையுடன் விலை ரூ. 2—8—0 தபால் செலவு வேறு.

வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபையோம்.

ஸ்ரீ:

# ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரத்தின்

## விஷய ஸூசிகை.


| | | கண். | ஸூ. |
|---|---|---|---|
| க்ருஹ்யகர்மாக்களின் ப்ரமாணம் | ... | 1 | 1 |
| அவைகளைச் செய்வதற்கான பொதுவான காலவிதி | ... | 1 | 2 |
| அவைகளின் சில பொதுத் தர்மங்கள் | ... | 1 | 3 |
| பித்ருகர்மாக்களில் உள்ள மாறுதல் | ... | 1 | 8 |
| நைமித்திக கர்மாக்களின் காலம் | ... | 1 | 11 |
| பரிஸ்தரணவிதி | ... | 1 | 13 |
| பித்ருகார்யங்களில் பரிஸ்தரணம் போடுவதில் மாறுதல் | ... | 1 | 14 |
| தேவகார்யங்களில் பாத்ரஸாதனம் செய்யும் முறை | ... | 1 | 16 |
| மனுஷ்யகார்யங்களில் பாத்ரஸாதனம் செய்யும் முறை | ... | 1 | 17 |
| பித்ருகார்யங்களில் பாத்ரஸாதனம் செய்யும் முறை | ... | 1 | 18 |
| பவித்ர ஸம்ஸ்காரம் முதலியவை | ... | 1 | 19 |
| ப்ரோக்ஷணீ ஸம்ஸ்காரம் | ... | 1 | 20 |
| ப்ராம்ஹணவிதி | ... | 1 | 21 |
| ஆஜ்ய ஸம்ஸ்காரம் | ... | 1 | 22 |
| தர்வீ முதலிய ஹோமம் செய்ய ஏற்பட்ட பாத்ரங்களின் ஸம்ஸ்காரம் | ... | 2 | 1 |
| விவாஹாதி கார்யங்களில் பரிதி ஸ்தானத்தில் "சம்யா" விதி | ... | 2 | 2 |
| பரிஷேசநம் | ... | 2 | 3 |
| பித்ரு கர்மாவில் பரிஷேசநம் செய்யும் முறை | ... | 2 | 4 |
| ஆகாரம் | ... | 2 | 5 |
| ஆஜ்யபாகம் | ... | 2 | 6 |
| "ஜ்யாதி" உபஹோம விதி | ... | 2 | 7 |

| | | கண். | ஸூ. |
|---|---|---|---|
| பாகயஜ்ஞ விதி | ... | 2 | 9 |
| விவாஹ நிரூபணத்தின் ஆரம்பம், அதன் காலம் | ... | 2 | 12 |
| நக்ஷத்ர விதி | ... | 2 | 13 |
| மங்களகரமான கார்யங்களைச் செய்ய விதி | ... | 2 | 14 |
| சிலவிஷயங்களை ஸ்த்ரீகளிடமிருந்து தெரிந்துகொள்ள விதி | ... | 2 | 15 |
| கடகபுருஷர்களை அனுப்ப நக்ஷத்ர விதி | ... | 2 | 16 |
| ஆர்ஷ விவாஹத்தில் நக்ஷத்ர விதி | ... | 3 | 1 |
| ஷை விவாஹத்தில் வதூவரர்கள் புறப்பட நக்ஷத்ர விதி | ... | 3 | 2 |
| விவாஹத்திற்கு ஸ்வாதீ நக்ஷத்ரத்தை ப்ரசம்ஸிக்கும் ப்ராம்ஹணத்தை உதாஹரிப்பது | ... | 3 | 3 |
| இங்வீகாசப்த வ்யாக்யாநம் | ... | 3 | 4 |
| நிஷ்ட்யாசப்த வ்யாக்யாநம் | ... | 3 | 5 |
| விவாஹம் நடக்குமிடத்தில் "கோ"வை வைத்துக்கொள்ள விதி | ... | 3 | 6 |
| வரபூஜை | ... | 3 | 8 |
| விவாஹத்தில் விலக்கவேண்டிய பெண்கள் | ... | 3 | 11 |
| ருத்தி பரீக்ஷை | ... | 3 | 15 |
| க்ரஹிக்கவேண்டிய பெண்ணின் லக்ஷணம் | ... | 3 | 19 |
| வரனின் லக்ஷணம் | ... | 3 | 20 |
| முக்யமான ஒற்றுமை | ... | 3 | 21 |
| வரப்ரேஷணம் | ... | 4 | 1 |
| பெண்ணை வரன் பார்த்தவுடன் செய்ய வேண்டிய ஜபம் | ... | 4 | 3 |
| பெண்ணைப் பார்ப்பது | ... | 4 | 4 |
| அலக்ஷ்மீ பரிஹார கர்மா | ... | 4 | 5 |
| ரோதனம் ஏற்பட்டால் சொல்லவேண்டிய மந்த்ர விதி | ... | 4 | 6 |
| ஸ்நாந ஜலம் கொண்டுவர ப்ராம்ஹணர்களை ஏவுவது | ... | 4 | 7 |
| பெண் சிரஸ்ஸில் நுகத்தடி வைப்பது முதலிய கார்யங்கள் | ... | 4 | 8 |

| | | கண். | ஸூ. |
|---|---|---|---|
| அக்நி ஸமீபத்திற்கு வருவது | ... | 4 | 9 |
| அக்நி கார்யத்தின் பூர்வாங்கங்கள் அபிமந்த்ரணம் | ... | 4 | 10 |
| பாணிக்ரஹண விதி | ... | 4 | 11 |
| இதில் காம்ய கல்பங்கள் | ... | 4 | 12 |
| பாணிக்ரஹண மந்த்ர விதி | ... | 4 | 14 |
| "ஸப்தபதீ" விதி | ... | 4 | 15 |
| ஏழாவது அடியில் ஜப விதி | ... | 4 | 16 |
| ப்ரதான ஹோம விதி | ... | 5 | 1 |
| அம்மி மிதித்தல் | ... | 5 | 2 |
| லாஜஹோம விதி | ... | 5 | 3 |
| விவாஹத்தின் ஜயாதி | ... | 5 | 12 |
| உத்தர பரிஷேசநம் முதல் விவாஹமான பெண் பர்த்தா க்ருஹத்திற்குப் புறப் படும் வரை | ... | 5 | 13 |
| அக்நியைக் கூடக் கொண்டுபோக விதி | ... | 5 | 14 |
| அக்நியை ரக்ஷிக்கும் முறைகள் | ... | 5 | 15 |
| அக்நி அணைந்துவிட்டால் மறுபடியும் உத்பத்தி பண்ணும் முறை | ... | 5 | 17 |
| இங்கு ப்ராயச்சித்த விதி | ... | 5 | 19 |
| பெண் ஏறிச்செல்லவேண்டிய ரதத்தைப் பூட்டுவது | ... | 5 | 21 |
| ரதத்தில் ஏறுங்காலத்தில் அபிமந்த்ரணம் | ... | 5 | 23 |
| ரதத்தின் மார்க்கத்தில் கறுப்பு, சிவப்பு ஸூத்ரங்களைப் பரப்புவது | ... | 5 | 24 |
| மந்த்ரத்துடன் புறப்படுவது | ... | 5 | 25 |
| தீர்த்தம் முதலியவைகளைத் தாண்டும்போது மந்த்ரங்களைச் சொல்ல விதி | ... | 5 | 26 |
| ஓடத்தில் ஏறும்பொழுது ஓடத்தை அபிமந்த்ரணம் செய்வது | .... | 6 | 1 |
| இங்கு ஒரு நிஷேதம் | ... | 6 | 2 |
| நதியைத் தாண்டிய பிறகு மந்த்ர ஜபவிதி | ... | 6 | 3 |
| ச்மசானத்தைத் தாண்ட நேரிட்டாலும், பாண்டம் முதலியவைகளுக்கு நாசம் ஏற்பட்டாலும் செய்யவேண்டிய கர்மா | ... | 6 | 4 |

| | | கண். | ஸூ. |
|---|---|---|---|
| பாலுள்ள மரங்கள் முதலியவைகளைத் தாண்டுங்காலத்தில் மந்த்ர ஜபவிதி | .... | 6 | 5 |
| பெண்ணுக்குப் புருஷன் தன் வீட்டைக் காண்பிப்பது | ... | 6 | 6 |
| ரதத்தை அவிழ்ப்பது | ... | 6 | 7 |
| பெண்ணின் க்ருஹப்ரவேசம் | ... | 6 | 8 |
| அங்கு நிஷேதம் | ... | 6 | 9 |
| இங்கே செய்யவேண்டிய ஹோமங்கள் | ... | 6 | 10 |
| குழந்தைக்குப் பழம் கொடுப்பது | ... | 6 | 11 |
| த்ருவாருந்ததீ தர்சநம் | ... | 6 | 12 |
| விவாஹாங்கமான ஆக்நேய ஸ்தாலீ பாகம் | ... | 7 | 1 |
| பார்வண ஸ்தாலீபாக விதி | .. | 7 | 17 |
| ஔபாஸந ஹோம விதி | ... | 7 | 19 |
| பார்வண தர்மாதிதேசம் | ... | 7 | 23 |
| ஆதித்யவிதி | ... | 7 | 26 |
| வைச்வதேவ விதி | ... | 7 | 27 |
| சில ஸ்தாலீபாகங்களுக்குத் தேவதா விதி | ... | 7 | 28 |
| உபாகரணம், ஸமாபநம் இவைகளின் விதி | ... | 8 | 1 |
| ஹோமத்தைச் செய்வதில் நிஷேதம் | ... | 8 | 3 |
| காம்யங்களில் சொல்லப்பட்டபடியே செய்யவேண்டும் | ... | 8 | 4 |
| அக்நி தானாக ஜ்வலிக்கும் காலத்தில் ஸமிதா தானம் | ... | 8 | 5 |
| விவாஹ தினத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள விதி | .... | 8 | 7 |
| விவாஹாங்க ப்ரம்ஹசர்ய விதி | ... | 8 | 8 |
| வதூவரர்களின் படுக்கை நடுவில் தண்டத்தை வைத்தல் | ... | 8 | 9 |
| நான்காவது நாள் அபர ராத்ரியில் செய்ய வேண்டிய ஹோமம் முதலியவை | ... | 8 | 10 |
| ரஜஸ்வலையான காலத்தில் தர்மங்களை உபதேசிக்க விதி | .... | 8 | 12 |
| ருதுஸமாவேசந விதி | ... | 8 | 13 |

| | | கண். | ஸூ. |
|---|---|---|---|
| ஒரு ப்ரயோஜனத்தை உத்தேசித்துப் போகும் காலத்தில் தும்மல் முதலியவை ஏற்பட்டால் செய்யவேண்டியது | ... | 9 | 2 |
| தம்பதிகளின் மன ஒற்றுமைக்குச் செய்யவேண்டிய கர்மா | ... | 9 | 4 |
| ஸபத்நீபாதையை நீக்க ஆதித்யோபஸ்தானம் | ... | 9 | 9 |
| பார்யையின் க்ஷயரோக நிவ்ருத்திக்குக் கர்மா | ... | 9 | 10 |
| உபநயந நிரூபணம் ஆரம்பம் | ... | 10 | 1 |
| உபநயந காலம் | ... | 10 | 2 |
| வபந விதி | ... | 10 | 6 |
| ஸ்நாநமான உடன் ப்ரம்ஹசாரீ செய்யவேண்டிய கார்யங்கள் அச்மாஸ்தாபனம் வரை | ... | 10 | 10 |
| வஸ்த்ர தாரணம் | ... | 10 | 11 |
| மௌஞ்ஜீ அஜிநம் இவைகளின் தாரணம் | ... | 10 | 12 |
| ப்ரம்ஹசாரீ கல்லிலிருந்து கீழிறங்கிச் செய்யவேண்டிய கார்யங்கள் | ... | 10 | 13 |
| ப்ரம்ஹசாரீ ஆசார்யன் இவர்களுள் ப்ரச்ந ப்ரதிவசநம் | .... | 11 | 1 |
| ப்ரதான ஹோமம் | ... | 11 | 6 |
| காயத்ரீ உபதேசத்திற்கான கார்யங்கள் | ... | 11 | 7 |
| உபதேச முறை | ... | 11 | 9 |
| ஓஷ்ட ஸ்பர்சனம் | ... | 11 | 12 |
| கர்ண ஸ்பர்சநம் | ... | 11 | 13 |
| தண்டாதானம் | ... | 11 | 14 |
| வர்ண பேதகாரணமாகத் தண்ட பேதம் | ... | 11 | 15 |
| ஸ்ம்ருதஞ்சமே முதலிய மந்த்ர ஜபம், ஆதித்யோபஸ்தானம் | ... | 11 | 17 |
| காம்யகல்பம் | ... | 11 | 18 |
| ப்ரம்ஹசாரீ வ்ரதம் | ... | 11 | 19 |
| ஸமிதாதானம் | ... | 11 | 21 |
| குமார சாஸநம் | ... | 11 | 23 |
| நான்காம் நாள் புது வஸ்த்ரம் தரிப்பது | ... | 11 | 24 |

| | | கண். | ஸூ. |
|---|---|---|---|
| ஸ்நாநகர்மாவின் நிரூபணத்திற்கு ஆரம்பம் | ... | 12 | 1 |
| ஆஜ்யபாகம் முடிவில் ஸமிதாதானம், வபநம் | ... | 12 | 3 |
| மேகலா விஸர்க்கம் | ... | 12 | 4 |
| ஸ்நாநம், பல் தேய்த்தல் | ... | 12 | 6 |
| மந்த்ரத்தைக்கொண்டு வஸ்த்ரம் தரிப்பது முதலிய கார்யங்கள் | ... | 12 | 8 |
| ப்ரதான ஹோமம் | ... | 12 | 9 |
| குண்டலதாரணம் | ... | 12 | 11 |
| நக்ஷத்ரோதயம் வரை மௌனம் | ... | 12 | 13 |
| பந்துக்களுடன் கலந்து ஆச்ரமங்களை நிர்ணயிப்பது | ... | 12 | 14 |
| தூஷ்ணீம் ஸ்நாநபக்ஷம் | ... | 13 | 1 |
| மதுபர்க்க ப்ரயோகம் | ... | 13 | 2 |
| ஸீமந்தோந்நயநம் | ... | 14 | 1 |
| பும்ஸவநம் | ... | 14 | 9 |
| சீக்ரமாக ப்ரஸவிக்கக் கர்மா | ... | 14 | 13 |
| கர்ப்பக் கொடி விழக் கர்மா | ... | 14 | 15 |
| ஜாதகர்மா, அபிமர்சநம் முதலியவை | ... | 15 | 1 |
| மது முதலியவைகளைக் குழந்தைக்கு ப்ராசனம் செய்துவைப்பது முதலியவை | ... | 15 | 4 |
| தாயின் மடியில் குழந்தையை வைப்பது, ஸ்தன்ய பானம் செய்துவைப்பது முதலியவை | ... | 15 | 5 |
| பலீகரண ஹோமம் | ... | 15 | 6 |
| நாமகரணம் | ... | 15 | 8 |
| ஊரிலிருந்து திரும்பிவந்த பிறகு குமாரனுக்கு அபிமந்த்ரணம் முதலியவைகளைச் செய்வது | ... | 15 | 12 |
| பெண்ணுக்கு அபிமந்த்ரணம் | ... | 15 | 13 |
| அந்நப்ராசனம் | ... | 16 | 1 |
| கோதான கர்மா | ... | 16 | 12 |
| க்ருஹ ப்ரவேசம். உத்தனஞதி | ... | 17 | 1 |
| தூண்களை நடுவது முதலியவை | ... | 17 | 3 |
| அக்நியோடு ப்ரவேசம், அக்நி ப்ரதிஷ்டை | ... | 17 | 7 |
| ஜலத்தொட்டியை வைப்பது | ... | 17 | 9 |

| | | கண். | ஸூ. |
|---|---|---|---|
| ப்ரதான ஹோமம், ஜயாதி | ... | 17 | 12 |
| பரிஷேசனம் முதலியவை | ... | 17 | 13 |
| "ச்வக்ரஹ" பீடிதனுக்குப் பரிஹாரம் | ... | 18 | 1 |
| "சங்க" க்ரஹத்தால் பீடிக்கப்பட்டவனுக்குப் பரிஹாரம் | ... | 18 | 3 |
| ஸர்ப்ப பலி | ... | 18 | 5 |
| அங்கே செய்யவேண்டிய "கிம்சுக" ஹோமம் | ... | 18 | 6 |
| ராஜ வ்ருக்ஷஸமித் ஹோமம், ஆஜ்ய ஹோமம் | ... | 18 | 9 |
| க்ருஹத்திற்கு வெளியில் ஸக்துநிவபனம் | ... | 18 | 10 |
| அக்ஷதை முதலியவைகளைப் பரப்புவது | ... | 18 | 11 |
| உபஸ்தாஞுதிகள் | ... | 18 | 12 |
| மார்கசீர்ஷம் வரை பலிஹரண விதி | ... | 19 | 2 |
| மார்கழி மாதத்தில் ஸர்ப்பபலியின் உத்ஸர்க்கம் | | 19 | 3 |
| ஆக்ரயணம் | ... | 19 | 6 |
| ஹேமந்த ப்ரத்யவரோஹணம் | ... | 19 | 13 |
| ஈசாநபலி, ஈசாந தேவதை, க்ஷேத்ரபதி, சரு ச்ரபணம், வெளியில் அக்நி ப்ரதிஷ்டை முதலியவை | ... | 19 | 13 |
| குடீகரணம், ஈசாநாவாஹநம் | ... | 20 | 1 |
| மீடுஷீ ஆவாஹநம் | ... | 20 | 2 |
| ஜயந்த ஆவாஹநம் | ... | 20 | 3 |
| ப்ரதான ஹோமம், ஸ்விஷ்ட க்ருத் | ... | 20 | 4 |
| உபஸ்தானம் முதலியவை | ... | 20 | 5 |
| ருத்ர ஜபம் | ... | 20 | 8 |
| பசுக்களை நான்கு பக்கங்களில் கட்டுவது முதலியவை | ... | 20 | 10 |
| க்ஷேத்ரபதி யாகம் | ... | 20 | 12 |
| மாஸி ச்ராத்தம் | ... | 21 | 1 |
| இங்கே ப்ராம்ஹண போஜந விதி | ... | 21 | 2 |
| அந்ந ஹோமவிதி | ... | 21 | 3 |
| ஆஜ்யஹோமம் | ... | 21 | 4 |
| அந்நாபிமர்சநம் | ... | 21 | 6 |
| ப்ராம்ஹணர்களைக்கொண்டு அந்நத்தைத் தொடச் செய்வது | ... | 21 | 8 |

| | | கண். | ஸூ. |
|---|---|---|---|
| பிண்ட தானுதி | ... | 21 | 9 |
| ஏகாஷ்டகா | ... | 21 | 10 |
| இங்கே அபூப ச்ரபணவிதி | ... | 21 | 12 |
| அன்று அபூபஹோமம் | ... | 22 | 1 |
| கவாலம்பனவிதி | ... | 22 | 4 |
| "தத்யஞ்ஜலி" ஹோமம் | ... | 22 | 9 |
| அங்வஷ்டகை | ... | 22 | 11 |
| யாசகர்கள் ஜபிக்கவேண்டியவைகளின் விதி | ... | 22 | 12 |
| ரதம் கிடைத்தால் செய்ய வேண்டிய கார்யங்கள் | | 22 | 13 |
| பிறருடன் ஸம்வாதமேற்பட்டால் செய்ய வேண்டிய கார்யங்கள் | ... | 22 | 18 |
| ஸ்த்ரீ ரக்ஷணம் | ... | 23 | 3 |
| பண்ய ஹோமம் | ... | 23 | 5 |
| வேலைக்காரர்கள் வேலையை விடாமல் செய்யக் கர்மா | ... | 23 | 6 |
| வேலைக்காரர்கள் வேலையைவிட்டு ஓடுவதைத் தடுக்கக் கர்மா | ... | 23 | 7 |
| போகுங்காலத்தில் பழம் முதலியவை விழுந்தால் செய்யவேண்டிய கார்யங்கள் | ... | 23 | 8 |
| வீட்டில் தூணில் முளைதெரிவது முதலிய உத்பாதம் அத்புதம் இவைகளுக்குச் சாந்தி | ... | 23 | 9 |

உ

𑌓𑌂 𑌨𑌮𑌃 𑌆𑌪𑌸𑍍𑌤𑌮𑍍𑌬𑌾𑌯 ॥

𑌆𑌪𑌸𑍍𑌤𑌮𑍍𑌬𑌮𑌹𑌰𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌣𑍀𑌤𑌂 𑌗𑍃𑌹𑍍𑌯𑌸𑍂𑌤𑍍𑌰𑌮𑍍 ॥

## ஆபஸ்தம்ப மஹர்ஷி அருளிய

# க்ருஹ்ய ஸூத்ரம்.

𑌅𑌥 𑌪𑍍𑌰𑌥𑌮𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

## முதல் கண்டம்.

𑌓𑌮𑍍 ॥ 𑌅𑌥 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑍍𑌯𑌾𑌚𑌾𑌰𑌾𑌦𑍍𑌯𑌾𑌨𑌿 𑌗𑍃𑌹𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 ॥ ௧ ॥

வேதங்களிலேயே நேரில் விதிக்கப்பட்டவைகளாக உள்ள "ஸ்ரௌத"மான கர்மாக்களை ஸூத்ரகாரர் இதற்கு முன் நிரூபித்தார். அதற்குப் பிறகு சிஷ்டாசாரத்தால் செய்யப்படவேண்டியவைகளாக அறியப்படும் கர்மாக்களை இங்கு '𑌅𑌥 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿' என்று ஆரம்பித்து நிரூபிக்கிறார்.

இந்த ஸூத்ரத்திற்கு முன் ஸூத்ரகாரர் தமது ஸூத்ரங்களில் எதை நிரூபித்தார்? '𑌯𑌜𑍍𑌞𑌂 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌸𑍍𑌯𑌾𑌮𑌃' (ஆபஸ்தம்ப பரிபாஷாஸூத்ரம் 1-1) என்று முதலில் எல்லா யஜ்ஞங்களுக்கும் பொதுவான பரிபாஷைகளை நிரூபிப்பது மூலம், யஜ்ஞங்களுக்கெல்லாம் பொதுவான அம்சங்களை நிரூபித்தார். பிறகு '𑌅𑌥𑌾𑌤𑍋 𑌦𑌰𑍍𑌶𑌪𑍂𑌰𑍍𑌣𑌮𑌾𑌸𑍌 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌸𑍍𑌯𑌾𑌮𑌃' (ஆப- ஸ்ரௌத ஸூ 1-1-1) என்று ஆரம்பித்து தர்சபூரணமாஸம் முதல் 'விஸ்வஸ்ருஜாமயனம்' வரையில் உள்ள யஜ்ஞங்களை நிரூபித்தார். இவைகள் நித்யநைமித்திக காம்யரூபமாகவும், 'ஹவிர்யஜ்ஞ', 'ஸோமயஜ்ஞ' ரூபமாகவும் இருக்கின்றன.

இவ்விதம் ஸ்ரௌத யஜ்ஞங்களை அங்கோபாங்கங்களுடன் நிரூபித்த பிறகு இங்கு இந்த ஸூத்ரத்திலிருந்து ஸ்மார்த்த யஜ்ஞங்களை நிரூபிக்கின்றார். "பாகயஜ்ஞங்கள்" இங்கு நிரூபிக்கப்படுகின்றன.

வேதாத்யயனம் செய்தவன் ப்ரத்யக்ஷ வேதத்தால் விதிக்கப்பட்ட கர்மாக்களின் ஸ்வரூபத்தை அறிய முதலில் முயல்

வான். பிறகுதான் அநுமாநம் பண்ணப்படும் வேதங்களால் விதிக்கப்படும் கர்மாக்களின் ஸ்வரூபத்தை அறிய முயல்வான். அத்யயநம் செய்தவனுக்கு ஏற்படக்கூடிய ப்ரயத்நத்தின் க்ரமத்தைப் பின்பற்றி ஸூத்ரகாரர் முதலில் ப்ரத்யக்ஷ வேதத்தால் விதிக்கப்பட்ட தர்சபூர்ணமாஸங்கள் முதலிய கர்மாக்களை நிரூபித்து விட்டுப் பிறகு ஆசாரத்தால் அநுமாநம் பண்ண வேண்டிய வேதபாகங்களை மூலமாகக்கொண்ட விவாஹம் முதலிய கர்மாக்களை நிரூபிக்க ஆரம்பிக்கிறார்.

“தர்சபூர்ணமாஸம்” முதலிய கர்மாக்கள் ப்ரத்யக்ஷமாக வேதங்களிலேயே விதிக்கப்பட்டு நிரூபிக்கப்படுகின்றன. விவாஹம் முதலிய கர்மாக்கள் அவ்விதம் ப்ரத்யக்ஷ வேதத்தால் நிரூபிக்கப் படவில்லை. விவாஹம் முதலிய கர்மாக்கள் “சிஷ்டாசாரம்” காரணமாகவே செய்யவேண்டியவைகளாகின்றன. சிஷ்டாசாரத்திற்கு “ஸ்வித:” ப்ராமாண்யம் கிடையாது. வேதமூலமாகவே அதற்கு ப்ராமாண்யம் அங்கீகரிக்கப்படுகிறது. அதனால் ஒரு “ஆசாரம்” சிஷ்டர்களால் அநுஷ்டிக்கப்பட்டால் அது வேதத்தை மூலமாக உடையதாகவே இருக்கவேண்டும் என்று நிர்ணயித்து, அந்தக் கர்மாவுக்கு மூலமாக வேதபாகம் ஒன்றை அனுமானம் செய்கின்றோம். அதனால் விவாஹம் முதலிய கர்மாக்கள் வேத்தில் நேரில் விதிக்கப்பட்டு நிரூபிக்கப்படாமல் போனாலும், சிஷ்டாசார மூலமாய் அநுமாநம் செய்யப்படும் வேதபாகத்தை மூலமாக உடையவைகளாக இருக்கவேண்டும். இதனால் இவைகளை “ஸ்மார்த்த கர்மாக்கள்” என்றும் சொல்லுகின்றோம்.

இவ்விதம் ஸூத்ரங்களில் “ச்ரௌத”ங்களாகவும், “ஸ்மார்த்த”ங்களாகவும் நிரூபிக்கப்படும் யஜ்ஞங்கள் “ஹவிர்யஜ்ஞங்கள்” “ஸோமயஜ்ஞங்கள்” ‘பாகயஜ்ஞ’ங்கள் என்று மூன்று வகையாகப் பிரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு வகையிலும் ஏழு கர்மாக்கள் இருக்கின்றன.

ஏழு விதம் ஹவிர்யஜ்ஞங்கள். “ஆதாநம், அக்நிஹோத்ரம், தர்சபூர்ணமாஸங்கள், ஆக்ரயணம், சாதுர்மாஸ்யங்கள், நிரூடபசுபந்தம், ஸௌத்ராமணீ” (பிண்டபித்ருயஜ்ஞம் முதலியவை தர்விஹோமங்கள்.) என்று ஏழுவிதமாக இருந்துவருகின்றன. அவ்விதமே ஸோமயாகங்களும், “அக்னிஷ்டோமம், அத்யக்னிஷ்டோமம், உக்த்யம், ஷோடசீ, வாஜபேயம், அதிராத்ரம், அப்தோர்யாமம்”

என்ற ஏழுவகையுள்ளவை. அவ்விதமே, பாகயஜ்ஞங்களும், "ஔபாஸநஹோமம், வைஶ்வதேவம், பார்வணம், அஷ்டகை, மாஸிஶ்ராத்தம், ஸர்ப்பபலி, ஈசாந பலி" என்று ஏழு வகையானவை.

ஆக இவையெல்லாம் சேர்ந்து இருபத்தொரு யஜ்ஞங்கள் ஆகின்றன.

இவை 21-ம் நித்யமானவை. அந்தந்தக் கர்மாக்கள் செய்ய விதிக்கப்பட்ட காலத்தில் உயிரோடு இருந்தால், அவைகளைச் செய்தாக வேண்டும். இவைகளைச் செய்வதற்கு, அந்தந்தக் காலங்களில் உயிரோடு இருப்பதைத் தவிர வேறு ஒரு நிமித்தமும் கிடையாது. இவைகளிலேயே சில இடங்களில் 'பலம்' சொல்லப்பட்டிருப்பதால் அந்தப் பலங்களில் ஆசையில்லாதவன், அவைகளைச் செய்ய வேண்டாம் என்றாகலாம். ஆனால் இருபத்தொரு விதமாக உள்ள இந்த யஜ்ஞங்களை நித்யமாக அநுஷ்டித்துத்தான் ஆகவேண்டுமென்று வசநமிருப்பதால், இவைகளை, பலத்தில் அபேக்ஷையில்லாமல், சொல்லப்பட்டிருக்கும் பலத்தைவிட்டு உயிரோடிருப்பதையே நிமித்தமாகக் கொண்டு அநுஷ்டிக்கவேண்டும்.

"ஜாயமானோ வை ப்ராஹ்மணஸ்த்ரிபி: ருணவா ஜாயதே
ப்ரஹ்மசர்யேண ருஷிப்யோ யஜ்ஞேந தேவேப்ய: ப்ரஜயா
பித்ருப்ய:" (தைத்திரீய ஸம்ஹிதை. 6—3—10)

பிறக்கும்பொழுது, மனிதன் மூன்று கடன்களுடன் பிறக்கிறான். இவை ருஷிருணம், தேவருணம், பித்ருருணம் என்று மூன்று வகையானவை. இவைகளில் உபநயநமாகி, ப்ரம்ஹசர்ய வ்ரதத்தை அநுஷ்டிப்பது மூலம் ருஷிருணத்திலிருந்து விடுபடுகிறான். யஜ்ஞங்களைச் செய்வதின் மூலம் தேவருணத்திலிருந்து விடுபடுகிறான். ப்ரஜைகளை உண்டுபண்ணுவது மூலம் பித்ருருணத்திலிருந்து விடுபடுகிறான், என்று வேதம் சொல்லுகிறது. இதனால் யஜ்ஞங்களைச்செய்வதற்குத் தேவருணத்திலிருந்து விடுதலையடைவதைத் தவிர வேறு ஒரு ப்ரயோஜநமும் இல்லை என்று ஏற்படுகிறது. அதனாலேயே வஸிஷ்டர் தமது தர்ம ஸூத்ரத்தில்: 'நையமிகம் ஹ்யத்ருண த்ரயஸம்யுதம்' (11-47) முக்கடனாகச் சொல்லப்படுவதால், யஜ்ஞங்களை நித்யமாக அநுஷ்டித்தாகவேண்டுமென்று கூறுகிறார். இங்கு யஜ்ஞம் என்று பொதுவாகச் சொல்லப்பட்டிருந்தாலும், கீழ்ச் சொல்லப்பட்ட இருபத்தொரு யஜ்ஞங்களையும் இது குறிப்பிடுகிறது. அதனாலேயே

கௌதமர் இந்த இருபத்தொரு யஜ்ஞங்களையும், 40-ஸம்ஸ்காரங்களில் சேர்த்துவிட்டார். இதனால் இந்த இருபத்தொரு யஜ்ஞங்களையும் நித்யமாக அநுஷ்டித்தாகவேண்டும்.

மேலும்—ஒருவித ப்ரயோஜநத்தையும் குறிப்பிடாமல் ஒரு கர்மாவைத் திருப்பித் திருப்பிச் செய்யவேண்டுமென்று விதி இருந்தால் அந்தக் கர்மாவை நித்யமாகக் கொள்ளவேண்டும்.

ப்ரக்ருதத்தில்—'ஸாயம்ப்ராதர் ஜுஹுயாத்' (ஆபஸ்-க்ருஹ்-7—19) என்று "ஔபாஸந" ஹோமத்தை ஸாயங்காலவேளைகளிலும், காலைவேளைகளிலும் செய்யவேண்டுமென்று, ஸூத்ரகாரர் சொல்லுகிறார். 'வஸந்தே வஸந்தே ஜ்யோதிஷா யஜேத' என்ற வேத வாக்யம் ஒவ்வொரு வஸந்தருதுவிலும் ஸோமயாகம் செய்யவேண்டுமென்று கூறுகிறது. 'அஹரஹ: ப்ரவ்ருஜ்யதே' (தைத்திரீய ப்ராம்ஹணம் 2—1—3) என்ற வாக்யம் ப்ரதிதினமும் அக்நிஹோத்ரம் செய்யவேண்டும் என்று சொல்லுகிறது. 'அர்தமாஸே அர்தமாஸே ப்ரவ்ருஜ்யதே' (தை. ப்ரா—3—2—8) என்ற வாக்யம் தர்சபூர்ண மாஸங்களைப் பதினைந்து நாட்களுக்கு ஒருதடவை செய்தாகவேண்டுமென்று கூறுகிறது.

இதனால் இவைகள் நித்யமானவைகளாக ஆகின்றன.

மேலும் ஒரு கர்மாவைச் செய்யாததற்கு ப்ராயஶ்சித்தம் சாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்டிருந்தால் அந்தக் கர்மாவை நித்யமாக அநுஷ்டித்தாகவேண்டும் என்று ஏற்படுகிறது.

ப்ரக்ருதத்தில்-மூன்று தலைமுறை ஸோமயாகம் செய்யாவிடில் 'ஐந்த்ராக்ன' பசுயாகத்தைச் செய்யவேண்டுமென்று ப்ராயஶ்சித்த விதி காணப்படுகிறது. தர்சபூர்ண மாஸங்கள் முதலிய இஷ்டிகளைச் செய்யாவிட்டால், 'யஜ்ஞ விப்ரஷ்டேஷ்டி'யை ப்ராயஶ்சித்தமாக அநுஷ்டிக்கவேண்டுமென்று விதி கூறுகிறது.

இதனால் இவைகளும், இவைகள் போன்றுள்ள கர்மாக்களும் நித்யமானவைகள் என்று தீர்மானமாகிறது.

மேலும்— '[illegible]' (தைத். ப்ரா-2—3—6) என்ற வாக்யம் அக்நிஹோத்ரம் முதல் ஸோமயாகம் வரையில் உள்ள கர்மாக்களைச் செய்துகொள்வதற்குத் தன் ஆத்மாவை விடுவித்துக்கொள்வதே நோக்கம் என்று கூறுகிறது. இதனால் அக்நிஹோத்ரம் முதலிய கர்மாக்களை அநுஷ்

டிப்பதற்கு ஆத்மாவின் விடுதலேயே நோக்கம். வேருெரு 'பல'மும் கிடையாதென்று ஏற்படுகின்றது. இதனுலும் இவைகள் நித்ய மானவைகள் என்று நிர்ணயமாகிறது.

மேலும்—எந்தக் கர்மாவில் "பலம்" சொல்லப்படுகிறதோ அந்தக் கர்மா காம்ய கர்மா. அந்தப் பலத்தில் ஆசையுள்ளவன்தான் அதைச் செய்யவேண்டும். பலத்தில் ஆசையில்லாதவன் அந்தக் கர்மாவைச் செய்யவேண்டிய அவச்யம் கிடையாது. உதாஹரண மாக 'ஸௌர்யம் சரும் நிர்வபேத் ப்ரஹ்மவர்ச்சஸகாம:' என்ற இடத்தில் "ஸௌர்யயாகம்" ப்ரம்ஹவர்ச்சஸம் என்ற பலத்தை உத்தேசித்து விதிக்கப்படுகிறது. "ப்ரம்ஹவர்ச்சஸம்" என்ற பலத்தில் ஆசையுள்ளவனே இந்த யாகத்தைச் செய்யவேண்டும். மற்றவர்கள் இதைச் செய்யவேண்டாம்.

அவ்விதம் ப்ரக்ருதத்தில் பலம் சொல்லப்படாததாலும், பலத்தில் அபேக்ஷை இல்லாதிருந்தாலும், இருபத்தொரு யஜ்ஞங்களையும் நித்யமாக அநுஷ்டித்தாகவேண்டுமென்று வசநமிருப்ப தால் இவைகள் நித்யமானவைகள்.

இவைகளில் "தர்ச பூர்ண மாஸங்கள்" முதலிய ஶ்ரௌத யஜ்ஞங்கள் 'கார்ஹபத்யம், தக்ஷிணுக்நி, ஆஹவநீயம்' என்ற மூன்று அக்நிகளைக்கொண்டு செய்யப்படவேண்டியவைகளாக இருக்கின்றன. இந்த மூன்று அக்நிகளும், 'ஆதாநம்' என்ற கர்ம மூலமாகவே கிடைக்கின்றன. அதனுல் நித்யமான யஜ்ஞங்களை அநுஷ்டிப்பதற்காக ஆதாந கர்மாவையும் நித்யமாக அநுஷ்டித்தாக வேண்டுமென்று நிச்சயமாகிறது.

"ஆதானம்" என்ற கர்மாவைச் செய்யாவிட்டால் 'கார்ஹ பத்யம்' முதலிய அக்நிகள் ஸித்திக்கா. மேற்படி மூன்றுவித அக்நி இல்லாவிட்டால் நித்யமான ஶ்ரௌத கர்மாக்களைச் செய்ய முடியாது. நித்யகர்மாக்களைச் செய்யாவிட்டால் பாபம் ஏற்படும். அதனுல் "ஆதானம்" செய்யவேண்டியதும் நித்யகர்மாவைச் செய் வதுபோல் நித்யமானதாகிறது.

அதனுல் மநு 'அநாஹிதாக்நிதா ஸ்தேயம்' (மநுஸ்ம்ருதி 11-65) என்று அநாஹிதாக்நியாக இருப்பதை உபபாதகத்தில் சேர்த்து ஆதான கர்மாவைச் செய்யவேண்டியதின் ஆவஶ்யகத்வத்தை வற் புறுத்துகிருர். இப்படி நித்யகர்மாக்களை அநுஷ்டிப்பதற்காகவே "ஆதானம்" ஏற்பட்டிருந்தாலும் நித்யகர்மாக்களுக்குக் கிடைத்த

இந்த அக்னிகளிலேயே காம்யகர்மாக்களையும் செய்யலாம். எப்படியும் நித்யகர்மாக்கள் நித்யமாக ஆகுவதால், அவைகளைச் செய்வதற்கான அக்னிகளை ஸம்பாதிக்க ஏற்பட்ட ஆதானமும் நித்யமானது.

ஆகவே—மந்த, மத்ய, உத்க்ருஷ்ட அதிகாரிகளான மூன்று வர்ணத்தைச் சேர்ந்தவர்களும் இந்த இருபத்தொரு யஜ்ஞங்களையும் அநுஷ்டித்தாகவேண்டும்.

மேற்படி யஜ்ஞங்களின் அங்கங்களும், உபாங்கங்களும் வேதங்களின் பல சாகைகளில், பல இடங்களில், பலவிதமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இவைகளை எந்தக் கர்மாவுக்கு எது அங்கம்? எப்படி அங்கமாகிறது? இது அங்கந்தானு? அங்கத்தின் அங்கமா? என்று நாமாக நிர்ணயம் செய்யமுடியாது. ஆயிரக் கணக்கில் உள்ள மீமாம்ஸாந்யாயங்களைக் கொண்டே கர்மாவின் ஸ்வரூபத்தையும், அங்கங்களின் ஸ்வரூபத்தையும் நிர்த்தாரணம் செய்யமுடியும். மந்தபுத்தியுள்ள நம் போன்றவர்களால் இங்கு நிர்ணயம் செய்யமுடியாது. கர்மாவின் ஸ்வரூபம், அதன் அங்கம், அங்கத்தின் அங்கம் இவைகளை அறியாவிட்டால் கர்மாக்களைச் செய்யமுடியாது. கர்மாக்களைச் செய்யாவிட்டால் பாபம் ஏற்படும்.

இந்தக் கஷ்டத்தை அறிந்த மஹர்ஷி நம்மீது கருணைகூர்ந்து பல சாகைகளில் சிதறிக்கிடக்கும் கர்மாவின் ஸ்வரூபம், அங்கங்களின் ஸ்வரூபம் இவைகளை மீமாம்ஸாந்யாயங்களைக்கொண்டு நிர்த்தாரணம் பண்ணி தமது ஸூத்ரமூலம் அதை நமக்கு உபதேசிக்கிருர்.

ப்ரத்யக்ஷ வேதத்தால் விதிக்கப்பட்ட தர்சபூர்ணமாஸம் முதலியவைகளை நிரூபித்தபிறகு, இங்கு ஆசாரத்தால் ஏற்படும் கர்மாக்களை நிரூபிக்கிருர்.

இங்குச் சொல்லப்படும் ஆசாரம் சிஷ்டர்களுடைய ஆசாரம். இவ்வித ஆசாரத்திற்கு வேதமே மூலம்.

"ஆசாரம்" என்ற பதத்திலுள்ள "ஆ" என்ற பாகம் இடைவிடாத வ்யாப்தியைச் சொல்லுகிறது. அதனுல் எல்லாத் தேசங்களிலும், எல்லாக் காலங்களிலும் வைதிக மார்க்கத்தைச் சேர்ந்த பெரியோர்கள் எல்லோராலும் அநுஷ்டிக்கப்பட்ட ஆசாரமே சிஷ்டாசாரம் என்று முடிவாகிறது. இவ்விதம் சிஷ்டர்களால் பின்பற்றப்படும் ஆசாரத்திற்கு த்ருஷ்டமான லௌகிக ப்ரயோஜனம், "பல"மாக இருக்க ந்யாயமில்லை. இடைவிடாது அநுஷ்டிக்கப்பட்டு

வரும் இவ்வித ஆசாரத்திற்கு வேதம்தான் மூலமாக இருக்க முடியும். இப்படி வேதத்தையே மூலமாக உடைய ஆசாரங்கள் இவ்வித கர்மாக்களைச் செய்யும்படி வேத பலத்தைக் கொண்டு ஏவுகின்றன.

ஒரு ஆசாரம் எல்லாத் தேசங்களிலும் இருந்துவருவதாக நிர்ணயிப்பதற்கு, அந்த ஆசாரத்தைப்பற்றி க்ரந்தங்களில் அடிக்கடி ப்ரஸ்தாவமிருப்பதும், ஶ்ரௌத ஸூத்ரங்களில் கூட அவ்வித ஆசாரத்தை உதாஹரிப்பதும், ஒரே ஆசாரத்தைப் பல க்ருஹ்யகாரர்கள் சொல்லுவதும், தர்மசாஸ்த்ரங்களில் இவ்வித ஆசாரமிருப்பதாக ஒப்புக்கொண்டு பேசுவதும் காரணமாவன.

ஆகவே, வேத மூலகமான கர்மாக்களைச் செய்வது ஆவஶ்யக மாவதுபோல், இவ்வித சிஷ்டாசாரம் மூலம் செய்யவேண்டியதாக ஏற்படும் கர்மாக்களையும் அவச்யம் செய்தாகவேண்டும்.

ஆசார மூலமாக ஏற்பட்ட கர்மாக்களை இங்கு நிரூபித்து, இவைகளுக்கு வேத மூலத்வத்தை அங்கீகரித்துப் பேசுவது இது ஶ்ரௌத ப்ரகரணங்களிலும் சொல்லப்படும் ‘ஜாஉஷூநாம் தா வஞ்சுாவதெ்தவ வ்யாஸ’ (ஆப. ஶ்ரௌ. ஸூ-2-18-2.) என்பது போன்ற ஆசாரங்களும் வேதமூலமானவைகள்தான் என்று காண்பிக்கிறது.

இது அதிகாரஸூத்ரம். இதனால் இதற்குமேல் சொல்லப் படப்போகும் தர்மங்கள் க்ருஹ்யகர்மாக்களுக்குமட்டும் பொருத்த முள்ளவை என்று ஏற்படுகிறது. இதற்கு முன் ஸூத்ரத்தில் சொல்லப்பட்ட ஶ்ரௌத கர்மாக்களில் இங்குச் சொல்லப்படும் “காலம்” முதலியவைகளும், மற்றத் தர்மங்களும் வராவென்று தெரிகிறது. ஆனால் ஶ்ரௌதகர்மாக்களின் பரிபாஷையையும், ஸ்வ ரூபத்தையும் நிரூபித்தபிறகு இங்கு க்ருஹ்யகர்மாக்களை நிரூபிப் பதால் ஶ்ரௌதகர்மாக்களில் சொல்லப்பட்ட சில தர்மங்கள் இங்கு வரக்கூடுமென்று ஏற்படுகிறது. அங்குச் சொல்லப்படும் பரி பாஷை எல்லா யஜ்ஞங்களுக்கும் பொதுவானதாக இருப்பதால், அவஶ்யமான இடங்களில் இங்குச் சொல்லப்படும் கர்மாக்களிலும் அந்தப் பரிபாஷை மூலம் கிடைக்கும் தர்மங்களும் வரும்.

மேலும் தர்மஸூத்ரத்தில் சொல்லப்படும் கர்மாக்களே பல இங்கும் சொல்லப்படுகின்றன. அதன் ப்ரயோஜனம் பின் வருமாறு.

அந்தந்த மஹர்ஷிகள் தனித்தனியாக தர்மஸூத்ரங்களைச் செய்திருந்தாலும், தர்மஸூத்ரங்களில் சாகைகளுக்கு எல்லாம் பொதுவான கர்மாக்களும், தர்மங்களும் சொல்லப்படுகின்றன. க்ருஹ்யஸூத்ரங்களிலோ அந்தந்தச் சாகைக்கு மட்டும் அஸாதாரணமான கர்மாக்கள் சொல்லப்படுகின்றன. ஆக, தர்மஸூத்ரங்களில் சொல்லப்படும் கர்மாக்களையும், தர்மங்களையும் க்ருஹ்ய ஸூத்ரங்களில் சொல்வதால் அந்தந்தச் சாகைக்கு அந்தந்தக் கர்மா மிகவும் அவஶ்யமானதென்று தீர்மானமாகும். இங்கு, "புனருக்தி" தோஷம் வர இடமில்லை.

இக்காரணமாக மேற்படி ஶ்ரௌதகர்மங்கள், இங்குச் சொல்லப்படும் க்ருஹ்ய கர்மாக்களில் தாமாக அந்வயிக்கா என்று ஏற்படுகிறது.

உதகயந பூர்வபக்ஷாஹ: புண்யாஹேஷு கார்யாணி ॥ ௨ ॥

அவ்வித கர்மாக்களை "உத்தராயணம், பூர்வபக்ஷம், பகல், புண்யாஹம்" இவைகளில் செய்யவேண்டும்.

இங்குச் சொல்லப்படும், உத்தராயணம் முதலியவை விகல்பமன்று. ஸமுச்சயமாக இவைகள் விதிக்கப்படுகின்றன. அதனால் உத்தராயணத்தில், பூர்வபக்ஷத்தில், பகலில், புண்யாஹத்தில் கர்மாக்களைச் செய்யவேண்டுமென்றுகிறது.

இங்குள்ள உத்தராயணம், பூர்வபக்ஷம், பகல் இவை ப்ரஸித்தமானவை. ஆனால் 'புண்யாஹம்' என்பது எதைக் குறிப்பிடுகிறது என்று கவனிப்பது ஆவஶ்யகமாகிறது.

வேதம், பகலை ஒன்பது விதமாக வகுத்து, இதில் ஒற்றைப் படையான பாகங்கள் ஐந்தும் புண்ய நக்ஷத்ரம் என்றும், இரட்டைப் படையான பாகங்கள் நான்கும் தோஷமுள்ளவை என்றும் சொல்லுகிறது தைத்திரீய ப்ராம்ஹணம். 'ஸவநஸ்யாஹ்ந: பஞ்ச புண்யாநி நக்ஷத்ராணி சத்வார்யஶ்லீலாநி' (1-5-3) என்று.

பகலின் புண்யமான ஐந்து பாகங்களுக்கும் "ப்ராத:, ஸங்கவம், மத்யாஹ்நம், அபராஹ்ணம், ஸாயாஹ்னம்" என்று பெயர். இந்த ஐந்தும் மிகவும் புண்யமானவை என்பதை 'தத்புண்யம் தேஜஸ்வ்யஹ:' (தை. ப்ரா-1—5—3) என்று கூறுகிறது.

'யாந்யேவ தேவநக்ஷத்ராணி । தேஷு குர்வீத யத்காரீ ஸ்யாத் । புண்யாஹ ஏவ குருதே' (1—5—2) என்று வேதம்

மற்றோர் இடத்தில், க்ருத்திகா நக்ஷத்ரம் முதல் விசாகா நக்ஷத்ரம் வரையுள்ள நக்ஷத்ரங்கள் தேவ நக்ஷத்ரங்கள் என்றும், செய்ய வேண்டிய காரியங்களை இந்த நக்ஷத்ரங்களில் செய்தால் புண்யாஹத்தில் செய்ததாக ஆகிறது என்றும் சொல்லுகிறது. இதனால் க்ருத்திகா முதல் விசாகா பர்யந்தமுள்ள நக்ஷத்ரங்கள் 'புண்யாஹ' சப்தத்தால் சொல்லப்படுவதாகவும் கொள்ளலாம், என்று சிலர் கூறுகின்றனர்.

இப்படி உத்தராயணம் முதலியவை க்ருஹ்ய கர்மாக்களுக்குப் பொதுவான காலமாகச் சொல்லப்பட்டிருந்தாலும் மேல் இந்த ஸூத்ரங்களில் சொல்லப்படும் சில கர்மாக்களில் இந்தக் கால விதிக்கு மாறுதலைப் பார்க்கிறோம்.

'ஸர்வ ருதவோ விவாஹஸ்ய' (ஆப.க்ரு. 2—18) என்று எல்லா ருதுக்களிலும் விவாஹம் செய்ய விதி காணப்படுவதால், தக்ஷிணாயனத்திலும் விவாஹம் செய்யலாம் என்று ஏற்படுகிறது.

அவ்விதமே 'ஸமாவர்த்தனம்' என்ற கர்மம் விவாஹத்தின் ஸமீபகாலத்திலேயே செய்யப்படவேண்டியது. இதனால் விவாஹம் தக்ஷிணாயனத்தில் செய்ய நேரிட்டால், ஸமாவர்த்தனமும் தக்ஷிணாயனத்தில் செய்ய வேண்டியதாக ஆகிறது. ஸமாவர்த்தனத்தை ஒரு காலத்தில் செய்துவிட்டு, விவாஹத்தை மற்றொரு காலத்தில் செய்ய முடியாது.

'அநாச்ரமீ ந திஷ்டேத்து தினமேகமபி த்விஜ:' என்ற வசனம் 'ஒரு ஆச்ரமுமில்லாமல் ஒரு தினமும் இருக்கக் கூடாது' என்று சொல்லுகிறது. உத்தராயணத்தில் ஸமாவர்த்தனம் செய்துவிட்டால் அத்துடன் ப்ரம்ஹசர்யாச்ரமம் முடிந்துவிடுகிறது. விவாஹம் நடக்கவில்லையாதலால் க்ருஹஸ்தனுகவும் ஆகவில்லை. இந்நிலையில் உத்தராயணத்தில் ஸமாவர்த்தனம் செய்துகொண்டு தக்ஷிணாயனத்தில் விவாஹம் செய்துகொள்ள நினைப்பவன் சிறிது காலம் ஒரு ஆச்ரமமுமில்லாமல் இருக்கவேண்டி வருகிறது. இது ப்ரமாணங்களுக்கு விருத்தமானது. அதனால் விவாஹம்போல் ஸமாவர்த்தனமும் தக்ஷிணாயனத்தில் செய்யப்படவேண்டும்.

மேலும், தக்ஷிணாயனத்தில் ஸமாவர்த்தனம் செய்வதை மற்ற ஸூத்ரகாரர்களும் அங்கீகரிக்கிறார்கள்.

ஆச்வலாயனர்— 'உதகயந ஆபூர்யமாணபக்ஷே கல்யாணே நக்ஷத்ரே சௌளகர்மோபநயநகோதாநவிவாஹா:' (ஆச்வ.

க்ருஹ்ய. 1—5) என்று சௌளத்திற்கும், கோதானத்திற்கும் உத்தராயணாதிகளைக் காலமாகச் சொல்லுகிறார். கோதானம் என்ற கர்மாவானது சௌளவிகாரமாக இருப்பதால், சௌளத்திற்கு விதிக்கப்படும் காலமே கோதானத்திற்கும் வரும். இந்நிலையில் மறுபடியும் ஸூத்ரகாரர் கோதானத்திற்கும் காலம் சொல்லுகிறார். இதனால் சௌளவிக்ருதியான கோதானத்தை மட்டும் உத்தராயணத்தில் செய்ய வேண்டுமென்றும், மற்ற விக்ருதிகளைச் செய்ய உத்தராயணம் வேண்டியது ஆவஶ்யகமில்லை என்றும் தீர்மானிக்கிறது. இதனால் சௌளத்தின் மற்றொரு விக்ருதியான ஸமாவர்த்தனத்தை எப்பொழுது வேண்டுமானாலும் செய்யலாம் என்று ஏற்படுகிறது. இதனால் ஸமாவர்த்தனத்திற்குத் தக்ஷிணாயன காலம் ஸித்திக்கின்றது.

போதாயந ஸூத்ரத்தைக் கவனித்தாலும் இவ்விதமே ஸமாவர்த்தநத்திற்குத் தக்ஷிணாயநம் காலமாக ஸித்திக்கிறது.

தக்ஷிணாயன விவாஹ விஷயத்தில் சிலருடைய அபிப்ராயம் பின் வருமாறு. 'ஸர்வ ருதவோ விவாஹஸ்ய' என்ற ஸூத்ரப்படி விவாஹகர்மாவிற்கு எல்லா ருதுக்களும் காலமாகச் சொல்லப்படுவது உண்மை. ஆனால், இந்த விதி விவாஹமாத்ரத்திற்கேயன்றி வ்ரதத்திற்கும் சேர்ந்து ஏற்பட்டதல்ல. வ்ரதம் என்பது விவாஹத்திற்கு அங்கமாக இருந்தால் விவாஹகாலத்தை அநுஸரித்து வ்ரதத்திற்கும் காலம் ஸித்திக்கும். அவ்விதமில்லை. வ்ரதம் என்பது ஸ்வதந்த்ரகர்ம. விவாஹம் செய்துகொள்ளாதவன் கூட வ்ரதத்தைச் செய்துகொள்ள வேண்டியது அவச்யம். இது தனியான ஸம்ஸ்காரம். இதற்கு 'உதகயந' என்ற ஸூத்ரத்தால் உத்தராயணம் காலமாக ஸித்திக்கிறது. இதனால் வ்ரதம்செய்தவுடன் செய்யப்படவேண்டிய விவாஹத்தை உத்தராயணத்தில் தான் செய்யவேண்டுமென்று ஏற்படுகிறது. த்விதீயவிவாஹத்தில் வ்ரதம் கிடையாதாகையால், வ்ரதமில்லாத அவ்விவாஹத்தைத் தக்ஷிணாயனத்தில் செய்யலாம். வ்ரதத்தை உத்தராயணத்தில் செய்துகொண்டு தக்ஷிணாயனத்தில் விவாஹத்தைச் செய்யலாம் என்ற பக்ஷமே கிடையாதாகையால் அநாச்ரமியாக இருக்கக்கூடாது என்ற நிஷேதத்திற்கும் ப்ரஸக்தியில்லை. ஒரு ஸூத்ரகாரரும் வ்ரதத்திற்குத் தக்ஷிணாயனத்தைக் காலமாக ஸ்பஷ்டமாகச் சொல்லவில்லை என்று.

அவ்விதமே க்ருஹநிர்மாணம், க்ருஹப்ரவேசம் இவைகளைத் தக்ஷிணாயநத்தில் செய்யலாம் என்று ஜ்யோதிஸ்ஸாஸ்த்ரத்தில் சொல்லப்படுகிறது. சிஷ்டர்களும் இதைப் பின்பற்றி அவைகளைத் தக்ஷிணாயனத்தில் அநுஷ்டித்து வருகிறார்கள்.

அப்படியே பூர்வபக்ஷத்தில் செய்யவேண்டிய கர்மாக்களை அபரபக்ஷத்தின் பஞ்சமி வரை ஜ்யோதிஸ்ஸாஸ்த்ரத்தைப் பின்பற்றி சிஷ்டர்கள் அனுஷ்டித்து வருகிறார்கள்.

ஜ்யோதிஸ்ஸாஸ்த்ரங்களைப் பின்பற்றி அந்நப்ராசநம், க்ருஹப்ரவேசம், க்ருஹநிர்மாணம் இவைகளைப் பெரியோர்கள் ராத்ரியிலும் செய்துவருகிறார்கள்.

ஜ்யோதிஸ்ஸாஸ்த்ரம் வேதாங்கமாக முக்யமாக ஆதரிக்கப்பட வேண்டியதாக இருப்பதால், புண்யாஹம் முதலியவைகள் ஜ்யோதிஸ்ஸாஸ்த்ரரீதியில் தோஷமுள்ளவைகளாக இருந்தால் அவைகளில் சிஷ்டர்கள் கர்மாக்களைச் செய்வது கிடையாது. துஷ்டமாக இங்குச் சொல்லப்பட்ட காலம் ஜ்யோதிஸ்ஸாஸ்த்ரரீதியில் குணமுள்ளதாக இருந்தால் அங்கும் கர்மாக்களைச் செய்கிறார்கள்.

இவ்விதம் பலவிதமாக இருப்பதால் சிஷ்டாசாரத்தைக் கொண்டுதான் இங்கு நிர்ணயம் செய்யவேண்டும்.

𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀𑌤𑌿𑌨𑌾 ॥ ௩ ॥

இங்குச் சொல்லப்படும் கர்மாக்களை யஜ்ஞோபவீதத்துடன் செய்யவேண்டும்.

𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 ॥ ௪ ॥

இங்கு சொல்லப்படும் கர்மாக்களை ப்ரதக்ஷிணமாகச் செய்ய வேண்டும்.

𑌪𑍍𑌰𑌾𑌗𑍁𑌦𑌗𑌾𑌰𑌮𑍍𑌭𑌃 ॥ ௫ ॥

கிழக்குத் திக்கிலாவது வடக்குத் திக்கிலாவது ஆரம்பித்து இங்குச் சொல்லப்படும் கர்மாக்களைச் செய்யவேண்டும்.

𑌤𑌥𑌾𑌽𑌪𑌵𑌰𑍍𑌗𑌃 ॥ ௬ ॥

அவ்விதமே ஆரம்பித்த கர்மாவை முடிக்கும் காலத்தில் கிழக்கிலாவது வடக்கிலாவது முடிக்கவேண்டும். ஆனாலும், ஸமந்த பரிஷேசனாதி கர்மாக்களில் ப்ரதக்ஷிணமாகச் சுற்றிச் செய்யவேண்டியிருப்பதால், ஆரம்பித்த திக்கிலேயே முடிக்கவேண்டிய ஆவச்யகமேற்படுமாதலால், முடிவும் அநேகமாக முன் ஸூத்ரப்படி

கிழக்கிலாவது வடக்கிலாவதுதான் வரும். அதனால் இந்த ஸூத்ரம் ப்ரயோஜநமற்றதாக அப்பொழுது ஆகும். ஆனால் ப்ரதக்ஷிணமாகச் சுற்றிச் செய்யவேண்டாத கர்மாக்களில் எந்ததிக்கில் ஆரம்பிக்கிறது, எங்கு முடிக்கிறது என்ற ஸந்தேஹமேற்படும். அதைத் தெளிவுபடுத்தவே இந்த ஸூத்ரம் பயன்படுகிறது. இங்கு பொதுவாக எந்தக் கர்மாவிலும் முடிவு வடக்கிலாவது கிழக்கிலாவது இருக்கவேண்டுமென்று நியமித்துவிட்டால், ப்ரதக்ஷிணமாகச் சுற்றிச் செய்யவேண்டாத கர்மாக்களிலும் ஆரம்பம் எங்கிருந்தாலும் முடிவு வடக்கிலாவது கிழக்கிலாவது இருக்கவேண்டுமென்கிற நியமம் கிடைக்கும். ப்ரதக்ஷிணமாகச் செய்யவேண்டிய கர்மாக்களில் ஆரம்பித்த திக்கிலேயே முடிப்பதும் தானாகவே கிடைக்கும். உதாஹரணமாக 'உல்லேகநம்', 'உத்பவநம்' இவைகள் சுற்றிச் செய்யக்கூடிய கர்மாக்கள் இல்லை. இதனால் முன் ஸூத்ரப்படி இங்கு ஆரம்பம் கிழக்கிலாவது வடக்கிலாவது ஏற்படுகிறது. இவை சுற்றிச் செய்யக்கூடிய கர்மாவாக இல்லையாதலால் முடிக்கும் காலத்தில் மேற்கிலாவது தெற்கிலாவது முடிக்கவேண்டி வருகிறது. இங்கிலையில் முடிக்கும் காலத்தில் திக்நியமம் செய்யும் இந்த ஸூத்ரமிருந்தால் சுற்றித் திருப்பிச் செய்ய வேண்டாத கர்மாக்களில் முடிவு வடக்கிலாவது கிழக்கிலாவது இருக்கவேண்டும் என்ற நியமம் கிடைப்பதால் இவ்வித கர்மாக்களில் ஆரம்ப திக்கு நியமம் கிடையாது என்று ஏற்படும். அதனால் ஆரம்பம் வேறு திக்கிலிருந்தாலும், 'உல்லேகநம்' 'உத்பவநம்' இவைகளில் முடிவு கிழக்கிலாவது வடக்கிலாவது இருக்கவேண்டுமென்று கிடைக்கும். ஈசாநபலியில் அக்நிக்கு மேற்குப் பக்கத்தில் செய்யவேண்டிய குடிகளையும் வடக்கில் முடிவாகும்படியே செய்யவேண்டும். பரிஸ்தரணம் செய்யும் பொழுது ஆரம்பத் திக்கிலேயே முடிப்பது அஸாத்யமாதலால் ஆரம்ப திக்நியமம் முடிவு திக்நியமம் இரண்டையும் பின்பற்றிக் கிழக்கில் ஆரம்பித்து வடக்கில் முடிக்கப்படுகிறது.

இங்குச் சொல்லப்படும் 'யஜ்ஞோபவீதிநா' முதலிய நியமங்கள் ஶ்ரௌதபரிபாஷா ஸூத்ரத்திலும் காணப்படுகின்றன. யஜ்ஞபரிபாஷாஸூத்ரம் ஸர்வயஜ்ஞங்களுக்கும் பொதுவானதால், க்ருஹ்யயஜ்ஞங்களிலும் யஜ்ஞோபவீதத்துடன் செய்வது முதலிய நியமங்கள் கிடைக்கின்றன. ஆனாலும் இங்குச் சொல்லப்படும் ஜாதகர்மம் முதலிய மாநுஷகர்மாக்களிலும் யஜ்ஞமாக இல்லாத க்ருஹ்யகர்மாக்களிலும் மேற்படி நியமங்கள் கிடைப்பதற்காகவே மறுபடியும் இங்கு நியமங்கள் சொல்லப்படுகின்றன.

அபரபக்ஷே பித்ரூணி ॥ ௭ ॥

பித்ருக்களை உத்தேசித்துச் செய்யப்படும் கர்மாக்களை அபரபக்ஷத்தில் செய்யவேண்டும். இதனால் ஸ்வதந்த்ர பித்ருகர்மாவாக உள்ள மாஸிஸ்ராத்தம் முதலியவைகளை அபரபக்ஷத்தில் செய்யவேண்டும் என்று ஏற்படுகிறது. தைவகர்மாவுக்கு அங்கமாக பித்ருகர்மம் வருமிடங்களில் ப்ரதானமான தைவகர்மாவின் காலமே அங்கத்திற்கும் வருமாதலால், அதற்குத் தனியாகக் காலாபேக்ஷை ஏற்பட ந்யாயமில்லை. இங்குள்ள அபரபக்ஷவிதி முன் சொல்லப்பட்ட பூர்வபக்ஷத்தை மட்டும் பாதிப்பதற்காக ஏற்படவில்லை. ஆனால் உத்தராயணம், அஹஸ், புண்யாஹம் என்ற எல்லாக் காலங்களுக்கும் அபவாதமாக ஏற்பட்டது. அதனால் பித்ருகர்மாக்களுக்கு உத்தராயணம் முதலிய மற்றக்கால நியமங்களும் கிடையாது. அதனால் பித்ருகர்மாக்களைத் தக்ஷிணாயனத்திலும், அந்தந்த விதி மூலம் கிடைக்கும் எந்தக் காலத்திலும் செய்யலாம்.

‘மாஸி மாஸி கார்யம்’ (ஆபஸ். தர்மஸூ. 2-26-4) என்ற விதி மாஸிஸ்ராத்தத்தை ப்ரதிமாஸமும் செய்யவேண்டும் என்று விதிக்கிறது. இதனால் மாஸிஸ்ராத்தம் தக்ஷிணாயனத்திலும் செய்யவேண்டியதாக ஆகிறது. மற்றக் காம்ய ஸ்ராத்தங்களையும் அபரபக்ஷத்தில் செய்யவேண்டும். இங்கே பொதுவாகப் பித்ருகர்மாவுக்கு அபரபக்ஷத்தைக் காலமாகச் சொல்லியிருந்தும், மாஸிஸ்ராத்தத்தைச் சொல்லுமிடத்தில் மறுபடியும் அபரபக்ஷத்தைக் காலமாகச் சொல்லுகிறார். அதற்குப் பின்வருமாறு ப்ரயோஜனம் ஏற்படுகிறது. ஸாமாந்ய விதியாலேயே அபரபக்ஷம் மாஸிஸ்ராத்தத்திற்குக் காலமாக ஆனாலும், பூர்வபக்ஷத்தில் செய்யவேண்டிய கர்மாக்களுக்கு அபரபக்ஷம் கௌணகாலமாக ஆகுவதுபோல், அபரபக்ஷத்தில் செய்யவேண்டிய கர்மாக்களுக்குப் பூர்வபக்ஷமும் கௌணகாலமாக ஆகலாம். மாஸிஸ்ராத்தத்தை அபரபக்ஷத்திலேயே செய்யவேண்டுமென்று நியமம் ஏற்பட்டால், அதற்குப் பூர்வபக்ஷம் கௌணகாலமாகக் கூட ஆக முடியாது. அதனால் தைவகதியால் அபரபக்ஷத்தில் மாஸிஸ்ராத்தம் செய்யப்படாமற் போனால் அதைப் பூர்வபக்ஷத்தில் செய்யக்கூடாது. ப்ராயஸ்சித்தம் மட்டும் தான் செய்யப்படவேண்டும். மாஸிஸ்ராத்த லோபத்திற்கு ஸாக்ஷாத்தாக ப்ராயஸ்சித்தம் சொல்லப்படாமற்போனாலும், ஐதரேயப்ராம்ஹணத்தைப் பின்பற்றிப் பொதுவாகச் சொல்லப்பட்ட அவிஜ்ஞாத ப்ராயஸ்சித்தமான ஸமஸ்த வ்யாஹ்ருதி

ஹோமத்தைச் செய்யவேண்டும். இதை ஔபாஸனாக்நியில் செய்ய வேண்டும். உபவாஸமும் இருக்கவேண்டும். ப்ராணாயாமமும் செய்யவேண்டும். கபர்திபாஷ்யரீதியில் இங்கு நான்கு தடவை ஆஜ்யத்தை க்ரஹித்துக்கொண்டு ஸப்தஹோத்ரு மந்த்ரத்தால் ஹோமம் செய்யவேண்டும்.

ஆபஸ்தம்பஸூத்ரத்தில் இவ்வித இடங்களில் ப்ராயஸ்சித்தம் சொல்லப்படாததால் ஸூத்ராந்தரங்களில் சொல்லப்பட்ட ப்ராயஸ்சித்தங்களை இங்குச் செய்யலாமென்று மற்றும் சிலர் கூறுகின்றனர்.

இவ்விதமே நித்யமாக விதிக்கப்பட்ட கர்மாக்கள் ஆரம்பிக்கப் படாமற்போனாலும், நடுவில் கௌணகாலத்தில் செய்யப்படாமற் போனாலும் ப்ராயஸ்சித்தம் செய்துகொள்ளவேண்டும்.

விதிக்கப்பட்ட கர்மாக்களை முக்ய காலங்களில் அநுஷ்டிக்க வேண்டும். முக்யகாலத்தில் அநுஷ்டிக்காமல் போனால் ஸர்வப்ராயஸ்சித்தஹோமத்துடன் கௌணகாலத்தில் அநுஷ்டிக்கவேண்டும். அனேக ஔபாஸனஹோமங்கள் அவ்விதமே ஸ்வகாலத்தில் செய்யப்படாமல் போனால் ஸர்வப்ராயஸ்சித்த ஹோமத்தைச் செய்துவிட்டு, செய்யாமல் விட்டுப்போன ஹோமங்களைச் சேர்த்துச் செய்யவேண்டும். இரண்டு மூன்று நாட்கள் வரை ஔபாஸந ஹோமம் விட்டுப்போனால் இவ்விதம் செய்யவேண்டும். அதற்குமேல் பல தினங்கள் ஔபாஸந ஹோமம் செய்யப்படாமல் விட்டுப்போனால் அக்நி லௌகிகம் ஆகிவிடுவதால் அக்நியின் உத்பத்திக்காக அக்நிஸந்தானத்தையும் செய்யவேண்டும். மாஸக்கணக்கில் ஔபாஸனாக்நி இல்லாமலிருந்தால் ஸ்ம்ருதிகளில் சொல்லப்படும் விசேஷப்ராயஸ்சித்தத்தைச் செய்து ஔபாஸனத்தை ஆரம்பிக்கவேண்டும்.

பாகயஜ்ஞங்களில் எந்த யஜ்ஞமும் ஸ்வகாலத்தில் ஆரம்பிக்கப் படாமற்போனால், ஸர்வப்ராயஸ்சித்தஹோமத்தைச் செய்துவிட்டு அதைச் செய்ய ஆரம்பிக்கவேண்டும்.

க்ருஹ்யகர்மாக்களின் அங்கங்களில் லோபம் ஏற்பட்டாலும். ஸர்வப்ராயஸ்சித்த ஹோமத்தைச் செய்து, ப்ராணாயாமத்தையும் செய்யவேண்டும். இது எல்லா அங்கங்களுக்கும் பொதுவானது. 'ஆராதூபகாரக' (ஆஜ்யபாகம் போன்றவை ஆராதுபகாரங்கள்) அங்கங்களுக்கு லோபம் ஏற்பட்டால் கீழ்ச்சொல்லப்பட்ட ப்ரா

யஸ்சித்தங்களைச் செய்வதோடு விட்ட அங்கத்தையும் கர்மாவின் முடிவுக்குள் செய்யவேண்டும். 'ஸந்நிபத்யோபகாரக' (தர்வீ ஸம்ஸ்காரம்போன்றவை ஸந்நிபத்யோபகாரகங்கள்.) அங்கத்திற்கு லோபம் ஏற்பட்டால், முன்போல் ப்ராயஸ்சித்தத்தைச் செய்து அந்த அங்கத்தால் உபகாரத்தை அடையும் கார்யம் முடியாமலிருந்தால் விட்ட அந்த அங்கத்தையும் செய்யவேண்டும். கார்யம் முடிந்துவிட்டால் ப்ராயஸ்சித்தத்தை மட்டும் செய்தால் போதும்.

பாகயஜ்ஞங்களை அக்நிஹோத்ரவிதிப்படி செய்யும் பக்ஷத்தில் எல்லாக் கர்மாக்களிலும், உபநயநத்திலும் அங்கங்களுக்கு லோபம் ஏற்பட்டால் 'புவ:ஸ்வாஹா' என்ற ப்ராயஸ்சித்த ஹோமத்தைச் செய்து, 'அநாஜ்ஞாத' மந்த்ரத்தால் ஹோமத்தையும் செய்யவேண்டும். 'அநாஜ்ஞாத' மந்த்ரத்தை ஜபிப்பது ப்ராயஸ்சித்தமாகும்.

ப்ராசீநாவீதிநா ॥ ௮ ॥

பித்ருகர்மாக்களை ப்ராசீநாவீதத்துடன் செய்யவேண்டும். பித்ரு கர்மா ப்ரதானமாக இருந்தாலும், அங்கமாக இருந்தாலும் இதை ப்ராசீநாவீதத்துடனேயே செய்யவேண்டும். சிலருடைய அபிப்ராயப்படி ப்ரதானத்திற்குத் தகுந்தாற்போல் அங்கங்களைச் செய்யவேண்டுமென்ற பக்ஷத்தை அநுஸரித்து ப்ரதானம் தைவமாக இருந்தால் அங்கு அங்கமாக வரும் பித்ரு கர்மாக்களையும் உபவீதியாகவே செய்யவேண்டும். அப்படியே ப்ரதானம் பித்ரு கர்மாவாக இருந்தால், அதன் அங்கம் தைவகர்மாவாக இருந்தாலும் அதை ப்ராசீநாவீதத்துடனேயே செய்யவேண்டும்.

ப்ரஸவ்யம் ॥ ௯ ॥

பித்ருகர்மாக்களை அப்ரதக்ஷிணமாகச் செய்யவேண்டும்.

தக்ஷிணதோऽபவர்கா: ॥ ௧௦ ॥

பித்ருகர்மாக்களில் பரிஷேசனம் முதலியவைகளைத் தெற்கில் முடிக்கவேண்டும்.

நிமித்தாபேக்ஷாணி நைமித்திகாநி ॥ ௧௧ ॥

நைமித்திக கர்மாக்களை நிமித்தங்களைப் பார்த்துச் செய்யவேண்டும். கீழ்ச்சொன்ன காலநியமங்கள் நைமித்திக கர்மாக்களுக்குக் கிடையாது. உதாஹரணமாக ஆக்ரயணம் என்ற கர்மா புது நெல்பயிர் அறுவடைக்குத் தகுதியாகும் காலத்தில் செய்யவேண்டியது. இது தக்ஷிணாயனத்தில் சரத்காலத்தில்தான் ஸம்பவிக்

கும். அவ்விதம் ஸீமந்தம் என்ற கர்மா, முதல் கர்ப்பத்தில் நான்காவது மாதத்தில் செய்யப்படவேண்டும். இதுவும் தக்ஷிணாயநத்தில் செய்யவேண்டி வரலாம். இங்கெல்லாம் விதிகளில் சொல்லப்படும் நிமித்தங்களை மட்டும்தான் பார்க்கவேண்டும். உத்தராயணம் முதலிய காலங்களை எதிர்பார்க்கவேண்டியதில்லை. இங்கும் ஸம்பவிக்குமிடங்களில் கீழ்ச் சொன்ன காலங்களில் பூர்வபக்ஷம், அஹஸ், புண்யாஹம் இவைகளில் கிடைக்கக்கூடியதை எடுத்துக் கொள்ளலாம்.

இவ்விதம் ஸர்வ க்ருஹ்ய கர்மஸாதாரணமான காலம் முதலியவைகளை இதுவரையில் சொல்லிவிட்டு, க்ருஹ்யகர்மாக்களிலுள்ள ப்ரதான ஹோமங்களுக்கு முன்னும் பின்னும் செய்யவேண்டிய பூர்வோத்தராங்கங்களை இதற்கு மேல் சொல்லுகிறார்.

𑌅𑌗𑍍𑌨𑌿𑌮𑌿𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌾𑌗𑌗𑍍𑌰𑍈𑌰𑍍𑌦𑌰𑍍𑌭𑍈𑌰𑌗𑍍𑌨𑌿𑌂 𑌪𑌰𑌿𑌸𑍍𑌤𑍃𑌣𑌾𑌤𑌿 ॥ ௧௨ ॥
𑌪𑍍𑌰𑌾𑌗𑍁𑌦𑌗𑌗𑍍𑌰𑍈𑌰𑍍𑌵𑌾 ॥ ௧௩ ॥

முதலில், அக்நியை விறகுகளைப் போடுவது மூலம் ஜ்வலிக்கச் செய்துவிட்டு, அக்நியைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் தர்ப்பங்களால் பரிஸ்தரணம் போடவேண்டும். பரிஸ்தரணம்– அக்நியின் நான்கு பக்கங்களிலும் தர்ப்பங்களைப் பரப்புவது. இங்கு எல்லாப் பக்கங்களிலுமே கிழக்கு முகமாகத் தர்ப்பங்களைப் பரப்பலாம். அல்லது, தெற்குப் பக்கத்திலும், வடக்குப் பக்கத்திலும், கிழக்கு முகமாகவும், மேற்குப் பக்கத்திலும், கிழக்குப் பக்கத்திலும் வடக்கு முகமாகவும் பரிஸ்தரணங்களைப் போடலாம். போதாயந பரத்வாஜ க்ருஹ்யங்களை அநுஸரித்துத் தெற்குப் பக்கத்துப் பரிஸ்தரணத்தை மேற்குப் பரிஸ்தரணத்திற்கு மேலாகவும், வடக்குப் பரிஸ்தரணத்தைக் கீழேயும் போடவேண்டும். அக்நியை மட்டும் பரிஸ்தரணம் செய்யவேண்டும். பரிஸ்தரணத்திற்குள் அக்நியைத் தவிர வேறொன்றும் இருக்கக்கூடாது.

இங்குச் சொல்லப்படும் அக்நி அப்பொழுதைக் கப்பொழுது கர்மாவுக்காக எடுத்துக்கொள்ளப்படும் லௌகிகாக்நியாகவுமிருக்கலாம். அல்லது, ஔபாஸநாக்நியாகவுமிருக்கலாம். எந்தக் கர்மாவின் பலம் தம்பதிகளில் இருவர்களில் ஒருவருக்கோ, இருவருக்குமோ கிடைக்கிறதோ அங்கு அந்தக் கர்மாவை ஔபாஸநாக்நியில் செய்யவேண்டும். மற்ற இடங்களில் லௌகிகாக்நியில் கர்மாக்களைச் செய்யவேண்டும். இதனால் ஜாதகர்மம், சௌளம்,

உபாகரணம், ஸமாபநம், கோதாநம், ஸமாவர்த்தநம் இவைகளைப் பிறருக்காகச் செய்வதால் லௌகிகாக்நியிலேயே செய்ய வேண்டுமென்று ஏற்படுகிறது. பும்ஸவநம், ஸீமந்தம் முதலியவைகளை ஔபாஸநாக்நியில் செய்யவேண்டும். ஸபிண்டீகரண கர்மாவால் ஏற்படக்கூடிய பித்ருத்வப்ராப்தி பித்ருக்களுக்கிருந்தாலும், அவ்வித பித்ருக்களைத் தான் செய்யும் மாஸிச்ராத்தாதிகளுக்காக யஜமாநனே அடைவதால் பலம் யஜமாநனைச் சேர்ந்ததாக ஆகிவிடுகிறது. அதனால் ஸபிண்டீகரணத்தையும் ஔபாஸநாக்நியிலேயே செய்யவேண்டும்.

தக்ஷிணாக்ரை: பித்ர்யேஷு ॥ ௧௪ ॥

பித்ரு கர்மாக்களில் பரிஸ்தரணம் எல்லாத் திக்குக்களிலும் தெற்கு முகமாகவே இருக்கவேண்டும்.

தக்ஷிணாப்ராகக்ரைர்வா ॥ ௧௫ ॥

அல்லது, அக்நிக்குக் கீழ்ப்பக்கத்திலும் மேற்குப் பக்கத்திலுமுள்ள பரிஸ்தரணம் தெற்கு முகமாகவும், அக்நிக்குத் தெற்கு வடக்குப் பக்கங்களில் உள்ள பரிஸ்தரணம் கிழக்கு முகமாகவும் இருக்கலாம்.

உத்தரேணாக்நிம் தர்பாந் ஸம்ஸ்தீர்ய த்வந்த்வம் ந்யஞ்சி பாத்ராணி ப்ரயுநக்தி தைவஸம்யுக்தாநி ॥ ௧௬ ॥

பரிஸ்தரணம் போட்ட பிறகு அக்நிக்கு வடக்குப் பக்கத்தில் தர்ப்பங்களைப் பரப்பி, அந்தத் தர்ப்பங்களின் மீது இரண்டு இரண்டாகத் தேவகார்யத்தைச் சேர்ந்த தர்வீ முதலிய பாத்ரங்களைக்கவிழ்த்து வைக்கவேண்டும். இங்கே தர்ப்பங்களைக் கிழக்கு முகமாகப் பரப்பவேண்டும். பித்ரு கர்மாக்களிலும் இந்தத் தர்ப்பங்களை அக்நிக்கு வடக்குப் பக்கத்திலேயே பரப்ப வேண்டும்.

ஸக்ருதேவ மாநுஷ்யஸம்யுக்தாநி ॥ ௧௭ ॥

மனிதனுக்கு உபயோகப்படவேண்டிய பாத்ரங்களை ஒரே தடவையாக ஸாதனம் செய்யவேண்டும். அஜினம், மேகலை, வஸ்த்ரம் போன்றவை புருஷ ஸம்ஸ்கார மூலம், உபநயநத்தில் ஸம்பந்தப்படுவதால் இவைகளை ஒரே முயற்சியில் உபநயநாதிகளில் ஸாதநம் செய்யவேண்டும். சிலர் மநுஷ்ய ஸம்ஸ்காரத்திற்

காக ஏற்பட்டுள்ள உபநயநாதிகளில் எல்லாவற்றையுமே ஒரே முயற்சியில் வைக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

𑌸𑌕𑍃𑌦𑍇𑌵 𑌪𑌿𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌣𑌿 ॥ ௧௮ ॥

பித்ருக்களுக்காக ஏற்பட்டுள்ள பாத்ரங்களை ஒன்றொன்ருக ஸாதனம் செய்யவேண்டும். இங்கும் முன்போல் பித்ரு கர்மாவைச் சேர்ந்த எல்லாப் பாத்ரங்களையுமே ஒன்றொன்ருக வைக்கவேண்டுமென்று சிலர் கூறுகின்றனர்.

𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌯𑍋𑌃 𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰 𑌆𑌯𑌾𑌮𑌃 𑌪𑌰𑌿𑌮𑌾𑌣𑌂 𑌪𑍍𑌰𑍋
𑌕𑍍𑌷𑌣𑍀𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌃 𑌪𑌾𑌤𑍍𑌰𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌷 𑌇𑌤𑌿 𑌦𑌰𑍍𑌶𑌪𑍂𑌰𑍍𑌣𑌮𑌾
𑌸𑌵𑌤𑍍𑌤𑍂𑌷𑍍𑌣𑍀𑌂 ॥ ௧௯ ॥

"பவித்ரங்களுடைய ஸம்ஸ்காரம், பவித்ரங்களுடைய நீட்டல் அளவு, ப்ரோக்ஷணீ ஸம்ஸ்காரம், பாத்ரங்களை ப்ரோக்ஷிப்பது" இவைகளைத் தர்சபூர்ணமாஸத்தில் செய்வதுபோல் "தூஷ்ணீ"மாகச்(மந்த்ரமில்லாமல்)செய்யவேண்டும். சிலருடைய அபிப்ராயப்படி க்ருஹ்ய கர்மாக்களில் உபயோகப்படும் இத்மங்களுக்கும் தர்சபூர்ணமாஸம் போல் ஸம்ஸ்காரம் செய்யவேண்டுமென்று ஏற்படுகிறது. ஆஜ்யத்தில் சேர்க்கவேண்டியதாக மேல் (ஆபஸ்-க்ரு. 1-2-2) சொல்லப்படும் தர்பாக்ரங்களுக்கும் பவித்ரம் போல் ஸம்ஸ்காரம் செய்யவேண்டுமென்றும் அவர்கள் கூறுகிறார்கள். பவித்ர தர்ப்பங்களின் பரிமாணம் மட்டும் தர்சபூர்ணமாஸத்தில் போல் இருக்கவேண்டுமென்று ஸூத்ரகாரர் சொல்லுவதால் இத்மங்களுக்குத் தர்சபூர்ணமாஸத்தில் போல் பரிமாணம் இருக்கவேண்டிய அவச்யமில்லை என்பதும் அவர்கள் பக்ஷம். இத்மங்களின் எண்ணிக்கை தர்சபூர்ணமாஸத்தில் போல் இருக்கவேண்டுமென்றும் சொல்லுகிறார்கள். அவர்கள் பக்ஷப்படி அநுயாஜம் இல்லாதபோதிலும் க்ருஹ்ய கர்மாக்களில் இருபத்தோரு இத்மங்கள் இருக்கவேண்டும். அநுயாஜ ஸ்தானத்தில் உப ஹோமங்களை க்ருஹ்யகர்மாக்களில் அநுயாஜமாகக் கொள்ளவேண்டுமென்று அவர்கள் அபிப்ராயப்படுகிறார்கள்.

பவித்ர ஸம்ஸ்காரம் கீழ்க்கண்டபடி செய்யப்படவேண்டும். ஒன்றுக்கொன்று நீளம், குறைவு இல்லாமல் ஸமமாக உள்ளதும், அக்ரம் நன்ருக உள்ளதும், ஒரு ஓட்டை நீளமுள்ளதுமான இரண்டு தர்ப்பங்களைப் பவித்ரமாகக் கொள்ள

வேண்டும். நீண்ட தர்ப்பங்களிலிருந்து இந்தப் பாகங்களைத் துண்டிக்கும் பொழுது மற்றொரு தர்ப்பத்தையோ, வேறு மரத் துண்டையோ நடுவில் வைத்துத் துண்டிக்கவேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் நகத்தால் துண்டிக்கக்கூடாது. இக் கார்யம் செய்ததற்குப் பரிஹாரமாக உடனே ஜலத்தைக் கையால் தொடவேண்டும். பிறகு பவித்ரங்களுடைய அடியிலிருந்து நுனிவரை ஜலத்தால் பவித்ரத்தைத் துடைக்க வேண்டும்.

பவித்ரங்களுடைய நீட்டலளவு ஒரு ஒட்டைச் சாண் தான்.

ப்ரோக்ஷணீ ஸம்ஸ்காரத்தை அடியில் கண்டபடி செய்ய வேண்டும்.

ப்ரோக்ஷணீ பாத்ரத்தை அக்நிக்கு மேற்குப் பக்கத்தில் வைத்து, அதில் பவித்ரத்தை வைத்து, பவித்ரத்தால் மறைந்துள்ள பாத்ரத்தில் ஜலத்தைச் சேர்க்கவேண்டும். பவித்ரங்களை வடக்கு நுனியாக வைத்துக்கொண்டு மூன்று தடவை உத்பவநம் செய்யவேண்டும். உத்பவநமென்பது, இரண்டு கைகளிலுமுள்ள அங்குஷ்டம், அநாமிகை இரண்டு விரல்களாலும் பவித்ரத்தைப் பிடித்துக்கொண்டு ஜலத்தின் மீது பவித்ரத்தை மேற்கில் ஆரம்பித்து, கிழக்கில் முடியும்படி நடத்துதல். மூன்று தடவை இப்படிச் செய்யவேண்டும்.

பிறகு ஸாதனம் செய்யப்பட்டுள்ள பாத்ரங்களை நிமிர்த்தி, இந்த ப்ரோக்ஷண ஜலத்தால் மூன்று தடவை ப்ரோக்ஷிக்க வேண்டும்.

ஈவறேணாஹ்நிம் வவித்ராஜஹி-்தெ வாதெ்ரzவ
ஞநீயொஉமஹ்ராஹ்யாம் வவித்ராஹ்யாம் த்ரிறாதுவெப
ஸமீ ஹூாணெஹ-ூஜேவாதுறேணாஹ்நிம் உஹெ-ஷா
ஸாஉயிக்ஷா உஹெஹெ-ஃ ஸ்வாஹா ॥ ௨௦ ॥

அக்நிக்கு மேற்குப் பக்கத்தில் வேறு ஒரு பாத்ரத்தில் (ப்ரணீதா பாத்ரத்தில்) பவித்ரத்தை வைத்து, ஜலத்தைச் சேர்த்து, முன்போல் இரண்டு கைகளில் உள்ள இரண்டு விரல்களால் பவித்ரத்தைப் பிடித்துக்கொண்டு, மேற்கிலிருந்து கிழக்கு வரை பாத்ரத்தில் உள்ள ஜலத்தின் மீது பவித்ரத்தை மூன்று தடவை நடத்தி, பவித்ரத்தோடு ஜலம் நிறைந்த பாத்

ரத்தை முகம் வரை தூக்கி, அக்நிக்கு வடக்குப் பக்கத்தில் தர்ப்பங்களைப் பரப்பி, அவைகளின் மீது இந்தப் பாத்ரத்தை வைக்கவேண்டும். தர்ப்பங்களால் மேற்படி பாத்ரத்தை மூட வேண்டும்.

ப்³ராஹ்மணம் த³க்ஷிணதோ த³ர்பே⁴ஷு நிஷாத்³ய ॥ ௨௧ ॥

அக்நிக்குத் தெற்குப் பக்கத்தில் தர்ப்பங்களைப் பரப்பி அவை மீது ஒரு ப்ராம்ஹணனை உட்காரவைக்கவேண்டும்.

இப்படி உட்காரவைக்கப்பட்ட ப்ராம்ஹணன் ப்ரம்ஹா என்ற ருத்விக் ஸ்தானத்தில் வருகிறார் என்றும், ஸூத்ராந்தரங்களில் இவரை ப்ரம்ஹாவாகவே சொல்லி தர்மங்கள் சொல்லப் படுவதால் தர்சபூர்ணமாஸத்தில் செய்வது போல் அவர் நிரஸநம், உபவேசநம் இவைகளை மந்த்ரமில்லாமல் செய்யவேண்டுமென்றும் சிலர் கூறுகிறார்கள். மற்றும் சிலர் இதை அங்கீகரிக்கவில்லை. மற்ற ஸூத்ரங்களில் போல் ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரங்களில் இவரை ப்ரம்ஹாவாக குறிப்பிடாததாலும், அவருக்கு ஒருவித தர்மமும் சொல்லப்படாததாலும் மற்ற ஸூத்ரங்களைப் பின்பற்றி இவரை ப்ரம்ஹாவாக நினைக்க இடமில்லை என்று கூறுகின்றனர். மேலும் இதே ரீதியில் ஒரு கர்மாவில் ப்ராம்ஹணம் தக்ஷிணதோ நிஷாத்ய என்று அக்நிக்குத் தெற்குப் பக்கத்தில் ப்ராம்ஹணனை உட்காரவைக்கவேண்டுமென்று சொல்லிவிட்டு, முடிவில் தக்ஷிணை கொடுக்கச்சொல்லும் காலத்தில் அவரை ப்ரம்ஹா என்று குறிப்பிடாமல் தெற்கில் உட்காரவைக்கப்பட்டவருக்கு வரன் கொடு என்று சொல்லுகிறார். அதனால் ஆபஸ்தம்பரின் அபிப்ராயப்படி தெற்கில் உட்கார்ந்தவர் ப்ரம்ஹா அல்ல என்று தீர்மானமாகிறது. மேலும் தர்சபூர்ணமாஸம்போல் செய் என்று கீழ்ச் சொல்லியது போல் குறிப்பிடாததால் நாமாகத் தர்சபூர்ணமாஸத்தில் உள்ள ப்ரம்ஹாவின் தர்மங்களை அதிதேசம் செய்ய இடமில்லை. நாமாக அதிதேசம் செய்தால் ப்ரம்ஹ தர்மங்கள் மந்த்ரங்களோடு கூடவே வரும். தூஷ்ணீமாக இவைகளை அநுஷ்டிக்க முடியாது. மேலும் தர்சபூர்ணமாஸத்திற்கும், க்ருஹ்ய கர்மாக்களுக்கும் பரஸ்பரம் ப்ரக்ருதி, விக்ருதி பாவம் கிடையாததால், ப்ரம்ஹ தர்மங்களுக்கு இங்கு ப்ரஸக்தியே கிடையாது. தெற்கில் உட்காருவதைக் கொண்டு அவரை ப்ரம்ஹாவாக நினைக்க இடமுமில்லை. இது பரஸ்பரம் ப்ரக்ருதி விக்ருதி பாவம்

உள்ள இடத்திலேயே ஸம்பவிக்கும். தர்சபூர்ணமாஸங்களுக்கும், க்ருஹ்ய கர்மாக்களுக்கும் ப்ரக்ருதி விக்ருதி பாவம் கிடையாதென்பது ஸுப்ரஸித்தமானது. தெற்கில் உட்காருபவரை ஸூத்ரகாரர் ப்ரம்ஹா என்று குறிப்பிட்டால் நாமாவைக் கொண்டாவது ப்ரம்ஹ தர்மங்கள் வருமென்று சொல்லலாம். ஸூத்ரகாரர் இவரை ப்ராம்ஹணன் என்று வேறு பெயரோடு சொல்லுவதால் இவர் ப்ரம்ஹாவாக ஆக இடம் இல்லை. ப்ரம்ஹ தர்மங்களும் இங்கு வரா.

𑌆𑌜𑍍𑌯𑌂 𑌵𑌿𑌲𑌾𑌪𑍍𑌯𑌾𑌪𑌰𑍇𑌣𑌾𑌗𑍍𑌨𑌿𑌂 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌹𑌿𑌤𑌾
𑌯𑌾𑌂 𑌆𑌜𑍍𑌯𑌸𑍍𑌥𑌾𑌲𑍍𑌯𑌾𑌮𑌾𑌜𑍍𑌯𑌂 𑌨𑌿𑌰𑍁𑌪𑍍𑌯𑍋𑌦𑍀𑌚𑍋𑌽𑌙𑍍𑌗𑌾𑌰𑌾𑌨𑍍𑌨𑌿
𑌰𑍂𑌹𑍍𑌯 𑌤𑍇𑌷𑍍𑌵𑌧𑌿𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌜𑍍𑌵𑌲𑌤𑌾𑌽𑌵𑌦𑍍𑌯𑍋𑌤𑍍𑌯 𑌦𑍍𑌵𑍇 𑌦𑌰𑍍𑌭𑌾
𑌗𑍍𑌰𑍇 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌸𑍍𑌯 𑌤𑍍𑌰𑌿𑌃 𑌪𑌰𑍍𑌯𑌗𑍍𑌨𑌿𑌕𑍃𑌤𑍍𑌵𑍋𑌦𑌗𑍁𑌦𑍍𑌵𑌾𑌸𑍍𑌯𑌾𑌙𑍍𑌗𑌾
𑌰𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍂𑌹𑍍𑌯 𑌉𑌦𑌗𑌗𑍍𑌰𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌪𑍁
𑌨𑌰𑌾𑌹𑌾𑌰𑌂 𑌤𑍍𑌰𑌿𑌰𑍁𑌤𑍍𑌪𑍂𑌯 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑍇 𑌅𑌨𑍁𑌪𑍍𑌰𑌹𑌰𑍇𑌤𑍍 ॥

உருகியுள்ள ஆஜ்யத்தை இங்கு இருக்கும் அக்நியிலும் மறுபடியும் உருக்கி, அக்நிக்கு மேற்குப் புறத்தில் உள்ள ஆஜ்ய ஸ்தாலியில் பவித்ரத்தை வைத்து, பவித்ரத்தால் மறைக்கப் பட்டுள்ள அந்தப் பாத்ரத்தில் ஆஜ்யத்தைச் சேர்த்துப் பிறகு அக்நியிலிருந்து அங்காரங்களை அக்நிக்கு வடக்குப் பக்கத்தில் தனிப்படுத்தி வைத்து, அங்கு ஆஜ்யத்தைக் காய்ச்சவேண்டும். ஒரு தர்ப்பத்தை அக்நியில் காட்டி ஜ்வலிக்கச் செய்து கீழ்முகமான ஜ்வாலை உள்ள அந்தத் தர்ப்பத்தைப் பாத்ரத்தில் உள்ள ஆஜ்யத்தில் காண்பித்து, தென்மேற்குப் பக்கத்தில் எறிந்துவிட வேண்டும். பிறகு இரண்டு தர்ப்பங்களின் நுனிகளைத் தர்ப்பங்களிலிருந்து துண்டித்து, கையால் ஜலத்தைத் தொட்டு, தர்ப்பங்களின் நுனிகளையும் ஜலத்தால் தடவி, ஆஜ்யத்தில் சேர்க்க வேண்டும். பிறகு அக்நியில் தர்ப்பங்களைக் கொளுத்தி, அந்த அக்நியைக்கொண்டு ஆஜ்யத்தை மூன்று தடவை ப்ரதக்ஷிணமாகச் சுற்றிவிட்டு, வடக்குப்புறமாக அக்நியுள்ள தர்ப்பத்தை எறிந்துவிட வேண்டும். உடனே ஆஜ்யபாத்ரத்தை வடக்குப் புறத்தி லிறக்கிவிட்டு, எடுக்கப்பட்ட அங்காரங்களை அக்நியுடன் சேர்த்துவிடவேண்டும். பிறகு ஆஜ்யபாத்ரத்தை அக்நிக்கு மேல் புறத்தில் கொண்டுவந்து வைத்து பவித்ரத்தால் திரும்பவும் திரும்பவும் ஆஜ்யத்தை உத்பவநம் செய்யவேண்டும். இங்கு உத்

பவநம் செய்யும்பொழுது ப்ரோக்ஷணியை உத்பவநம் செய்தது போல் செய்யவேண்டும். ஆனால் உத்பவந காலத்தில் ஆஜ்ய பாத்ரத்தில் கிழக்கிலிருந்து ஆரம்பித்து மேற்குப் பக்கம் கொண்டுவந்து மறுபடியும் கிழக்கில் முடிக்கவேண்டும். இவ் விதம் இங்கு மூன்று தடவை உத்பவநம் செய்யவேண்டும். ஆஜ்ய ஸம்ஸ்காரத்திற்காக எடுக்கும் அக்நியை அக்நியின் வடக்குப் பக்கத்திலேயே வைக்கவேண்டும். அவ்விதமே உத்வாஸநத்தையும் வடக்குப் பக்கத்திலேயே செய்யவேண்டும். பரிபாஷையை அநுஸரித்து வைகல்பிகமாகக்கூட இவைகளைக் கிழக்குப் பக்கத்தில் செய்யக்கூடாது. அவ்விதமே பித்ரு கர்மாக்களில் கூட இவை இரண்டையும் வடக்குப் பக்கத்திலேயே செய்யவேண்டும். அவ்விதமே பித்ருகர்மாவிலும் பர்யக்நிகரணத்தையும் ப்ரதக்ஷிணமாகவே செய்யவேண்டும். ஆஜ்ய ஸம்ஸ்காரத்திற்காக எடுத்த அக்நி கர்மா முடிந்த உடன் லௌகிகமாக ஆகாதானையால் அதை அக்நியுடன் சேர்த்துவிட வேண்டும். அவத்யோதநத்திற்கும் பர்யக்நிகரணத்திற்கும் ஹோமார்த்தமான அக்நியிலிருந்து தர்ப்பஜ்வாலையை க்ரஹித்தாலும் க்ரஹிக்கலாம். அல்லது, ஆஜ்ய ஸம்ஸ்காரத்திற்காக எடுத்த அக்நியிலிருந்தாவது க்ரஹிக்கலாம். ஹோமார்த்தமான அக்நியிலிருந்து எடுத்தால் அவத்யோதனம் முதலியவை ஆன உடன் அந்த அக்நி லௌகிகமாக ஆகிவிடுவதால் அதை எறிந்துவிடலாம். ஆஜ்ய ஸம்ஸ்காரத்திற்கான அக்நியிலிருந்து எடுத்தால் கர்மா முடிந்ததும் தர்ப்பத்திலுள்ள அக்நியை ஆஜ்ய ஸம்ஸ்காரார்த்தமான அக்நியுடனேயே சேர்த்துவிடவேண்டும்.

𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌥𑌮𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

## ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரத்தில் முதல் கண்டம் முற்றிற்று.

---

𑌅𑌥 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

## இரண்டாவது கண்டம்.

---

𑌯𑍇𑌨 𑌜𑍁𑌹𑍋𑌤𑌿 𑌤𑌦𑌗𑍍𑌨𑍌 𑌪𑍍𑌰𑌤𑌿𑌤𑌪𑍍𑌯 𑌦𑌰𑍍𑌭𑍈𑌃 𑌸𑌂𑌮𑍃𑌜𑍍𑌯 𑌪𑌾𑌣𑌿𑌨𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌤𑌪𑍍𑌯 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌷𑍍𑌯 𑌨𑌿𑌧𑌾𑌯 𑌦𑌰𑍍𑌭𑌾𑌨𑌦𑍍𑌭𑌿𑌃 𑌸𑌂𑌸𑍍𑌪𑍃𑌶𑍍𑌯𑌾𑌗𑍍𑌨𑍌 𑌪𑍍𑌰𑌹𑌰𑌤𑌿 ॥ ௧ ॥

ஹோமம் செய்ய எதை ஸாதனமாகக் கொள்ளுகிறானே,

தர்வீயாக இருந்தாலும், ஸ்ருவமாக இருந்தாலும், அஞ்ஜலியாக இருந்தாலும் அதை முதலில் அக்நியில் காய்ச்சவேண்டும். பிறகு அதைத் தர்ப்பங்களால் துடைத்து, மறுபடியும் அக்நியில் காய்ச்சி, ப்ரோக்ஷித்து, அதைக் கீழே வைத்துவிட்டு, தர்ப்பங்களை ஜலத்தால் தொட்டு அக்நியில் போட்டுவிடவேண்டும்.

ஹோமங்களை தர்வீயைக் கொண்டோ, ஸ்ருவத்தைக் கொண்டோ செய்யலாம். போதாயநர் தர்வீயை நிந்தித்தது ஸ்ருவத்தை விதிப்பதற்காகவே. இரண்டு தர்வீகளுக்கும் ஸம்ஸ்காரம் உண்டு. எந்தக் கர்மாவில் ஹோமத்தின் பூர்வோத்தராங்கங்கள் உண்டோ அங்குத்தான் ஹோம ஸாதனமான தர்வீ முதலியவைகளுக்குக் கீழ்க்கண்ட ஸம்ஸ்காரங்களைச் செய்ய வேண்டும். மற்ற இடங்களில் கிடையாது. அதனால் ஜாதகர்மாவில் செய்யப்படும் பலீகரண ஹோமத்தில் ஹஸ்த ஸம்ஸ்காரம் கிடையாது. ஆஜ்யத்தால் மட்டும் ஹோமம் செய்யப்படும் கர்மாவில் ஒரே தர்வீ போதுமானதென்று சிலரின் அபிப்ராயம். அங்கும் விவாஹம் முதலிய இடங்களில் ஆவாரம் இரண்டு உள்ள இடங்களில் இரண்டு தர்வீ வேண்டுமென்று சிலர் சொல்லுகிறார்கள்.

இரண்டு தர்வீ உள்ள இடங்களில் இங்கு சொல்லப்படும் ஸம்ஸ்காரங்களையும் இரண்டு தர்வீகளுக்கும் செய்யவேண்டும்.

தர்வீ ஸம்மார்ஜநம் (துடைப்பது) தர்சபூர்ணமாஸத்தில் செய்யப்படுவது போல் இருக்கவேண்டும் என்று சிலரின் அபிப்ராயம். சிலர் அவ்விதம் செய்யவேண்டாமென்று சொல்லுகிறார்கள்.

அஞ்ஜலியால் ஹோமம் செய்யவேண்டிய இடங்களில் அதற்கு ஸம்ஸ்காரம் முதலியவை கிடையாதென்று சிலர் கூறுகிறார்கள்.

யேந ஜுஹோதி என்று பொதுவாகக் குறிப்பிடுவதின் நோக்கம், எங்கெந்த இடங்களில் எது எது ஹோம ஸாதனமாக வருகிறதோ அவைகள் எல்லாவற்றிற்குமே ஸம்ஸ்கார தர்மங்கள் கிடைப்பதே. பாலாச மத்யம பர்ணத்தைக் குறிப்பிடும் தர்வீ என்ற பதமிருந்தால் ஏகாஷ்டகையில் விகல்பமூலமாக ஹோம ஸாதனமாக வரும் அந்திம பர்ணத்திற்கு ஹோம ஸாதனத்வம் இல்லாமல் போய்விடும்.

𑌶𑌮𑍍𑌯𑌾𑌃 𑌪𑌰𑌿𑌧𑍍𑌯𑌰𑍍𑌥𑍇 𑌵𑌿𑌵𑌾𑌹𑍋𑌪𑌨𑌯𑌨𑌸𑌮𑌾𑌵𑌰𑍍𑌤𑌨
𑌸𑍀𑌮𑌨𑍍𑌤𑌚𑍌𑌳𑌗𑍋𑌦𑌾𑌨𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑍇𑌷𑍁 ॥ ௨ ॥

பிறகு அக்நியைச் சுற்றி மூன்று பக்கங்களில் மூன்று பரிதிகளைப் போட்டு, ஆகாரஸமித்துக்களையும் போடவேண்டும். இவைகளைத் தர்சபூர்ணமாஸத்தில் செய்வதுபோல் மந்த்ரமில்லாமல் செய்யவேண்டும். முதல் பரிதியை அக்நிக்கு மேற்குப் பக்கத்தில் வடக்கு நுனியாகப் போடவேண்டும். மற்ற இரண்டு பரிதிகளையும் அக்நியில் தெற்கு வடக்குப் பக்கங்களில் கிழக்கு நுனியாகப் போடவேண்டும். அக்நிக்குக் கிழக்குப் பக்கத்தில் பரிதி கிடையாது. அவ்விதமே அக்நிக்குக் கிழக்குப் பக்கத்தில் தெற்கிலும், வடக்கிலும் ஆகார ஸமித்துக்களை நிறுத்திவைக்க வேண்டும்.

விவாஹம், உபநயநம், ஸமாவர்த்தனம், ஸீமந்தம், சௌளம், கோதானம், ப்ராயஶ்சித்தங்கள் இவைகளில் பரிதி ஸ்தானத்தில் யாக்ஞிக வ்ருக்ஷங்களாலான முளைக் குச்சிகளைப் பரிதிகளாகப் போடவேண்டும்.

விவாஹத்தில் ஸ்தாலீ பாகத்தில் முளைக் குச்சிகளைப் பரிதியாக்கக் கூடாது. பரிதிகளையே அங்குப் போடவேண்டும்.

பும்ஸவநம் ஸீமந்தம் போல் செய்யவேண்டியதாக இருந்தாலும் அங்கும் சம்யைகள் கிடையாது. பரிதிகள் தான்.

𑌅𑌗𑍍𑌨𑌿𑌂 𑌪𑌰𑌿𑌷𑌿𑌞𑍍𑌚𑌤𑍍𑌯𑌦𑌿𑌤𑍇𑌽𑌨𑍁𑌮𑌨𑍍𑌯𑌸𑍍𑌵𑍇𑌤𑌿 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌤𑌃
𑌪𑍍𑌰𑌾𑌚𑍀𑌨𑌮𑌨𑍁𑌮𑌤𑍇𑌽𑌨𑍁𑌮𑌨𑍍𑌯𑌸𑍍𑌵𑍇𑌤𑌿 𑌪𑌶𑍍𑌚𑌾𑌦𑍁𑌦𑍀𑌚𑍀𑌨𑌂 𑌸𑌰
𑌸𑍍𑌵𑌤𑍇𑌽𑌨𑍁𑌮𑌨𑍍𑌯𑌸𑍍𑌵𑍇𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌤𑌰𑌤𑌃 𑌪𑍍𑌰𑌾𑌚𑍀𑌨𑌂 𑌦𑍇𑌵 𑌸𑌵𑌿𑌤𑌃
𑌪𑍍𑌰𑌸𑍁𑌵𑍇𑌤𑌿 𑌸𑌮𑌨𑍍𑌤𑌂 ॥ ௩ ॥

இங்கு பரிஷேசநம் சொல்லப்படுகிறது. அக்நிக்கு மட்டும் தான் பரிஷேசநம். முதலில் மந்த்ரத்தால் அக்நிக்குத் தெற்குப் பக்கத்தில் மேற்கிலிருந்து கிழக்கில் முடியும்படி பரிஷேசநம். மேற்குப் பக்கத்தில் தெற்கில் ஆரம்பித்து வடக்கில் முடியும்படி பரிஷேசநம். வடக்குப் பக்கத்தில் மேற்கில் ஆரம்பித்து கிழக்கில் முடியும்படி பரிஷேசநம். கடைசி மந்த்ரத்தால் அக்நியைச் சுற்றிப் பரிஷேசநம் செய்யவேண்டும்.

𑌪𑍈𑌤𑍃𑌕𑍇𑌷𑍁 𑌸𑌮𑌨𑍍𑌤𑌮𑍇𑌵 𑌤𑍂𑌷𑍍𑌣𑍀𑌂 ॥ ௪ ॥

பித்ருகர்மாக்களில் பரிஷேசநம் அக்நியைச் சுற்றி மட்டும் தான். அதுவும் மந்த்ரமில்லாமல் செய்யப்படவேண்டும். மற்ற மூன்று பக்கங்களில் பரிஷேசநங்கள் கிடையாது.

[illegible]

[illegible] ॥ ௫ ॥

இத்மத்தை அக்நியில் சேர்த்துவிட்டு, தர்சபூர்ணமாஸத்தில் செய்வது போல் ஆகாரங்கள் இரண்டையும் செய்ய வேண்டும்.

பதினைந்து இத்மங்களையும் ஒரே தடவையில் சேர்க்க வேண்டும். சிலர் இத்மங்களுக்கு அபிகாரணம் செய்யவேண்டுமென்று சொல்லுகிறார்கள். இத்மங்களைப் போட மந்த்ரம் கிடையாது. ஆகாரங்கள் இரண்டையும் தர்சபூர்ணமாஸத்தில் செய்வது போல் செய்யவேண்டும். ஆனால் ஒரு ஆகாரத்திற்கும் மந்த்ரம் கிடையாது. இரண்டையும் தூஷ்ணீமாகவே செய்ய வேண்டும். ஒரு ஆகாரத்திற்கு ப்ரஜாபதி தேவதை. மற்றொன்றுக்கு இந்த்ரன் தேவதை. இரண்டு ஆகாரங்களில் முதல் ஆகாரத்திற்கு ப்ரஜாபதி தேவதை. இரண்டாவது ஆகாரத்திற்கு இந்த்ரன் தேவதை. அக்நிக்கு வடமேற்கிலிருந்து பரிதி ஸந்தியிலிருந்து ஆரம்பித்து முதல் ஆகாரத்தை அக்நியின் தென் கிழக்குப் பாகத்தில் முடிக்கவேண்டும். இரண்டாம் ஆகாரத்தைத் தென்மேற்கிலுள்ள பரிதிஸந்தியிலிருந்து ஆரம்பித்து அக்நியின் வடகிழக்குப் பாகத்தில் முடிக்கவேண்டும். கோடு கிழிப்பது போல் இந்த ஆகாரங்கள் ஆரம்ப முதல் முடிவு வரை இடை விடாது இருக்கவேண்டும். சிறிதுகூட, கோணலாக இவை இருக்கக்கூடாது. ஆகார காலங்களில் அக்நி நன்றாக ஜ்வலித்துக்கொண்டிருக்கவேண்டும். ஏற்கனவே அக்நியில் சேர்க்கப்பட்டுள்ள எல்லா இத்மங்களோடும் ஆகாரம் ஸம்பந்தப் படவேண்டும்.

இரண்டு ஆகாரங்களும் மந்த்ரமில்லாமல் செய்யப்படுவதால் இரண்டுக்குமே ப்ரஜாபதி தேவதை என்று சிலர் சொல்லுகிறார்கள். அவ்விதம் ஆகாரங்களை அக்நிக்குக் குறுக்காகச் செய்யாமல் வடக்கிலாவது கிழக்கிலாவது முடியும்படி ஆகாரங்களைச் செய்யலாம்.

"தர்சபூர்ணமாஸத்தில் செய்வதுபோல்" என்று சொல்லுவதால் அங்கு சொல்லப்படுவதுபோல் ஆகார விகல்பங்கள் இங்குமுண்டு. இங்கு இரண்டு "ஆகாரங்"களையும் உட்கார்ந்தே செய்யவேண்டும். மந்த்ரமில்லாமல் போனால்கூட முதல் ஆகாரம் ப்ரஜாபதி தேவதைக்காகவும், இரண்டாவது ஆகாரம் இந்த்ரனுக்காகவும் ஏற்பட்டதாகையால் அதே தேவதைகளை உத்தேசித்துத்தான் மந்த்ரமில்லாமல் இங்கு ஆகாரத்தைச் செய்ய வேண்டும்.

சிலருடைய அபிப்ராயப்படி தர்சபூர்ணமாஸத்தில் செய்வதுபோல் இங்குக்கோணலாக ஆகாரம் செய்யக்கூடாது. இங்கு உள்ள பரிபாஷையை அநுஸரித்து, கிழக்கிலாவது, வடக்கிலாவது முடியும்படி ஆகாரத்தைச் செய்யவேண்டும். தர்சபூர்ணமாஸ மந்த்ரமும் கிடையாது. தேவதை மட்டும் அங்குப்போல் இங்கு முதலாகாரத்திற்கு ப்ரஜாபதி தேவதை, இரண்டாவது ஆகாரத்திற்கு இந்த்ரன் தேவதை.

மற்றும் சிலர், தர்சபூர்ணமாஸத்தில் போல் ஆகாரங்களைச் செய்யவேண்டுமென்று விதி இருப்பதால் மந்த்ரமில்லாமல் செய்வது தவிர, மற்ற எல்லா அம்சங்களிலும் தர்சபூர்ணமாஸத்தில் போலவே இங்கு ஆகாரங்களைச் செய்யவேண்டும்; தர்சபூர்ணமாஸத்தில் போல் முதலாகாரத்திற்கு ப்ரஜாபதி தேவதை, இரண்டாவது ஆகாரத்திற்கு இந்த்ரன் தேவதை; தர்சபூர்ணமாஸத்திற்கும், க்ருஹ்யகர்மாக்களுக்கும் பரஸ்பரம் ப்ரக்ருதி விக்ருதிபாவம் இல்லாததால் தர்சபூர்ணமாஸவத் என்ற வசநத்தால் மட்டும் அதிதேசம் ஏற்படும் காலத்தில் ஆகாரங்களில் மந்த்ரங்களை மட்டும் நாம் விட்டு மற்ற எல்லா அம்சங்களையும் அப்படியே எடுத்துக்கொண்டுதான் ஆகவேண்டும், என்று கூறுகின்றனர்.

𑌆𑌜𑍍𑌯𑌭𑌾𑌗𑍌 𑌜𑍁𑌹𑍋𑌤𑍍𑌯𑌗𑍍𑌨𑌯𑍇 𑌸𑍍𑌵𑌾𑌹𑍇𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌤𑌰𑌾
𑌰𑍍𑌧𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌰𑍍𑌧𑍇 𑌸𑍋𑌮𑌾𑌯 𑌸𑍍𑌵𑌾𑌹𑍇𑌤𑌿 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌰𑍍𑌧
𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌰𑍍𑌧𑍇 𑌸𑌮𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇𑌣 ॥ ௪ ॥

ஆகாரம் செய்த உடன் ஆஜ்யபாகம் என்ற இரண்டு ஹோமங்களைச் செய்யவேண்டும். முதல் ஹோமத்தை இங்குச் சொல்லப்பட்ட முதல் மந்த்ரத்தால் அக்நியின் வடக்குப்பக்கத்

தின் பூர்வபாகத்தில் செய்யவேண்டும். இரண்டாவது ஹோமத்தை இரண்டாவது மந்த்ரத்தால் அக்நியின் தென் பக்கத்தின் முன் பக்கத்தில் செய்யவேண்டும்.

இரண்டு ஹோமங்களையும் ஒன்றுக்கொன்று சிறிதுகூட முன்பின் இல்லாமல் ஸமமாகச் செய்யவேண்டும்.

யதாவகாஶம் ஸ்வயாநாஹுதீர்ஹுத்வா ஜயாப்⁴யா
தாநாந்ராஷ்ட்ரப்⁴ருத: ப்ராஜாபத்யாம் வ்யாஹ்ருதீர்விஹ்ருதா
ஸ்ஸ்விஷ்டக்ருதீத்யவஜுஹோதி । யத³ஸ்ய கர்ம
ணோऽத்யரீரிசம் யத்³வா ந்யூநமிஹாகரம் । அக்³நிஷ்டத்
ஸ்விஷ்டக்ருத்³வித்³வாந்த்ஸர்வம் ஸ்விஷ்டம் ஸுஹுதம் கரோது
ஸ்வாஹேதி ॥ ௭ ॥

அந்தந்தக் கர்மாக்களில் மேல் ஸூத்ரங்களில் சொல்லப் படும் ப்ரதாநஹோமங்களைச் செய்துவிட்டு, ஜயை, அப்யாதானம், ராஷ்ட்ரப்ருத் என்று பெயருள்ள மந்த்ரங்களால் ஹோமம் செய்துவிட்டு, ப்ராஜாபதேநத்வத் என்ற ப்ராஜாபத்ய ருக்கி னாலும் முதல் மூன்று வ்யாஹ்ருதிகளைக்கொண்டும் ஹோமங் களைச் செய்துவிட்டு, ஸூத்ரத்தில் இங்கே சொல்லப்பட்ட மந்த் ரத்தைக் கொண்டு ஸ்விஷ்டக்ருத் ஹோமத்தையும் செய்ய வேண்டும்.

'சித்தம் ச சித்திஶ்ச' (தைத். ஸம். 3-4-4) என்றாரம்பிக்கப் பட்டுள்ள மந்த்ரங்களுக்கு ஜயமந்த்ரங்கள் என்று பெயர். 'அக்³நிர்பூ⁴தாநாமதி⁴பதி:' (தைத். ஸம். 3-4-5) என்று ஆரம் பிக்கும் அநுவாகத்தில் உள்ள மந்த்ரங்களுக்கு அப்யாதானங் கள் என்று பெயர்.

'ருதாஷாட்³ருததா⁴மா' (தைத். ஸம். 3-4-7) என்ற அநு வாகத்தில் உள்ள மந்த்ரங்களுக்கு ராஷ்ட்ரப்ருத: என்று பெயர்.

இந்த ஹோமங்கள் முடிந்தபிறகு, பரிதிகளைத் தூஷ்ணீமாக அக்நியில் சேர்த்துவிட்டு, இரண்டு தர்விகளையும் கொண்டு ஸம்ஸ்ராவஹோமம் செய்யவேண்டும். சம்யைகள் பரிதிஸ்தாநத் தில் எடுத்துக்கொள்ளப்பட்ட இடங்களில் சம்யைகளுக்கு அக்நி யில் ப்ரஹரணம் கிடையாது. இது போதாயனரின் அபிப்ரா யத்தைப் பின்பற்றியது.

பரிஷேசனமந்வமம்ஸ்தா: ப்ராஸாவீரிதி மந்த்ரஸந்நாம: ॥ ௮ ॥

பிறகு முன் சொல்லியது போல் பரிஷேசனம் செய்ய வேண்டும். ஸூத்ரத்தில் சொல்லியபடி மந்த்ரங்களை மட்டும் மாற்றிக்கொள்ளவேண்டும்.

ஸூத்ரகாரர் இங்கு ப்ரணீதா விமோகத்தைச் சொல்லாமற்போனாலும் போதாயன ஸூத்ரத்தைப் பின்பற்றி தர்சபூர்ணமாஸத்தில் செய்வதுபோல் ப்ரணீதா மோக்ஷணத்தைச் செய்து ப்ராம்ஹணனுக்கு தக்ஷிணையும் கொடுக்கவேண்டும். ப்ரணீதாஜலத்தைக் கிழக்கு முதலிய ஒவ்வொரு திக்குக்களிலும் சேர்த்து, பூமியில் எல்லாவற்றையும் கடைசியில் சேர்த்துவிட வேண்டும்.

இங்கு அக்நிமித்வா என்றாரம்பித்து இதுவரை சொல்லப்பட்டவை ஒவ்வொரு கர்மாவிலும், ப்ரதான ஹோமத்திற்கு முன்னும் பின்னும் செய்யவேண்டிய பூர்வோத்தராங்கங்கள். இவை எல்லாக் கர்மாக்களுக்கும் பொதுவானவை. ப்ரதான ஹோமத்தை முன்னிட்டுக்கொண்டு இங்குப் பூர்வோத்தராங்கங்கள் சொல்லப்படுவதால் ப்ரதான ஹோமம் இல்லாத நாமகரணம் முதலிய கர்மாக்களில் அதைத் தொடர்ந்து வரக்கூடிய பூர்வோத்தராங்கங்களும் கிடையாது.

இங்கு இப்படி எல்லாக் கர்மாக்களுக்கும் பொதுவான பூர்வோத்தராங்கங்கள் சொல்லப்பட்டிருந்தாலும், மேல் ப்ரகரணங்களில் அந்தந்தக் கர்மாக்களை விதிக்கும் காலத்திலும் பல இடங்களில் 'அக்நேருபஸமாதாநாதி' என்று பூர்வாங்கங்களைச் செய்துகொண்டு என்று ஸூத்ரகாரர் மறுபடியும் ஞாபகப்படுத்துகிறார். இதன் நோக்கமென்ன ?

மேல் சொல்லப்போகும் கர்மாக்கள் இருவகையானவை. ஆஜ்யத்தினால்மட்டும் ப்ரதான ஹோமத்தைச் செய்யவேண்டிய கர்மாக்கள் சில. மற்ற சருத்ரவ்யங்களைக்கொண்டு ப்ரதாநஹோமத்தைச் செய்யவேண்டிய கர்மாக்கள் சில. இவைகளில் ஆஜ்யத்தினால்மட்டும் ப்ரதான ஹோமத்தைச் செய்யவேண்டிய கர்மாக்களில் பூர்வோத்தராங்கங்களை மறுபடியும் அநுவாதம் செய்வதால், எங்கு அநுவாதமிருக்கிறதோ அங்கேதான் பூர்வோத்த

ராங்கங்கள் வரும். அநுவாதமில்லாத மற்ற இடங்களில் பூர்வோத்தராங்கங்கள் கிடையாது என்று ஏற்படுகிறது. உதாஹரணமாக [illegible] ஜுஹுயாத் (ஆபஸ் க்ரு 5-18) என்று உபவாஸ ஸ்தானத்தில் ஒரு ஹோமத்தை விதிக்குமிடத்திலும், [illegible] வா ஜுஹுயாத் (ஆபஸ் தர்மஸூ. (1-26-13) மித்யாதீதப்ராயஸ்சித்தமாக விதிக்கப்பட்ட ஹோமத்திலும் இதுபோன்ற மற்ற இடங்களிலும் பூர்வோத்தராங்கங்கள் கிடையாது.

ஆனால் உபாகரண ஸமாபன கர்மாக்களை விதிக்குமிடத்தில் 'அக்நேருபஸமாதாநாதி' என்ற வாக்யமில்லாததால் அங்கும் பூர்வோத்தராங்கங்கள் கிடையாதென்றே முடிவாகும். ஆனால் அங்கு ஸூத்ரகாரர் ப்ரதான ஹோமத்தைப்பற்றியோ அங்கங்களைப் பற்றியோ ஒன்றுமே சொல்லவில்லை. உபாகரண ஸமாபநங்களில் காண்டருஷிகள்தான் தேவதை என்றுமட்டும் சொல்லுகிறார். அதனால் அங்கு உபாகரணம் முதலிய கர்மாக்களின் ஸ்வரூபத்தையே ஸூத்ராந்தரங்களைக் கொண்டுதான் நிர்ணயிக்கவேண்டி வருகிறது. ஸூத்ராந்தரங்களில் பூர்வோத்தராங்கங்களோடேயே உபாகரண ஸமாபனங்கள் உபதேசிக்கப்படுவதால் இங்கும் பூர்வோத்தராங்களுடனேயே உபாகரணஸமாபனங்களைச் செய்யவேண்டுமென்றாகிறது. அப்பொழுது பொதுவாக, பரிபாஷையில் சொல்லப்பட்ட அங்கங்கள் எல்லாவற்றையுமே நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய ஆவச்யகம் ஏற்படுகிறது, எதையும் விடமுடியாது. அதனால் அங்கு ஜயாதிகளுள்பட எல்லாப் பூர்வோத்தராங்கங்களும் வருகின்றன.

சிலருடைய அபிப்ராயப்படி இங்கு ஜயாதி ஹோமங் கிடையாது. பூர்வோத்தராங்கங்களும் கிடையாது. ப்ரதான ஹோமத்தை மட்டும் செய்தால் போதுமானது. பூர்ணமான பூர்வோத்தர தந்த்ரமே அபேக்ஷிதமாக இருப்பதால்.

ஆஜ்யம் தவிர சரு முதலிய த்ரவ்யங்களைக் கொண்டு ப்ரதான ஹோமம் செய்யப்படுமிடங்களில் பூர்வோத்தராங்கங்கள் அநுவாதம் செய்யப்படுவதற்கு ஆங்காங்குத் தனித்தனியாக ப்ரயோஜநம் காணப்படுகிறது.

உதாஹரணமாக ஸ்தாலீபாகத்தில் ப்ரதான ஹோமம் சருவினால் செய்யப்படுகிறது. ஆனால் பூர்வாங்கங்களுடைய ப்ராஸ்

தாவம் அக்நேருபஸமாதாநாதி என்று காணப்படுகிறது. அதற்கு ப்ரயோஜனம் பின்வருமாறு. தர்சபூர்ணமாஸத்தில் பாத்ர ப்ரோக்ஷணத்திற்குப் பிறகுதான் அவகாதம் முதலிய புரோடாச ஸம்பந்தமான கார்யங்கள் செய்யப்படுகின்றன. அவ்விதமே ஸ்தாலீபாகத்திலும், சருஸம்பந்தமான கார்யங்களும் பாத்ர ப்ரோக்ஷணத்திற்குப் பிறகுதான் வருகின்றன. இவ்வித க்ரமம் ஸ்தாலீபாகத்தில் ஏற்படுவது ஸூத்ரகாரருக்கு இஷ்டமானதில்லை. சரு ஸம்பந்தமான நிர்வாபம் முதல் அதிச்ரயணம் வரையுள்ள எல்லாக் கார்யங்களும் முடிந்தபிறகுதான் பூர்வாங்கங்களைச் செய்ய ஆரம்பிக்கவேண்டும். இதற்காகவே இங்கு மறுபடியும் சரு உத்வாஸநத்தைச் செய்துவிட்டு, பூர்வாங்கங்கள் ஆரம்பிக்கப்படவேண்டுமென்று கூறுகிறார். ஆகவே சரு ஸம்பந்தமான கார்யங்களுக்கும் பூர்வாங்கங்களுக்கும் க்ரமம் விதிப்பதே இங்குப் பூர்வாங்கங்களை ஞாபகப்படுத்துவதற்கு ப்ரயோஜநம்.

அவ்விதமே விவாஹத்தில் பூர்வாங்கங்களை அநுவாதம் செய்வதற்கு 'தஸ்மின்னுபவிசத உத்தரோவா:' (ஆபஸ்-க்ரு. ஸூ. 4-9) என்ற விதிப்படி வதூவரர்கள் உட்கார்ந்த உடனேயே பூர்வாங்கங்களை ஆரம்பிக்கவேண்டுமென்பதே ப்ரயோஜநம்.

ஈசான ஸ்தாலீபாகத்தில் மறுபடியும் மந்த்ரங்களை உபதேசம் செய்வதற்கு, ஸ்தாலீபாகம்போல் சருகார்யங்களை முடித்துக்கொண்டு பூர்வாங்கங்களை ஆரம்பிக்காமல் ஸ்தண்டில கல்பநம் முடிந்த உடனேயே பூர்வாங்கங்களை ஆரம்பிப்பதே ப்ரயோஜநம்.

இப்படி எல்லா க்ருஹ்யகர்மாக்களுக்கும் பொதுவான ஸ்ம்ருதி ப்ரமாணஸித்தமான பூர்வோத்தராங்கங்களைச் சொல்லிவிட்டு, ச்ருதி ப்ரமாணஸித்தமான பூர்வோத்தராங்கங்களை இதற்குமேல் சொல்லுகிறார். முன் சொல்லப்பட்ட ஸ்மார்த்த தர்மங்கள்போல் மேல் சொல்லப்படப்போகிற ச்ரௌத தர்மங்களும் எல்லா க்ருஹ்ய கர்மாக்களுக்கும் பொதுவானவை.

ஔகிகாநாம் வாகயஜூஷம் ॥ கூ ॥

வேதார்த்தங்களை வேதங்களைக் கொண்டே பார்க்கும் சிஷ்டர்களான வைதிகர்களான பெரியோர்களால் அநுஷ்டிக்கப்

படும் கர்மாக்களுக்குப் பாகயஜ்ஞம் என்று பெயர். இந்தப் பெயரால் இந்த யஜ்ஞம் பக்வமான அந்நத்தால் செய்யப்படவேண்டிய யாகம் என்று ஏற்படுகிறது.

இதனுல் இந்தக் கல்பத்தில் ப்ரதான ஹோமம் பக்வமான அந்நத்தால் செய்யப்படவேண்டும். மேல் ஸூத்ரத்தில் அக்நிஹோத்ரத்தைச் சேர்ந்த சில தர்மங்களை இங்குச் சொன்னுலும், அக்நிஹோத்ரம் போல் இங்கு ஹோமத்ரவ்யம் கிடையாது. த்விர்ஜுஹோதி முதலிய அக்நிஹோத்ர தர்மங்கள் வசநபலத்தால் வருவதால் எவ்வளவு சொல்லப்பட்டிருக்கிறதோ அவ்வளவு தர்மங்கள் தான் இந்தப் பக்ஷத்தில் அக்நிஹோத்ரத்திலிருந்து வரும். மற்றவை வர ப்ரஸக்தியே இல்லை.

தத்ர ப்ராஹ்மணாபேக்ஷோ விதி: ॥ ௧௦ ॥

த்விர்ஜுஹோதி த்விர்நிர்லேடி த்வி: ப்ராஶ்நாத்யுத்ஸ்ருப்ய
ஆசாமதி நிர்லேடீதி ॥ ௧௧ ॥

இரண்டு தடவை ஹோமம் செய்யவேண்டும். இரண்டு தடவை ஹோம சேஷத்தின் லேபங்களைத் துடைக்கவேண்டும். ஹோம சேஷத்தை இரண்டு தடவை ப்ராசநம் பண்ண வேண்டும். ஹவி:பாத்ரத்தில் ஜலத்தைச் சேர்த்து ஒரு தடவை ஆசமநம் செய்யவேண்டும். பாத்ரத்தில் உள்ள ஹவிஸ் சேஷத்தை இரண்டு தடவை நாக்கால் உட்கொள்ளவேண்டும். இந்த விதி ப்ரத்யக்ஷமாக ப்ராம்ஹணத்தில் விதிக்கப்பட்டது.

இதற்கு ஆக்நிஹோத்ரிகவிதி என்று பெயர். கீழ்ச் சொல்லப்பட்ட விதிக்கு ஆகார விதி, அல்லது தார்சபூர்ணமாஸ விதி என்று பெயர். மேல் இங்குச் சொல்லப்படும் க்ருஹ்யகர்மாக்களை இந்த இரண்டு கல்பங்களில் ஏதாவது ஒன்றைப் பின்பற்றிச் செய்யவேண்டும்.

ப்ரத்யக்ஷ ப்ராம்ஹணத்தில் ஆக்நிஹோத்ரிக விதி காணப்பட்டாலும், தார்சிக விதிபோல் இதுவும் கல்பஸூத்ரங்களில் விதிக்கப்படுவதால், இதுவும் ஸ்மார்த்த விதியாகவேயாகும். அதனுல் இவை இரண்டும் விகல்பிதங்களாகத் தடையில்லை.

அக்நிஹோத்ர விதியும் கல்பஸூத்ரங்களால் விதிக்கப்பட்டு ஸ்மார்த்தமாகவே இருந்தாலும் அக்நிஹோத்ர விதிப்படி நடத்தப்படும் கர்மாவில் தோஷம் ஏற்பட்டால் யஜுர்ப்ரேஷ

ப்ராயச்சித்தம் செய்யப்படவேண்டும் என்பதற்காக அக்நி ஹோத்ரவிதி ப்ராம்ஹணத்தை எதிர்பார்த்து நிற்பது என்று கூறப்படுகிறது.

இரண்டு தடவை ஹோமம் செய்யவேண்டுமென்பதால், எவ்வளவு ஹோமங்களிருந்தாலும் அவைகளை இரண்டு தடவையாகவே செய்யவேண்டுமென்ற அர்த்தமில்லை. ப்ரதான ஹோமங்கள் எவ்வளவு இருந்தாலும் அவை எல்லாவற்றையும் ப்ரதான ஹோமம் என்ற முறையில் ஒரே ஹோமமாகக் கொண்டு ஸ்விஷ்டக்ருத் ஹோமத்தை இரண்டாவதாகக் கொள்ளவேண்டும்.

ஔபாஸநம், வைச்வதேவம் இவைகளில் அங்கேயே ப்ரயோகம் ஸித்திப்பதால் அங்கு அக்நிஹோத்ர விதியும் கிடையாது, ஆகார விதியும் கிடையாது. பாகயஜ்ஞ சப்தத்திற்கு சிறிய யஜ்ஞம் என்று அர்த்தமாவதால், விவாஹம்கூடப் பாகயஜ்ஞம் என்ற சப்தத்தால் சொல்லத்தக்கதே. ஆகவே அங்கும் இந்த ஆக்நிஹோத்ரிக விதி உண்டென்று சிலர் கூறுகின்றனர்.

𑌸𑌰𑍍𑌵 𑌋𑌤𑌵𑍋 𑌵𑌿𑌵𑌾𑌹𑌸𑍍𑌯 । 𑌶𑍈𑌶𑌿𑌰𑍌 𑌮𑌾𑌸𑍌 𑌪𑌰𑌿𑌹𑌾𑌪𑍍𑌯𑍋𑌤𑍍𑌤𑌮𑌂 𑌚 𑌨𑍈𑌦𑌾𑌘𑌮𑍍 ॥ ௧௨ ॥

மாசி, பங்குனி, ஆடி இந்த மாதங்களை விலக்கி, மற்ற எல்லா ருதுக்களின் எல்லா மாஸங்களிலும் விவாஹம்செய்யலாம்.

இங்கு ருதுக்களை முன்னிட்டுக்கொண்டு மாஸங்களையே காலமாகச் சொல்வதால் பூர்வபக்ஷம் முதலிய நியமங்கள் விவாஹங்களில் கிடையாது. உபநயநத்தில் இவ்விதம் ருதுக்களைக் குறிப்பிட்டே 'வஸந்தே ப்ராம்ஹணமுபநயீத' என்பது போலிருப்பதால் ருதுக்கள் காலமாக ஆகின்றன. இங்கு பூர்வபக்ஷம் முதலிய ஸாமாந்ய காலத்திற்கு விரோதமில்லாததால் உபநயநத்தில் பூர்வபக்ஷ நியமமுண்டு.

அதிக மாஸமாக வரும் ஆஷாடமும் விவாஹத்தில் விலக்கப்பட்டதே.

𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌪𑍁𑌣𑍍𑌯𑍋𑌕𑍍𑌤𑌾𑌨𑌿 𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 ॥ ௧௩ ॥

ஜ்யோதிஷ சாஸ்த்ரத்தில் சுபமானதாகச் சொல்லப்பட்ட எல்லா நக்ஷத்ரங்களும் திதிகளும் விவாஹத்திற்கு க்ராஹ்யங்கள்.

ததா மங்கலாநி ॥ ௧௪ ॥

விவாஹத்திற்கு வாத்ய கோஷங்கள், வீணுகாநம், குல ஸ்த்ரீகளின் ஸங்கீதம், நன்ருக க்ஷௌரம் முதலியவைகளைச் செய்துகொண்டு அலங்கரித்துக்கொள்வது, நல்ல வஸ்த்ரங்களை யும், பூஷணங்களையும் தரித்துக்கொள்வது, சந்தனம் பூசிக் கொள்வது, பூமாலை போட்டுக்கொள்வது, பூச்சூட்டிக்கொள்வது முதலிய மங்கள கார்யங்களும் அவச்யமானவை.

ஆவ்ருதஶ்சாத ஆஸ்த்ரீப்ய: ப்ரதீயேரந் ॥ ௧௫ ॥

மந்த்ரங்களுடன் கூடியதும், மந்த்ரங்களில்லாமல் செய்யப் படுவதுமான கார்யங்களையும் ஸ்த்ரீகளிடமிருந்தும், மற்ற வர்ணத்தாரிடமிருந்தும் தெரிந்துகொண்டு விவாஹத்தில் செய்யவேண்டும். இவ்விதமான கர்மாக்களில் அங்குரார்ப்பணம், ப்ரதிஸரபந்தம், க்ரஹபூஜை முதலியவை மந்த்ரங்களுடன் செய்யப்படும் கர்மாக்கள். நாகவல்லீ, யக்ஷபலி, இந்த்ராணீ பூஜை இவை மந்த்ரமில்லாமல் செய்யப்படும் கர்மாக்கள்.

இவ்வித ஆசாரங்கள் எந்த ஊரில், எந்த ஜாதியில், எந்தக் குலத்தில் எப்படி இருந்துவருகின்றதோ அப்படியே அதை அவ ரவர்கள் செய்யவேண்டும். எல்லாவற்றையும் எல்லோரும் செய்ய வேண்டுமென்ற நிர்ப்பந்தம் கிடையாது.

இன்வகாபி: ப்ரஸ்ருஜ்யந்தே தே வரா: ப்ரதிநந்திதா: ॥ ௧௬ ॥

கந்யகையை வரிப்பதற்கு ம்ருகசீர்ஷநக்ஷத்ரத்தில் பெண்ணைத் தெரிந்தெடுப்பதற்கான கடகர்களை அனுப்பிவைத்தால் அவர் கள் பெண் வீட்டுக்காரர்களால் கௌரவிக்கப்படுவார்கள், கார்ய ஸித்தியைப் பெறுவார்கள். இந்தக் காதா ஸூத்ரகாரர் செய்த தில்லை. வேறு க்ரந்தத்திலுள்ளதை ஸூத்ரகாரர் அநுவாதம் பண்ணுகிறார் என்று சிலர் சொல்லுகிறார்கள்.

இதி த்விதீய: கண்ட: ॥

**ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரத்தில் இரண்டாவது கண்டம் முற்றிற்று.**

---

𑌅𑌥 𑌤𑍃𑌤𑍀𑌯𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

## மூன்றாவது கண்டம்.

---

𑌮𑌘𑌾𑌭𑌿𑌰𑍍𑌗𑌾𑌵𑍋 𑌗𑍃𑌹𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 ॥ ௧ ॥

ஆர்ஷ விவாஹத்தில் பெண் வீட்டிற்கு ஒரு பசுவும், காளையும் கொடுக்கவேண்டுமாதலால் மேற்படி தானமுள்ள ஆர்ஷ விவாஹம் மகாநக்ஷத்ரத்தில் செய்யப்படவேண்டும்.

𑌫𑌲𑍍𑌗𑍁𑌨𑍀𑌭𑍍𑌯𑌾𑌂 𑌵𑍍𑌯𑍂𑌹𑍍𑌯𑌤𑍇 ॥ ௨ ॥

ஆர்ஷவிவாஹம் மகாநக்ஷத்ரத்தில் நடந்தாலும் வதூவரர்கள் பூரநக்ஷத்ரத்திலேயே புறப்படவேண்டும்.

சிலர், பசு மாடு வாங்குவதற்கு மகாநக்ஷத்ரம் ப்ரசஸ்தம், ஸோமஸங்காஹத்திற்குப் பூரநக்ஷத்ரம் ப்ரசஸ்தம், என்று இந்த இரண்டு ஸூத்ரங்களுக்கும் வ்யாக்யாநம் செய்கிறார்கள்.

𑌯𑌾𑌂 𑌕𑌾𑌮𑌯𑍇𑌤 𑌦𑍁𑌹𑌿𑌤𑌰𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌸𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑌿 𑌤𑌾𑌂
𑌨𑌿𑌷𑍍𑌟𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌦𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌿𑌯𑍈𑌵 𑌭𑌵𑌤𑌿 𑌨𑍈𑌵 𑌤𑍁 𑌪𑍁𑌨
𑌰𑌾𑌗𑌚𑍍𑌛𑌤𑍀𑌤𑌿 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌵𑍇𑌕𑍍𑌷𑍋 𑌵𑌿𑌧𑌿𑌃 ॥ ௩ ॥

பர்த்தாவுக்குப் பெண் ப்ரியமானவளாக இருக்கவேண்டும் என்று பிதா ஆசைப்பட்டால், ஸ்வாதீநக்ஷத்ரத்தில் பெண்ணைக் கந்யாதாநம் செய்யவேண்டும். அப்படிக் கொடுக்கப்பட்ட பெண் பர்த்தாவுக்கு ப்ரியமானவளாகவே ஆகிவிடுவாள். ரோகம் முதலியவை காரணமாக பித்ருக்ருஹத்திற்குத் திரும்பமாட்டாள். அவளுக்கு வேண்டிய ஸர்வாபீஷ்டங்களும் பர்த்தாவின் க்ருஹத்திலேயே கிடைத்துவிடும்.

இவ்விதம் உள்ள ஸ்வாதீநக்ஷத்ரவிதி ப்ரத்யக்ஷமாக வேதத்திலேயே சொல்லப்பட்டுள்ளது.

இங்கு இந்த விதி ஸ்தோத்ரம் பண்ணப்பட்டிருந்தாலும், மற்ற ஸ்ம்ருதிகளிலோ ஜ்யோதிஶ்ஶாஸ்த்ரங்களிலோ சொல்லப்பட்ட மற்ற நக்ஷத்ரங்களும் விவாஹ நக்ஷத்ரமாவதற்கு இதனால் தடை ஏற்படாது. அதனால் இதுவும் விகல்பிதமாக ஆகிறது.

𑌇𑌨𑍍𑌵𑌕𑌾𑌶𑌬𑍍𑌦𑌃 𑌮𑍃𑌗𑌶𑌿𑌰𑌸𑌿 ॥ ௪ ॥

𑌨𑌿𑌷𑍍𑌟𑍍𑌯𑌾𑌶𑌬𑍍𑌦𑌃 𑌸𑍍𑌵𑌾𑌤𑍌 ॥ ௫ ॥

'இன்வகா' என்ற சப்தம் ம்ருகசீர்ஷ நக்ஷத்ரத்தைச் சொல்

லும். 'நிஷ்ட்யா' சப்தம் ஸ்வாதீ நக்ஷத்ரத்தைக் குறிக்கும். இந்த இரண்டு சப்தங்களும் வேதங்களில் மட்டும் இருப்பதால் இவைகளுக்கு இங்கு அர்த்தம் சொல்லப்படுகிறது.

விவாஹெ ஗ளஃ ॥ ௬ ॥

விவாஹம் நடக்குமிடத்தில் ஒரு பசு ஸமீபத்தில் இருக்க வேண்டும்.

஗ృஹெஷ ஗ளஃ ॥௭॥

மற்ஶெரு பசுவை மாட்டுக்கொட்டிலில் வைத்துக்கொள்ள வேண்டும்.

தயா வரமதிதிவதஹ்ரயெத ॥ ௮ ॥

விவாஹம் நடக்குமிடத்தில் வைக்கப்பட்டிருக்கும் பசுவைக் கொண்டு வரனை அதிதியைப்போல் பூஜிக்கவேண்டும்.

பசுவை மதுபர்க்கத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம். அல்லது வரனின் இஷ்டப்படி பசுவை விட்டுவிடலாம்.

வேதாத்யயநம் செய்தவனுக்கே கோமதுபர்க்கம் என்று சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டிருந்தாலும், பெண்ணைப் பெற்றுக் கொள்ள வரும் வரன் வேதாத்யயநம் செய்யாதவனுக இருந்தாலும் மதுபர்க்கம் கொடுக்கவேண்டும்.

யொऽஸ்யாபசிததமஸ்தயா ॥ ௯ ॥

வரனுக்குப் பூஜ்யனுக உள்ளவனுக்குக் கொட்டிலில் கட்டப் பட்டிருக்கும் பசுவைக்கொண்டு பூஜை செய்யவேண்டும்.

இந்த இரண்டு மதுபர்க்க தானமும் விவாஹத்திற்கு அங்கமானது. வரனுக்கும் வரனைச் சேர்ந்தவர்களுக்கும் செய்யப்படும் பூஜை தனித்தனியாகச் செய்யப்படவேண்டும். ஒரே ப்ரயோகத்தில் இரண்டையும் செய்யக்கூடாது.

ஏதாவத்ஶொऽநாம்ஸொऽதிதிர்பவத்யந்யத்ர விவாஹாத் ॥ ௧௦ ॥

வேதாத்யயநம் பண்ணியவனுக வந்துள்ள அதிதி, அஷ்டகா கர்மா, விவாஹம் இந்த மூன்று இடங்களிலும் மதுபர்க்கத்திற்காகப் பசு உபயோகப்படுத்தப்படுகிறது.

இப்படி ஸூத்ரகாரர் மாம்ஸ மதுபர்க்கத்தை விதித்திருந்தாலும், கலியில் மாம்ஸத்தை மதுபர்க்கமாகக் கொடுக்கக்கூடாது என்று நிஷேதமிருப்பதால் இந்த விதி யுகாந்தரவிஷயம். மாம்ஸமில்லாத மதுபர்க்கத்தைத் தான் கலியில் கொடுக்கவேண்டும்.

இதற்குமேல் விவாஹத்தில் விலக்கப்படவேண்டிய கந்யகைகளைச் சொல்லுகிறார்:—

ஸுப்தாம் ருததீம் நிஷ்க்ராந்தாம் வரணே பரிவர்ஜயேத் ॥ ௧௧ ॥

பெண்ணைப் பார்க்க வரும் காலத்தில் தூங்கிக்கொண்டிருக்கும் பெண்ணையும், அழுதுகொண்டிருக்கும் பெண்ணையும், வீட்டை விட்டு வெளியில் போயிருக்கும் பெண்ணையும் வரிக்கக் கூடாது. ஜாதகரீதியில் பூர்ணமான பொருத்தமிருந்தாலும் கீழ்ச்சொல்லப்பட்டபடியுள்ள பெண்களை விலக்கிவிடவேண்டும்.

தத்தாம் குப்தாம் த்யோதாம் ருஷபாம் ஶரபாம் விநதாம்
விகடாம் முண்டாம் மண்டூஷிகாம் ஸாங்காரிகாம் ராதாம்
பாலீம் மித்ராம் ஸ்வநுஜாம் வர்ஷகாரீம் ச வர்ஜயேத் ॥

மேலும் கீழ்க்கண்டபடியுள்ள பெண்களையும் வரிக்கக் கூடாது. பிறருக்குத் தாநம் செய்வதாக வாக்களிக்கப்பட்ட பெண், மிகவும் சிரமப்பட்டுப் பிறருடைய கண்ணுக்குப் புலப்படாமல் பாதுகாக்கப்படும் பெண், விஷமப்பார்வையுள்ள பெண், காளைபோல் அடங்காப் பிடாரியாக இருக்கும் பெண், ரூபமில்லாத பெண், கூனலாயுள்ள பெண், காலை அகலவைத்து நடக்கும் பெண், தலையில் கேசம் இல்லாத பெண், விகாரமான தோல் உள்ள பெண், வேறு குலத்திற்குப் பெண்ணாக ஸ்வீகாரம் போனவள், விளையாடுவதிலேயே நோக்கமுள்ள பெண், ஆடு மாடுகளையோ தோட்டத்தையோ பாதுகாப்பதற்கு நியமிக்கப்பட்ட பெண், அநேக நண்பர்களையுடைய பெண், வரன் பிறந்த வருஷத்திலேயே பிறந்த பெண், வரனை விட அதிக வயதுள்ள பெண் இவர்களை வரிக்கக்கூடாது.

நக்ஷத்ரநாமா நதீநாமா வ்ருக்ஷநாமாஶ்ச கர்ஹிதா꞉ ॥ ௧௨ ॥
ஸர்வாஶ்ச ரேபலகாரோபாந்தா வரணே பரிவர்ஜயேத் ॥

நக்ஷத்ரங்கள், நதிகள், வ்ருக்ஷங்கள் இவைகளின் பெயர்களைப் பெயராக உடைய பெண்களையும் வரிக்கக்கூடாது. "ர" என்ற வர்ணத்தையும், "ல" என்ற வர்ணத்தையும் பெயரில் கடைசி எழுத்திற்கு முன் எழுத்தாகக் கொண்ட பெண்களையும் வரிக்கக்கூடாது. இதுவும் வேறு க்ரந்தத்தைச் சேர்ந்த காதா என்று சிலர் கூறுகின்றனர்.

விவாஹத்தில் வரிக்க வேண்டிய பெண்ணைப் பற்றியும், வரிக்கக்கூடாத பெண்ணைப்பற்றியும் பல ப்ரமாணங்கள் விஸ்தாரமாக விளக்குகின்றன. ஆனல் எந்தப் பெண்ணை விவாஹம் செய்துகொண்டால் அவளை த்யாகம் செய்துவிட வேண்டுமென்று வசனங்கள் கூறுகின்றனவோ, எந்தப் பெண்ணை விவாஹம் செய்துகொண்டால் ப்ராயஶ்சித்தம் சொல்லப்படுகிறதோ, அவ்விதப் பெண்களை விவாஹம் செய்துகொள்வதுதான் தடுக்கப்பட்டிருக்கிறது. உதாஹரணமாக ஸகோத்ரவிவாஹம் நடந்தால் பெண்ணுக்கு த்யாகம் சொல்லப்படுகிறது.

அதனல் ஸகோத்ரமான பெண்ணை விவாஹம் செய்துகொள்ளாதே என்று கூறும் நிஷேதத்திற்குப் பூர்ணபலமுண்டு. இங்கும் பிறருக்குத் தானம் செய்யப்பட்டவளை நிஷேதிக்கும் இடத்திற்கும் பூர்ணபலமுண்டு. பிறருக்கு வாக்தானம் செய்யப்பட்ட பெண்ணை விவாஹம் செய்துகொள்வதை ப்ரமாணங்கள் தூஷிக்கின்றன. மற்ற நிஷேதங்களுக்கு இவ்வளவு பலம் கொடுக்க முடியாது. இவை இல்லாமல் நல்லது என்பதிலேயே அவைகளுக்கு நோக்கு. மேலும், ஒரு பெண்ணைப் பார்க்கப் போகும்காலத்தில் அந்தப் பெண் தூங்கிக்கொண்டிருந்தாலும், வேறு பெண்ணைப் பார்க்கப் போகும் காலத்தில் தூங்காமல் இருந்தால் அவளை அவன் விவாஹம் செய்துகொள்வதில் தடை கிடையாது. இவ்விதம் இங்குள்ள சில நிஷேதங்கள் பரிஹரிக்கக் கூடியவைகளே.

ஶுத்திவிஷயே த்ரவ்யாணி ப்ரதிஷ்டான்யேவ நியாய
வ்யாக்யாஸ்யதேவஷ்யதி ॥ ௧௫ ॥
நாநாபீஜாநி ஸம்ஸ்ருஷ்டாநி வேத்யா: பாம்ஸூந்
க்ஷேத்ராத் லோஷ்டம் ஶக்ருத் ஶ்மஶாநலோஷ்டமிதி ॥ ௧௬ ॥
பூர்வேஷாமேவஸம்ஸ்ருஷ்டே யதாலிங்கம்ருத்தி: ॥ ௧௭ ॥
உத்தமம் பரிவக்ஷ்யதே ॥ ௧௮ ॥

இங்குப் பெண்ணின் வருங்காலத்தைப் பற்றிய பரீக்ஷை சொல்லப்படுகிறது.

பலவித தாந்யங்கள், ஸோமயாகவேதியின் மண், பயிர் நிறைந்துள்ள நிலத்தின் மண் கட்டி, பசுவின் சாணம், ச்மசானத்திலிருந்து எடுத்து வரப்பட்ட மண்கட்டி இவைகளை மண் உருண்

டையில் மறைத்துவைத்து, இவைகளில் ஏதாவதொன்றைத் தொடு என்று பெண்ணைச் சொல்லவேண்டும். பெண் கடைசியில் சொல்லப்பட்ட ச்மசாநலோஷ்டம் தவிர மற்ற எதைதைத் தொட்டாலும் அததற்குத் தகுந்தாற்போல் க்ஷேமமுண்டு. கடைசியில் சொல்லப்பட்டதைத் தொட்டால் அந்தப் பெண்ணை விவாஹம் செய்துகொள்ளக்கூடாது.

பலவித தாந்யங்களுள்ளதைத் தொட்டால் ப்ரஜாஸம்ருத்தியுண்டு. வேதி மண்ணைத் தொட்டால் யஜ்ஞ ஸம்ருத்தியுண்டு. பயிருள்ளநிலத்தின் மண்ணைத் தொட்டால் தாந்ய ஸம்ருத்தியுண்டு. பசுவின் சாணத்தைத் தொட்டால் பசு ஸம்ருத்தியுண்டு. கடைசியான ச்மசான லோஷ்டத்தைத் தொட்டால் வதூவரர்கள் இவர்களில் யாருக்காவது மரணம் ஏற்படுமாதலால் அதைத் தொடும் பெண்ணை விவாஹம் செய்துகொள்ளவேண்டாமென்று கூறப்படுகிறது. வதூவைச் சேர்ந்தவர்கள் ஸம்மதித்தால்தான் இந்தப் பரீக்ஷையைச் செய்யலாம்.

𑌬𑌨𑍍𑌧𑍁𑌶𑍀𑌲𑌲𑌕𑍍𑌷𑌣𑌸𑌮𑍍𑌪𑌨𑍍𑌨𑌾𑌮𑌰𑍋𑌗𑌾𑌮𑍁𑌪𑌯𑌚𑍍𑌛𑍇𑌤 ॥ ௧௯ ॥

இதுவரையில் விலக்கவேண்டிய கந்யகைகளைச் சொல்லிவிட்டு, அங்கீகரிக்கவேண்டிய பெண்களை இந்த ஸூத்ரமூலம் சொல்லுகிறார். நல்ல குலத்தில் பிறந்தவளாயும், நல்ல ஆஸ்திக்யமுள்ளவளாயும், நல்ல லக்ஷணமுள்ளவளாயும், ஒருவித ரோகமுமில்லாதவளாயுமுள்ள பெண்ணை விவாஹம் செய்துகொள்ளவேண்டும்.

𑌬𑌨𑍍𑌧𑍁𑌶𑍀𑌲𑌲𑌕𑍍𑌷𑌣𑌸𑌮𑍍𑌪𑌨𑍍𑌨𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌵𑌾𑌨𑌰𑍋𑌗 𑌇𑌤𑌿 𑌵𑌰𑌸𑌮𑍍𑌪𑌤𑍍 ॥ ௨௦ ॥

அவ்விதமே வரனும் நல்ல குலத்தில் பிறந்தவனாகவும், நல்ல குணமுள்ளவனாயும், நல்ல லக்ஷணமுள்ளவனாயும், ரோகமில்லாதவனாகவும், வேதாத்யயந ஸம்பந்நனாகவும் இருக்கவேண்டும்.

𑌯𑌸𑍍𑌯𑌾𑌂 𑌮𑌨𑌶𑍍𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑍋𑌰𑍍𑌨𑌿𑌬𑌨𑍍𑌧𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑌾𑌮𑍃𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌨𑍇𑌤𑌰𑌦𑌾𑌦𑍍𑌰𑌿𑌯𑍇𑌤𑍇𑌤𑍍𑌯𑍇𑌕𑍇 ॥ ௨௧ ॥

எந்தப் பெண்ணிடத்தில் மனது, சக்ஷுஸ்ஸு இவைகள் மிகவும் த்ருப்தியால் கட்டுப்பட்டவைபோல் நிற்கின்றனவோ, அந்தப் பெண்ணை விவாஹம் செய்துகொண்டால் ஸர்வவித ஸம்ருத்தியும் உண்டாகும் என்று சில மஹர்ஷிகளின் அபிப்ரா

யம். மற்ற ஒன்றையும் ஆதரிக்கவேண்டாம் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். ஜ்யோதிஸ்ஸாஸ்த்ரத்தில் சொல்லப்பட்ட குணங்கள் பூர்ணமாக இருந்தாலும், மனது ஒற்றுமைப்படாவிட்டால் விவாஹம் செய்யலாகாது.

இதி த்ருதீய: கண்ட:

ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரத்தில் மூன்றாவது கண்டம் முற்றிற்று.

---

அத சதுர்த்த: கண்ட: ॥

## நான்காவது கண்டம்.

---

ஸுஹ்ருத: ஸமவேதாந் மந்த்ரவதோ வராந் ப்ரஹிணுயாத் ॥

முதலில் கந்யகையை வரிக்க வேண்டியதற்கான ப்ரகாரம் இங்குச் சொல்லப்படுகிறது.

தனக்கு மித்ரர்களாயும், தன்னுடைய கார்யத்தை ஸாதித்துக் கொடுப்பதில் ஐகமத்யமுள்ளவர்களாயும், வேதாத்யயநம் செய்தவர்களாயுமுள்ள ப்ராம்ஹணர்களைப் பெண்ணை வரிப்பதற்கு அனுப்பவேண்டும். அவர்களிடம் "நீங்கள் குறிப்பிட்ட குலத்திலிருந்து எனக்காகக் கந்யகையை வரிக்கவேண்டும்" என்று சொல்லவேண்டும்.

தாநாதிதோ த்வாப்யா மபிமந்த்ரயேத ॥ ௨ ॥

கந்யகையை வரிப்பதற்காகப் புறப்படும் அவர்களை, 'ப்ரஸுக்மந்தா' 'அந்ருக்ஷரா:' என்ற இரண்டு மந்த்ரங்களாலும் அபிமந்த்ரணம் செய்யவேண்டும். அவர்களைப் பார்த்து மந்த்ரங்களைச் சொல்லுவதே அபிமந்த்ரணம்.

ஸுபம் த்ருஷ்ட்வா த்ருதீயாம் ஜபேத் ॥ ௩ ॥

இவ்விதம் அனுப்பப்பட்ட கடகர்கள் பெண் வீட்டிற்குச் சென்று, பெண்ணை நன்கு பரிசீலனை பண்ணி, கந்யகையின் தகப்பனிடம் "குறிப்பிட்ட கோத்ரத்தில் பிறந்த குறிப்பிட்ட பெயருள்ள வரனுக்குத் தங்களுடைய பெண்ணை ஸந்ததி அபிவ்ருத்திக்கும் தர்மாதிகளைக் கூட இருந்து செய்யவும் வரிக்கிறோம்" என்று சொல்லவேண்டும். ஸம்மதித்துள்ள கந்யகையின் பிதா

“கொடுக்கிறேன்” என்று பதில் சொல்லவேண்டும். பிறகு கடகர்கள் வரனிடம் வந்து ‘நாங்கள் கார்யத்தை முடித்துக்கொண்டு வந்து விட்டோம்’ என்று சொல்லவேண்டும். இவ்விதம் கடகர்களை அனுப்புவது ஆஸுர ஆர்ஷ விவாஹங்களிலேயே செய்யப்பட வேண்டும். ப்ராம்ஹ விவாஹத்தில் வரப்ரேஷணம் கிடையாது என்று சிலர் கூறுகின்றனர்.

விவாஹத்திற்குப் பூர்வாங்கமான ‘அங்குரார்ப்பணம்’, ‘ப்ரதிஸரபந்தம்’ இவைகளை வதூவரர்கள் செய்துகொள்ளவேண்டும். பிறகு கந்யாதானம். கந்யகையைப் பெற்றுக்கொண்டு வரன் விவாஹம் நடக்குமிடத்திற்கு வந்து அக்நிப்ரதிஷ்டையைச் செய்து விட்டுக் கந்யகை உட்கார்ந்திருக்குமிடத்திற்கு வந்து மதுபர்க்கத்தைப் பெறவேண்டும். விவாஹதினத்திற்கு முன் ஐந்தாவது நாளிலாவது, மூன்றுவது நாள், அல்லது முன்தினம், அல்லது விவாஹதினத்திலாவது சிஷ்டாசாரானுகுணமாக அங்குரார்ப்பணத்தைச் செய்யலாம். விவாஹத்திற்கு முன் தினத்திலேயே நாந்தீஶ்ராத்தம் செய்யவேண்டுமென்று சிலர் கூறுகிறார்கள்.

மதுபர்க்கம் ஆன பிறகு பெண்ணைப் பார்த்து, ‘அப்ராத்ருக்நீம்’ என்ற மூன்றுவது மந்த்ரத்தை ஜபிக்க வேண்டும். பெண்ணைப் பார்த்த பிறகுதான் ஜபிக்கவேண்டும். இந்த மந்த்ரத்தை வரனே ஜபிக்கவேண்டும். வேறு ஒருவரும் ஜபிக்கக் கூடாது.

உதூ³ஹ்யமாநாம் ஸமீக்ஷேத ॥ ௪ ॥

‘அகோரசக்ஷு:’ என்ற நான்காவது மந்த்ரத்தால் வரன் பெண்ணைப் பார்க்கவேண்டும். இந்த மந்த்ரத்தால் பெண்ணின் பார்வையோடு தன் பார்வையை ஸம்பந்தப்படுத்தும் காலத்தில் சொல்லவேண்டும். பிறகு வதூ வரன் இருவர்களும் ‘ஆவாப்⁴யாம் கர்மாணி கர்தவ்யாநி ப்ரஜாஶ்சோத்பாத³யிதவ்யா:’ (நம் இருவர்களாலும் கர்மாக்கள் செய்யப்படவேண்டும், ப்ரஜைகள் உற்பத்தி பண்ணப்படவேண்டும்) என்று ப்ராணாயாம பூர்வகமாக ஸங்கல்பம் செய்யவேண்டும்.

அங்கு³ஷ்டே²நோபமத்⁴யமயா சாங்கு³ல்யா உபஸ்தே²ம் ஸங்க்³ருஹ்யோத்தரேண யஜுஷா தஸ்யா த³க்ஷிணேந ஹஸ்தேந ஸக்³ருஹ்ய ப்ரதீசீனம் நிஷத்³ய ॥ ௫ ॥

பிறகு அங்குஷ்டம், அநாமிகை என்ற இரண்டு விரல்களாலும் ஒரு தர்ப்பத்தை எடுத்து, 'இதமஹம் யா த்வயி' என்ற யஜுஸ்ஸால் வதூவினுடைய புருவங்களினுடைய இடையைத் துடைத்துத் துடைத்த தர்ப்பத்தை மேற்குப்பக்கத்தில் எறிந்து விடவேண்டும். இங்குச் சொல்லப்படும் மந்த்ரம் துடைப்பதற்கே யன்றித் தர்ப்பத்தை எறிவதற்கன்று. எறிந்த பிறகு ஜலத்தைத் தொடவேண்டும். புருவத்தினிடையைத் துடைத்து, அப்படியே தர்ப்பத்தைப் பெண்ணின் சிரஸ்ஸின் மேல்பாகத்திற்குக் கொண்டுபோய் மேற்குப் பக்கத்தில் எறிந்து விடவேண்டும்.

வூாவெு நிஜிதூ உதூராம் ஜவெசு || ௬ ||

பெண்ணை விவாஹமூலம் பிறருக்குக் கொடுப்பதால் தங்களை விட்டுப் பிரிந்துவிடுகிறாளே என்று பெண்வீட்டில் உள்ள மாதா பிதாக்களோ அல்லது பெண்ணோ அழ ஆரம்பித்தால் "ஜீவாம் ருதந்தி" என்ற அடுத்த மந்த்ரத்தை ஜபிக்கவேண்டும்.

யாஹூாநு ஸவெதாநு ஊநவத உதூரயாஃ ஹூீஃ வூஹிணயாசு ||

பிறகு ஒருவனுக்கொருவர் ஒற்றுமை யுள்ளவர்களாயும், வேதாத்யயனம் செய்தவர்களாயுமுள்ள இரட்டைப் படையில் உள்ளப்ராஹ்மணர்களை, 'வ்யுக்ஷத்க்ரூரம்' என்ற அடுத்தமந்த்ரத்தால் கந்யகையின் ஸ்நாநத்திற்காக ஜலம்கொண்டுவர அனுப்ப வேண்டும். தவறிவிழுந்ததாலோ, அல்லது தற்கொலை செய்து கொண்டதாலோ மனிதர்கள் இறந்துள்ள இடத்திலுள்ள ஜலத்தை எடுக்கக்கூடாது.

உதூரெண யஜுஷா தஸ்யாஸ்ஸிரஸி உஹெவணம் நியாய
தஸூிஹூ தூரயா உக்ஷிணம் யாஹூிஊம் வூதிஷாவ்ய
ஹிதெரு ஸவணஊதூரயாஃ ஜுஊரயொதூராஸிஃ வஜு
ஸிஃ வூாவயிகொ தூரயாஃ ஹதெந வாஸஸாஃஃ ஹூாஜ்யா
தூரயா யொகூண ஸஹஹ்யதி || அ ||

ப்ராம்ஹணர்கள் ஜலம் கொண்டுவந்த பிறகு, பெண்ணின் சிரஸ்ஸில் தர்ப்பத்தால் செய்யப்பட்ட புரிமணையை "அர்யம்ணோ அக்நிம்" என்ற யஜுஸ்ஸால் வைத்து, அதன்மேல்அடுத்த "கேநஸ:" என்ற மந்த்ரத்தால் நுகத்தடியின் தெற்குப் பாகத்திலுள்ளசித்ரத்தை (துளையை)வைத்து, சித்ரத்தில் "சந்தேஹிரண்யம்" என்ற மந்த்ரத்தால் ஸ்வர்ணத்தை வைத்து, சித்ரத்தை

மறைத்து மேலுள்ள "ஹிரண்யவர்ணாஶ்ஶுசய:" என்றாரம்பிக்கும் ஐந்து மந்த்ரங்களால் பெண்ணுக்கு ஸ்நாநம் செய்துவைத்து, "பரித்வாகிர்வண:" என்ற அடுத்த மந்த்ரத்தால் புதுவஸ்த்ரத்தைப் பெண் தரிக்கும்படிசெய்து, அடுத்த "ஆசாஸாநா" என்ற மந்த்ரத்தால் யோக்த்ரத்தால் பெண்ணை ஸந்நஹநம் பண்ண வேண்டும். ஸந்நஹநம் என்பது "யோக்த்ரத்தை" பெண்ணின் இடுப்பில் சுற்றிக்கட்டுவதே. ஒவ்வொரு மந்த்ரத்தாலும் ஸ்நாநம் செய்துவைக்கவேண்டுமென்று சிலர் கூறுகின்றனர். மற்றும் சிலர் ஐந்து மந்த்ரங்களையும் சொல்லி முடிவில் ஒரே தடவை ஸ்நாநம் செய்துவைக்கவேண்டுமென்று கூறுகின்றனர்.

அதைநாம் தக்ஷிணே ஹஸ்தே க்ருஹீத்வாऽக்நிம்
அப்யாநீயாபரேணாக்நிம் ப்ராக்ரம் கடமாஸ்தீர்ய தஸ்மிந்
உபவிஶத உத்தரோ வர: ॥ ௯ ॥

உடனே பிறகு பெண்ணின் கையைப் பிடித்துக்கொண்டு "பூஷாத்வேதோநயது" என்ற மந்த்ரத்தால் பெண்ணை அக்நி ஸமீபத்திற்கு அழைத்துவந்து, அக்நிக்கு மேல்பக்கத்தில் வடக்கு நுனியாகப் பாயைவிரித்து, அதன் வடக்குப் பக்கத்தில் வரனும் தெற்குப்பக்கத்தில் பெண்ணும் உட்காரவேண்டும். வதூவரர்கள் உட்காரும்பொழுது ஒரே காலத்தில் உட்காரவேண்டும்.

அக்நேருபஸமாதாநாத்யாஜ்யபாகாந்தேऽதைநாமபி
தோ ஆப்யாமபிமந்த்ரயேத ॥ ௧௦ ॥

பிறகு (அக்நிமித்வா) அக்நியை வளர்ப்பது முதலான பூர்வாங்கங்களை ஆஜ்யபாகம்வரை செய்து, பிறகு அடுத்த அநுவாகத்தின் ஆதியில் உள்ள 'ஸோம: ப்ரதமோவிவிதே' 'ஸோமோ ததத்கந்தர்வாய' என்ற இரண்டு மந்த்ரங்களால் அபிமந்த்ரணம் செய்யவேண்டும்.

அதாஸ்யை தக்ஷிணேந நீசா ஹஸ்தேந தக்ஷிணமுத்
தாநம் ஹஸ்தம் க்ருஹ்ணீயாத் ॥ ௧௧ ॥

பிறகு பெண்ணினுடைய நிமிர்ந்துள்ள வலதுகையைத் தன்னுடைய கவிர்ந்துள்ள வலது கையால் வரன் பிடிக்கவேண்டும். இது பாணிக்ரஹணத்தில் நித்யவிதி. இப்படி க்ரஹிக்கும் காலத்தில் அங்குஷ்டமுள்பட வரனுடைய எல்லா விரல்களும்

கவிழ்ந்து இருக்கவேண்டும். பெண்ணினுடைய விரல்களும் அங்குஷ்டமுள்பட நிமிர்ந்து இருக்கவேண்டும்.

இதற்குப்பிறகு பாணிக்ரஹணத்தில் சில காம்ய விதிகள் சொல்லப்படுகின்றன.

यदि कामयेत स्त्रीरेव जनयेयमित्यङ्गुलीरेव गृह्णीयात् ॥

பாணிக்ரஹணம் செய்யப்படும் பெண்ணினிடம் தனக்குப் பெண்களே பிறக்கவேண்டுமென்ற அபிப்ராயமிருந்தால், பெண்ணின் கைமுழுவதையும் க்ரஹிக்காமல் பெண்ணின் கட்டைவிரல் தவிர மற்ற விரல்களைமட்டும் தன்னுடைய விரல்களால்க்ரஹிக்க வேண்டும். இங்கும் முன் விதியில்போல் பெண்ணின் விரல்கள் நிமிர்ந்தவைகளாக இருக்கவேண்டும். வரனின் விரல்களும் கவிழ்ந்து இருக்கவேண்டும்.

यदि कामयेत पुंस एव जनयेयमित्यङ्गुष्ठमेव ।
साभीवाङ्गुष्ठमभीव लोमानि गृह्णाति ॥ १५ ॥

பாணிக்ரஹணம் செய்யப்படும் பெண்ணுக்கும் தனக்கும் பிள்ளைகளே பிறக்கவேண்டுமென்ற ஆசையுடன் இருந்தால், பெண்ணினுடைய அங்குஷ்டத்தைமட்டும் க்ரஹிக்கவேண்டும். இங்கும் வரனுடைய அங்குஷ்டத்தின் ரோமங்கள் மேலேயே இருக்கும்படி க்ரஹிக்கவேண்டும். இதனால் வரனின் அங்குஷ்டம் கவிழ்ந்ததாக இருக்கவேண்டுமென்றும் ஏற்படுகிறது. அவ்விதமே பெண்ணின் அங்குஷ்டம் நிமிர்ந்ததாக இருக்கவேண்டும்.

गृह्णामि त इत्येताभिश्चतसृभिः ॥ १४ ॥

இங்குச் சொல்லப்பட்ட நித்ய விதியிலும், காம்ய விதியிலும் "க்ருப்ணுமிதே ஸௌப்ரஜாஸ்த்வாய" என்றாரம்பிக்கும் நான்கு ருக்குகளால் பாணிக்ரஹணம் செய்யவேண்டும்.

மற்றொரு அபிப்ராயப்படி "ஸாபீவாங்குஷ்ட மபீவலோமானி க்ருண்ஹாதி" என்பது நித்யவிதி. அதனால் கையில் உள்ள ரோமங்களும் சிறிது தொடப்பட்டவைகளாக ஆகும்படி. அங்குஷ்டமுள்பட எல்லா விரல்களையும் க்ரஹிக்கவேண்டும். "லோமாந்தே ஹஸ்தம் ஸாங்குஷ்டமுபயகாம:" என்று ஆச்வலாயனரும், பெண் குழந்தைகளும், பிள்ளைக் குழந்தைகளும் பிறக்கவேண்டுமென்ற ஆசையுள்ளவன் கையில் உள்ள ரோமங்களின் ஸமீபத்தில் க்ரஹிக்கவேண்டுமென்று கூறுகிறார்.

𑌅𑌥𑍈𑌨𑌾𑌮𑍁𑌤𑍍𑌤𑌰𑍇𑌣𑌾𑌗𑍍𑌨𑌿𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇𑌨 𑌪𑌦𑌾 𑌪𑍍𑌰𑌾𑌚𑍀𑌮𑍁𑌦𑍀𑌚𑍀𑌂 𑌵𑌾 𑌦𑌿𑌶𑌮𑌭𑌿𑌪𑍍𑌰𑌕𑍍𑌰𑌮𑌯𑌤𑍍𑌯𑍇𑌕𑌮𑌿𑌷 𑌇𑌤𑌿 ॥ ௧௫ ॥

பிறகு, அக்நிக்கு ஸமீபத்தில், வடக்குப் பக்கத்தில் கிழக்கில் முடியும்படியாகவோ, அல்லது வடக்கில் முடியும்படியாகவோ ஏழு அடிகளைப் பெண் எடுத்துவைக்கும்படி செய்ய வேண்டும். "ஏகமிஷே விஷ்ணுஸ்த்வாந்வேது" என்ற ஏழு மந்த்ரங்களால் ஏழு அடிகளை வைக்கச் செய்யவேண்டும்.

பெண்ணின் வலது காலை வரன் தன்கையால் பிடித்து, ஒவ்வொரு மந்த்ரத்தையும் சொல்லி, ஒவ்வொரு அடி எடுத்து வைக்கச்செய்யவேண்டும். ஒவ்வொரு அடியிலும் வலதுகாலை வைப்பதற்குமட்டுமே மந்த்ரம். இடது காலை மந்த்ரமில்லாமல் ஒவ்வொரு அடியிலும் வைக்கச் செய்யவேண்டும்.

𑌸𑌖𑍇𑌤𑌿 𑌸𑌪𑍍𑌤𑌮𑍇 𑌪𑌦𑍇 𑌜𑌪𑌤𑌿 ॥ ௧௬ ॥

ஏழாவது அடியில் "ஸகா ஸப்தபதாபவ" என்றாரம்பித்து "ஸுந்ருதே" என்று வரையில் உள்ள எல்லா மந்த்ரங்களையும் ஜபிக்கவேண்டும்.

𑌇𑌤𑌿 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

**நான்காவது கண்டம் முற்றிற்று.**

---

𑌅𑌥 𑌪𑌞𑍍𑌚𑌮𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

## ஐந்தாவது கண்டம்.

---

𑌪𑍍𑌰𑌾𑌗𑍍𑌘𑍋𑌮𑌾𑌤𑍍𑌸𑌂 𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌮𑌗𑍍𑌨𑌿𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌯𑌥𑌾𑌸𑍍𑌥𑌾𑌨𑌮𑍁𑌪𑌵𑌿𑌶𑍍𑌯𑌾𑌨𑍍𑌵𑌾𑌰𑌬𑍍𑌧𑌾𑌯𑌾𑌮𑍁𑌤𑍍𑌤𑌰𑌾 𑌆𑌹𑍁𑌤𑍀𑌰𑍍𑌜𑍁𑌹𑍋𑌤𑌿 𑌸𑍋𑌮𑌾𑌯 𑌜𑌨𑌿𑌵𑌿𑌦𑍇 𑌸𑍍𑌵𑌾𑌹𑍇𑌤𑍍𑌯𑍇𑌤𑍈𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌮𑍍 ॥ ௧ ॥

ஜபத்திற்குப் பிறகு, வடக்குப் பக்கத்திலிருந்தே ஆரம்பித்து அக்நியை ப்ரதக்ஷிணம் செய்து, முன் உட்கார்ந்த இடத்திற்கு வந்து உட்கார்ந்து, "ஸோமாயஜநிவிதே ஸ்வாஹா" முதலிய மந்த்ரங்களால் ஒவ்வொரு மந்த்ரத்தால் ஒவ்வொரு ஹோமம் செய்யவேண்டும். ஹோமம் செய்யும்பொழுது வதூவரனைத்தொட்டுக் கொண்டிருக்கவேண்டும். இங்குப் பதினாறு ஹோமங்களைச் செய்யவேண்டும். ஜபம் ஆனவுடன் வேறு ஒரு

கார்யத்தையும் செய்யாமல் ப்ரதக்ஷிணம் செய்து ஹோமம் செய்யவேண்டும்.

பதினாறு ஹோமங்களில், 4 யஜுஸ்ஸுக்கள் 12 ருக்குக்கள். அந்தந்த மந்த்ரங்களில் உள்ள தேவதைகளே அந்தந்த ஹோமத்திற்கும் தேவதைகள். ஆஜ்யத்தால் இந்த ஹோமங்களைச் செய்ய வேண்டும். இவை ப்ரதான ஹோமங்கள்.

[illegible] ॥ ௨ ॥

பிறகு பெண்ணை அக்நிக்கு வடக்குப்பக்கத்தில் வைக்கப் பட்டுள்ள கருங்கல்லைக் காலால் மிதிக்கச்செய்யவேண்டும். "ஆதிஷ்டேமமஶ்மாநம்" என்ற மந்த்ரத்தால் காலை வைக்கச்செய்ய வேண்டும்.

[illegible] ॥ ௩ ॥

[illegible] ॥ ௪ ॥

பிறகு பெண்ணின் அஞ்ஜலியில் உபஸ்தரணம் செய்து இரண்டுதடவை லாஜங்களை (பொரிகளை) நிரப்பி அபிகாரணம் செய்யவேண்டும்.

சில மஹர்ஷிகள் பொரியைப் பெண்ணின் அஞ்ஜலியில் பெண்ணின் ஸஹோதரன் நிரப்பவேண்டும், என்று சொல்லுகிறார்கள். இந்தப் பக்ஷத்தில் "உபஸ்தரணம்" "அபிகாரணம்" இரண்டையும் பர்த்தாதான் செய்யவேண்டும்.

விவாஹத்தில் ஆஜ்யமொன்றுதான் தர்மங்களுடன் கூடிய ஹவிஸ்ஸு. லாஜமும் ஹோமத்ரவ்யமாக ஆனாலும் அதற்கு ஆஜ்யத்திற்குச் செய்வதுபோல் ஒருவித ஸம்ஸ்காரமும் கிடையாது. ஸாதனம், ப்ரோக்ஷணம் இவையுண்டு. "லாஜ" ஹோம தர்மங்கள் முழுவதும் இங்குச் சொல்லப்பட்டுவிட்டதால் ப்ரத்யபிகாரணமும் கிடையாது என்று சிலர் கூறுகின்றனர். மற்றுஞ் சிலர் தர்சபூர்ணமாஸம்போல் ப்ரத்யபிகாரணம் உண்டென்று கூறுகின்றனர். அஞ்ஜலிக்கு ஸாதனம் ப்ரோக்ஷணம் இவை உண்டென்று சிலரும், இல்லையென்று சிலரும் கூறுகின்றனர்.

ஜமதக்நி ஸம்பந்தமுள்ள கோத்ரத்தைச் சேர்ந்தவர்கள் பொரியை மூன்றுதடவை நிரப்பவேண்டும்.

ஜுஹோதீயம் நாரீதி ॥ ௫ ॥

"இயம் நார்யுபப்ரூதே" என்ற மந்த்ரத்தால் ஹோமம் செய்யவேண்டும். பொரி நிறைந்துள்ள பெண் கையைக் கொண்டே ஹோமம் செய்யவேண்டும். ஸூத்ராந்தரங்களைக் கொண்டு கவனித்தால் இந்த ஹோமம் நின்றுகொண்டு செய்ய வேண்டியதாக ஏற்படுகிறது.

உத்தராபிஸ்திஸ்ருபி: ப்ரதக்ஷிணமக்நிம் பரிக்ரம்யாஶ்மாநமாஸ்தாபயதி யதாபுரஸ்தாத் ॥ ௬ ॥

மேலுள்ள "துப்யமக்ரே பர்யவஹந்" என்றாரம்பிக்கும் மூன்று மந்த்ரங்களால் அக்நியை ப்ரதக்ஷிணம் செய்துவிட்டு, முன்போல் அக்நியின் வடக்குப்பக்கத்தில் உள்ள கருங்கல்மீது பெண்ணின் காலைவைத்து மிதிக்கச்செய்யவேண்டும். மூன்று மந்த்ரங்களைச் சொல்லிவிட்டு ஒரு ப்ரதக்ஷிணத்தையே செய்ய வேண்டும்.

ஹோமஶ்சோத்தரயா ॥ ௭ ॥

முன்போல் அடுத்த "அர்யமணம் நுதேவம்" என்ற மந்த்ரத்தால் இரண்டாவது லாஜ ஹோமத்தைச் செய்யவேண்டும்.

புந: பரிக்ரமணம் ॥ ௮ ॥ ஆஸ்தாபநம் ச ॥ ௯ ॥

மறுபடியும் முன்போல் மூன்று மந்த்ரங்களால் அக்நியை ப்ரதக்ஷிணம் செய்துவிட்டு, முன்போல் மந்த்ரத்தால் அக்நியின் வடக்குப் பக்கத்தில் கருங்கல்லை மிதிக்கச்செய்யவேண்டும்.

ஹோமஶ்சோத்தரயா ॥ ௰ ॥

முன்போல் மூன்றும்தடவையாக அடுத்துள்ள "த்வமர்யமாபவஸி" என்ற மந்த்ரத்தால் லாஜஹோமம் செய்யவேண்டும்.

புந: பரிக்ரமணம் ॥ ௧௧ ॥

மறுபடியும் முன்போல் மந்த்ரங்களைச்சொல்லி ப்ரதக்ஷிணம் செய்யவேண்டும்.

ஜயாதி ப்ரதிபத்யதே ॥ ௧௨ ॥

பிறகு "ஜய ஹோமம்" முதலிய ஹோமங்களைச்செய்ய வேண்டும்.

வஸிஷ்டேந நாஞ்ஜலம் ப்ரயோக்த்ரோத்தராப்யாம் யோக்த்ரம் விச்ருத்ய தாம் தத: ப்ரவாஹயேத் ப்ரவாஹயேத் ॥ ௧௩ ॥

பிறகு பாக்கியுள்ள தந்த்ரங்களை முடித்துக்கொண்டு அடுத்த “ப்ரத்வாமுஞ்சாமி” முதலிய இரண்டு மந்த்ரங்களால் யோக்த்ரத்தை அவிழ்த்துவிட்டுப் பிறகு பெண்ணை அங்கிருந்து யானை, குதிரை இவைகளில் ஏற்றியாவது, பல்லக்கு, ரதம், மநுஷ்யன் இவைகளில் ஏற்றியாவது அழைத்துக்கொண்டுபோக வேண்டும். விவாஹ தந்த்ரம் முடிந்தபிறகு உடனே அந்த இடத்தைவிட்டுத் தம்பதிகள் புறப்படவேண்டிய அவச்யமில்லை. அன்றைய தினத்திலோ, மறுநாளிலோ புறப்படலாம்.

ஸமாரோப்ய தஸ்மிந்நநுஹரதி ॥ ௧௪ ॥

விவாஹாக்நியை ‘உகை’யில் (அக்நியைவைத்துப் பாதுகாப்பதற்கேற்பட்டுள்ள சட்டி முதலியவை) எடுத்து மேற்படி அக்நியைத் தம்பதிகளுடன்கூடக் கொண்டுவரவேண்டும். மற்ற இடங்களில் தம்பதிகள் யாத்ரைசெய்யும் காலத்தில் அக்நியை ப்ரத்யக்ஷமாகக் கொண்டுபோகக்கூடாது. ஸமாரோபணம் செய்தே கொண்டுபோகவேண்டும். இங்குமட்டும் ப்ரத்யக்ஷமாக அக்நியைக்கொண்டுபோகவேண்டும்.

நித்ய: ॥ ௧௫ ॥ யாயஜூ: ॥ ௧௬ ॥

விவாஹ கர்மா முடிந்தவுடன் இந்த அக்நியை த்யாகம் செய்துவிடக்கூடாது. இந்த அக்நியை நித்யமாக வைத்துக் கொள்ளவேண்டும். பத்நியுடன்கூடச் செய்யவேண்டிய கர்மாக்களைச்செய்ய எப்பொழுதுமே அக்நியை ப்ரத்யக்ஷமாகவைத்துக்கொள்ளவேண்டும். ஆபஸ்தம்ப ஸூத்ரப்படி க்ருஹ்யாக்நிக்கு ஒருகாலத்திலும் ஸமாரோபணம் கிடையாது. எப்பொழுது தம்பதிகள் யாத்ரை செய்வதாக இருந்தாலும் ப்ரத்யக்ஷமாகவே அக்நியைக் கொண்டுபோகவேண்டும் என்பது சிலரது அபிப்ராயம். மற்றுஞ்சிலருடைய அபிப்ராயப்படி விவாஹமான உடன் தம்பதிகள் புறப்படும்பொழுதுமட்டும் ப்ரத்யக்ஷமாக அக்நியைக் கொண்டுபோகவேண்டும். மற்ற ஸந்தர்ப்பங்களில் ஸமாரோபணம் செய்து கொண்டுபோகலாம். க்ருஹ்யாக்நிக்கு ஸமாரோபணம் ஆபஸ்தம்ப ஸூத்ரத்தில் சொல்லப்படாமல் இருந்தாலும் போதாயனாதிகளின் ஸூத்ராந்தரங்களைப் பின்பற்றி ஸமாரோபணம் செய்யலாம்.

க்ஷந்மஹதோ ஸ்ந்ய: ॥ ௧௭ ॥

விவாஹாக்நி அணைந்துவிட்டால் அரணிக் கட்டையைக் கடைந்து அக்நியை மறுபடியும் உண்டாக்கவேண்டும். அணைந்த நெருப்பின் சாம்பல்களிலிருந்து அரணியைக்கடைந்து அக்நியை உண்டாக்கவேண்டும். அல்லது அந்தச் சாம்பலைக்கொண்டு அரணியைத்தொட்டு மதநம் செய்யவேண்டும்.

ஶ்ரோத்ரியாகாராத்வாஹார்ய: ॥ ௧௮ ॥

அல்லது அக்நி அணைந்துவிட்டால் அத்யயநம் செய்துள்ள பெரியோர்களின் க்ருஹத்திலிருந்தாவது அக்நியைக் கொண்டு வரவேண்டும். அக்நி காணுமற்போனாலும், பிறரால் அபஹரிக்கப்பட்டுப் போனாலும் இப்படியே அக்நியை மறுபடியும் உண்டாக்கிக்கொள்ளவேண்டும்.

விவாஹ காலத்தில் அரணிக்கட்டையைக் கடைந்து, அக்நியை ஸம்பாதித்துக்கொள்ளலாம். அல்லது அத்யயநம் செய்த பெரியோர்கள் க்ருஹத்திலிருந்து அக்நியைக் கொண்டுவரலாம். இப்படிக்கொண்டுவரப்பட்ட அக்நி அணைந்தால் அந்த அக்நி எந்த இடத்திலிருந்து கொண்டுவரப்பட்டதோ அங்கிருந்தே மறுபடியும் அக்நியைக் கொண்டுவரவேண்டும். உதாஹரணமாக, அரணியிலிருந்து கடைந்தெடுக்கப்பட்டதாக விவாஹ அக்நி இருந்தால் அது அணைந்தபொழுது மறுபடியும் அரணியிலிருந்தே அக்நியைக் கடைந்தெடுக்கவேண்டும்.

உபவாஸஶ்சாந்யதரஸ்ய ஜாயாபத்யோ: பத்ந்யா வா ॥ ௧௯ ॥

அக்நி அணைந்ததால் ஏற்பட்ட தோஷத்தைப் போக்கடித்துக்கொள்ள ப்ராயஶ்சித்தமாக தம்பதிகளில் யாராவது ஒருவர் ஒருகாலம் உபவாஸமிருக்கவேண்டும். சிலர் இரண்டுபேருமே உபவாஸமிருக்கவேண்டுமென்று கூறுகின்றனர். பகலில் அக்நி அணைந்தால் பகலில் போஜநம் செய்யக்கூடாது. ராத்ரியில் அணைந்தால் ராத்ரியில் போஜனம் செய்யக்கூடாது. போஜந காலத்திற்குப் பிறகு அக்நி அணைந்தால் அடுத்தவேளையில் போஜநம் செய்யக்கூடாது. அக்நி அணைந்த உடன் புதிதாக அக்நியைக் கொண்டுவந்து ப்ரதிஷ்டை பண்ணி, "ஸர்வப்ராயஶ்சித்த" ஹோமம் செய்துவிட்டு உபவாஸமிருக்கவேண்டும்.

ஸந்த்யதேவி வோத்பத்யா ஜுஹுயாஜ்ஜோஹவஸேக ॥ ௨௦ ॥

இல்லாவிடில் அக்நி அணைந்தால் அடுத்துள்ள, "அயாஶ்

சாக்நே" என்ற மந்த்ரத்தால் ஹோமம் செய்யவேண்டும். இது உபவாஸ ஸ்தானத்தில் செய்யப்படவேண்டும். அக்நி அணைவது தவிர மற்ற நிமித்தங்களில் இந்த ஹோமம் வேண்டாம். உபவாஸ ஸ்தானத்தில் செய்யப்படும் இந்த ஹோமம் செய்தாலும், அக்நி அணைந்த தோஷத்தை நிவர்த்தித்துக்கொள்ள வேறு ஹோமத்தையும் செய்யவேண்டும்.

உத்தரா ரயவெஸ்யாத்தூஹநீ ॥ உக ॥

தம்பதிகள் புறப்படும் காலத்தில் செய்யவேண்டியவை இங்கிருந்து சொல்லப்படுகின்றன.

அடுத்த "ஸத்யேநோத்தபிதாபூமி:" என்ற மந்த்ரத்தால் ரதத்தைப் பூட்டவேண்டும்.

வாஹாவுத்தராஹ்யாம் யுநக்தி தக்ஷிணமெ ॥ உஉ ॥

ரதத்தை இழுக்கும் குதிரைகளையாவது காளைகளையாவது அடுத்த "யுஞ்ஜந்தி ப்ரத்நம்", "யோகேயோகே" என்ற இரண்டு மந்த்ரங்களால் கட்டவேண்டும். முதல் மந்த்ரத்தால் வலது பக்கத்துக் காளையையாவது குதிரையையாவது கட்டவேண்டும். பிறகு முன் கூறப்பட்ட இரண்டு மந்த்ரங்களாலேயே இடது பக்கத்துக் குதிரையையாவது காளையையாவது கட்டவேண்டும்.

க்ஷொஹதீஉத்தராபிரபிஜ்ஞபதெ ॥ உங ॥

ரதத்தில் ஏறும் பெண்ணை அடுத்த "ஸுகிம்சுகம்" முதலிய நான்கு மந்த்ரங்களால் அபிமந்த்ரணம் செய்யவேண்டும்.

சக்ரமுள்ள வண்டியில் ஏறுவதாக இருந்தால் நான்கு மந்த்ரங்களையும் சொல்லவேண்டும். குதிரை முதலியவைகளில் யாத்ரை செய்வதாக இருந்தால் முதல் மந்த்ரத்தைச் சொல்ல வேண்டாம்.

ஸஉத்ரு வத்மநொ வர்த்மவஸ்ணாத்ருத்தரயா நீலம்
தக்ஷிணஸ்யாம் லொஹிதஉத்தரஸ்யாம் ॥ உச ॥

அடுத்த "நீலலோஹிதே பவத:" என்ற மந்த்ரத்தால் ரதத்தின் இரண்டு சக்ரங்களின் மார்க்கங்களிலும் இரண்டு நூல்களைப் பரப்பவேண்டும். வலது சக்ரத்தின் மார்க்கத்தில் நீல வர்ணமுள்ள நூலைப் பரப்பவேண்டும். இடது பக்கத்தில் உள்ள சக்ரத்தின் வழியில் சிவப்பு வர்ணமுள்ள நூலைப் பரப்பவேண்டும்.

தெ உத்தராவிரஹியாதி ॥ ௨௫ ॥

இப்படிப் போடப்பட்ட நூல்களின் மேல் "யேவத்வஸ் சந்த்ரம் வஹதும்" என்பது முதலான மூன்று மந்த்ரங்களால் செல்லவேண்டும்.

தீர்த்தஸ்தாணு வதுஷ்பதஶ்மஶானானி வோத்தரா ஜபேத் ॥

புண்ய தீர்த்தங்கள், தெருவில் மாடுகள் சொரிந்து கொள்ள நாட்டப்பட்டுள்ள முளைக்குச்சி, நாற்சந்தி இவைகளைத் தாண்டும் காலங்களில் "தாமந்தஸாநா" என்ற மந்த்ரத்தை ஜபிக்கவேண்டும். புண்ய தீர்த்தம் முதலியவைகளில் எதைக் கடந்தாலும் மந்த்ரம் முழுவதையும் ஜபிக்கவேண்டும். மந்த்ரத்தில் தீர்த்தம், முளைக்குச்சி முதலியவை சொல்லப்பட்டிருந்தாலும் எதைத்தாண்டினாலும் மாறுதல் இல்லாமல் முழு மந்த்ரத்தையும் சொல்லவேண்டும்.

இதி பஞ்சம: கண்ட: ॥

## ஐந்தாவது கண்டம் முற்றிற்று.

---

அத ஷஷ்ட: கண்ட: ॥

## ஆருவது கண்டம்.

---

நாவமுத்தரயாऽநுமந்த்ரயதே ॥ ௧ ॥

தம்பதிகள் போய்க்கொண்டிருக்கும் காலத்தில் ஓடத்தால் தாண்டவேண்டிய நதீ இருந்தால் அங்குள்ள ஓடத்தை "அயம் நோமஹ்யா:பாரம்" என்ற மந்த்ரத்தால் அநுமந்த்ரணம் செய்யவேண்டும். மந்த்ர ஜபம் ஆன பிறகு அக்நியோடு தம்பதிகள் ஓடத்தில் ஏறவேண்டும்.

ந ச நாவ்யாந்பஶ்யேத் வதூ: பஶ்யேத் ॥ ௨ ॥

ஓடத்தினல் நதியைக் கடக்கும் காலத்தில் பெண் ஓடக்காரர்களைப் பார்க்கக்கூடாது. ஓடம் போவதையும் பார்க்கக் கூடாது.

தீர்த்வோத்தராம் ஜபேத் ॥ ௩ ॥

ஓடத்தினல் நதியைத்தாண்டி அக்கரையை அடைந்தபிறகு "அஸ்யபாரே" என்ற மந்த்ரத்தைப் புருஷன் ஜபிக்கவேண்டும்.

ஶ்மஶாநாதிவ்யதிக்ரமே அக்ஷாணே ரதே வா விஶீர்ணே அக்நிமுபஸமாதாயாஜ்யபாகாந்தே அந்வாரப்தாயாமுத்தராஃ ஷடாஹுதீர்ஹுத்வா ஜயாதி ப்ரதிபத்யதே விஶேஷவசநாதம் கரோதி ॥ ௪ ॥

போகும்காலத்தில் ச்மசானத்தின்மீது போகும்படி ஏற்பட்டாலும், ரதத்திலுள்ள பாண்டங்களோ, ரதமோ நாசத்தை அடைந்தாலும் "அக்நிமித்வா" என்பதுமுதல் உள்ள பூர்வதந்த்ரத்தை 'ஆஜ்யபாகம்' வரை செய்துகொண்டு, பிறகு பெண்ணால் தொடப்பட்டவனாக "யத்ருதேசிதபிச்ரிஷ:" என்ற ஆறு மந்த்ரங்களால் ஹோமம் செய்துவிட்டு, 'ஜயாதி'யான உத்தர தந்த்ரத்தை முடிக்கவேண்டும்.

க்ஷீரிணாமந்யேஷாம் வா லக்ஷண்யாநாம் வ்ருக்ஷாணாம் நதீநாம் தந்வநாம் ச வ்யதிக்ரமே உத்தரே யதாலிங்கம் ஜபேத் ॥ ௫ ॥

எல்லேமரமாக இல்லாத ஆலமரம் முதலியவை, எல்லேமரமாக உள்ள மற்ற வ்ருக்ஷங்கள், ஜலமுள்ளதோ அல்லது இல்லாததாகவோ உள்ள நதிகள், ஜலமில்லாத பாலேவனங்கள் இவைகளைத் தாண்டுங்காலத்தில் அடுத்த "யேகந்தர்வா:, யாஓஷதய:" என்ற இரண்டு மந்த்ரங்களையும் அந்தந்த மந்த்ரத்திலுள்ள அடையாளத்திற்குத்தகுந்தார்ப்போல் அந்தந்த இடத்தில் சொல்லவேண்டும். உதாஹரணமாக "யேகந்தர்வா அப்ஸரஸ்ஸ்ச" என்பதை வ்ருக்ஷங்களைத் தாண்டும்பொழுது சொல்லவேண்டும். "யா ஓஷதயோயாநத்யோயாநி" என்பதை நதீ முதலியவைகளைத் தாண்டும்பொழுது சொல்லவேண்டும்.

க்ருஹமுத்தரயா ஸங்காஶயதி ॥ ௬ ॥

'ஸங்காசயாமி' என்ற அடுத்த மந்த்ரத்தால் க்ருஹத்தைப் பெண்ணுக்குக் காண்பிக்கவேண்டும்.

வாஹாவுத்தராப்யாம் விமுஞ்சதி தக்ஷிணமக்ரே ॥ ௭ ॥

அடுத்த "ஆவாமகன்", "அயம் நோதேவ:" என்ற இரண்டு மந்த்ரங்களால் ரதத்தை இழுக்கும் குதிரைகளையாவது, காளைகளையாவது அவிழ்க்கவேண்டும். இரண்டு மந்த்ரங்களாலும் அவிழ்க்கவேண்டும். முதலில் வலது பக்கத்தில் உள்ளதையும் பிறகு இடதுபக்கத்தில் உள்ளதையும் அவிழ்க்கவேண்டும்.

R6 N52
68305

𑌰𑍋𑌹𑌿𑌤𑌂 𑌚𑌰𑍍𑌮𑌾𑌨𑌡𑍁𑌹𑌂 𑌪𑍍𑌰𑌾𑌚𑍀𑌨𑌗𑍍𑌰𑍀𑌵𑌮𑍁𑌤𑍍𑌤𑌰
𑌲𑍋𑌮 𑌮𑌧𑍍𑌯𑍇𑌽𑌗𑌾𑌰𑌸𑍍𑌯𑍋𑌤𑍍𑌤𑌰𑌾𑌽𑌽𑌸𑍍𑌤𑍀𑌰𑍍𑌯 𑌗𑍃𑌹𑌾𑌨𑍍𑌪𑍍𑌰𑌪𑌾
𑌦𑌯𑌨𑍍𑌨𑍁𑌤𑍍𑌤𑌰𑌾𑌂 𑌵𑌾𑌚𑌯𑌤𑌿 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇𑌨 𑌪𑌦𑌾 ॥ ௮ ॥

பிறகு வரன் முதலில் க்ருஹத்தில் ப்ரவேசித்து, "ஶர்மவர் மேதமாஹர" என்ற மந்த்ரத்தால் காளையின் தோலைக்கிழக்குப் பக்கத்தில் தலை இருக்கும்படியும் மேல் பாகத்தில் ரோமங்கள் இருக்கும்படியும் க்ருஹத்தின் நடுவில் பரப்பி, பிறகு பெண்ணை வலது காலை முதலில் வைத்து க்ருஹத்தில் ப்ரவேசிக்கும்படி செய்து, "க்ருஹாந் பத்ராந்" என்ற மந்த்ரத்தை பெண் சொல்லும்படி செய்யவேண்டும்.

𑌨 𑌚 𑌦𑍇𑌹𑌲𑍀𑌮𑌭𑌿𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 ॥ ௯ ॥

வீட்டின் வாசற்படியில் உள்ள நிலையின் அடிக்கட்டையைப் பெண்ணோ, பிள்ளையோ க்ருஹப்ரவேச காலத்தில் காலால் மிதிக்கக்கூடாது.

𑌉𑌤𑍍𑌤𑌰𑌪𑍂𑌰𑍍𑌵𑍇 𑌦𑍇𑌶𑍇𑌽𑌗𑌾𑌰𑌸𑍍𑌯𑌾𑌗𑍍𑌨𑌿𑌮𑍁𑌪𑌸𑌮𑌾𑌧𑌾𑌯𑌾
𑌨𑌾𑌦𑍍𑌯𑌾𑌜𑍍𑌯𑌭𑌾𑌗𑌾𑌨𑍍𑌤𑍇𑌽𑌨𑍍𑌵𑌾𑌰𑌬𑍍𑌧𑌾𑌯𑌾𑌮𑍁𑌤𑍍𑌤𑌰𑌾 𑌆𑌹𑍁𑌤𑍀𑌰𑍍𑌹𑍁
𑌤𑍍𑌵𑌾 𑌜𑌯𑌾𑌦𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 𑌪𑌰𑌿𑌷𑍇𑌚𑌨𑌾𑌨𑍍𑌤𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑍋
𑌤𑍍𑌤𑌰𑌯𑌾 𑌚𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑍁𑌪𑌵𑌿𑌶𑌤 𑌉𑌤𑍍𑌤𑌰𑍋 𑌵𑌰𑌃 ॥ ௧௦ ॥

க்ருஹத்தின் வடக்குப்பக்கத்தில் அக்நியை அபிவிருத்தி செய்வதுமுதல் ஆரம்பித்து, ஆஜ்யபாகம் வரையில் தந்த்ரத்தைச் செய்து, பெண்ணால் தொடப்பட்டவனாய், "ஆகங்கோஷ்டம்" முதலிய பதின்மூன்று மந்த்ரங்களால் பதின்மூன்று ஹோமம் செய்து, ஜயாதியான உத்தர தந்த்ரத்தைப் பரிஷேசநம் முடிவாகச்செய்து, "இஹகாவ: ப்ரஜாயத்வம்" என்ற மந்த்ரத்தால் தம்பதிகள் முன் போடப்பட்டுள்ள காளையின் தோலின்மீது உட்காரவேண்டும். உட்காரும் காலத்தில் வரன் வடக்குப்பக்கத்தில் உட்காரவேண்டும்.

𑌤𑌸𑍍𑌯𑌾𑌃 𑌪𑍁𑌂𑌸𑍍𑌵𑍋 𑌜𑍀𑌵𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌯𑌾𑌃 𑌪𑍁𑌤𑍍𑌰𑌮𑌙𑍍𑌕
𑌉𑌤𑍍𑌤𑌰𑌯𑍋𑌪𑌵𑍇𑌶𑍍𑌯 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌫𑌲𑌾𑌨𑍍𑌯𑍁𑌤𑍍𑌤𑌰𑍇𑌣 𑌯𑌜𑍁𑌷𑌾
𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑍋𑌤𑍍𑌤𑌰𑍇 𑌜𑌪𑌿𑌤𑍍𑌵𑌾 𑌵𑌾𑌚𑌂 𑌯𑌚𑍍𑌛𑌤 𑌆𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑍇𑌭𑍍𑌯𑌃 ॥

பிறகு பிள்ளைக் குழந்தைகளையே ப்ரஸவிப்பவளாயும், உயிரோடிருக்கும் குழந்தைகளை உடையவளாயுமுள்ள ஸ்த்ரீயின்

பிள்ளையை "ஸோமேநாதித்யா:" என்ற மந்த்ரத்தால் பெண்ணின் மடியில் உட்காரவைத்து, குழந்தையின் கையில் "ப்ரஸ்வஸ்த:" என்ற யஜுர் மந்த்ரத்தால் வாழைப்பழம் முதலிய ஏதாவது ஒரு பழத்தைக் கொடுத்து, "இஹ ப்ரியம்" முதலிய இரண்டு மந்த்ரங்களை ஜபித்துவிட்டு, நக்ஷத்ரங்கள் உதயமாகும் வரை தம்பதிகள் மௌநமாகக் காளையின் தோலின்மீதே இருக்க வேண்டும். பழத்தைக் கையில் வாங்கிக்கொண்ட பிறகு குழந்தை தன்னிஷ்டப்படி போகலாம்.

உதிதெஷு நக்ஷத்ரெஷு ப்ராசீமுதீசீம் வா திஶ
முபநிஷ்க்ரம்ய உத்தராப்யாம் யதாலிங்கம் ப்ருவமருந்ததீம்
ச தர்ஶயதி ॥ கஉ ॥

நக்ஷத்ரோதயமான பிறகு அங்கிருந்து கிழக்குப் பக்கமாகவோ, வடக்குப்பக்கமாகவோ வெளிக்கிளம்பி 'த்ருவக்ஷிதி:' என்ற மந்த்ரத்தால் த்ருவ நக்ஷத்ரத்தையும், "ஸப்தர்ஷய: ப்ரதமாம்" என்ற மந்த்ரத்தால் அருந்ததீ நக்ஷத்ரத்தையும் பெண் பார்க்கும்படி செய்யவேண்டும்.

இதி ஷஷ்ட: கண்ட: ॥

## ஆருவது கண்டம் முற்றிற்று.

---

அத ஸப்தம: கண்ட: ॥

## ஏழாவது கண்டம்.

---

அபரேணாக்நேயேந ஸ்தாலீபாகேந யாஜயதி ॥ க ॥

அதே ராத்ரியில் பிறகு "ஆக்நேயஸ்தாலீபாகம்" என்ற கர்மாவைச் செய்யவேண்டும். இந்தக் கர்மாவின் ப்ரதான ஹோமத்தைச் செய்யுங்காலத்தில் பத்நீ பர்த்தாவைத் தொட்டுக்கொண்டிருக்கவேண்டும்.

இந்தக் கர்மாவில் ஸ்தாலீயில் ஹவிஸ்ஸைப் பக்வம் பண்ணுவதால் இதற்கு ஸ்தாலீபாகம் என்று பெயர்.

ப்ரவிஶதி ॥ உ ॥

அருந்ததீ தர்சனமான உடன் க்ருஹத்திற்குள் ப்ரவேசித்து, நெல் அல்லது யவதான்யம் இவைகளை அக்நிதேவதையை

உத்தேசித்து ஸங்கல்ப்பித்து நிர்வாபம்செய்து, மந்த்ரமில்லாமல் ஜலத்தை ஸம்ஸ்காரம் செய்து, ப்ரோக்ஷணம் செய்து, பிறகு பத்நி அவைகளைக் குத்தவேண்டும். நெல்குத்தும் கார்யத்தை மட்டும் பத்நீ செய்யவேண்டும். ப்ராஹ்மண போஜநம் ஹோமம் இவைகளுக்குப் போதுமான ஹவிஸ்ஸை நிர்வாபம் செய்ய வேண்டும். பர்த்தாதான் ஹவிஸ்ஸைப் பக்வம் செய்யவேண்டும்.

𑌶𑍍𑌰𑌪𑌯𑌿𑌤𑍍𑌵𑌾𑌽𑌭𑌿𑌘𑌾𑌰𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌚𑍀𑌨𑌮𑍁𑌦𑍀𑌚𑍀𑌨𑌂 𑌵𑍋𑌦𑍍𑌵𑌾𑌸𑍍𑌯
𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌮𑌭𑌿𑌘𑌾𑌰𑍍𑌯𑌾𑌗𑍍𑌨𑍇𑌰𑍁𑌪𑌸𑌮𑌾𑌧𑌾𑌨𑌾𑌦𑍍𑌯𑌾𑌜𑍍𑌯𑌭𑌾𑌗𑌾
𑌨𑍍𑌤𑍇 𑌪𑌤𑍍𑌨𑍍𑌯𑌨𑍍𑌵𑌾𑌰𑌬𑍍𑌧𑌾𑌯𑌾𑌂 𑌸𑍍𑌥𑌾𑌲𑍀𑌪𑌾𑌕𑌾𑌜𑍍𑌜𑍁𑌹𑍋𑌤𑌿 || ௩ ||

பிறகு ஹவிஸ்ஸைப் பக்வம் செய்து, அபிகாரணம் செய்து, கிழக்குப்பக்கத்திலாவது வலது பக்கத்திலாவது உத்வாஸநம் செய்து (அக்நியிலிருந்து கீழே இறக்கி) இறக்கி வைத்ததைப் பிறகும் அபிகாரணம் செய்து, அக்நி வ்ருத்தி செய்வது, அக்நி மித்வா முதலான பூர்வாங்கங்களை ஆஜ்யபாகம்வரை செய்து, பத்நியால் தொடப்பட்டு (அந்வாரம்பணம்) ஸ்தாலீபாக ஹவிஸ்ஸிலிருந்து ஹோமம் செய்யவேண்டும்.

𑌸𑌕𑍃𑌦𑍁𑌪𑌸𑍍𑌤𑌰𑌣𑌾𑌭𑌿𑌘𑌾𑌰𑌣𑍇 𑌦𑍍𑌵𑌿𑌰𑌵𑌦𑌾𑌨𑌂 || ௪ ||

மற்றொரு தர்வியால் ப்ரதான தர்வியில் ஒரு தடவை உபஸ்தரணம்செய்து, அங்குஷ்ட பர்வமாத்ரம் ஹவிஸ்ஸை இரண்டு தடவை எடுத்துக்கொண்டு ஒரு தடவை அபிகாரணம் செய்து, ஹவிஸ்ஸை ப்ரத்யபிகாரணம் செய்யவேண்டும். (ப்ரத்யபிகாரணம் என்பது ஹவிஸ்ஸை எடுத்துக்கொண்ட பிறகு பாத்ரத்தில் உள்ள ஹவிஸ்ஸில் ஆஜ்யத்தைச் சேர்ப்பது.)

𑌅𑌗𑍍𑌨𑌿𑌰𑍍𑌦𑍇𑌵𑌤𑌾 𑌸𑍍𑌵𑌾𑌹𑌾𑌕𑌾𑌰𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑌃 || ௫ ||

இப்படி எடுக்கப்பட்ட ஹவிஸ்ஸை அக்நியை உத்தேசித்து ஸ்வாஹாகாரத்தால் ஹோமம் செய்யவேண்டும்.

𑌅𑌪𑌿 𑌵𑌾 𑌸𑌕𑍃𑌦𑍁𑌪𑌹𑌤𑍍𑌯 𑌜𑍁𑌹𑍁𑌯𑌾𑌤𑍍 || ௬ ||

அல்லது உபஸ்தரணாபிகாரணமில்லாமல், ஒரே தடவை பாத்ரத்திலிருந்து ஹவிஸ்ஸை எடுத்து ஹோமம் செய்யலாம்.

𑌅𑌗𑍍𑌨𑌿𑌃 𑌸𑍍𑌵𑌿𑌷𑍍𑌟𑌕𑍃𑌦𑍍𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌃 || ௭ ||

அக்நி ஸ்விஷ்ட க்ருத் என்ற தேவதையை உத்தேசித்து இரண்டாவது ஹோமம் செய்யப்படவேண்டும்.

ஸக்ருதுபஸ்தரணாவதாநே த்விரபிகாரணம் ॥ ௮ ॥

இங்கு ஒரு தடவை ப்ரதான தர்வியில் உபஸ்தரணம் செய்து, ஒரு தடவை ஹவிஸ்ஸைப் பாத்ரத்தின் உத்தர பாகத்திலிருந்து எடுத்து, இரண்டுதடவை அபிகாரணம் செய்துகொள்ள வேண்டும். ப்ரத்யபிகாரணம் கிடையாது.

மத்யாத்தவிஷோவதாநம் ॥ ௯ ॥

பாத்ரத்தில் உள்ள ஹவிஸ்ஸின் மத்ய பாகத்திலிருந்து அக்நி தேவதையை உத்தேசித்து ஏற்பட்டுள்ள முதல் ஹோமத்திற்கு ஹவிஸ்ஸை எடுக்கவேண்டும். உபஸ்தரணுபிகாரணமில்லாமல் ஒரே தடவை ஹவிஸ்ஸை ஹோமம் செய்யுமிடத்திலும் பாத்ரத்தின் மத்யத்திலிருந்து ஹவிஸ்ஸை எடுக்கவேண்டும்.

மத்யே ஹோம: ॥ ௧௦ ॥

இப்படி எடுக்கப்பட்ட ஹவிஸ்ஸை அக்நியின் நடுவில் ஹோமம் செய்யவேண்டும்.

உத்தரார்த்தாதுத்தரஸ்ய ॥ ௧௧ ॥

இரண்டாவதான ஸ்விஷ்டக்ருத் ஹோமத்திற்குப் பாத்ரத்திலுள்ள ஹவிஸ்ஸின் வடக்குப்பாகத்திலிருந்து ஹோமத்திற்கு ஹவிஸ்ஸை எடுக்கவேண்டும்.

உத்தரார்த்தபூர்வார்த்தே ஹோம: ॥ ௧௨ ॥

மற்ற ஹோமங்களுடன் சேராமல் இரண்டாவது ஹோமத்தை அக்நியின் வடக்குப் பாகத்தின் முன்பாகத்தில் ஹோமம் செய்ய வேண்டும்.

ஜுஹ்வோ: ப்ரஸ்தரவத் தூஷ்ணீம் பர்ஹிரக்த்வாக்நௌ ப்ரஹரதி ॥

ஹோமம் ஆனபிறகு இரண்டு தர்விகளையும் ப்ரதான தர்வியை அக்நிக்கு மேற்குப்பக்கத்தில், தெற்குப்பக்கத்திலும், வடக்குப் பக்கத்தில் ஆஜ்யஸ்தாலியையும், நடுவில் இதர தர்வியையும் வைத்து, அவைகளிலுள்ள ஹவிஸ் ஆஜ்யம் இவைகளின் துளிகளைப் பர்ஹிஸ்ஸினல் (தர்ப்பத்தினல்) தோய்த்து, அந்தக் தர்ப்பத்தை அக்நியில் சேர்த்துவிடவேண்டும். இங்குப் பர்ஹிஸ்ஸைத் தர்விகளிலும் ஆஜ்யபாத்ரத்திலும் மூன்று தடவை மந்த்ரமில்லாமல் தோய்க்கவேண்டும். ப்ரஸ்தரத்தின் ஸ்தானத்தில் பாத்ராஸர்தனம் செய்துள்ள தர்ப்பங்களை எடுத்துக்கொள்ளவேண்டும்.

ப்ரதாந தர்வியில் தர்ப்பத்தின் அக்ரபாகத்தையும், நடுவிலுள்ள மற்ற தர்வியில் தர்ப்பத்தின் மத்ய பாகத்தையும், ஆஜ்யஸ்தாலியில் தர்ப்பத்தின் மூலபாகத்தையும் துடைக்கவேண்டும். இவ்விதம் மூன்று தடவை துடைக்கவேண்டும். இவ்விதம் துடைக்கப்பட்ட தர்ப்பங்களிலிருந்து ஒரு தர்ப்பத்தைத் தனிப்படுத்தி ஞாபகமாக வைத்துக்கொண்டு மற்றத் தர்ப்பங்களின் அக்ரங்கள் அக்நியைத் தாண்டிப் போகாமல் இருக்கும்படி அக்நியில் போடவேண்டும். பிறகு ஞாபகமாகத் தனியாக வைத்துக்கொள்ளப்பட்ட தர்ப்பத்தை அக்நியில் சேர்த்துவிடவேண்டும். அக்நியில் போட்ட தர்ப்பத்தை நிர்த்தேசம் செய்யவேண்டும். அக்நியை அபிமந்த்ரணம்செய்து, பூமியையும் தொடவேண்டும்.

ஸிஜ்ஜோத்தரம் வரிஷெவநழ ‖ ௧௪ ‖

மேல் செய்யவேண்டிய உத்தர தந்த்ரத்தைச் செய்யவேண்டும். ஜயாதிஹோமம் கிடையாது. உத்தர பரிஷேசநம் முதலியவைகளைச் செய்யவேண்டும். சிலரது ரீதியில் ஸித்தமுத்தரம் என்பது தனி ஸூத்ரம். பரிஷேசநாந்தம் க்ருத்வா என்று மற்றொரு ஸூத்ரம். இதனால் ஜயாதி உத்தர தந்த்ரம் ஸித்தமென்றும் மற்ற உத்தர தந்த்ரங்களைப் பரிஷேசநம் வரை செய்துவிட்டுப் பரிஷேசநம் முடிந்தவுடன் ப்ராஹ்மண போஜனம் செய்யவேண்டுமென்று ஏற்படுகிறது.

தெந ஹவிஷ்ஷெதா ஹ்ராஹ்மணம் ஹொஜயெசு ‖ ௧௫ ‖

பாக்கியுள்ள ஹவிஸ்ஸில் நிறைய ஆஜ்யத்தைச் சேர்த்து, ப்ராஹ்மணனுக்குப் போஜநம் செய்துவைக்கவேண்டும் ஸ்தாலீபாகத்தில் தெற்குப் பக்கத்தில் உட்கார்ந்துள்ள ப்ரஹ்மாவையே போஜநம் செய்துவைக்கவேண்டும்.

யொzஸ்யாவசித்தஸ்ஸா ஜஷஹம் ஊதாதி ‖ ௧௬ ‖

யார் ஸ்தாலீபாகம் செய்கிறாரோ அவருடைய பூஜ்யருக்கு ருஷபத்தைத் தக்ஷிணையாகக் கொடுக்கவேண்டும். இங்குத் தம்பதிகளில் புருஷனே யாகம் செய்வதால் புருஷனுக்குப் பூஜ்யர்களாக உள்ள ஆசார்யன் முதலியவர்களில் யாருக்காவது தக்ஷிணை கொடுக்கவேண்டும்.

ஷவஒத ஊஸுவம் ஊக்ஷிணாவஜஒாவொஷிதாஹ்ரம்
வவஷஸ காயஃ ‖ ௧௭ ‖

இவ்விதமே இதற்குப்பிறகு தக்ஷிணையில்லாமல் உபவாஸத்தோடு பர்வகாலத்தில் ஸ்தாலீபாகத்தைத் தம்பதிகள் செய்ய வேண்டும். விவாஹமாகி 4-நாட்களுக்குள் பர்வகாலம் வந்தாலும் ஸ்தாலீபாகம் செய்யவேண்டும். முதல் ஸ்தாலீபாகத்தைப் பூர்ணிமையிலேயே ஆரம்பிக்கவேண்டும்.

வ-ூணவாத்ரஷூ உக்ஷிணெதெ்யகெ ॥ கஅ ॥

தான்யம் முதலியவைகளால் நிறைந்துள்ள பூர்ணபாத்ரம் இங்கே தக்ஷிணையாகக் கொடுக்கப்படவேண்டும் என்று சில மஹர்ஷிகள் சொல்லுகிறார்கள். இதனால் இது விகல்பமென்று ஏற்படுகிறது.

ஸாயஂவ்ராதரத ஊஷ்வஂ ஹஷெ்ஙெநெதெ கூஹாதீ

தணுூெயெயவெ்வெவ-ா ஜுஹாயாக ॥ கக ॥

ஆக்நேய ஸ்தாலீபாகத்திற்குப் பிறகு ஸாயங்கால வேளையிலும் காலை வேளையிலும் இந்த இரண்டு ஹோமங்களையும் அரிசி அல்லது யவத்தைக்கொண்டு கையினால் செய்ய வேண்டும். ஆக்நேய ஸ்தாலீ பாகம் ராத்ரி 9-நாழிகைக்குள் முடிந்துவிட்டால் அப்பொழுதே ஸாயங்கால 'ஔபாஸந'த்தை ஆரம்பிக்கலாம். ஒன்பது நாழிகைக்குமேல் ஆகிவிட்டால் மறுநாள் ஸாயங்காலத்தில்தான் ஔபாஸநாரம்பம் செய்யவேண்டும்.

ஸ்ாலீவாகவஜெ்ஷவதழ ॥ உ0 ॥

ஸ்தாலீபாகத்தில்போல் இங்கும் தேவதைகள். அதாவது இரண்டு ஹோமங்களுள் முதல் ஹோமத்திற்கு அக்நி தேவதை. இரண்டாவது ஹோமத்திற்கு அக்நிஸ்விஷ்டக்ருத் தேவதை.

ஸளரீ வ-ூவவாஹாதிஃ வ்ராதஙிதெ்யகெ ॥ உக ॥

சில மஹர்ஷிகளின் அபிப்ராயப்படி காலையில் செய்யவேண்டிய ஹோமத்தில் முதல் ஹோமத்திற்கு ஸூர்யன் தேவதை. முன் ஸூத்ரப்படி இரண்டுவேளைகளிலும் முதல் ஹோமங்களுக்கும் அக்நியே தேவதை.

உஹயதஃ வஙிஷெவநஂ யயாவஈஷூாக ॥ உஉ ॥

பூர்வ தந்த்ரங்களைச் சொல்லிய இடத்தில் நிரூபிக்கப்பட்டதுபோல் பரிஷேசநத்தை ஹோமத்திற்கு முன்னும், பின்னும் செய்யவேண்டும். பரிஷேசநம் தவிர ச்ரௌத அக்நி

ஹோத்ராதிகளில் செய்வதுபோல், "வித்யுதஸி" "வ்ருஷ்டிரஸி" என்ற இரண்டு மந்த்ரங்களாலும், ப்ரதான ஹோமத்திற்கு முன்னும் பின்னும் ஜலத்தைத் தொடும் கார்யம் கிடையாது. ச்ரௌத அக்நி ஹோத்ரத்தில் இவை இருந்தாலும் அக்நி ஹோத்ர விதிப்படி செய்யப்படும் க்ருஹ்ய கர்மாக்களில் கூட இவைகளைச் செய்யக்கூடாது. ச்ரௌத கர்மாக்களில்மட்டும் தான் இவைகளைச் செய்யவேண்டும். க்ருஹ்ய கர்மாக்களில் இவைகளைச் செய்யவேண்டாம்.

வாவ-ணெநாதொzநுாநி ஸ்ரீஹாணி வுாவுாதா
நுாவாாரஷுாநி ஹுஹுஹெ ॥ உங ॥

இங்கே சொல்லப்பட்ட பார்வண ஸ்தாலீபாகம்போலவே மற்ற ஸ்தாலீபாகம் முதலிய கர்மாக்களைச் செய்யவேண்டும். பார்வண ஸ்தாலீபாகத்தை விளக்கியதாலேயே மற்றவைகளும் விளக்கப்பட்டவைகளாக ஆகின்றன. ஆசாரமூலமாக உள்ள எல்லா க்ருஹ்ய கர்மாக்களிலும், இங்கே சொல்லப்பட்ட ஸ்தாலீ பாகத்தின் தர்மங்கள் வருவதற்காக மற்றக் கர்மாக்களைத் தனித் தனியாகப் பெயரைச்சொல்லிக் குறிப்பிடாமல், ஆசார மூலமாகச் செய்யப்படும் கர்மாக்கள், என்று ஸூத்ரகாரர் சொல்லுகிறார். ஸூத்ரத்தில் உள்ள பார்வண சப்தத்தால், விவாஹாங்கமாக இங்கே சொல்லப்பட்ட ஸ்தாலீபாகமே சொல்லப்படுகிறது. ஸூத்ரகாரர் விவாஹ ப்ரகரணத்தில், விவாஹாங்கமான ஸ்தாலீபாகத்தை எல்லாத் தர்மங்களுடனும் சொல்லிவிட்டு, இதன் தர்மங்களையே 'ஏவமதஊர்த்வம்' என்று பர்வகாலங் களில் செய்யவேண்டிய ஸ்தாலீபாகத்திலும் அதிதேசம்பண்ணு கிறார். விவாஹாங்கமான ஸ்தாலீபாகத்திலேயே பூர்ணமாக ஸ்தாலீபாகத்தின் தர்மங்கள் சொல்லப்படுகின்றன. அதனால் அதுதான் ப்ரக்ருதி என்று ஏற்படுகிறது. பர்வ காலங்களில் செய்யப்படும் ஸ்தாலீபாகத்திற்கும், தர்மங்கள் இங்கிருந்தே வருகின்றன. அங்கே தர்மங்கள் சொல்லப்படவேயில்லை. அதனால் மற்ற க்ருஹ்ய கர்மாக்களில் ஸ்தாலீபாக தர்மங்களை அதிதேசம் செய்யும்பொழுது விவாஹாங்கமான ஸ்தாலீபாகத்தை மனதில் கொண்டு, 'பார்வணேநாதோங்யாநி' என்று, அதைப் பார்வணம் என்று குறிப்பிடுகிறார். ஸ்தாலீபாக தர்மங்கள் முழுவது முள்ள விவாஹாங்க ஸ்தாலீபாகத்தை ஸ்தாலீபாகம் என்றோ,

அல்லது விவாஹத்தின் ஸ்தாலீபாகம் என்றே குறிப்பிடாமல் அதைப் பார்வணம் என்று குறிப்பிடுகிறார். இதற்குக் காரணம் என்ன? விவாஹாங்கமாகச் சொல்லப்படும் ஸ்தாலீபாகமே பர்வ காலத்தில் செய்யப்படவேண்டியதாக ஏற்படும் ஸ்தாலீ பாகத்திற்கும் மூல ப்ரக்ருதியாக இருப்பதால், இந்த ஸம்பந்தத்தை முன்னிட்டுக்கொண்டு விவாஹத்தில் ஸ்தாலீபாகத்தையே பார்வணம் என்று குறிப்பிடுகிறார். ஸூத்ரகாரரும் விவாஹத்தின் ஸ்தாலீபாகத்தையே பார்வணம் என்று (2-1-4-11) தர்ம ஸூத்ரத்தில் சொல்லுகிறார். விவாஹ ப்ரகரணத்தில் சொல்லப்படுவதால் ஏற்படும் விவாஹ ஸம்பந்தத்தை விட்டுப்பேசுவதற்குக் காரணம் இந்த ஸ்தாலீபாகம் விவாஹத்திற்கு அங்கமாக இருந்தாலும் விவாஹத்தில் சொல்லப்படும் சம்யை முதலியவை இந்த ஸ்தாலீபாகத்திற்குக் கிடையாதென்பதே. அதனால் விவாஹாங்கமாக அந்த ஸ்தாலீபாகம் இருந்தாலும் அங்குப் பரிதிஸ்தானத்தில் சம்யை கிடையாதென்று தீர்மானமாகிறது. இங்குப் பரிதியைத்தான் போடவேண்டும். இதை ப்ரக்ருதியாகக் கொண்டுள்ள மற்ற ஸ்தாலீபாகம் முதலிய எந்தக் கர்மாவிலும் சம்யை கிடையாது. பரிதியைத்தான் போடவேண்டும். பர்வாவில் செய்யப்படும் ஸ்தாலீபாகத்திற்கு விவாஹ ஸ்தாலீபாகம் ப்ரக்ருதியாக இருப்பதுபோல் மற்ற கர்மாக்களுக்கும் ப்ரக்ருதியாக இருந்தாலும் பார்வண ஸ்தாலீ பாகத்தில் த்ரவ்யம் தேவதை இவைகளுக்குக்கூட அதிதேசமுண்டு. மற்றக் கர்மாக்களில் இவைகளுக்கு அதிதேசம் கிடையாது. இதனால் விவாஹ ஸ்தாலீபாகத்தையே பார்வணமாகச் சொல்லுகிறார்.

சிலருடைய அபிப்ராயப்படி இங்குள்ள பார்வண சப்தம் விவாஹத்திற்கங்கமான ஸ்தாலீபாகத்தைக் குறிப்பிடவில்லை. ஏவமத ஊர்த்வம் என்று பர்வ காலங்களில் செய்யப்படவேண்டியதாக விதிக்கப்படும் ஸ்தாலீபாகத்தையே குறிப்பிடுகிறது. விவாஹ ஸ்தாலீபாகத்திலேயே பூர்ணமாக ஸ்தாலீபாகத்தின் அங்கங்கள் சொல்லப்பட்டிருந்தாலும், பர்வகாலத்தில் செய்ய வேண்டிய ஸ்தாலீபாகத்தில் விவாஹ ஸ்தாலீபாகத்தின் எல்லாத் தர்மங்களும் வருவதில்லை, தக்ஷிணாவர்ஜம் என்று தக்ஷிணையைத் தவிர மற்றத் தர்மங்கள் வருமென்று சொல்லுகிறார். இதனால் மற்றக் கர்மாக்களுக்கு விவாஹத்தைச் சேர்ந்த ஸ்தாலீ

பாகத்தைப் ப்ரக்ருதியாகச்சொன்னால், மற்றக் கர்மாக்களில் தக்ஷிணை உள்பட உள்ள விவாஹ ஸ்தாலீபாகத்தின் தர்மங்கள் வரும். அதைவிட்டு, அதிலிருந்து தக்ஷிணை தவிர மற்றத் தர்மங்களைப்பெற்று இருந்து வரும் பார்வண ஸ்தாலீபாகத்திலிருந்து அதிதேசத்தைச் சொன்னால் தக்ஷிணை தவிர உள்ள மற்ற தர்மங்கள் வரும். அதற்காக, பார்வண ஸ்தாலீபாகத்திலிருந்து அதிதேசம் சொல்லப்படுகிறது.

பார்வண ஸ்தாலீபாகத்தில் உபவாஸம் அங்கமாக விதிக்கப்பட்டிருந்தாலும், மற்றக் கர்மாக்களில், இந்த உபவாஸத்திற்கு அதிதேசம் கிடையாது. பர்வகாலத்தில் செய்யவேண்டிய ஸ்தாலீபாகத்தில் மட்டும் உபவாஸம் அங்கமாகும். மற்றொரு இடத்தில் பர்வகாலத்தை முன்னிட்டுக்கொண்டே, உபவாஸத்தை, ஸூத்ரகாரர் விதிப்பதால் மற்றக் காலங்களில் செய்யப்படும் மற்றக் கர்மாக்களுக்கு உபவாஸமாகிற அங்கம் கிடையாதென்று நிச்சயமாகிறது.

பார்வணம்போல் செய்யவேண்டிய ஆசார மூலமாக ஏற்பட்டுள்ள மற்றக் கர்மாக்கள் எவை? பார்வணம் சருத்ரவ்யத்தால் செய்யப்படுகிறது. இதனால் பார்வணம்போல் பக்வமான ஓஷதித்ரவ்யத்தால் ப்ரதானஹோமங்கள் செய்யப்படும் கர்மாக்களும் பார்வணம்போல் செய்யவேண்டிய கர்மாக்களாக ஆகின்றன. இதனால் பக்வமான சரு முதலியவைகளால் செய்யப்படாமல் ஆஜ்யத்தினால் ப்ரதான ஹோமம் செய்யப்படும் கர்மாக்களில் பார்வண தர்மங்கள் கிடையாது என்று நிச்சயிக்கப்படுகிறது.

சிலருடைய அபிப்ராயப்படி ஆஜ்யத்தினால் ப்ரதானஹோமம் செய்யப்படும் கர்மாக்களில்கூடப் பார்வண தர்மங்கள் உண்டு.

ஆசாரமூலமாக அனுஷ்டிக்க வேண்டியதாக ஏற்படும் மற்ற கர்மாக்களில் பார்வணத்தின் கர்மஸ்வரூபமே அதிதேசம் செய்யப்படுகிறது. மற்ற பார்வணத்தின் காலம், கர்த்தா இவைகளுக்கு அதிதேசம் கிடையாது. அதனால் அவகீர்ணிப்ராயஶ்சித்தத்தில் பர்வரூபகாலம் வேண்டியதில்லை. அவ்விதமே பத்நியும் கர்த்தாவாக இருக்கவேண்டியதில்லை. மேலும் பார்வணத்தால் மற்றக் கர்மாக்களின் ஸ்வரூபமும் வ்யாக்யானிக்கப்பட்டதாகிறதென்று சொல்லுவதால், மற்றக் கர்மாக்களுக்கும் பார்வணத்திற்கும் ப்ரக்ருதிவிக்ருதிபாவம் கிடையாதென்று சிலர்

கூறுகின்றனர். அதனுல் இந்தப்பக்ஷப்படி ப்ரக்ருதியான பார்வணத்தை ஆரம்பிக்காதவன் கூட அதைப்போல் செய்யவேண்டிய ஸர்ப்பபலி முதலிய கர்மாக்களேயும் செய்யலாம். மற்றக் கர்மாக்களேச் சொல்லும்பொழுது, ஆசாரமூலமாக அநுஷ்டிக்க வேண்டியதாக ஏற்படும் கர்மாவென்று சொல்லுவதால், நம் ஸூத்ரங்களில் சொல்லப்படாததும், வேறு ஸூத்ரங்களில் ஆசாரமூலமாக அநுஷ்டிக்கவேண்டிய கர்மாக்களாகச் சொல்லப் படும் கர்மாக்களே அநுஷ்டிப்பதாக இருந்தாலும் பார்வணம் போல்தான் அவைகளேயும் அநுஷ்டிக்கவேண்டுமென்று ஏற்படுகிறது.

சிலருடைய அபிப்ராயப்படி மேல்சொல்லப்போகும் மற்றக் கர்மாக்களிலும் எங்கே பார்வணம்போல் என்று சொல்லப்படுகிறதோ அங்கு மட்டும்தான் பார்வணதர்மங்களுக்கு அதிதேசம். மற்ற இடங்களில் ப்ரதானஹோமம் பக்வமான சரு முதலியவைகளால் செய்யப்பட்டாலும் பார்வணதர்மங்களுக்கு அதிதேசம் கிடையாது. அதனுல் இவர்கள் பக்ஷத்தில் ஆக்ரயணத்தை விதிக்கும் ஸூத்ரத்தில் 'பார்வணவத்' என்று சொல்லப்படாததால் ஆக்ரயணகர்மாவில் பார்வணதர்மங்களுக்கு அதிதேசம் கிடையாது. எவ்வளவு ஸூத்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறதோ அத்துடன் கர்மாவை முடித்துவிடவேண்டும்.

மற்றும் சிலருடைய அபிப்ராயப்படி, இங்கே சொல்லப்படும் பார்வணதர்மம் மேல் சொல்லப்படும் பார்வணம்போலுள்ள எல்லாக் கர்மாக்களுக்கும் உண்டு. மேற்படி அதிதேசம் இந்த ஸூத்ரத்தாலேயே கிடைக்கிறது. அதனுல் ஆக்ரயணத்திலும் பார்வண தர்மங்கள் எல்லாம் உண்டு.

இந்த ஸூத்ரத்தாலேயே எல்லா இடங்களிலும் அதிதேசம் ஸித்தித்தாலும், அந்தந்தக் கர்மாக்களேச் சொல்லுமிடத்திலும் சில இடங்களில் பார்வணம்போல் என்று மறுபடியும் சொல்வதற்கு ஆங்காங்கு தகுந்த ப்ரயோஜநம் இருப்பதாகத் தெரிகிறது. உதாஹரணமாக ஸர்ப்பபலியில் (ஆபஸ்-க்ரு-18-6) பார்வணம்போல் என்று மறுபடியும் காணப்படுகிறது. இப்படித் திருப்பிச்சொல்வதற்கு அங்கு அநேக த்ரவ்யங்கள் ப்ரதான ஹோமத்தில் சொல்லப்படுவதால் பார்வண தந்த்ரம் வருமோ வராதோ என்று ஸந்தேஹம் ஏற்படக் கூடும். அதை நிவ்ருத்தி

செய்வதே ப்ரயோஜனம். அதனுல் அஷ்டகா, மாஸிச்ராத்தம் முதலிய எல்லாவற்றிலும் பார்வண தந்த்ரமுண்டு.

யதோபதேஶம் தேவதா: ॥ ௨௪ ॥

அக்நிம் ஸ்விஷ்டக்ருதம் சாந்தரேண ॥ ௨௫ ॥

பார்வணம்போல் செய்யவேண்டிய கர்மாக்களின் ப்ரதான தேவதைகள் பார்வணம்போல் அந்தந்தக் கர்மாக்களைச் செய்யும் பொழுது அந்தந்தக் கர்மாக்கள் சொல்லப்படுமிடங்களிலேயே சொல்லப்படுகின்றன. அவைகளையே அந்தந்தக் கர்மாக்களின் ப்ரதான தேவதைகளாகக் கொள்ள வேண்டும்.

அந்தக் கர்மாக்களின் ப்ரதான தேவதைகளை உத்தேசித்துச் செய்யப்படவேண்டிய ஹோமங்களைப் பார்வணத்தின் ப்ரதான தேவதையாக உள்ள அக்நிக்கும் ஸ்விஷ்டக்ருத்துக்கும் நடுவில் செய்யவேண்டும். அந்தந்தக் கர்மாக்களில் ப்ரதான தேவதை சொல்லப்பட்டிருந்தாலும் அவைகளால் பார்வணத்தில் உள்ள ப்ரதான தேவதையான அக்நிக்குப் பாதம்(தடங்கல்)கிடையாது. பார்வண தேவதையான அக்நிக்கு முதலில் ஆஜ்யத்தினுல் ஹோமம் செய்தபிறகு அந்தந்தக் கர்மாக்களின் ப்ரகரணத்தில் சொல்லப்படும் த்ரவ்யத்தைக்கொண்டு, அந்தந்தக் கர்மாக்களில் சொல்லப்படும் ப்ரதானதேவதைக்கு ஹோமம் செய்யவேண்டும். பிறகு ப்ரதாந தேவதையின் த்ரவ்யத்தைக்கொண்டு ஸ்விஷ்ட க்ருத் ஹோமம் செய்யவேண்டும். சிலர்—பார்வணதேவதையான அக்நிக்குக்கூட அந்தந்தக் கர்மாக்களின் ப்ரதான தேவதைக்குச் சொல்லப்படும் த்ரவ்யத்தாலேயே ஹோமம் என்று கூறுகின்றனர்.

சிலர்— இங்குச்சொல்லப்படும், அக்நியும் ஸ்விஷ்டக்ருத்தும் பார்வண தேவதைதான் என்று கூற இடமில்லை. புதிதாகவே இந்த இரண்டு தேவதைகளும் இங்கு விதிக்கப்படுகின்றனர். அதனுல் அக்நிக்கு ஆஜ்யம் ஹவிஸ். ஸ்விஷ்டக்ருத் தேவதைக்கு அந்தக் கர்மாவின் ப்ரதான தேவதையின் ஹவிஸ்ஸின் சேஷமே ஹவிஸ். இவை பார்வண தேவதைதான் என்று ஒப்புக் கொண்டால் அந்தந்தக் கர்மாக்களின் ப்ரதான தேவதையின் ஹவிஸ் தான் அக்நிக்கும் ஹவிஸ்ஸாக வரும் என்று சொல்லுகிருர்கள்.

மற்றும் சிலர்-'அக்நிம் ஸ்விஷ்டக்ருதம்' என்றுள்ள ஸூத்ர பாகம்—'அக்நி' 'ஸ்விஷ்டக்ருத்' என்ற இரண்டு தேவதைகளைக்

குறிக்கவில்லை. இந்தப் பாகத்தால் 'அக்நி: ஸ்விஷ்டக்ருத்' என்ற ஒரே தேவதைதான் சொல்லப்படுகிறது. அதனல் பார்வணம் போல் செய்யவேண்டிய கர்மாக்களில் ஆங்காங்குச் சொல்லப் படும் தேவதைகளையும் யஜிக்கவேண்டும். 'அக்நி: ஸ்விஷ்டக்ருத்' என்ற தேவதையையும் யஜிக்கவேண்டும் என்றும் அர்த்தமா கிறது. இதனல் இங்கு 'அக்நி: ஸ்விஷ்டக்ருத்' என்ற தேவதை யின் ஸமுச்சயமே விதிக்கப் படுவதாகத் தெரிகிறது. அதிதேசம் பண்ணுமிடங்களில் பூர்வோத்தரங்களுக்கே அதிதேசம். ப்ரதான தேவதைக்கு அதிதேசம் கிடையாது. பார்வணத்தில் இரண்டா வது தேவதையாக விதிக்கப்பட்ட 'அக்நி: ஸ்விஷ்டக்ருத்' என்ற தேவதை ப்ரதான தேவதையாகப் பார்வணத்தில் சொல்லப்படு வதால் பார்வணம்போல் மற்றக் கர்மாவைச் செய்யவேண்டும் என்று சொல்லுமிடத்தில் ப்ரதான தேவதையான 'அக்நி: ஸ்விஷ்ட க்ருத்' என்ற தேவதைக்கு மற்றக் கர்மாக்களில் அதி தேசம் கிடைக்காது. மேலும் மற்றக் கர்மாக்களில் அங்கங்கு ப்ர தான தேவதைகள் சொல்லப்படுவதால் அவைகளால் பார்வணத் தின் தேவதைக்குத் தடங்கல் தான் ஏற்படும். அதனல் ஸமுச் சயத்திற்காக இங்கு விதி ஏற்பட்டது. இதன் மூலம் 'அக்நி: ஸ்விஷ்ட க்ருத்' என்ற தேவதையை ப்ரதான தேவதைகளுடைய ஹோமத்திற்கும் உபஹோமங்களுக்கும் இடையில் யஜிக்க வேண்டும் என்கிற அர்த்தம் கிடைக்கிறது என்று கூறுகின்றனர்.

வேறு சிலர்—பார்வணம்போல் செய்யவேண்டிய கர்மாக் களிலும், மற்றவைகளிலும், 'அக்நி: ஸ்விஷ்டக்ருத்' என்ற தேவதைக்கு உபஹோமங்கள் முதலியவை ஆனபிறகு கடைசி யிலேயே ஹோமம் செய்யவேண்டும். ப்ரதான ஹோமத்திற்கு முன்னல் அக்னிக்கு ஹோமம் செய்யவேண்டும். இந்த அபிப் ராயங்களையே இந்த ஸூத்ரங்கள் வெளியிடுகின்றன என்று கூறுகின்றனர்.

ஹவிஷ்க்ருதாதித்யே || உசு ||

ஆதித்யம் என்ற கர்மா அதிதிகளை உத்தேசித்து, பசு ஹவிஸ்ஸைக்கொண்டு செய்யப்படுகிறது. இந்தக் கர்மாவில் பார்வண தர்மங்களுக்கு அதிதேசம் கிடையாது. எவ்வளவு சொல்லப்பட்டிருக்கிறதோ அவ்வளவே கர்மாவைச் செய்ய வேண்டும். இங்கு உதாஹரணத்திற்காகவே 'ஆதித்யம்' என்ற

கர்மா சொல்லப்படுகிறது. அதனுல் அதைப்போல் பசுவால் செய்யப்படவேண்டிய 'ஏகாஷ்டகா' (ஆபஸ் க்ருஹ்-22-47) முதலிய கர்மாக்களிலும் பார்வண தர்மாதிதேசம் கிடையாது. அங்கங்குச் சொல்லப்பட்டுள்ள வரையில்தான் செய்யவேண்டும். 'கிம்சுகஹோமம்' (ஆபஸ்-க்ரு-18-6) 'பலிஹரணஹோமம்' (ஆபஸ்-க்ருஹ்-23-1) ஸர்ஷப ஹோமம் (ஆபஸ்-க்ருஹ்-15-6) இவைகளிலும் பார்வண தர்மங்கள் கிடையாது. இங்கெல்லாம் பரிபாஷையில் 'அக்நிமித்வா' என்ருரம்பித்துச் சொல்லப்பட்ட ஸாமான்ய தர்மங்கள்கூடக் கிடையாது. சிலர் ஆதித்யத்தில் மட்டும் பார்வண தர்மங்கள் கிடையாதென்று தனியாகச் சொல்லுவதால் பசுவை ஹவிஸ்ஸாக உடைய மற்றக் கர்மாக்களில் பார்வணதர்மாதிதேசம் உண்டென்று தெரிகிறது. இதனுல் பசுவை ஹவிஸ்ஸாக உடைய 'அஷ்டகா காம்யபசு' இவைகளில் பார்வண தர்மமுண்டு என்று கூறுகின்றனர்.

வைஶ்வதேவே விஶ்வேதேவா꞉ ॥ உஎ ॥

'வைச்வதேவம்' என்ற கர்மாவில் எல்லாத் தேவதைகளும் ப்ரதான தேவதை. வைச்வதேவத்தில் சில தேவதைகளுக்கு ஹோமமும் சில தேவதைகளுக்குப் பலிஹரணமும் சொல்லப்பட்டிருக்கிறது. ஹோமத்தில் ஸம்பந்தப்படும் தேவதைகளுக்குத்தான் 'ப்ராதாந்யம்' பலிஹரணத்தில் ஸம்பந்தப்படும் தேவதைகளுக்கும் ப்ராதாந்யம் இல்லை என்று ஸம்சயம் ஏற்பட அதை நிவர்த்திக்கவே இந்த ஸூத்ரமேற்பட்டது. இதனுல் பலிஹரணம் அக்நியில் செய்யப்படாவிட்டாலும் ஹோமம் போல் பலிஹரணமும் வைச்வ தேவத்தில் ப்ரதானம் என்று ஏற்படுகிறது. ஒரு கர்மாவில் எவை எவை ப்ரதானமாகச் சொல்லப்பட்டிருக்கின்றனவோ அவை எல்லாமே ப்ரதானம். அக்நியில் ஹோமம் செய்யப்படுவதுதான் ப்ரதானம் என்ற நியமம் கிடையாது. அதனுல் ஸர்ப்ப பலியில் ஹோமம் பலிஹரணம் இரண்டும் ப்ரதானம். ச்ராத்தத்தில் ஹோமம் ப்ராஹ்மண போஜனம் ப்ரதானம். வைச்வதேவத்தில் பார்வண தர்மாதிதேசம் கிடையாது. இதன் ப்ரயோகம் தர்ம ஸூத்ரத்தில் (2,3,16,17ல்) சொல்லப்படுகிறது. வைச்வதேவம் வேறு, பஞ்சமஹா யக்ஞம் வேறு. "அக்நயே ஸ்வாஹா, ஸோமாயஸ்வாஹா" என்ற இரண்டு மந்த்ரங்களும் வைச்வதேவ மந்த்ரங்களோடுகூட

சொல்லப்படுவதால் அக்நி, ஸோமன் இரண்டு தேவதையும் ப்ரதான தேவதைகளுடன் சேருகின்றன.

சிலர் வைச்வதேவத்தை ஸூத்ரகாரர் தர்மஸூத்ரத்தில் சொல்லியிருந்தும் ஆபஸ்தம்ப ஸூத்ரிகளுக்கு அதை விதிக்க இந்த ஸூத்ரம் இங்கு ஏற்பட்டது என்றும் க்ருஹ்யபரிபாஷை யில் சொல்லிய தர்மங்கள் கிடைப்பதற்காகவே இங்கும் சொல் லப்படுகிறதென்றும் கூறுகின்றனர். வைச்வதேவம் பஞ்சமஹா யக்ஞம் இரண்டும் ஒன்றுதான் என்பதும் அவர்களின் அபிப்ராயம்.

𑌪𑍌𑌰𑍍𑌣𑌮𑌾𑌸𑍍𑌯𑌾𑌂 𑌪𑍌𑌰𑍍𑌣𑌮𑌾𑌸𑍀 𑌯𑌸𑍍𑌯𑌾𑌂 𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 ॥ ௨௮ ॥

பௌர்ணமாஸியில் செய்யவேண்டியதாக ஸ்தாலீபாகம் விதிக்கப்பட்ட இடங்களில் எந்தப் பூர்ணிமையில் விதிக்கப்பட்டி ருக்கிறதோ அந்தப் பூர்ணிமையே தேவதை. உதாஹரணமாக 'ஸர்ப்பபலி' ச்ராவணீ பூர்ணிமையில் விதிக்கப்பட்டிருப்பதால் அங்கு ச்ராவணீ பூர்ணிமையே ப்ரதான தேவதை.

𑌇𑌤𑌿 𑌸𑌪𑍍𑌤𑌮𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

## ஏழாவது கண்டம் முற்றிற்று.

---

𑌅𑌥 𑌅𑌷𑍍𑌟𑌮𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

## எட்டாவது கண்டம்.

---

𑌉𑌪𑌾𑌕𑌰𑌣𑍇 𑌸𑌮𑌾𑌪𑌨𑍇 𑌚 𑌋𑌷𑌿𑌰𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌯𑌤𑍇 ॥ ௧ ॥

𑌸𑌦𑌸𑌸𑍍𑌪𑌤𑌿𑌰𑍍𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌃 ॥ ௨ ॥

"உபாகர்ம", "உத்ஸர்ஜநம்" என்ற இரண்டு கர்மாக்களில் அந்தந்தக்காண்டத்தின் ருஷியே தேவதை. ஸதஸஸ்பதி இரண் டாவது தேவதை.

உபாகரணம், உத்ஸர்ஜநம் இவை மூன்று வகையானவை. (1) 𑌕𑌾𑌣𑍍𑌡𑍋𑌪𑌾𑌕𑌰𑌣𑌂, 𑌕𑌾𑌣𑍍𑌡𑍋𑌤𑍍𑌸𑌰𑍍𑌜𑌨𑌂, (2) 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑍋𑌪𑌾𑌕𑌰𑌣𑌂, 𑌉𑌤𑍍𑌸𑌰𑍍𑌜𑌨𑌂, (3) 𑌵𑍍𑌰𑌤𑍋𑌪𑌾𑌕𑌰𑌣𑌂 𑌉𑌤𑍍𑌸𑌰𑍍𑌜𑌨𑌂' என்று இவைகளுக்குப் பெயர். இவைகளில் காண்டோ பாகரணத்தை அந்தந்தக் காண்டத்தை அத்யயநம் செய்ய ஆரம் பிக்கும் காலத்தில் செய்து, காண்டாத்யயநம் முடிந்த உடன் உத்

ஸர்ஜநத்தைச் செய்யவேண்டும். "அத்யாயோபாகர்ம" என்பதை ச்ராவணீ பூர்ணிமையில் செய்யவேண்டும். அத்யாயோத்ஸர்ஜநத்தைத் தைமாதப் பூர்ணிமையில் செய்யவேண்டும். வ்ரதோபாகர்ம உத்ஸர்ஜநங்களை எப்பொழுது வேண்டுமானாலும் விவாஹத்திற்கு முன்பு செய்யலாம். அந்தந்தக் காண்டங்களின் வ்ரதத்தை ஆரம்பித்து உத்ஸர்ஜனகர்மாமூலம் ஸமாபனம் செய்யவேண்டும். இந்தக் கர்மாக்களில் காண்டர்ஷியாக யார்யார் ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கின்றனரோ அவரே ப்ரதான தேவதை.

காண்டருஷி யார்? தைத்திரீய க்ருஷ்ண யஜுர்வேதத்தை நான்கு காண்டங்களாக ருஷிகள் பிரித்துள்ளார்கள். ப்ராஜாபத்யம், ஸௌம்யம், ஆக்நேயம், வைஶ்வதேவம் என்று இவைகளுக்குப் பெயர். இதனால் ப்ராஜாபதி, ஸோமன், அக்நி, விஶ்வே தேவர்கள் முதலான இவர்களே காண்டருஷிகளாக ஆகின்றனர். இதனால் இங்கே சொல்லப்படும் கர்மாக்களில் இவர்களே தேவதைகள்.

இப்பொழுது அத்யயநத்தில் உள்ள தைத்திரீய சாகை ஸாரஸ்வதபாடத்தைச் சேர்ந்தது. அதனால் காண்ட விபாகம் ஸ்பஷ்டமாக இல்லை. காண்டங்கள் ஒன்றுக்கொன்று கலந்து இருக்கின்றன. அதனால் அந்தந்தக் காண்டங்களின் ஆரம்பத்தில் செய்யவேண்டிய காண்ட உபாகரணத்தையும் முடிவில் செய்யவேண்டிய உத்ஸர்ஜநத்தையும் செய்ய இடமில்லை.

அத்யாயோபாகர்மாவிலும் உத்ஸர்ஜநத்திலும் எல்லாக் காண்ட ருஷிகளும் ப்ரதான தேவதைகள். வ்ரதோபாகரணத்திலும் உத்ஸர்ஜநத்திலும் நான்கு காண்டங்களுக்கும் நான்கு வ்ரதமும் உத்ஸர்ஜநமுமிருப்பதால் அந்தந்தக் காண்டத்தின் வ்ரத உபாகரணத்திலும், உத்ஸர்ஜநத்திலும், அந்தந்தக் காண்ட தேவதைதான் ப்ரதான தேவதை.

இங்கு ப்ரதான தேவதைக்குமட்டும் உபதேசமிருந்தாலும் பரிபாஷையின்படி "அக்நிமித்வா" என்றாரம்பிக்கும் பூர்வ தந்த்ரமும் ஜயாதியான உத்தர தந்த்ரமும் முழுவதும் உண்டு. சிலர் ஜயாதி கிடையாதென்று கூறுகின்றனர்.

காண்ட ருஷிகளுக்குமட்டும் ஹோமம் சொல்லப்பட்டிருந்தாலும் "ஸாம்ஹிதீ" "யாஜ்ஞிகீ" "வாருணீ" "ப்ரஹ்மா

ஸ்வயம்பூ" இவர்களுக்கும் காண்ட ருஷிகளோடு சேர்ந்து ஹோமமுண்டு. அதனால் அத்யாயோபாகர்மாவில் எட்டு ஹோமங்கள் ஆகின்றன. வ்ரதோபாகரணத்தில் அந்தந்தக் காண்ட ரிஷிக்குமட்டும் அங்கங்கு ஹோமம் செய்துவிட்டு மேற் கூறிய நான்கு ஹோமங்களையும் நான்கு வ்ரதங்களிலும் செய்ய வேண்டும். வ்ரதோபாகரணத்திலும் உத்ஸர்ஜனத்திலும் அந்தத் தேவதை ஸம்பந்தமுள்ள ஸூக்தங்களால் ஹோமம் செய்யப் படுகிறது. அத்யாய உபாகர்மாவிலும் உத்ஸர்ஜனத்திலும் அந் தந்தக் காண்ட ருஷிகளை உத்தேசித்து ஹோமம்மட்டும்தான் செய்யப்படுகிறது.

எல்லா இடங்களிலும் ஸதஸஸ்பதி என்ற தேவதை இரண் டாவது தேவதை.

ஸதஸஸ்பதி என்ற தேவதை அத்யாயோபாகர்மாவில் ஒன்பதாவது தேவதை. காண்ட உபாகரணத்திலும் ஸமாபநத் திலும் ஆருவது தேவதை. இவ்விதமிருந்தாலும் ஸதஸஸ்பதி இரண்டாவது தேவதை என்பதற்கு ஸ்விஷ்டக்ருத் ஸ்தானத் தில் ஸதஸஸ்பதி வருவதாகக்கொள்ளவேண்டும். பார்வண விக் ருதிகளில் சரு தந்த்ரமுள்ள இடங்களில் தான் ஸ்விஷ்ட க்ருத் தேவதைக்கு ப்ராப்தி என்று இருந்தாலும், ஆஜ்யத்தை ஹவிஸ் ஸாகக் கொண்ட உபாகரண ஸமாபநங்களிலும் ஸ்விஷ்டக்ருத் உண்டென்று இந்த ஸூத்ரத்தாலேயே தெரியவருகிறது.

𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌯𑌨𑍁𑌪𑍇𑌤𑌨 𑌕𑍍𑌷𑌾𑌰𑌲𑌵𑌣𑌾𑌵𑌰𑌾𑌨𑍍𑌨𑌸𑌂𑌸𑍃𑌷𑍍𑌟
𑌸𑍍𑌯 𑌚 𑌹𑍋𑌮𑌂 𑌪𑌰𑌿𑌚𑌕𑍍𑌷𑌤𑍇 ॥ ௯ ॥

ஸ்த்ரீ, உபநயநமாகாதவன் இவர்கள் ஒரு ஹோமத்தையும் செய்யக்கூடாது. காரம், உப்பு, உளுந்து, கடலை இவைகளுடன் கலந்துள்ள அந்நத்தையும் ஹோமம் செய்யக்கூடாதென்றும் சிஷ்டர்கள் தடுக்கிறார்கள். இங்குள்ள ஹோம சப்தம் பொதுவாக இருப்பதால் ச்ரௌதஸ்மார்த்தங்களான ஸகல ஹோமங்களையும் இது சொல்லுகிறது. இதனால் இங்கே சொல் லப்படும் நிஷேதம் எல்லா ஹோமத்திற்கும் பொதுவானது. நான்கு நாட்கள் ஹோமம் செய்யாவிட்டால் அக்நி லௌகிக மாக ஆகிவிடுமென்று வசநம் கூறுவதாலும், ஆச்வலாயநர் பாணிக்ரஹணம் முதல் க்ருஹ்யாக்நியை யஜமானன் பரிசரணம்

செய்யவேண்டும், அவனுக்கு முடியாத காலங்களில் பத்நியாவது, புத்ரனாவது, குமாரியாவது, அந்தேவாஸியாவது ஹோமம் முதலியவைகளைச் செய்யவேண்டும் என்று சொல்லுவதாலும், சில ஸந்தர்ப்பங்களில் உபநயனமாகாதவனும், ஸ்த்ரீகளும் ஹோமம் செய்யும் ப்ரஸக்தி ஏற்படுவதால் ஸூத்ரகாரர் இங்கு அதை நிஷேதிக்கிறார்.

யமெொவஷெஸஂ காஜ்யாநி ஬ஸிகஸ்ஷ ॥ ௪ ॥

முன் ஸூத்ரத்தில் சொல்லப்பட்ட நிஷேதம் காம்யகர்மாக்களிலும் பலிகர்மாவிலும் கிடையாது. அங்கெல்லாம் எந்த த்ரவ்யத்தைக்கொண்டு யார் செய்யவேண்டுமென்று விதி இருந்துவருகிறதோ அப்படியே அதைச் செய்யவேண்டும். கீழ்ச் சொல்லப்பட்ட நிஷேதம் வராது. யதஸ்ய ஜ்ரஹெ வண்யஂ ஸ்யாத் (ஆப. தர்ம. ஸூ. 2-3-5), ஸதி ஸூவஸஂஸ்ரஷெ நகாயா: (ஆப. தர்ம. ஸூ. 2-3-19) என்பதுபோன்ற இடங்களில் சொல்லப்பட்ட த்ரவ்யங்களைக்கொண்டுதான் ஹோமம் செய்யவேண்டும். கீழ் ஸூத்ரத்தில் உளுந்து முதலியவைகளை ஹோமத்தில் சேர்க்கக்கூடாதென்று தடுத்துவிட்டதால் அநுகல்பம் முதலிய எந்தக் காரணத்தைக்கொண்டும் இவை ஹோம த்ரவ்யமாகக்கூடாது. அந்த த்ரவ்யங்களே த்ரவ்யமாக விதிக்கப்பட்ட இடங்களில் இவை வசனத்தாலேயே ஹோம த்ரவ்யங்களாகின்றன.

ஸவ்ஷ்த்ர ஸ்வயஂ ப்ரஜ்வலிதெஂஞாவுத்தராஹ்யாஂ ஸமி யாவாதஷ்யாத் ॥ ௫ ॥

எல்லா இடங்களிலும் தானாக அக்நி நன்றாக ஜ்வலிக்கும்பொழுது "உத்திப்யஸ்வ" "மாநோஹிம்ஸீத்" என்று இரண்டு மந்த்ரங்களாலும் அக்நியில் ஸமித்துக்களைப் போடவேண்டும்.

ஆப஦ஂஞாஶ்ரீ: ஶ்ரீமாகாதிதி வா ॥ ௬ ॥

அல்லது "ஆபந்மாஶ்ரீ:" என்றும் "ஶ்ரீர்மாகாத்" என்றுமுள்ள யஜுர் மந்த்ரங்களால் ஸமித்துக்களை ஆதானம் செய்யவேண்டும்.

ஸ தக்ஷவிஜ்ஞாநீயாஜ்யதஹஸஞாயஞாவஹதெ ॥ ௭ ॥

எந்த நக்ஷத்ரத்தில் விவாஹம் செய்துகொள்ளுகிறானோ

அந்த நக்ஷத்ரத்தை மறக்காமல் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த நக்ஷத்ரத்தில் தம்பதிகள் ப்ரதிவர்ஷமும் செய்யவேண்டிய கார்யங்கள் தர்ம ஸூத்ரங்களில் சொல்லப் பட்டிருக்கின்றன. அன்றைய தினம் ப்ரியமான ஆஹாரத்தைச் சாப்பிடுவதும் மறுநாள் ஸ்தாலீபாகம் செய்வதும் சொல்லப்பட் டிருக்கின்றது. சிலருடைய அபிப்ராயப்படி இந்த ஸூத்ரம், விவாஹத்திற்கு அங்கமாக மேல் சொல்லப்போகும் சில தர்மங் களை என்றையதினம் ஆரம்பிக்கவேண்டும் என்று ஸம்சயம் ஏற்படுமாதலால் அதற்காக வ்ரதங்களை ஆரம்பிக்கவேண்டிய காலத்தைச் சொல்லுகிறது என்று ஏற்படுகிறது. இதனால் அடுத்த ஸூத்ரத்தில் சொல்லப்படும் வ்ரதங்களை க்ருஹப்ர வேசம் நடந்த தினத்திலிருந்து ஆரம்பிக்கவேண்டும் என்று ஏற்படுகிறது.

𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑌮𑍁𑌭𑌯𑍋𑌰𑌧𑌶𑍍𑌶𑌯𑍍𑌯𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌂 𑌕𑍍𑌷𑌾𑌰𑌲𑌵𑌣𑌵𑌰𑍍𑌜𑌨𑌂 𑌚 ॥ ௮ ॥

க்ருஹப்ரவேசம் நடந்த ராத்ரியிலிருந்து மூன்று ராத்ரி களில் தம்பதிகள் இருவரும் படுக்கையில்லாமல் தரையிலேயே படுத்துக்கொள்ளவேண்டும். ப்ரஹ்மசர்ய நியமத்தோடிருக்க வேண்டும். காரம், உப்பு இவைகளை வர்ஜிக்கவேண்டும்.

𑌤𑌯𑍋𑌶𑍍𑌶𑌯𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑍇𑌣 𑌦𑌣𑍍𑌡𑍋 𑌗𑌨𑍍𑌧𑌲𑌿𑌪𑍍𑌤𑍋 𑌵𑌾𑌸𑌸𑌾 𑌸𑍂𑌤𑍍𑌰𑍇𑌣 𑌵𑌾 𑌪𑌰𑌿𑌵𑍀𑌤𑌸𑍍𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 ॥ ௯ ॥

அந்தத் தம்பதிகள் இருவர்களுடைய படுக்கைக்கு நடுவில் சந்தனம் பூசப்பட்டு வஸ்த்ரத்தால் அல்லது நூலால் சுற்றப்பட் டுள்ள தண்டம் ஒன்றை வைக்கவேண்டும். இந்தத் தண்டம் ந்யக்ரோதம் (ஆலமரம்), ஔதும்பரம் (அத்தி), அச்வத்தம், ப்லக்ஷம் இவைகளில் உண்டானதாக இருக்கவேண்டும்.

𑌤𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍍𑌯𑌾 𑌅𑌪𑌰𑌰𑌾𑌤𑍍𑌰 𑌉𑌤𑍍𑌥𑌾𑌪𑍍𑌯 𑌽𑌪𑍍𑌸𑍁 𑌪𑍍𑌰𑌕𑍍𑌷𑌾𑌲𑍍𑌯 𑌨𑌿𑌧𑌾𑌯𑌾𑌗𑍍𑌨𑍇𑌰𑍁𑌪𑌸𑌮𑌾𑌧𑌾𑌨𑌾𑌦𑍍𑌯𑌾𑌜𑍍𑌯𑌭𑌾𑌗𑌾𑌨𑍍𑌤𑍇 𑌽𑌪𑌾𑌰𑌾𑌜𑍍𑌯𑌾𑌯𑌾 𑌉𑌤𑍍𑌤𑌰𑌾 𑌆𑌹𑍁𑌤𑍀𑌰𑍍𑌹𑍁𑌤𑍍𑌵𑌾 𑌜𑌯𑌾𑌦𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 𑌪𑌰𑌿𑌷𑍇𑌚𑌨𑌾𑌨𑍍𑌤𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌽𑌪𑌰𑍇𑌣𑌾𑌽𑌗𑍍𑌨𑌿𑌂 𑌪𑍍𑌰𑌾𑌚𑍀𑌮𑍁𑌪𑌵𑍇𑌶𑍍𑌯 𑌤𑌸𑍍𑌯𑌾𑌶𑍍𑌶𑌿𑌰𑌸𑍍𑌯𑌾𑌜𑍍𑌯𑌶𑍇𑌷𑌾𑌦𑌾𑌹𑍃𑌤𑍀 𑌹𑌿𑌰𑍋𑌕𑍍𑌷𑌣𑌵𑌚𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍍𑌯𑌾𑌹𑌿𑌰𑌾𑌨𑍀𑌯𑍋𑌤𑍍𑌤𑌰𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌯𑌥𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌂

உத்தராப்யாம் ஸமீக்ஷ்யோத்தரயாஜ்யஶேஷேண ஹ்ருதயதேஶௌ ஸம்ஸ்ருஜ்யோத்தரா ஜபித்வா ஶேஷம் ஸமாவேஶநே ஜபேத் ॥ ௧௦ ॥

நான்காவது நாளின் ராத்ரியில் மூன்றாவது யாமத்தில் மேற்கூறப்பட்ட தண்டத்தை 'உதீர்ஷ்வாதோ விஶ்வாவஸோ', 'உதீர்ஷ்வாத: பதிவதீ' என்ற இரண்டு மந்த்ரங்களால் நிறுத்தி வைத்து, ஜலத்தால் அலம்பிப் படுக்கையைவிட்டு வேறு இடத்தில் வைத்து, 'அக்நிமித்வா' என்றாரம்பிக்கும் பூர்வ தந்த்ரத்தை ஆஜ்யபாகம் வரையில் செய்துகொண்டு, பெண்ணால் தொடப்பட்டவனாய்'அக்நேப்ராயஶ்சித்தே'என்றாரம்பிக்கும் 7-ஆஹுதிகளையும் செய்து, பிறகு ஜயாதி ஹோமங்களைப் பரிஷேசநாந்தமாகச்செய்து, ப்ரணீதாமோக்ஷணம் ஆன உடன் அக்நிக்கு மேற்குப்புறத்தில் பெண்ணைக் கிழக்குமுகமாக உட்காரவைத்து, ஹோமம் செய்த ஆஜ்யத்தின் சேஷத்தை எடுத்துப் பெண்ணின் சிரஸ்ஸில் 'ஓம்'காரத்தை நான்காவதாக உடைய வ்யாஹ்ருதிகள் மூன்றுகளால் ஸ்வாஹாகாரத்தால் சேர்த்து, பிறகு 'அபஶ்யம் த்வா மநஸா சேகிதாநம்', 'அபஶ்யம் த்வா மநஸா தீத்யாநாம்' என்ற இரண்டு மந்த்ரங்களில் முதல் மந்த்ரத்தால் பெண் தன் பர்த்தாவைப் பார்த்து, இரண்டாவது மந்த்ரத்தால் பர்த்தா பார்யையைப் பார்த்து, "ஸமஞ்ஜந்து" என்ற மந்த்ரத்தால் வதூவரன் இரண்டுபேர்களுடைய ஹ்ருதய தேசங்களை அங்குஷ்டம், அநாமிகா இரண்டு விரல்களால் ஆஜ்யத்தை எடுத்து, தொட்டு நனைத்து (அஞ்ஜனம் செய்து), "ப்ரஜாபதே தந்வம் மேஜுஷஸ்வ" என்றாரம்பிக்கும் மூன்று மந்த்ரங்களை ஜபித்து, அவசிஷ்டமான அநுவாகத்தின் மந்த்ரங்களை ஸமாவேசநத்தில் ஜபிக்கவேண்டும்.

அந்யோ வாபிமந்த்ரயேத ॥ ௧௧ ॥

அல்லது ஸமாவேசந காலத்தில் ஜபிக்கவேண்டிய மந்த்ரங்களால் வேறு ஒருவன் தம்பதிகளை அபிமந்த்ரணம் செய்யலாம்.

யதா மலவத்வாஸாஸ்ஸ்யாத் உபேயேநாம் ப்ராஹ்மணவ்ருத்திஷு
யாநி கர்மாணி ஸம்ஸ்தாப்யாம் மலவத்வாஸஸமிச்சேத்தாநி ॥

விவாஹமான பெண் எப்பொழுது ருதுகாலத்தை அடைகிறாளோ அப்பொழுது ப்ராஹ்மணங்களில் ருதுகாலத்தில்

தடுக்கப்பட்டுள்ளவைகளை உபதேசம் செய்து அவளைப் பின் பற்றும்படி உத்தரவிடவேண்டும். தைத்திரீய ஸம்ஹிதை இரண்டாம் காண்டம் ஐந்தாம் ப்ரச்நத்தில் ருது காலத்தில் ஸ்த்ரீகள் இருக்கவேண்டிய ப்ரகாரம் சொல்லப்படுகிறது. ருது காலத்தில் விலக்கவேண்டிய அம்சங்களும் சொல்லப்படுகின்றன. ருது காலத்தில் புருஷன் ஸ்த்ரீயோடு சேரக்கூடாது, சேர்ந்தால் அதிலிருந்து உண்டாகும் பிள்ளை அபிசஸ்தனுவான். ருது ஸ்நாநமானபிறகும் ஸ்த்ரீயோடு அரண்யத்தில் சேரக்கூடாது. சேர்ந்தால் அவளுக்குத் திருடும் ஸ்வபாவமுள்ள பிள்ளை உண்டாகும். இஷ்டமில்லாத காலத்தில் ஸ்த்ரீயுடன் சேரக்கூடாது. சேர்ந்தால் பிறக்கும் பிள்ளை சிடுமூஞ்ஜியாக இருப்பான். மூன்று நாட்கள் முடிவதற்குள் ஸ்நானம் செய்யக்கூடாது. ஸ்நானம் செய்தால் ஜலத்தில் இறக்கும் பிள்ளை பிறக்கும். ருது காலத்தில் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்யக்கூடாது. செய்தால் கெட்டதோலுள்ள குழந்தை பிறக்கும். ருது காலத்தில் சிரஸ்ஸில் உள்ள கேசங்களை வாரிக்கொள்ளக்கூடாது. கேசங்களை வாரிப்பின்னிக்கொண்டால் வழுக்கைத்தலையுள்ள பிள்ளை பிறக்கும். ருது காலத்தில் கண்ணுக்கு மையிடக்கூடாது மையிட்டுக்கொண்டால் கண்ணில்லாத குழந்தை பிறக்கும். ருது காலத்தில் பல் துலக்கக்கூடாது. துலக்கினால் தந்த ரோகம் உள்ள குழந்தை பிறக்கும். ருது காலத்தில் நகங்களை உரிக்கக்கூடாது. உரித்தால் கெட்ட நகங்களுள்ள பிள்ளை பிறக்கும். ருது காலத்தில் நூல் நூற்கக் கூடாது. நூற்றால் நபும்ஸகனை பிள்ளை பிறக்கும். ருது காலத்தில் கயிறு திரிக்கக்கூடாது. திரித்தால் சுருக்குப்போட்டுக்கொண்டு தற்கொலை செய்துகொள்ளும் பிள்ளை பிறப்பான். இவ்விதம் பதினொன்று நிஷேதங்கள் அங்கே காணப்படுகின்றன. இவைகளை உபதேசிக்கவேண்டும். வாய் குறுகலாக உள்ள பாத்ரத்தால் ஜலபாநம் செய்யக்கூடாது. செய்தால் குள்ளனாக உள்ள பிள்ளை பிறப்பான். இவ்விதம் ருது காலம் மூன்று நாளும் வ்ரதம் இருக்கவேண்டும்.

ரஜஸஃ ஞாதிமஹாயாஸ ஸ்நாதா ஸூதகாஸநாவெஶ

உதராஹிரஹிதேவாபதெ ॥ கரு ॥

ரஜோ தர்சனமாகி ஸ்நாநம் செய்தபிறகு பார்யையோடு சேருங்காலத்தில் அடுத்துள்ள "விஷ்ணுர்யோநிம் கல்பயது" என்றாரம்பிக்கும் பதின்மூன்று மந்த்ரங்களால் பார்யையை அபி மந்த்ரணம் செய்யவேண்டும்.

ஊதி ஃஷ்டஃ வணுஃ ॥

## எட்டாவது கண்டம் முற்றிற்று.

---

ஃய நவஃ வணுஃ ॥

## ஒன்பதாம் கண்டம்.

---

வதாயீ-வூஹ்ரதூாஷோவஸீ ஃதூராஃதூராம் யா
ஹூாம் வூஜாநிஶ்ரேயஸ ஃரூதாஃஃந ஊதூாவஷிஶஷி ॥க॥

ருதுஸ்நானமானபிறகு நான்காவது நாள்முதல் பதினாறு வது நாள்வரை மேல் மேல் உள்ள இரட்டைப்படை நாட்களில் பார்யையோடு சேர்ந்தால் உண்டாகும் குழந்தைகளுக்கு ஸகல க்ஷேமங்களும் உண்டாகுமென்று மஹர்ஷிகள் கூறுகின்றனர்.

ஃய-வூாஸூ வஸிகூவெ வஸிகாஸஙெ வாவ உவ
ஹூூூாதூரெ யயூாஷிஜூம் ஜவெக ॥ உ ॥

இதுவரை விவாஹ கர்மாவைச் சொல்லிவிட்டு இனி மந்த்ர க்ரமத்தில் மேல் படிக்கப்பட்டுள்ள மந்த்ரங்களின் விநியோ கத்தை ஸூத்ரகாரர் இங்கே சொல்லுகிறார்.

ஒரு ப்ரயோஜனத்தை உத்தேசித்து மார்க்கத்தில் செல் லும்போது தும்மினாலும், இருமல் ஏற்பட்டாலும் ஜலத்தை ஆசமநம் செய்து, அடுத்துள்ள "அநுஹவம்", "அநுஹூதம்" என்ற இரண்டு மந்த்ரங்களையும் அந்தந்த இடத்திற்கனுகுண மாக ஜபிக்கவேண்டும்.

வஃவஃதரெயயாஷிஜூம் விதூாயம் வநவுதிம் ஶகூ
ரீூதிம் ஷிஹூாதம் ஶகூாநிஶிதி ॥ ங ॥

ஒரு ப்ரயோஜநத்தை உத்தேசித்துப் போகும்பொழுது, சித்ரியவ்ருக்ஷம், புஷ்பமில்லாமல் பழமுள்ள வ்ருக்ஷம், சாணியின் கோடு இடம், வஸ்த்ரத்தின் காற்று, பக்ஷி இவைகளை ஸ்பர்

சித்தால் ஆசமநம் செய்துவிட்டு, அந்தந்த இடங்களுக்குத் தகுந்தவிதம் மந்த்ரங்களைச் சொல்லவேண்டும். சித்ரிய வ்ருக்ஷத்தை அடைந்தால், “ஆராத்தே அக்நிரஸ்து” என்ற மந்த்ரத்தை ஜபிக்கவேண்டும். சாணிக்கோட்டை அடைந்தால் “நமஸ்ஸக்ருத்ஸதேருத்ராய” என்ற மந்த்ரத்தை ஜபிக்கவேண்டும். வஸ்த்ரவாத ஸம்பந்தம் ஏற்பட்டால் “ஸிகஸிநஸி” என்ற மந்த்ரத்தை ஜபிக்கவேண்டும். அசுபமான வார்த்தையைப் பக்ஷி சொல்லும்பொழுது “உத்காதேவசகுநே” என்ற மந்த்ரத்தை ஜபிக்கவேண்டும்.

𑌉𑌭𑌯𑍋𑌰𑍍𑌹𑍃𑌦𑌯𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑍇𑌪𑍍𑌸𑍁𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑌾𑌵𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌂 𑌚𑌰𑌿𑌤𑍍𑌵𑌾 𑌸𑍍𑌥𑌾𑌲𑍀𑌪𑌾𑌕𑌂 𑌶𑍍𑌰𑌪𑌯𑌿𑌤𑍍𑌵𑍋𑌪𑌵𑌸𑌮𑌾𑌯𑌾𑌨𑌾𑌜𑍍𑌯𑌾𑌜𑍍𑌯𑌭𑌾𑌗𑌾𑌨𑍍𑌤𑍇 𑌪𑍍𑌰𑌾𑌤𑌰𑌗𑍍𑌨𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌸𑍍𑌥𑌾𑌲𑍀𑌪𑌾𑌕𑌾𑌦𑍁𑌤𑍍𑌤𑌰𑌾 𑌜𑍁𑌹𑍋𑌤𑌿 𑌹𑍁𑌤𑍍𑌵𑌾 𑌜𑌯𑌾𑌦𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 𑌪𑌰𑌿𑌷𑍇𑌚𑌨𑌾𑌨𑍍𑌤𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌤𑍇𑌨 𑌸𑌰𑍍𑌪𑌿𑌷𑍍𑌮𑌤𑌾 𑌯𑍁𑌗𑍍𑌮𑌾𑌨𑍍 𑌦𑍍𑌵𑍍𑌯𑌵𑌰𑌾𑌨𑍍 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌨𑍍 𑌭𑍋𑌜𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌵𑌾𑌚𑌯𑍀𑌤 ॥

வதூவரர்கள் இருவர்களுடைய ஹ்ருதயங்கள் ஒற்றுமையுடன் இல்லாமல் இருந்தால், வதூவின் பிதா அவர்களுடைய ஹ்ருதயங்களின் ஒற்றுமையை அபேக்ஷித்தால், கீழ்க்கண்ட கர்மாவைச் செய்யவேண்டும். மூன்று நாளுக்குக் குறையாமல் ப்ரஹ்மசர்ய வ்ரதத்தை அநுஷ்டித்து, ஸ்தாலீபாகத்தைச் செய்து, ‘அக்நிமித்வா’ என்றாரம்பிக்கும் பூர்வ தந்த்ரத்தை ஆஜ்யபாகம் முடியச்செய்து, பத்நீயினல் தொடப்பட்டவனுக ஸ்தாலீபாகத்திலிருந்து “ப்ராதரக்நிம்” என்றாரம்பிக்கும் ஏழு மந்த்ரங்களைக்கொண்டு ஹோமம் செய்து, ஜயாதியான உத்தர தந்த்ரத்தைப் பரிஷேசநம் முடியச் செய்யவேண்டும். பிறகு ஸ்தாலீபாகத்ரவ்யத்தில் பூர்ணமாக ஆஜ்யத்தைச்சேர்த்து, இரண்டுக்குக் குறையாமல் இரட்டைப்படையாக உள்ள ப்ராம்ஹணர்களுக்குப் போஜநம் செய்துவைத்து, ஸித்தியைச் சொல்லும்படி செய்யவேண்டும்.

𑌶𑍍𑌵𑌿𑌷𑍍𑌯𑍇𑌣𑍇𑌤𑌿 𑌤𑍍𑌰𑌿𑌸𑍍𑌸𑌪𑍍𑌤𑍈𑌰𑍍𑌯𑌵𑍈𑌃 𑌪𑌾𑌟𑌾𑌂 𑌪𑌰𑌿𑌕𑌿𑌰𑌤𑌿 𑌯𑌦𑌿 𑌵𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌸𑌿 𑌵𑌰𑍁𑌣𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌾 𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑍀𑌣𑌾𑌮𑌿 𑌯𑌦𑌿 𑌸𑍌𑌮𑍍𑌯𑌸𑌿 𑌸𑍋𑌮𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌾 𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑍀𑌣𑌾𑌮𑍀𑌤𑌿 ॥ ௫ ॥

மறுநாள் புஷ்ய நக்ஷத்ரமுள்ள தினத்தில் ஸித்திவாசநம் வரை முடிந்தபிறகு, பாடா என்ற ஓஷதி உள்ள இடம் சென்று, இருபத்தொரு யவதான்யங்களால் ஸூத்ரத்தில் இங்கே சொல்லப்படும் இரண்டு மந்த்ரங்களால் மேற்குறிப்பிடப்பட்ட ஓஷதியின் நாலுபக்கத்திலும் இறைக்கவேண்டும்.

𑌶𑍍𑌵𑍋𑌭𑍂𑌤 𑌉𑌤𑍍𑌤𑌰𑌯𑍋𑌤𑍍𑌥𑌾𑌪𑍍𑌯𑍋𑌤𑍍𑌤𑌰𑌾𑌭𑌿𑌸𑍍𑌤𑌿𑌸𑍃𑌭𑌿𑌰
𑌭𑌿𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑍋𑌤𑍍𑌤𑌰𑌯𑌾 𑌪𑌾𑌣𑍌 𑌬𑌦𑍍𑌧𑍍𑌵𑍋𑌤𑍍𑌤𑌰𑌯𑌾 𑌶𑌯𑍍𑌯𑌾
𑌕𑌾𑌲𑍇 𑌬𑌾𑌹𑍁𑌭𑍍𑌯𑌾𑌂 𑌭𑌰𑍍𑌤𑌾𑌰𑌂 𑌪𑌰𑌿𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌯𑌾𑌦𑍍𑌵𑌯𑌾𑌨
𑌵𑌿𑌜𑍍𑌞𑌯𑌾 ॥ ௬ ॥

யவத்தை இறைப்பது வரை முதல் நாள் செய்துவிட்டு, உபவாஸமிருந்து, மறுநாள் அந்த, பாடா என்ற ஓஷதியை 'இமாம் கநாம்யோஷதீம்' என்ற மந்த்ரத்தால் நிறுத்திவைத்து, அடுத்தாற் போலுள்ள 'உத்தாநபர்ணே' என்றாரம்பிக்கும் மூன்று மந்த்ரங்களால் அந்த ஓஷதியை அபிமந்த்ரணம் பண்ணி, 'அஹமஸ்மி' என்ற மந்த்ரத்தால் பெண்ணைப் பர்த்தாவுக்குத் தெரியாமல் மறைத்து, ஓஷதியைப் பெண்ணின் கைகளில் கட்டி, ராத்ரியில் பர்த்தாவுடன் படுக்கும் காலத்தில் 'உபதேதாம்' என்ற மந்த்ரத்தால் இரண்டு கைகளாலும் பர்த்தாவைப் பரிக்ரஹிக்கும்படி செய்யவேண்டும்.

𑌵𑌶𑍍𑌯𑍋 𑌭𑌵𑌤𑌿 ॥ ௭ ॥

இப்படி இந்தக் கர்மாவைச் செய்தால் இதைச் செய்யும் ஸ்த்ரீக்குப் பர்த்தா வசனாக ஆவான்.

𑌸𑌪𑌤𑍍𑌨𑍀𑌬𑌾𑌧𑌨𑌂 𑌚 ॥ ௮ ॥

பர்த்தா பார்யை இவர்களுடைய பரஸ்பராநுராகத்திற்கு இந்தக் கர்மாவை பயன்படுத்துவதுபோல் விரோத மனோபாவமுள்ள ஸபத்நீயைப் பாதிக்கவும் இந்தக் கர்மாவைச் செய்யலாம்.

𑌅𑌤 𑌏𑌵 𑌕𑌾𑌲𑍇𑌨𑍋𑌤𑍍𑌤𑌰𑍇𑌣𑌾𑌨𑍁𑌵𑌾𑌕𑍇𑌨 𑌸𑌦𑌾
𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌮𑍁𑌪𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍇 ॥ ௯ ॥

ஸபத்நீயைப் பாதிக்க வேண்டுமென்று ஆசையுள்ள ஸ்த்ரீ அடுத்துள்ள 'உதஸௌ ஸூர்யோ அகாத்' என்ற அநுவாகத்தால் ப்ரதிதினமும் ஸூர்யனை உபஸ்தானம் செய்யவேண்டும். ஸபத்நீயின் தடங்கல் ஏற்பட்ட பிறகுகூடப் பர்த்தாவோடு வாழும்வரை உபஸ்தானம் செய்யவேண்டும்.

யக்ஷ்மக்ருஹீதாமந்யாம் வா ப்ரஹ்மசர்யயுக்த: புஷ்கர
ஸம்வர்தமூலைருத்பூயாக்ஷீப்யாம் த இதி யதாலிங்கமங்காநி ஸம்ஸ்ப்ரு
ஶ்ய ப்ரதீசீநம் நிரஸ்யேத் ॥ ௧௦ ॥

பார்யையோ அல்லது வேறு ஸ்த்ரீயோ க்ஷயரோகத்தாலோ குஷ்டரோகத்தாலோ பீடிக்கப்பட்டிருந்தால், அந்த ரோகத்தை நிவர்த்திக்க, கீழ்க்கண்ட கர்மாவைச் செய்ய வேண்டும். ப்ரஹ்மசர்யத்துடன் கூடியவனாக இருந்து, தாமரைப் பூவின் இதழ்களாலும், கிழங்குகளாலும் "அக்ஷீப்யாம்" என்றாரம்பிக்கும் ஆறு மந்த்ரங்களால் அந்தந்த மந்த்ரங்களில் சொல்லப்பட்டுள்ள அங்கங்களை அந்தந்த மந்த்ரங்களால் தொட்டுவிட்டு மேற்குப்பக்கமாக எறிந்துவிடவேண்டும்.

வத்வா வாஸ உத்தராபிரேதத்விதே தத்யாத் ॥ ௧௧ ॥

இந்தக் கர்மாவை அறிந்தவனுக்குப் பெண்ணின் வஸ்த்ரத்தை மேலுள்ள "பராதேஹி ஶாமுல்யம்" என்றாரம்பிக்கும் நான்கு மந்த்ரங்களால் கொடுக்கவேண்டும். சிலருடைய அபிப்ராயப்படி இந்த ஸூத்ரத்திற்கு அர்த்தம் பின்வருமாறு.

விவாஹ காலத்தில் பெண் தரித்துக்கொண்டிருந்த வஸ்த்ரத்தை விவாஹ மந்த்ரங்களை நன்கு அறிந்துள்ள ப்ராம்ஹணனுக்கு, "பராதேஹி" என்றாரம்பிக்கும் நான்கு மந்த்ரங்களால் கொடுத்துவிடவேண்டும் என்று.

இந்த அர்த்தம் 'சரிதவ்ரத: ஸூர்யாவிதே வதூவஸ்த்ரம் தத்யாத், (ஆச்வ. க்ருஹ். ஸூ. 1-8-13) என்று விவாஹமான உடன் விவாஹ மந்த்ரத்தை அறிந்தவனுக்கு வதுவின் வஸ்த்ரத்தைக் கொடுக்கவேண்டுமென்ற ஆச்வலாயந ஸூத்ரத்துடன் பொருந்துகிறது.

இதி நவம: கண்ட: ॥

ஒன்பதாவது கண்டம் முற்றிற்று.

---

அத தஶம: கண்ட: ॥

## பத்தாவது கண்டம்.

---

உபநயநம் வ்யாக்யாஸ்யாம: ॥ ௧ ॥

உபநயநம் என்ற கர்மாவை ஸூத்ரகாரர் இங்கு விஸ்தாரமாகச் சொல்லுகிறார். உபநயநம் என்ற பதத்திற்கு "மாணவன்

ஆசார்ய குலத்தை அடைவதற்காக ஏற்பட்ட கர்மா" என்றர்த்தம். இது ச்ரௌதமான கர்மா. உபநயநமாகாதவனுக்கு மற்றக் கர்மாக்களில் அதிகாரம் கிடையாது. மேலும் க்ருஹ்ய ஸூத்ரத்தில் சொல்லப்பட்ட கர்மாக்களில் க்ருஹஸ்தனுக்குத்தான் அதிகாரம் என்று தெரிவிப்பதற்காக விவாஹத்தைச் சொல்லப்போகிறேன் என்ற ப்ரதிஜ்ஞை இல்லாமல் விவாஹத்தை நிரூபணம் பண்ணினர். உபநயநமோ எல்லா ஸம்ஸ்காரங்களையும்விட உயர்ந்தது என்று இதன் ப்ராதாந்யத்தைக் காண்பிக்க இங்கு உபநயநத்தைச் சொல்லப்போகிறோம் என்று தனியாக ஸூத்ரகாரர் ப்ரதிக்ஞை பண்ணுகிறார். உபநயநமானவன் அநுஷ்டிக்கவேண்டிய சில தர்மங்கள் தர்மஸூத்ரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. அங்கேயே இந்த உபநயநத்தின் மற்ற விதிகளையும் சொல்லிவிடலாம். ஆனால் தர்மஸூத்ரம் சாகைகளுக்கெல்லாம் பொதுவானதால், அங்குச் சொன்னால் நம் உபநயநத்தில் உள்ள அநேக அஸாதாரண தர்மங்களைச் சொல்லமுடியாது. அதற்காக நம் சாகைக்கு அஸாதாரணமாக உள்ள தர்மங்களைச் சொல்ல க்ருஹ்ய ஸூத்ரத்தில் உபநயநம் நிரூபிக்கப்படுகிறது.

𑌗𑌰𑍍𑌭𑌾𑌷𑍍𑌟𑌮𑍇𑌷𑍁 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌮𑍁𑌪𑌨𑌯𑍀𑌤 ௨॥

கர்ப்பமாக இருந்த காலத்திலிருந்து எட்டாவது வர்ஷத்தில் ப்ராம்ஹணனுக்கு உபநயநம் செய்யவேண்டும். அதாவது பிறந்ததுமுதல் ஏழாவது வர்ஷத்தில் உபநயநம். 'கர்ப்பாஷ்டமம்' என்று சொல்வதால் கர்ப்ப வர்ஷத்தை எட்டாவது வர்ஷமாகக்கொண்ட வர்ஷங்களில் என்று அர்த்தமாகிறது. இதனால் கர்ப்ப வர்ஷம் தவிர, பிறந்தது முதல் உள்ள ஏழு வர்ஷங்களும் கர்ப்பாஷ்டமங்களாக ஆகின்றன. ஆனால் இந்த ஏழு வர்ஷங்களில் பிறந்தது முதல் மூன்று வர்ஷங்களில் ஜாதகர்மா முதல் சௌளம் வரையில் உள்ள ஸம்ஸ்காரங்களிருப்பதால் அங்கு உபநயநம் செய்யமுடியாது. நான்காவது வர்ஷத்திலோ வ்ரதங்களை அனுஷ்டிக்கக்கூடிய சக்தி கிடையாது. அதனால் இங்குள்ள கர்ப்பாஷ்டம சப்தத்தால் பிறந்தது முதல் உள்ள ஐந்து, ஆறு, ஏழு இந்த வர்ஷங்களைத்தான் வாங்கிக்கொள்ளவேண்டும். வேறு சிலருடைய அபிப்ராயப்படி நித்யமான உபநயநத்தின் காலம் பிறந்ததுமுதல் 7ஆவது வயதுதான். அதற்குமுன் உள்ள ஐந்தாவது, ஆறுவது வர்ஷங்கள் காம்ய உபநயநத்தின் காலம்

ஆகிறது. கர்ப்பாஷ்டம வர்ஷங்கள் என்ற பஹுவசநம் ஸௌரசாந்த்ர ரீதியில் உள்ள வர்ஷபேதத்தைப் பின்பற்றி ஏற்பட்டதென்று அவர்கள் கூறுகிறார்கள்.

𑌗𑌰𑍍𑌭𑍈𑌕𑌾𑌦𑌶𑍇𑌷𑍁 𑌰𑌾𑌜𑌨𑍍𑌯𑌮𑍍 ॥ ௩ ॥

𑌗𑌰𑍍𑌭𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑍇𑌷𑍁 𑌵𑍈𑌶𑍍𑌯𑌮𑍍 ॥ ௪ ॥

க்ஷத்ரியனுக்கு கர்ப்பத்திலிருந்து பதினொன்றாவது வர்ஷத்தில் உபநயநம். வைச்யனுக்குக் கர்ப்பத்திலிருந்து பன்னிரண்டாவது வர்ஷத்தில் உபநயநம்.

𑌵𑌸𑌨𑍍𑌤𑍋 𑌗𑍍𑌰𑍀𑌷𑍍𑌮𑌶𑍍𑌶𑌰𑌦𑌿𑌤𑍍𑌯𑍃𑌤𑌵𑍋 𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑍁𑌪𑍂𑌰𑍍𑌵𑍍𑌯𑍇𑌣 ॥

ப்ராம்ஹணனுக்கு வஸந்தருது உபநயந காலம். க்ஷத்ரியனுக்கு க்ரீஷ்மருது காலம். வைச்யனுக்குச் சரத்ருது காலம். உத்தராயணம் என்று கர்மாக்களின் காலம் முன் பொதுவாகச் சொல்லப்பட்டிருந்தாலும் உபநயநத்தில் அந்தந்த வர்ணத்தைச் சேர்ந்தவனுக்கு அந்தந்த ருதுக்கள் உபநயன காலமாகின்றன. இதனால் பூர்வபக்ஷம் முதலிய மற்றப் பொது விதிக்கு அபவாதம் கிடையாது. தர்மஸூத்ரத்தில் மறுபடியும் உபநயன காலம் விதிக்கப்படுவதற்கு ப்ரயோஜநம் வேறு. பாரத்வாஜர் சிசிர ருதுவை எல்லா வர்ணத்தாரின் உபநயநத்திற்கும் காலமாகச் சொல்லுவதால் அதை நிஷேதம் பண்ணும் நோக்கத்தோடு அங்கு மறுபடியும் காலம் சொல்லப்படுகிறது. மேலும் அங்கு காம்யகாலங்களை விதிப்பதற்காக நித்யகால விதியை அனுவாதம் செய்கிறார் என்றும் கொள்ளலாம்.

𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌨𑍍𑌭𑍋𑌜𑌯𑌿𑌤𑍍𑌵𑌾𑌽𑌽𑌶𑌿𑌷𑍋 𑌵𑌾𑌚𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌕𑍁-
𑌮𑌾𑌰𑌂 𑌭𑍋𑌜𑌯𑌿𑌤𑍍𑌵𑌾𑌽𑌨𑍁𑌵𑌾𑌕𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌥𑌮𑍇𑌨 𑌯𑌜𑍁𑌷𑌾𑌽𑌪-
𑌸𑍍𑌸𑌂𑌸𑍃𑌜𑍍𑌯𑍋𑌷𑍍𑌣𑌾𑌶𑍍𑌶𑍀𑌤𑌾𑌸𑍍𑌵𑌾𑌨𑍀𑌯𑍋𑌤𑍍𑌤𑌰𑌯𑌾 𑌶𑌿𑌰 𑌉𑌨𑌤𑍍𑌤𑌿 ॥

உபநயநத்திற்கு முதல்நாளில் நாந்தீ ச்ராத்தத்தைச் செய்துவிட்டு, மறுநாள்காலையில் ப்ராம்ஹண போஜநம் செய்து வைத்து ப்ராம்ஹணர்கள் ஆசீர்வாதம்செய்யும்படி செய்து, குமாரனுக்குப் போஜநம் செய்து வைக்க வேண்டும். குமாரன் போஜநம் செய்வதற்கு முன்பே யஜ்ஞோபவீதத்தைத் தரித்துக் கொள்ள வேண்டும் என்று சிலர் சொல்லுகின்றனர். உப்பு, காரம் இவை இல்லாத ஆஹாரத்தைப் போஜனம் செய்யவேண்டும். போஜனத்திற்கு முன்னும் பின்னும் இரண்டு தடவை ஆசமநம் செய்ய வேண்டும்.

பிறகு 'உஷ்ணேந வாயோ' என்ற அநுவாகத்தின் முதல் யஜுஸ்ஸினுல் உஷ்ணஜலத்தை சீதஜலத்தில் சேர்த்துக் கலக்க வேண்டும். அந்தக் கலந்த ஜலத்தைக் கொண்டு அடுத்துள்ள 'ஆப உந்தந்து ஜீவஸே' என்ற மந்த்ரத்தால் குமாரனின் சிரஸ்ஸை நனையும்படி செய்யவேண்டும்.

தீ்ஂஹீூ்நு ஊஹ—ா நஜுஸ—ாயொ தூரா ஸி ஶூதஸ்ு ஸிஃ
ஶூ திஉஜுஂ ஶூ திஉிஶஂ ஶூவவ தி ॥ எ ॥

பிறகு குமாரனின் சிரஸ்ஸில் கிழக்குப் பக்கத்தில் மூன்று தர்ப்பங்களை வைத்து மறைத்து, 'யேநாவபத்' என்ற மந்த்ரத்தால் வபநம் செய்யவேண்டும். இவ்விதமே தெற்குப் பக்கத்தில் 'யேந பூஷா ப்ருஹஸ்பதே:' என்ற மந்த்ரத்தாலும், மேற்குப் பக்கத்தில் 'யேந பூய:' என்ற மந்த்ரத்தாலும், வடக்குப் பக்கத்தில் 'யேந பூஷா' என்ற மந்த்ரத்தாலும் வபநம் செய்யவேண்டும். மந்த்ரங்களில் உள்ள அஸௌ என்ற சப்தஸ்தானத்தில் மாணவகனின் பெயரைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அந்தந்த இடத்திற்குத் தகுந்தபடி விபக்தியை மாற்றிச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

வவஜுஉூதூயாzநூஉஜுயதெ ஊக்ஷிணதொ உாதா
ஐ ஹூவாஶீ வா ॥ அ ॥

வபநகாலத்தில், குமாரனின் மாதா, அல்லது வேறு ப்ரம்ஹசாரியாவது குமாரனுக்கு வலது பக்கத்தில் உட்கார்ந்து வபநத்தைச் செய்யும் ஆசார்யனை 'யத்க்ஷுரேண' என்ற மந்த்ரத்தால் அநுமந்த்ரணம் செய்யவேண்டும்.

கூநஉூஹெ ஶக்ூதிஹ்ணெ யவாஙியாய தவூிநு கெ
ஶாநூவயஒ்ோதூயொஊூஂவாஉஙெ ஊஹ—ஷூஂவெ
வா நிஊயாதி ॥ கூ ॥

காளைமாட்டின் சாணத்தில் யவங்களைப்போட்டு, அதில் வபநம் செய்யப்பட்ட கேசங்களைச் சிறிது கூட விடாமல் சேர்த்து, 'உப்த்வாய கேசாந்' என்ற மந்த்ரத்தால் கேசங்களை அத்திமரத்தின் அடியிலாவது தர்ப்ப ஸ்தம்பத்திலாவது வைக்க வேண்டும்.

சிலர் மந்த்ரத்தால் செய்யவேண்டிய வபநத்தை ஆசார்யன் செய்ய வேண்டுமென்றும், பிறகு நாபிதன் செய்யவேண்டுமென்றும் கூறுகிறார்கள்.

ஸ்நாதகேப்⁴ய: ஸமாவர்த்தனாத்ப்ராஜ்ஞ்யஹாமாஞே வாஸா
ஸீம் ஸஜியஶ்ரூத்ரயா ஃஃயாவெத்⁴யாத்ரேணாஹ்ரிம் உக்ஷி
ணேந ஸமாஃஸ்பூநாங்கா ஸ்யுவயத்³யாதிஷ்டதி ॥ ௧௦ ॥

வபநம் ஆனவுடன் குமாரன் ஸ்நானம் செய்துவிட்டு, சுத்த வஸ்த்ரத்தைத் தரித்துக்கொண்டு, யக்ஞோபவீத தாரணத்தைச் செய்து கொள்ளவேண்டும். 'அக்நிமித்வா' என்றாரம்பிக்கும் பூர்வாங்கத்தை ஆஜ்யபாகம் முடிய ஆசார்யன் செய்து கொண்டு, பலாச ஸமித்தை மாணவன் அக்நியில் சேர்க்கும்படி செய்ய வேண்டும். 'ஆயுர்தாதேவ' என்ற ருக் இங்கு மந்த்ரம். இந்த மந்த்ரத்தை ஆசார்யன் சொல்லி முடிவில் 'ஆதேஹி' என்று சொல்ல வேண்டும். இந்த மந்த்ரம் மாணவகன் ஸமித்தை அக்னியில் சேர்க்கும்படி செய்வதற்காக ஏற்பட்ட மந்த்ரம்.

வாஸஸ்ஸம்ஸ்க்ருதோத ஶ்ருத்ரயாஃஹிஶ்ஞேத்யாத்ராஹி
ஸ்த்ரிஸ்யாஹி: ஸமியாவ்ய ஸமிஹிதஶ்ருத்ரயாஃநஶ்ஞு
யதே ॥ ௧௧ ॥

அன்றையதினமே நெய்யப்பட்டதும், தறியிலிருந்து எடுக்கப்பட்டதுமான வஸ்த்ரத்தை 'ரேவதீஸ்த்வா' என்றாரம்பிக்கும் இரண்டு மந்த்ரங்களால் அபிமந்த்ரணம் செய்து, அடுத்துள்ள 'யா அக்ருந்தந்' என்றாரம்பிக்கும் மூன்று மந்த்ரங்களால் வஸ்த்ரத்தைக் குமாரன் தரித்துக்கொள்ளும்படி செய்யவேண்டும். 'பரீதம்வாஸ:' என்ற அடுத்த மந்த்ரத்தால் வஸ்த்ரத்தை உடுத்திக்கொண்ட குமாரனை அநுமந்த்ரணம் செய்யவேண்டும்.

ஶௌஞ்ஜீம் ஜேவஞாம் த்ரிவ்ருதாம் த்ரி: ப்ரதக்ஷிணஶ்ருத்
ராஹ்யாம் ஸமிவீயாஜிநஶ்ருத்ரஶ்ருத்ரயா ॥ ௧௨ ॥

முஞ்ஜ தர்ப்பங்களால் ஆனதும் முப்புரியாகத் திரிக்கப்பட்டதுமான மேகலையை 'இயம் துருக்தாத்' என்றாரம்பிக்கும் இரண்டு மந்த்ரங்களால் மூன்று தடவை ப்ரதக்ஷிணமாக, குமாரனின் இடுப்பில் சுற்றிக் கட்டவேண்டும். 'மித்ரஸ்ய சக்ஷு:' என்ற அடுத்த மந்த்ரத்தால் க்ருஷ்ணாஜிநத்தை மேலுத்தரீயமாகத் தரிக்கும்படி செய்யவேண்டும்.

உத்தரேணாஹ்ரிம் உஹ்யாது ஸம்ஸ்தீய தெவெநஶ்ருத்ர
யாஃவஸ்யாவெத்⁴யாஉகாஜூரிஶ்ரா ஸுஞூ வா நீபொத்ரடா

𑌤𑍍𑌰𑌿𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑍋𑌤𑍍𑌤𑌰𑍈𑌰𑍍𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌹𑌸𑍍𑌤𑍇 𑌗𑍃𑌹𑍀𑌤𑍍𑌵𑍋
𑌤𑍍𑌤𑌰𑍈𑌰𑍍𑌦𑍇𑌵𑌤𑌾𑌭𑍍𑌯𑌃 𑌪𑌰𑌿𑌦𑌾𑌯𑍋𑌤𑍍𑌤𑌰𑍇𑌣 𑌯𑌜𑍁𑌷𑌾𑌵
𑌨𑍀𑌯 𑌸𑍁𑌪𑍍𑌰𑌜𑌾 𑌇𑌤𑌿 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌕𑌰𑍍𑌣𑍇 𑌜𑌪𑌤𑌿 ॥ ௧௩ ॥

பிறகு அக்னிக்கு வடக்குப்பக்கத்தில் தர்ப்பங்களைப்பரப்பி, அவைகளின்மீது "ஆகந்த்ராஸமகந்மஹி" என்ற மந்த்ரத்தால் குமாரனை நிறுத்திவைக்கவேண்டும். ஆசார்யன் தனது அஞ்ஜலியில் ஜலத்தை நிரப்பி, அதைக் குமாரனின் அஞ்ஜலியில் சேர்த்து, அதைக்கொண்டு அடுத்துள்ள "ஸமுத்ராதூர்மி:" என்ற மந்த்ரத்தால் மூன்று தடவை குமாரனை ப்ரோக்ஷணம் செய்து, அடுத்துள்ள "அக்னிஷ்டே ஹஸ்தமக்ரபீத்" என்றாரம்பிக்கும் பத்து மந்த்ரங்களால் குமாரனின் ஹஸ்தத்தை க்ரஹிக்கவேண்டும். பத்துமந்த்ரங்களையும் சொல்லிக் கடைசியில் ஒருதடவை க்ரஹிக்கவேண்டும். அடுத்துள்ள "அக்நயேத்வா பரிததாம்யஸௌ" என்றாரம்பிக்கும் பதினொன்று மந்த்ரங்களால் தேவதைகளைஉத்தேசித்து ரக்ஷிப்பதற்காகக் குமாரனைக்கொடுக்கவேண்டும். இங்கு "அஸௌ" என்றுள்ள இடத்தில் ஸம்புத்யந்தமாக குமாரனின் நாமாவை க்ரஹிக்கவேண்டும். அடுத்த "தேவஸ்யத்வா" என்ற யஜுர் மந்த்ரத்தால் குமாரனை ஆசார்யன் தன் ஸமீபத்தில் அழைத்து, "ஸுப்ரஜா: ப்ரஜயா" என்ற மந்த்ரத்தைக் குமாரனின் வலது காதில் ஜபிக்கவேண்டும். சிலர் ஒவ்வொரு மந்த்ரத்தாலும் சிஷ்யனுடைய கையைப்பிடிக்கவேண்டுமென்று கூறுகின்றனர். அவ்விதமே குமாரன் ஆசார்யன் அஞ்ஜலியிலிருந்து ஜலத்தைப்பெற்று, இடதுகையில் அதை வாங்கிக்கொண்டு, அதைக்கொண்டு வலது கையால் தன்னைத்தான் ப்ரோக்ஷித்துக்கொள்ளவேண்டும் என்றும் கூறுகின்றனர்.

𑌇𑌤𑌿 𑌦𑌶𑌮𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

## பத்தாவது கண்டம் முற்றிற்று.

---

𑌏𑌕𑌾𑌦𑌶𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

## பதினோராவது கண்டம்.

---

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌮𑌾𑌗𑌾𑌮𑌿𑌤𑌿 𑌵𑌾𑌚𑌯𑌤𑌿 ॥ ௧ ॥

பிறகு "ப்ரஹ்மசர்யமாகாம்" என்ற மந்த்ரத்தைக் குமாரன் சொல்லவேண்டும். "ஸவித்ராப்ரஸூத:" என்பதுவரை இந்த மந்த்ரமுள்ளது.

ப்ரஷ்டமாசார்யஸ்ய ப்ரதிவசநம் குமாரஸ்ய । ௨ ॥

அடுத்தாற்போல் உள்ள "கோ நாமாஸ்யஸௌநாமாஸ்மி" முதலிய மந்த்ரங்கள் இருக்கின்றன. இவைகளில் முதல் பாகம் ப்ரச்ந ரூபமாகியது. மேல் பாகம் ப்ரதிவசநம். இங்கு ப்ரச்நங்களாக அமைந்துள்ள பாகத்தை ஆசார்யன் சொல்லவேண்டும். ப்ரதிவசநத்தைக் குமாரன் சொல்லவேண்டும். அதனால் "கோநாமாஸி" என்று ஆசார்யன் கேட்கவேண்டும். தனது பெயரைச் சொல்லி, "சர்மாநாமாஸ்மி" என்று குமாரன் சொல்லவேண்டும். "கஸ்யப்ரம்ஹசார்யஸி" என்ற மந்த்ர பாகத்தால் ஆசார்யன் ப்ரச்நம் செய்து ஸம்புத்யந்தமாக சிஷ்யனுடைய நாமாவையும் சேர்க்கவேண்டும். "ப்ராணஸ்ய ப்ரம்ஹசார்யஸ்மி" என்று குமாரன் பதில் சொல்லவேண்டும்.

ஶேஷம் ஸ்வயம் ஜபதி ॥ ௩ ॥

மேலுள்ள பாகத்தை ஆசார்யன் ஜபிக்கவேண்டும். அதனால் "அஸௌ" என்ற ஸ்தானத்தில் குமாரனின் பெயரை ப்ரதமாந்தமாய்ச்சேர்த்து "ஏஷ தே தேவஸூர்ய" என்றாரம்பித்து, 'தாம் ஸ்வஸ்திமநுஸஞ்சராஸௌ' என்பதுவரை ஆசார்யன் சொல்லவேண்டும். முடிவிலும் "அஸௌ" ஸ்தானத்தில் குமாரனின் பெயரை ஸம்புத்யந்தமாய்ச் சேர்க்கவேண்டும்.

உத்தராஶிஷம் வசநம் வாசயதி ॥ ௪ ॥

அடுத்த மந்த்ரமான "அத்வநாமத்வபதே" என்றதையும் குமாரன் சொல்லும்படி செய்யவேண்டும். இந்த மந்த்ரத்தில் குமாரனுக்குவேண்டிய பலனே ப்ரார்த்திக்கப்படுவதால் இதை "ப்ரத்யகாஶீ:" என்று ஸூத்ரகாரர் சொல்லுகிறார். இந்த ஸூத்ரம் அடுத்த மந்த்ரத்தைமட்டும் குறிப்பிட்டாலும் வ்யாக்யாதாக்கள் இதைப் பொதுவாகக்கொண்டு இதுமுதல் குமாரனை அடையவேண்டிய பலன்கள் சொல்லப்படும் மந்த்ரங்கள் எல்லாவற்றையுமே குமாரன் சொல்லவேண்டுமென்று சொல்லுகிறார்கள். இதனால் "அத்வநாமத்வபதே" என்ற மந்த்ரம் முதல் அநேக மந்த்ரங்களைக் குமாரன் சொல்லும்படி செய்யவேண்டுமென்றாகிறது.

உக்தமாஜ்யபாகாந்தம் ॥ ௫ ॥

ஆஜ்யபாகம் முடியச் செய்யவேண்டிய அக்நி கார்யங்கள் முன்பே சொல்லப்பட்டு விட்டன.

சுமெத்ரு நஊதூரா சூஹூதீ ஹடுாவயிகூா ஜயாதி ப்ருதிவஹுூதெ ॥ கூ ॥

ஆஜ்யபாகம் முடிந்தவுடன் மேலுள்ள 'யோகே யோகே' என்றாரம்பிக்கும் பதினொரு ஹோமங்களைக் கொண்டு குமாரன் ஹோமம் செய்யும்படி செய்யவேண்டும்.

இங்கு ஒரு சிலர் 'உக்தமாஜ்யபாகாந்தம்' என்ற ஸூத்ரத்திற்கு அர்த்தம் பின்வருமாறு:— 'அத்வநாமத்வபதே' என்பது முதல் மேலுள்ள 'ப்ரத்யகாசிஸ்' மந்த்ரங்களை குமாரன் சொல்லுவதோடு மட்டும் நில்லாமல் ஆஜ்யபாகத்திற்குப் பிறகு கீழ்ச் சொல்லப்பட்ட இடங்களில் வந்துள்ள மந்த்ரங்களில் எங்கே குமாரனை அடையக்கூடிய பலன் காணப்படுகிறதோ அந்த மந்த்ரங்களையும் குமாரனைச் சொல்லச் செய்யவேண்டும் என்று கூறுகிறார்கள். அதனால் 'இயம் துருக்தாத்' போன்ற முன்புள்ள பல மந்த்ரங்களையும் குமாரன் சொல்ல வேண்டுமென்று ஏற்படுகிறது. அவைகளில் காண மந்த்ரமாக விதிக்கப்பட்டவைகளை அந்த விதிகளில் சொல்லப்பட்டபடி கர்மாக்களை ஆசார்யன் செய்வதால் அவைகளைச் செய்துகொண்டு அந்தந்த மந்த்ரங்களையும் முதலில் ஆசார்யனே சொல்லவேண்டும். பிறகு குமாரனும் அதைச் சொல்லவேண்டும். ஹோமங்களில் உபயோகப் படும் மந்த்ரங்களில் குமாரன் தன்னுடைய மந்த்ரங்களைத்தான் சொல்லும்படி ஆசார்யன் செய்யவேண்டும்.

மற்றும் சிலர் மேகலா தாரணாதிகளில்கூட மந்த்ரங்களைக் குமாரனே சொல்லவேண்டும். ஆசார்யன் சொல்லி வைக்க வேண்டும். சொல்லிவைப்பதற்குமேல் ஆசார்யனுக்குக் கார்யம் கிடையாது என்று கூறுகின்றனர்.

ஹோமமந்த்ரங்களில் 'இமமக்ந ஆயுஷே', 'அக்னிஷ்ட ஆயு:' என்ற இரண்டு மந்த்ரங்களையும் குமாரன் சொல்லக் கூடாது. ஆசார்யனே சொல்ல வேண்டுமென்றும் ஹோமத்தை மட்டும் குமாரன் செய்ய வேண்டுமென்றும் சிலர் கூறுகின்றனர்.

மற்றுஞ்சிலர் குமாரனே சொல்லலாம் என்றும் கூறுகிறார்கள்.

ப்ரதான ஹோமங்களில்தான் குமாரனுக்கு ஸம்பந்தம். மேலுள்ள 'ஜயாதிகளை' ஆசார்யனே செய்யவேண்டும். இந்த ஹோம மந்த்ரங்களில் குமாரனுக்கு ஸம்பந்தம் கிடையாது.

𑌪𑌰𑌿𑌷𑍇𑌚𑌨𑌾𑌨𑍍𑌤𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌽𑌪𑌰𑍇𑌣𑌾𑌗𑍍𑌨𑌿𑌮𑍁𑌦𑌗𑌗𑍍𑌰𑌂 𑌕𑍂𑌰𑍍𑌚𑌂 𑌨𑌿𑌧𑌾𑌯 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍁𑌤𑍍𑌤𑌰𑍇𑌣 𑌯𑌜𑍁𑌷𑌾𑌚𑌾𑌰𑍍𑌯 𑌉𑌪𑌵𑌿𑌶𑌤𑌿 ॥ ௭ ॥

பரிஷேசநம் முடியச் செய்துவிட்டு, அக்நிக்கு மேற்குப் பக்கத்தில் வடக்கு நுனியாகக் கூர்ச்சத்தை வைத்து, அதன் மீது அடுத்த 'ராஷ்ட்ரப்ருதஸ்யாசார்யாஸந்தீ' என்ற யஜுர் மந்த்ரத்தால் உபநயனம் செய்து வைக்கும் ஆசார்யன் உட்கார வேண்டும். பரிஷேசநாந்த கர்மா முடிந்த பிறகு ஸாவித்ர வ்ரதத்தைச் சில ஸூத்ரகாரர்கள் சொல்லுகிருர்கள். மற்றும் சில ஸூத்ரகாரர்கள் மூன்ரும் நாளில் காயத்ரீ உபதேசத்தைச் சொல்லுகிருர்கள். ஆபஸ்தம்பருடைய அபிப்ராயப்படி உத்தர தந்த்ரம் முடிந்த உடனேயே காயத்ரீயை உபதேசம் செய்ய வேண்டும்.

𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌙𑍍𑌙𑌾𑌸𑍀𑌨𑌃 𑌕𑍁𑌮𑌾𑌰𑍋 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇𑌨 𑌪𑌾𑌣𑌿𑌨𑌾 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌪𑌾𑌦𑌮𑌨𑍍𑌵𑌾𑌰𑌭𑍍𑌯 𑌸𑌾𑌵𑌿𑌤𑍍𑌰𑍀𑌂 𑌭𑍋 𑌅𑌨𑍁𑌬𑍍𑌰𑍂𑌹𑍀𑌤𑌿 ॥ ௮ ॥

பிறகு, குமாரன் ஆசார்யனுக்கு முன்னல் மேற்கு முகமாக உட்கார்ந்து, தனது வலது கையால் ஆசார்யனின் வலது பாதத்தைத் தொட்டுக்கொண்டு, 'ஸாவித்ரீம்போ அநுப்ரூஹி' என்று சொல்லவேண்டும்.

𑌤𑌸𑍍𑌮𑌾 𑌅𑌨𑍍𑌵𑌾𑌹 𑌤𑌤𑍍𑌸𑌵𑌿𑌤𑍁𑌰𑌿𑌤𑌿 ॥ ௯ ॥

𑌪𑌚𑍍𑌛𑍋𑌽𑌰𑍍𑌧𑌰𑍍𑌚𑌶𑌸𑍍𑌤𑌤𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌮𑍍 ॥ ௧௦ ॥

இவ்விதம் ப்ரார்த்திக்கும் குமாரனுக்கு, "தத்ஸவிது:" என்ற காயத்ரீ மந்த்ரத்தை முதலில் பாதம் பாதமாகவும் பிறகு பாதி பாதியாகவும், கடைசியில் நடுவில் நிறுத்தாது முழுமந்த்ரத்தையும் ஆசார்யன் உபதேசிக்கவேண்டும்.

𑌵𑍍𑌯𑌾𑌹𑍃𑌤𑍀𑌰𑍍𑌵𑌿𑌹𑍃𑌤𑌾𑌃 𑌪𑌾𑌦𑌾𑌦𑌿𑌷𑍍𑌵𑌨𑍍𑌤𑍇𑌷𑍁 𑌵𑌾 𑌤𑌥𑌾𑌽𑌰𑍍𑌧𑌰𑍍𑌚𑌯𑍋𑌰𑍁𑌤𑍍𑌤𑌮𑌾𑌂 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌾𑌯𑌾𑌮𑍍 ॥ ௧௧ ॥

பாதம் பாதமாகக் காயத்ரீயை உபதேசம் செய்யும்பொழுது மூன்று வ்யாஹ்ருதிகளில் ஒவ்வொரு வ்யாஹ்ருதியை ஒவ்வொரு பாதத்தின் ஆரம்பத்திலாவது முடிவிலாவது சேர்க்க வேண்டும்.

பாதி பாதி ருக்காக காயத்ரீயை உபதேசம்செய்யும்பொழுது முதல் பாதியில் முதல் வ்யாஹ்ருதியையும், இரண்டாம் வ்யாஹ்ருதியை இரண்டாவது பாதியிலும் சேர்க்கவேண்டும். நடுவில் இடைவிடாது காயத்ரீயை உபதேசம் செய்யும் கடைசி ஆவ்ருத்தியில் மூன்றும் வ்யாஹ்ருதியைச் சேர்க்கவேண்டும். சிலர் பாதி பாதியாகக் காயத்ரீயைப் பிரித்து உபதேசம் செய்யுமிடத்திலும் காயத்ரீயைப் பிரிக்காமல் முழுவதும் உபதேசிக்குமிடத்திலும் அந்தந்த வ்யாஹ்ருதியை ஆரம்பத்தில் அல்லது முடிவிலாவது சேர்க்கலாம் என்று சொல்லுகிறார்கள்.

𑌕𑍂𑌰𑍍𑌚 𑌉𑌤𑍍𑌤𑌰𑌣 𑌯𑌜𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌰𑍌𑌷𑍍𑌠𑌮𑍁𑌪𑌸𑍍𑌪𑍃𑌶𑌤𑍇 ॥

குமாரன் அடுத்த "அவ்ருதமஸௌ ஸோம்ய" என்ற மந்த்ரத்தால் மேலுதடை ஸ்பர்சிக்கவேண்டும். அஸௌ என்ற சப்தத்தில் குமாரனின் பெயரைச் சொல்லவேண்டாம். உதட்டைத் தொட்டதற்காக ஆசமனம் உண்டென்று சிலர் கூறுகின்றனர்.

𑌕𑌰𑍍𑌣𑌾𑌵𑍁𑌤𑍍𑌤𑌰𑌣 ॥ ௧௩ ॥

அடுத்த "ப்ராம்ஹண ஆணீஸ்த:" என்ற மந்த்ரத்தால் குமாரன் தன் இரண்டு காதுகளையும் ஸ்பர்சிக்கவேண்டும்.

𑌦𑌣𑍍𑌡𑌮𑍁𑌤𑍍𑌤𑌰𑌣𑌾𑌦𑌤𑍍𑌤𑍇 ॥ ௧௪ ॥

அடுத்த "ஸுஶ்ரவ:" என்ற மந்த்ரத்தால் தண்டத்தைக் குமாரன் எடுத்துக்கொள்ளவேண்டும்.

𑌪𑌾𑌲𑌾𑌶𑍋 𑌦𑌣𑍍𑌡𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌯 𑌨𑍈𑌯𑌗𑍍𑌰𑍋𑌧𑌾𑌯
𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑌜𑍋𑌽𑌵𑌾𑌙𑍍𑌗𑍍𑌰𑍋 𑌰𑌾𑌜𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌬𑌾𑌦𑌰 𑌔𑌦𑍁𑌮𑍍𑌬
𑌰𑍋 𑌵𑌾 𑌵𑍈𑌶𑍍𑌯𑌸𑍍𑌯 ॥ ௧௫ ॥

மந்த்ரத்தால் தண்டத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று பொதுவாகச் சொல்லப்பட்டது. அந்தந்த வர்ணத்திற்குத் தகுந்தாற்போல் தண்டம் மாறுபடுவதால் இந்த ஸூத்ரத்தில் எந்த வர்ணத்திற்கு எந்தத் தண்டம் என்று சொல்லப்படுகிறது. ப்ராஹ்மணனுக்கு பலாச வ்ருக்ஷத்தைச் சேர்ந்த தண்டம். ஆலமரத்தின் கிளையில் உண்டானதும், தலைகீழாக உள்ளதும் க்ஷத்ரியனுக்குத் தண்டம். இலந்தைமரத்தைச் சேர்ந்தது, அல்லது அத்திமரத்தைச் சேர்ந்தது வைச்யனுக்குத் தண்டம்.

வாகெக்ஷ்-டா ஊணு ஐ தூவண-லஸம்யொமெரெநக உவதிஶஷி ॥

சில மஹர்ஷிகள், எல்லாருமே யாஜ்ஞிக வ்ருக்ஷங்களில் எதையாவது ஒன்றைச் சேர்ந்ததைத் தண்டமாக எடுத்துக்கொள்ளலாம் என்று உபதேசிக்கிறார்கள். இங்கு அந்தந்த வர்ணத்தின் தண்டத்திற்கென்று தனி மந்த்ரம் கிடையாது. எந்தத் தண்டத்தை யார் எடுப்பதானாலும் "ஸுஶ்ரவ: ஸுஶ்ரவஸம்" என்ற மந்த்ரத்தாலேயே எடுத்துக்கொள்ளவேண்டும். தர்ம ஸூத்ரத்திலும் அந்தந்த வர்ணத்திற்கனுகுணமாக தண்டம் சொல்லப்பட்டிருந்தாலும் எந்தத் தண்டத்தையும் "ஸுஶ்ரவ:" என்ற மந்த்ரத்தால் எடுக்கவேண்டுமென்பதற்காக இங்கு மறுபடியும் அவை சொல்லப்படுகின்றன.

ஷூதம்வஉ ஐதெூதஆவயிகூா ஶுஶவெவஶம் ஊகெவா
ஊாயுஷெதூஷாவெூாதுரெஶாஉிதூ உுவ திஷ்ெத॥

"ஸ்ம்ருதம்சமே" என்ற மந்த்ரத்தைக் குமாரன் சொல்லும்படி ஆசார்யன் சொல்லிவைக்கவேண்டும். குமாரன் அதைப் பின்பற்றிச் சொல்லவேண்டும். பிறகு ஆசார்யனுக்குக் குமாரன் தக்ஷிணையைக் கொடுக்கவேண்டும். உடனே ஆசார்யன் "உதாயுஷா" என்ற மந்த்ரத்தால் குமாரனைத் தூக்கிவிடவேண்டும். குமாரன் "தச்சக்ஷு:" என்றாரம்பிக்கும் மந்த்ரங்களால் ஸூர்யனை உபஸ்தானம் செய்யவேண்டும்.

யம் காஉயெத நாயம் உஹிதெூதெதி தஉுதூஶயா ஊக்ஷிணெ ஹஹூ ஶூஹீயாக ॥ கஅ ॥

மாணவன் தன்னைவிட்டுப் பிரியாமல் தன்னிடமே இருந்து வரவேண்டுமென்று ஆசார்யன் ஆசைப்பட்டால் அடுத்த "யஸ்மிந்பூதம்ச" என்ற மந்த்ரத்தால் குமாரனை ஆசார்யன் தன் வலது கையில் க்ரஹிக்கவேண்டும்.

தூூஹஉதஉஹிம் யாஶயதி ॥ ககூ ॥

உபநயநத்தில் உபயோகப்பட்ட அக்நியை மூன்று நாட்களும் தரித்து வரவேண்டும்.

க்ஷாரஒவணவஜ-நம் வ ॥ உ0 ॥

காரம், உப்பு இவைகள் கலப்பில்லாத அந்நத்தைப் புஜிக்க வேண்டும். மூன்று நாட்களில் செய்யப்படும் போஜநத்தில் மட்டும் இந்த நியமம் சொல்லப்படுவதால் மற்ற நாட்களில்

ப்ரம்ஹசாரீ உப்பு முதலியவைகளைச் சேர்த்துக்கொள்ளலாம் என்று ஏற்படுகிறது. ஆனால் தர்மஸூத்ரத்தில் ப்ரம்ஹசாரியின் நியமங்களைச் சொல்லுமிடத்தில் ப்ரம்ஹசாரீ உப்பு, காரம் இவைகளைச் சேர்த்துக்கொள்ளக் கூடாதென்று பொதுவான நிஷேதமிருப்பதால் மற்ற நாட்களில் உப்பு முதலியவைகளைச் சேர்த்துக்கொள்ளுவது விகல்பிதமாகிறது.

𑌪𑌰𑌿𑌷𑌿𑌚𑍍𑌯 𑌪𑌰𑌿𑌮𑍃𑌜𑍍𑌯 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍁𑌤𑍍𑌤𑌰𑌾𑌃 𑌸𑌮𑌿𑌧 𑌆𑌦𑌧𑍍𑌯𑌾𑌤𑍍 ॥ உக ॥

உபநயநம் செய்வதற்கு உபயோகப்பட்ட அக்நியை "பரித்வாக்நே" என்ற மந்த்ரத்தால் மார்ஜநம் செய்து "அக்நயேஸமிதமாஹார்ஷம்" என்று ஆரம்பிக்கும் பன்னிரண்டு மந்த்ரங்களால் ஒவ்வொரு மந்த்ரத்தால் ஒவ்வொரு ஸமித்தை அக்நியில் சேர்க்க வேண்டும். பிறகு மந்த்ரமில்லாமல் முடிவில் மார்ஜநம் செய்ய வேண்டும்.

𑌏𑌵𑌮𑌨𑍍𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌪𑌿 𑌸𑌦𑌾𑌰𑌣𑍍𑌯𑌾𑌦𑍇𑌧𑌾𑌨𑌾𑌹𑍃𑌤𑍍𑌯 ॥ உஉ ॥

இவ்விதமே உபநயநத்தின் மூன்று நாட்கள் முடிந்தபிறகும் விவாஹம் ஆகும்வரை ஸாயங்காலத்திலும் ப்ராத:காலத்திலும் வேறு அக்நியிலும் காட்டிலிருந்து ஸமித்துக்களைத் தானே கொண்டுவந்து ஸமிதாதானம் செய்யவேண்டும். இதற்கு அக்நி பூஜை என்று பெயர். சில மஹர்ஷிகளின் அபிப்ராயப்படி ஸாயங்கால வேளைகளில்மட்டும் அக்நிபூஜை செய்தால் போதும். உபநயநாக்நியைத் தொடர்ந்து வைத்துக்கொண்டு அதிலேயே அக்நி பூஜையைச் செய்யலாம்.

தர்மஸூத்ரத்தில் ஸமிதாதானம் சொல்லப்பட்டிருந்தாலும் ஸமிதாதானத்தின் ஆரம்ப காலத்தைத் தெரிவிப்பதற்காக மறுபடியும் இங்கு ஸமிதாதானம் சொல்லப்படுகிறது. இதனால் ப்ராத:கால ஸமிதாதானமே ஸமிதாதானத்தின் ஆரம்பமென்றும் ஸாயங்கால ஸமிதாதானம் முடிவானதென்றும் ஏற்படுகிறது. ஸாயங்காலம்மட்டும் அக்நிபூஜையைச் செய்தால் போதும் என்ற பக்ஷத்தில் உடனே ஸமிதாதானம் செய்ய வேண்டாம். ஸாயங்காலம் ஆரம்பித்தால் போதும்.

𑌉𑌤𑍍𑌤𑌰𑌯𑌾 𑌸𑌂𑌶𑌾𑌸𑍍𑌤𑌿 ॥ உங ॥

பிறகு மேலுள்ள மந்த்ரத்தால் குமாரனை ஆசார்யன்

சிக்ஷிக்கவேண்டும். ‘‘ஐ்ஹவாயஷஸி, சுவொzஶாந, கூ௦ஷ கூ௱ர, ஶாஸ௱ஷ௱வூரஃ, ஹிக்ஷாவயஷ௦வர, ஜூவாயஷாயீநொ ஹவ’’ என்று தனித்தனியாக ஆசார்யன் சொல்லவேண்டும். ஸாஶ௦ என்று ஒவ்வொன்றுக்கும் உடனே மாணவன் பதில் சொல்லவேண்டும். இந்தச் சிக்ஷணமான உடன் போதாயன ஸூத்ரத்தை (2-5-40) அநுஸரித்து, பிக்ஷாசரணம் செய்ய வேண்டும். முதலில் மாதாவையே பிக்ஷை கேட்கவேண்டும். வாஸஸூத௱யீஷஶ௱தூரபாzzஉதெzநூக வஶியாவ) உச ॥

மூன்று நாட்கள் முடிந்த பிறகு நான்காவது நாளில் குமாரனை வேறு புது வஸ்ரத்தை உடுத்தச் செய்துவிட்டு, அடுத்த ‘யஸ்ய தே ப்ரதமவாஸ்யம்’ என்ற மந்த்ரத்தால் குமாரன் இது வரை உடுத்தி வந்த வஸ்த்ரத்தை ஆசார்யன் எடுத்துக்கொண்டு விடவேண்டும். இங்கே சொல்லப்படும் மந்த்ரமே ஆசார்யன் வஸ்த்ரத்தை எடுத்துக்கொள்ள ஏற்பட்ட மந்த்ரம். சிலர் இது முடிந்ததும் மற்ற ஸ்ம்ருதிகளைப் பின்பற்றிப் பலாசகர்ம என்பதைப் பலாசவ்ருக்ஷத்தின் அடியில் செய்கிறார்கள்.

ஐதி ஹகாஉஶஃ வணூஃ ॥

## பதினோராவது கண்டம் முற்றிற்று.

---

கூய ஆஉஶஃ வணூஃ ॥

## பன்னிரண்டாவது கண்டம்.

---

வெஉஶயீத்வ ஸூாஸ்யநு வூாம௱உயாத்ருஜ௦ வூவிஶ்வா ஜெஷாநூா வஶஷணா ஆாஶவியாயாஷே ॥ க ॥

இவ்விதம் உபநயநமானவன் ப்ரஹ்மசர்யவ்ரதத்துடன் ஸாங்கமாக வேதங்களை அத்யயநம் செய்து முடித்துவிட்டு, ஆசார்யகுலத்திலிருந்து வேறு ஆச்ரமத்திற்குப் போக நினைத்தால் ஸ்நாநம் என்ற கர்மாவைச் செய்யவேண்டும். ஸ்நானம் என்ற கர்மாவைச் செய்யப்போகிறவன் ஸூர்யோதயத்திற்கு முந்தியே கோசாலைக்குள் ப்ரவேசித்து உட்பக்கம் ரோமமிருக்கும்படி தோலால் கோசாலையின் த்வாரத்தை மறைத்துக் கொண்டு உள்ளேயே இருந்துவரவேண்டும்.

ரெநஶெதஉஹஶாஶிதெ்வாzஹிதவெசு ॥ உ ॥

இக்கர்மாவைச் செய்யும் தினத்தில் ஸூர்யனுடைய தாபம் இவன்மேல் படக்கூடாது. அதனுல் மூத்ராதிவிஸர்க்கத்தையும் உட்பக்கத்திலேயே ஸூர்யகிரணம் மேலேபடாமல் செய்ய வேண்டும்.

𑌮𑌧𑍍𑌯𑌨𑍍𑌦𑌿𑌨𑍇𑌽𑌗𑍍𑌨𑍇𑌰𑍁𑌪𑌸𑌮𑌾𑌧𑌾𑌨𑌾𑌦𑍍𑌯𑌾𑌜𑍍𑌯𑌭𑌾𑌗𑌾𑌨𑍍𑌤𑍇 𑌪𑌾𑌲𑌾𑌶𑍀𑌂 𑌸𑌮𑌿𑌧𑌮𑍁𑌤𑍍𑌤𑌰𑌯𑌾𑌽𑌽𑌧𑌾𑌯𑌾𑌪𑌰𑍇𑌣𑌾𑌗𑍍𑌨𑌿𑌂 𑌕𑌟 𑌏𑌰𑌕𑌾𑌯𑌾𑌂 𑌵𑍋𑌪𑌵𑌿𑌶𑍍𑌯𑍋𑌤𑍍𑌤𑌰𑌯𑌾 𑌕𑍍𑌷𑍁𑌰𑌮𑌭𑌿𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑍋𑌤𑍍𑌤𑌰𑍇𑌣 𑌯𑌜𑍁𑌷𑌾 𑌵𑌪𑍍𑌤𑍍𑌰𑍇 𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌾𑌪𑌾𑌂 𑌸𑌂𑌸𑌰𑍍𑌜𑌨𑌾𑌦𑍍𑌯𑌾 𑌕𑍇𑌶𑌨𑌿𑌧𑌾𑌨𑌾𑌤𑍍 𑌸𑌮𑌾𑌨𑌮𑍍 ॥ ௩ ॥

அன்றையதினம் மத்யாஹ்னத்தில் "அக்நிமித்வா" என்ற பூர்வ தந்த்ரத்தை ஆரம்பித்து ஆஜ்யபாகம் முடியச்செய்து உடனே, "இமம் ஸ்தோமம்" என்ற மந்த்ரத்தால் பலாச ஸமித்தை அக்நியில் சேர்த்து அக்நிக்கு மேல்புறத்தில் பாயை விரித்து அதன்மீதாவது, அல்லது பாயின் புற்களையாவது விரித்து அவைமீதாவது உட்கார்ந்துகொண்டு "த்ர்யாயுஷம்" என்ற மந்த்ரத்தால் கத்தியை அபிமந்த்ரணம் செய்து "ஶிவோ நாமாஸி" என்ற மந்த்ரத்தால் க்ஷுரகர்மாவைச் செய்பவனிடம் க்ஷுரத்தைக்கொடுத்து உபநயநம்போல் "உஷ்ணேநவாயோ" என்ற மந்த்ரத்தால் உஷ்ணஜலத்தை, சீத ஜலத்தில் சேர்த்து, ஜல ஸம்ஸர்க்கம் ஆரம்பமாக உள்ள கர்மாக்களைச் செய்யவேண்டும். வபநம் செய்யப்பட்ட கேசங்களை அத்திமரத்தினடியிலாவது தர்ப்ப ஸ்தம்பத்திலாவது வைக்கும்வரை கர்மாவைச் செய்ய வேண்டும். இங்கும் ஆசார்யன் வபநத்தைச் செய்யவேண்டுமாதலால் அவனிடம் கத்தியைக் கொடுக்கவேண்டும். ஆசார்யன் க்ஷுரத்தை நாபிதனிடம் கொடுக்கவேண்டும். என்று சிலர் கூறுகிறுர்கள். ஆசார்யனுக்கு இங்கு ப்ரஸக்தியே கிடையாது. நாபிதனுக்கு மந்த்ரம் தெரியாதாகையினுல் அவனிடம் மந்த்ரத்தைக் கொண்டு கத்தியைக் கொடுக்கஇடமில்லை என்று மற்றும் சிலர் இதை ஆக்ஷேபிக்கிறுர்கள்.

𑌜𑌘𑌨𑌾𑌰𑍍𑌧𑍇 𑌵𑍍𑌰𑌜𑌸𑍍𑌯𑍋𑌪𑌵𑌿𑌶𑍍𑌯 𑌵𑌿𑌸𑍍𑌰𑌸𑍍𑌯 𑌮𑍇𑌖𑌲𑌾𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌾𑌰𑌿𑌣𑍇 𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌤𑌿 ॥ ௪ ॥

க்ஷுரகர்மா முடிந்த உடன் மாட்டுக்கொட்டிலின் மேல்புறத்தில் உட்கார்ந்துகொண்டு மேகலையை அவிழ்த்து ஒரு ப்ரஹ்மசாரியிடம் கொடுத்துவிடவேண்டும்.

தாஂ ஸ உத்தரேண யஜுஷொத்ம்பரஸ்ய மூலெ ஊஹ்
ஷம்பெ வொவ மூஹதி ॥ ரு ॥

பிறகு ப்ரம்ஹசாரீ அடுத்த 'இதமஹமமுஷ்ய' என்ற யஜுஸ்ஸால் உதும்பர வ்ருக்ஷத்தின் அடியிலாவது தர்ப்ப ஸ்தம்பத்திலாவது மேகலையை மறைத்துவைக்கவேண்டும். இந்த மந்த்ரத்தில் உள்ள அமுஷ்ய, ஆமுஷ்யாயணஸ்ய என்ற இரண்டு இடத்திலும், ஸ்நாதகனின் பெயரையும், கோத்ரத்தையும், 'அஸெள' என்ற இடத்தில் நாமாவையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

ஸவம்விஹிதாபிரேவாத்ஹிருத்தாபிஷ்ஷஸிஃ ஸ்நாத்வா
த்ரயொத்ம்பரேண ஊதொ யாவயெ ॥ சு ॥

சீதஜலத்தில் கலக்கப்பட்ட உஷ்ணஜலத்தைக் கொண்டு "ஆபோஹிஷ்டாமயோபுவ:" என்ற மூன்று ருக்குகளாலும் "ஹிரண்யவர்ணா:ஶுசய:" என்ற மூன்று ருக்குகளாலும் ஸ்நாநம் செய்யவேண்டும். ஆறு மந்த்ரங்களையும் சொல்லிவிட்டு, கடைசியில் ஸ்நாநம். சிலர் ஒவ்வொரு மந்த்ரத்திலும் ஸ்நாநம் என்று கூறுகின்றனர். அடுத்த "அங்நாத்யாயவ்யூஹத்வம்" என்ற மந்த்ரத்தால் அத்திக்குச்சியைக்கொண்டு பல் தேய்க்க வேண்டும்.

ஸ்நாநீயொத்ஸாதிதஃ ஸ்நாதஃ ॥ எ ॥

உத்தரேண யஜுஷாஹதஸ்தேரம் வாஸஃ பரிதாய
ஸாவஸுவர்ணிநா ஸநேநொத்தரெ ஷவதாஹ்ஃ
வூஷாபொத்ரயாஸந்தியவ ஶ்ணிம் ஸஸவண ஷொவ
யாநம் ஸநொதஸத்ரயொஷவதெ திஃ வூஷக்ஷி
ணம் பரிஷாவ்யாத்ரயா ஸ்ரீ வாஸாவஸெஷெவஸெவ பா
ஷரம் ஶ்ணிம் ஸுவஜம் ஸவெ வாணாவாபஸஹஹதஸ
த்ரம் வாஸொ ரேவதீஷ்வதி ஸஸநஃ ॥ அ ॥

பிறகு வாஸனைப் பொடிகளைக்கொண்டு உடம்பை நன்றாய்த் தேய்த்துச் சுத்தம் செய்துகொண்டு ஸ்நாநம் செய்யவேண்டும். அடுத்த 'ஸோமஸ்யதநூரஸி' என்ற மந்த்ரத்தால் வஸ்த்ரத்தைத் தரித்துக்கொண்டு கஸ்தூரீ குங்குமப்பூ இவை சேர்ந்து நல்ல வாஸனையுள்ள சந்தனத்தை 'நமோக்ரஹாய' என்றாரம்பிக்கும் மூன்று மந்த்ரங்களால் முதலில் தேவதைகளுக்கு அர்ப்பணம்

பண்ணிவிட்டுப் பிறகு 'அப்ஸரஸ்ஸுயோகந்த:' என்றமந்த்ரத்தால் ஸ்நாதகன் சந்தனத்தைச் சரீரத்தில் பூசிக்கொள்ளவேண்டும். ஆச்வலாயந ஸூத்ரத்தை அனுஸரித்து முகத்தில் முதலில் சந்தனத்தைப் பூசிக்கொள்ளவேண்டும். பிறகு தங்கத்தால் செய்யப்பட்டதாயும், வைடூர்யம்முதலியவை இழைக்கப்பட்டுள்ளதாயும் நூலில் கோக்கப்பட்டுள்ளதாயுமுள்ள மணி (மாலை) யை 'இயமோஷதே' என்ற மந்த்ரத்தால் ஜலம் நிறைந்துள்ள பாத்ரத்தில் மூன்று தடவை ப்ரதக்ஷிணமாய் மூழ்கடித்து அடுத்த 'அபாசோஸ்யுரோமே' என்ற மந்த்ரத்தால் கழுத்தில் கட்டிக்கொள்ளவேண்டும். பிறகு இலந்தைக்கொட்டையினால் செய்யப்பட்டு நூலில் கோக்கப்பட்டுள்ள மணியைத் தங்கமணிக்குச் செய்த ஸம்ஸ்காரங்களை மந்த்ரமில்லாமல் செய்து மந்த்ரமில்லாமல் இடதுகையில் கட்டிக்கொண்டு, புதிதான மேல்வஸ்த்ரத்தை உபநயநம் போல் உடுத்திக்கொள்ளவேண்டும். 'ரேவதீஸ்த்வா' என்றாரம்பிக்கும் இரண்டு மந்த்ரங்களால் வஸ்த்ரத்தை "அபிமந்த்ரணம்" செய்து, 'யாஅக்ருந்தந்' என்றாரம்பிக்கும் மூன்று மந்த்ரங்களால் வஸ்த்ரத்தைத் தரித்துக்கொண்டு, 'பரீதம்வாஸ:' என்ற மந்த்ரத்தை உடுத்திக்கொண்டபிறகு சொல்லவேண்டும். சிலரது அபிப்பிராயப்படி உள்வஸ்த்ரம், மேல் தரிக்கவேண்டிய வஸ்த்ரம் இரண்டுமே இங்கே தரிக்கவேண்டியவைகளாகச் சொல்லப்படுகின்றன. மேலுத்தரீயம் அவர்களுக்குத் தர்ம ஸூத்ரப்படி வருகிறது.

தஸ்ய உஶாயாம் ஹுவதர்ண ஹுவஸ்ய உவர்ர்ரோயாயா
ஜ்யாநாஹ்யாந(ா)பஞூதுரா கூஹூதீஹர்ூகூவா ஜயாதி
ஹுதிவஷ்யெதெ ॥ ௯ ॥

உத்தரீயத்தின் நுனியில் தங்கத்தினாலான இரண்டு குண்டலங்களை முடிந்து, தர்வியின் நுனியில் அதை வைத்துக்கொண்டு குண்டலங்கள்மீது ஆஜ்யத்தைச் சேர்த்து, இந்த ஆஜ்யத்தால் 'ஆயுஷ்யம் வர்ச்சஸ்யம்' என்பது முதலான எட்டு மந்த்ரங்களால் எட்டு ஹோமங்களைச் செய்யவேண்டும். பிறகு தர்வியின் நுனியிலிருந்து குண்டலங்களை எடுத்துவிட்டு, "ஜயாதி" ஹோமங்களைச் செய்யவேண்டும்.

வஶிஷெவநாஜம் கூரெகெவதாஹிரெவ உக்ஷிணெ
கணர் கூவஞ்ஸீதெதாஹிஷவெ்ய ॥ ௧௦ ॥

பரிஷேசனம் முடியச்செய்துகொண்டு ஹோமமந்த்ரங்களான 'ஆயுஷ்யம் வர்ச்சஸ்யம்' முதலான எட்டு மந்த்ரங்களாலேயே வலதுகாதில் குண்டலத்தைத் தரிக்கவேண்டும். அதே விதமாக அதே மந்த்ரங்களால் இடது காதிலும் குண்டலத்தைத் தரிக்கவேண்டும்.

ஏவமுத்தரேண ஸவ்யே ஸ்ரஜமாஞ்ஜநமாதர்ஶ-
முபாநஹௌ ச்சத்ரம் தண்டமிதி ॥ ௧௧ ॥

இவ்விதமே அடுத்துள்ள மந்த்ரங்களால் அந்தந்த மந்த்ரங்களில் சொல்லப்பட்ட, மாலையைத் தரிப்பது, மை இட்டுக்கொள்வது, கண்ணாடி பார்ப்பது, பாதரக்ஷை அணிவது, குடை, தண்டம் இவைகளை எடுத்துக்கொள்வது இவைகளைச் செய்யவேண்டும். 'சுபிகேசிர ஆரோஹ' என்ற இரண்டு மந்த்ரங்களால் தலையில் மாலை சூட்டிக்கொள்ளவேண்டும். 'யதாஞ்ஜநம்' என்றாரம்பிக்கும் இரண்டு மந்த்ரங்களால் கண்களில் மையிட்டுக்கொள்ளவேண்டும். இரண்டு மந்த்ரங்களாலும் முதலில் வலது கண்ணில் மையிட்டுக்கொள்ளவேண்டும், பிறகு முன் இரண்டு மந்த்ரங்களாலேயே இடது கண்ணில் மையிட்டுக்கொள்ளவேண்டும். "யந்மேவர்ச:" என்ற மந்த்ரத்தால் கண்ணாடியைப் பார்க்கவேண்டும். 'ப்ரதிஷ்டேஸ்தோ தேவதாநாம்' என்ற மந்த்ரத்தால் பாதரக்ஷையை அணியவேண்டும். வலது காலில் முதலிலும், இடது காலில் பிறகும் அணியவேண்டும். 'ப்ரஜாபதேச்சரணமஸி' என்ற மந்த்ரத்தால் குடையை எடுத்துக்கொள்ளவேண்டும். 'தேவஸ்யத்வா' என்ற மந்த்ரத்தால் தண்டத்தை எடுத்துக்கொள்ளவேண்டும். சிலர் பூச்சூட்டிக்கொள்வது, மையிட்டுக்கொள்வது முதலியவைகளில் ஒரே மந்த்ரத்தால் அதையதைச் செய்யவேண்டும், மற்ற மந்த்ரங்கள் விகல்பத்திற்காக ஏற்பட்டவை என்று கூறுகிறார்கள். அவ்விதமே பாதரக்ஷகளை மந்த்ரத்தால் ஒரே தடவையில் போட்டுக்கொள்ளவேண்டும் என்றும், குடையை மந்த்ரமில்லாமல் எடுத்து மந்த்ரத்தால் விரித்து மறைத்துக்கொள்ளவேண்டுமென்றும் கூறுகிறார்கள்.

வாக்யத ஆநக்ஷத்ரேப்ய: ॥ ௧௨ ॥

நக்ஷத்ரங்கள் உதயமாகும் வரை மௌனத்துடன் இருக்கவேண்டும்.

𑌉𑌦𑌿𑌤𑍇𑌷𑍁 𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑌾𑌚𑍀𑌮𑍁𑌦𑍀𑌚𑍀𑌂 𑌵𑌾 𑌦𑌿𑌶𑌮𑍁𑌪𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌮𑍍𑌯𑍋𑌤𑍍𑌤𑌰𑍇𑌣𑌾𑌰𑍍𑌧𑌰𑍍𑌚𑍇𑌨 𑌦𑌿𑌶 𑌉𑌪𑌸𑍍𑌥𑌾𑌯𑍋𑌤𑍍𑌤𑌰𑍇𑌣 𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌸𑌮𑌿𑌤𑌿 ॥ ௧௩ ॥

நக்ஷத்ரங்கள் உதயமான பிறகு, கிழக்குப்புறமாகவாவது, வடக்குப்புறமாகவாவது வெளிக்கிளம்பி அடுத்த 'தேவீஷ்ஷ டுர்வீ:' என்ற பாதி ருக்கினால் திக்குகளை உபஸ்தானம் செய்து, அவசிஷ்டமான பாதி ருக்கினால் 'நக்ஷத்ரங்கள்' 'சந்த்ரன்' இவர்களை உபஸ்தானம் செய்யவேண்டும்.

𑌰𑌾𑌤𑌿𑌨𑌾 𑌸𑌂𑌭𑌾𑌷𑍍𑌯 𑌯𑌥𑌾𑌰𑍍𑌥𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 ॥ ௧௪ ॥

பிறகு தன்னுடைய ஸுஹ்ருத்துக்களுடன் ஸம்பாஷணம் பண்ணி, தன்னுடைய சக்திக்கனுகுணமான ஆச்ரமத்தை அடையலாம். க்ருஹஸ்தாச்ரமத்தை நடத்திக்கொள்ளக்கூடிய சக்தியுள்ளவன் க்ருஹஸ்தாச்ரமத்தை அடையலாம். பூர்ண வைராக்யமுள்ளவன் ஸந்யாஸாச்ரமத்தையடையலாம். க்ருஹஸ்தாச்ரமத்தை அடைவதாயிருந்தாலும், ஸந்யாஸாச்ரமத்தை அடைவதாயிருந்தாலும் பந்துமித்ரர்களுடன் ஸம்பாஷணம் பண்ணுவது வரை ஸ்நாநகர்மாவைச் செய்யவேண்டும்.

𑌇𑌤𑌿 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

## பன்னிரண்டாவது கண்டம் முற்றிற்று.

---

𑌅𑌥 𑌤𑍍𑌰𑌯𑍋𑌦𑌶𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

## பதின்மூன்றாவது கண்டம்.

---

𑌅𑌥𑍈𑌤𑌦𑌪𑌰𑌂 𑌤𑍂𑌷𑍍𑌣𑍀𑌮𑍇𑌵 𑌤𑍀𑌰𑍍𑌥𑍇 𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾 𑌤𑍂𑌷𑍍𑌣𑍀𑌂 𑌸𑌮𑌿𑌧𑌮𑌾𑌦𑌧𑍍𑌯𑌾𑌤𑍍 ॥ ௧ ॥

'ஸ்நாந' கர்மாவில் மற்றொரு கல்பம் பின்வருமாறு. மந்த்ரமில்லாமல் பூமியில் உள்ள ஜலத்தில் ஸ்நாநம் செய்துவிட்டு, மந்த்ரமில்லாமல் ஸமித்தை அக்நியில் சேர்க்கவேண்டும். இதற்கு மேல் வேறொன்றையுமே செய்யவேண்டாம்.

சிலருடைய அபிப்ராயப்படி முன்சொல்லப்பட்ட ஸ்நாந கர்மாவில் உள்ள எல்லாக் கர்மாக்களையுமே மந்த்ரமில்லாமல் செய்யவேண்டும்.

யத்ராஸ்மா ஈவதிதிம் கூர்வந்தி தத்தேவம் உவவி
ஶதி யயாவர்ரஸ்மாக ॥ ௨ ॥

ஸ்நாந கர்மா செய்துகொண்டவனுக்கு "அபசிதிகர்மா" வை லோகத்தார்கள் செய்வார்கள். அபசிதி என்பது பூஜையைக் குறிக்கும். அப்பொழுது அவர்கள் கொடுக்கும் கூர்ச்சத்தைப் பெற்றுக்கொண்டு அதை வடக்கு முகமாகப் போட்டு அதன் மீது முன்போல் 'ராஷ்ட்ரப்ருதஸி' என்ற மந்த்ரத்தால் உட்கார வேண்டும்.

ஊவவரூத்ராஸ்யாம் யயாலிஜும் ராஜா ஸ்யவதிஶ்வ ॥ ௩ ॥

அவ்விதமே அடுத்துள்ள இரண்டு மந்த்ரங்களாலும் "ராஜா" வும் "ஸ்தபதி" யும் அவரவர்களுடைய அடையாளமுள்ள மந்த்ரங்களால் உட்காரவேண்டும். அதனுல் 'ராஷ்ட்ரப்ருதஸிஸம்ராடாஸந்தீ' என்று ராஜாவும், 'ராஷ்ட்ரப்ருதஸ்யதிபத்ந்யாஸந்தீ' என்று ஸ்தபதியும் மந்த்ரத்தை ஊஹித்துக் கொள்ளவேண்டும். இங்குள்ள ராஜசப்தம் ப்ரஜாபாலநம் செய்யும் க்ஷத்ரியனையே குறிப்பிடும். ஸ்தபதி என்ற பதம் வேறு வர்ணத்தைச்சேர்ந்த ஜனதிபதியைக் குறிப்பிடும்.

ஆவஃ வாஜ்யா ஐதி ப்ராஹ ॥ ௪ ॥

ஸ்நாதகன் முதலியவர்களுக்குப் பூஜை செய்பவன் கால் அலம்ப ஜலம் கொண்டுவந்து பூஜை செய்யப்படுபவனைப் பார்த்து 'ஆப: பாத்யா:' என்று சொல்லவேண்டும்.

உத்ரயாஉஷிஜ்ய உக்ஷிணம் வாஉம் வமிவஷும் ஜா
ஹணாய ப்ரயஜ்ஸக ஸவ்யம் ஶூஉத்ராய ॥ ௫ ॥

பூஜிக்கப்படுபவன் கொடுக்கப்பட்ட ஜலங்களை அடுத்த 'ஆப: பாதாவநேஜநீ:' என்ற மந்த்ரத்தால் அபிமந்த்ரணம் பண்ணிக் கால்களை அலம்புவதற்கு முதலில் வலதுகாலை ப்ராம்ஹணனுக்குக் கொடுக்கவேண்டும். சூத்ரனுக்கு இடது காலை முதலில் அலம்பக் கொடுக்கவேண்டும்.

ப்ருக்ஷாஉயிதார உவஸ்யஶ்யாத்ரெண யஜுஷா
ஆத்மாநம் ப்ரத்யவிஶஸக ॥ ௬ ॥

கால் அலம்புகிறவனைத் தொட்டுவிட்டு அடுத்த 'மயிமஹ:' என்ற யஜுர் மந்த்ரத்தால் தன்னையும் திரும்பத் தொட்டுக் கொள்ளவேண்டும்.

𑌕𑍂𑌰𑍍𑌚𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌪𑌰𑌿𑌗𑍃𑌹𑍍𑌯 𑌮𑍃𑌨𑍍𑌮𑌯𑍇𑌨𑌾𑌰𑍍𑌹𑌣𑍀𑌯𑌾
𑌆𑌪 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌾𑌹 ॥ ௭ ॥

பிறகு பூஜை செய்பவன் மண்பாத்ரத்தில் பூஜைக்கான தீர்த்தத்தைப் புஷ்பம் அக்ஷதை இவைகளைச் சேர்த்து, இரண்டு கூர்ச்சங்களால் பாத்ரத்தின் கீழ் புறத்தையும் மேல் புறத்தையும் மறைத்து 'அர்ஹணீயா ஆப:' என்று சொல்லிக் கொடுக்க வேண்டும்.

𑌉𑌤𑍍𑌤𑌰𑌯𑌾𑌽𑌭𑌿𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯 𑌪𑌾𑌣𑌾𑌵𑍇𑌕𑌦𑍇𑌶 𑌆𑌨𑍀𑌯𑌮𑌾𑌨 𑌉𑌤𑍍𑌤
𑌰𑌂 𑌯𑌜𑍁𑌰𑍍𑌜𑌪𑍇𑌤𑍍 ॥ ௮ ॥

பூஜையைப் பெற்றுக்கொள்பவன் அந்த ஜலத்தைப் பெற்றுக் கொண்டு 'ஆமாகந்' என்ற மந்த்ரத்தால் அபிமந்த்ரணம் செய்து, பாத்ரத்திலிருந்து ஜலத்தின் பாதிபாகம் கையில் சேர்க்கப்படும் பொழுது 'விராஜோ தோஹோஸி' என்ற மந்த்ரத்தை ஜபிக்க வேண்டும்.

𑌶𑍇𑌷𑌂 𑌪𑍁𑌰𑌸𑍍𑌤𑌾𑌨𑍍𑌨𑌿𑌨𑍀𑌯𑌮𑌾𑌨𑌮𑍁𑌤𑍍𑌤𑌰𑌯𑌾𑌨𑍁𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌯𑌤𑍇 ॥ ௯ ॥

பாக்கியுள்ள பாதிபாகம் ஜலத்தை முன்பக்கத்தில் பூஜை செய்பவன் கொட்டிவிடவேண்டும். அப்பொழுது 'ஸமுத்ரம் வ:' என்ற மந்த்ரத்தைப் பூஜை பெற்றுக்கொள்பவன் சொல்ல வேண்டும். இங்கு வஸ்த்ரம், குண்டலம், மாலை முதலியவைகளைப் பூஜைபெறுபவனுக்குக் கொடுத்து அலங்காரம் செய்து கொள்ளும்படி செய்யவேண்டும்.

𑌦𑌧𑌨𑌿 𑌮𑌧𑍍𑌵𑌾𑌨𑍀𑌯 𑌸𑌂𑌸𑍃𑌜𑍍𑌯 𑌕𑌾𑌂𑌸𑍍𑌯𑍇𑌨 𑌵𑌰𑍍𑌷𑍀𑌯𑌸𑌾 𑌪𑌿𑌧𑌾𑌯
𑌕𑍂𑌰𑍍𑌚𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌪𑌰𑌿𑌗𑍃𑌹𑍍𑌯 𑌮𑌧𑍁𑌪𑌰𑍍𑌕 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌾𑌹 ॥

தயிர், தேன் இவைகளைக் கலந்து ஒரு பாத்ரத்தில் வைத்துக் கொண்டு, பெரிய வெண்கலப் பாத்ரத்தால் மறைத்து, கீழ் பக்கத்திலும் மேல் பக்கத்திலும் கூர்ச்சங்களால் பரிக்ரஹித்து, 'மதுபர்க்க:' என்று பூஜைசெய்பவன் சொல்லிப் பூஜையைப் பெற்றுக் கொள்பவனிடம் கொடுக்கவேண்டும்.

𑌤𑍍𑌰𑌿𑌵𑍃𑌤𑌮𑍇𑌕𑍇 𑌘𑍃𑌤𑌂 𑌚 ॥ ௧௧ ॥

முன்சொல்லப்பட்ட தயிர், தேன் இவைகளோடு நெய்யையும் சேர்த்து முக்கூட்டாகக் கொடுக்கவேண்டுமென்று சில ஆசார்யர்கள் சொல்லுகிறார்கள்.

ஸக்தவஶ்சைகே தாநாஸக்தூம்ஶ்ச || ௧௨ ||

முன் சொல்லப்பட்ட மூன்று த்ரவ்யங்களோடு தாநா: (வறுத்த அரிசியின் மாவு) ஸக்து இவைகளையும் சேர்த்து ஐந்து கூட்டாக மதுபர்க்கமிருக்கவேண்டு மென்று சிலர் கூறுகிருர்கள்.

உத்தராப்யாமபிமந்த்ர்ய அம்ருதோபஸ்தரணமஸீத்யப ஆசம்ய த்ரி: ப்ராஶ்யாநுகம்ப்யாய ப்ரயச்சேத் || ௧௩ ||

கொடுக்கப்பட்ட மதுபர்க்கத்தை வாங்கிக்கொண்டு, மேல் மூடியை விலக்கி, அடுத்துள்ள 'த்ரய்யை வித்யாயை, ஆமாகந்' என்ற இரண்டு மந்த்ரங்களால் அபிமந்த்ரணம் பண்ணி, 'அம்ருதோபஸ்தரணமஸி' என்ற மந்த்ரத்தால் ஜலத்தை ஆசமனம் செய்து, பிறகு சுத்திக்காக மூன்று தடவை ஆசமனம்செய்து, 'யந்மதுந:' என்ற மந்த்ரத்தால் மூன்று தடவை மதுபர்க்கத்தை ப்ராசநம் பண்ணவேண்டும். ஒரு தடவை மந்த்ரத்தாலும், மற்று மிருதடவைகளில் மந்த்ரமில்லாமலும் சாப்பிடவேண்டும். பிறகு அம்ருதாபிதாநமஸி என்ற மந்த்ரத்தால் ஜலத்தை ப்ராசநம் பண்ணி, சுத்திக்காக மறுபடியும் மூன்று தடவை ஆசமநம் செய்யவேண்டும். பாக்கியுள்ள மதுபர்க்கத்தைத் தன்னால் அநுக்ரஹிக்கப்படவேண்டியவனுக்குக் கொடுக்கவேண்டும்.

மதுபர்க்க ப்ராசநத்திற்கு முன்னும் பின்னும் ஒரு தடவை ஆசமநம் செய்தால் போதும். அதுதான் ஸூத்ரத்தில் சொல்லப்படுகிறது. சுத்திக்காக இரண்டு அப்ப்ராசநத்திற்கும் உடனேயே செய்யவேண்டிய மூன்ருசமநங்கள் போதாயந ஸூத்ரத்தைப் பின்பற்றிச் செய்யப்படுகின்றன.

சிலருடைய அபிப்ராயப்படி "பூர்வாபோசநம்" முதல் உத்தாரபோசநம் வரை ஒரே போஜனகர்மாவாதலால் நடுவில் சுத்திக்காக மூன்று தடவை செய்யவேண்டிய ஆசமநம் கிடையாது. இரண்டாம் தடவை 'அம்ருதாபிதாநமஸி' என்ற மந்த்ரத்தால் ஜலம் சாப்பிட்டபிறகு போஜநம் பூர்த்தியாவதால் முடிவில் ஒருதடவைதான் சுத்திக்காக மூன்று தடவை ஆசமநம் செய்யவேண்டும். பாக்கியுள்ள மதுபர்க்கத்தை ப்ரம்ஹசாரிக்குக் கொடுக்கக்கூடாது.

ஷூதிஶ்யெஹொுவ ராஜா ஸ்வதிவா வுரொஹிதாய ॥கச॥

கொடுக்கப்பட்ட மதுபர்க்கத்தை வாங்கிக்கொண்ட உட னேயே "ராஜாவும்" "அதிபதியும்" மதுபர்க்கத்தை "புரோஹி தனிடம்" கொடுத்துவிடவேண்டும். புரோஹிதன் இதைப் பெற்று அபிமந்த்ரணம் முதலானவைகளைச் செய்து ப்ராசநம் வரை செய்யவேண்டும். மேலுள்ள கர்மாக்களை ராஜாவும், ஸ்தபதியும் செய்யவேண்டும்.

ஶளிதி ஶாம் ஷாஹ ॥ கரு ॥

ப்ராசனம் ஆனவுடன் பூஜை செய்பவன் 'கௌ:' என்று சொல்லிப் பசுவைக் கொடுக்கவேண்டும். இதை விசஸநம் செய்ய லாமா? அல்லது விட்டுவிடலாமா? என்பதில் பூஜைபெறுபவ னின் அபிப்ராயத்தை அறியவே 'கௌ:' என்று சொல்லுகிறான்.

உத்ஸ்ருஜத த்ருணான்யத்த்வித்யுத்ஸ்ரக்ஷ்யந் மாதா ருத்ராணாமிதி ஜபித்வா

உத்ஸ்ருஜத்ரணாந்யத்த்விதி உத்ஸ்ரக்ஷ்யந் மாதா ருத்ராணாம் இதி

ஷூதுமயா ஜீஹொதி ॥ கசு ॥

பூஜையைப் பெற்றுக்கொள்பவன் பசுவை விசஸநம்செய்து பூஜை செய்யலாம் என்று அனுமதி பண்ணுவானானால் 'கௌரஸ் யபஹதபாப்மா' என்ற மந்த்ரத்தால் பசுவை அபிமந்த்ரணம் பண்ணவேண்டும். இங்கு மம என்ற இடத்தில் பூஜையைப் பெறுபவன் தன் பெயரையும் 'அமுஷ்யச' என்ற இடத்தில் பூஜை செய்பவன் பெயரையும் குறிப்பிடவேண்டும்.

பிறகு பூஜை செய்பவன் பசுவை ஆலம்பம் முதலான கர்மாக்களால் மந்த்ரமில்லாமல் ஸம்ஸ்கரித்து வபையை எடுத்து வபாச்ரபணிகளால் க்ரஹித்து ஔபாஸனாக்னியிலாவது பாகாக்னி யிலாவது வபையை ச்ரபணம் பண்ணி நடுப்பலாச இலையிலாவது கடைசிப் பலாச இலையிலாவது வபையை அவதானம் பண்ணி உபஸ்தரணாபிகாரணங்களைச் செய்து 'அக்னி: ப்ரதம:' என்ற மந்த் ரத்தால் அக்னியில் ஹோமம் செய்யவேண்டும். பாக்கியுள்ளதை அவதான தர்மத்தால் அவதானம் பண்ணி அன்னத்துடன் கலந்து போஜனம் செய்யக் கொடுக்கவேண்டும். கலியுகத்தில் பசுவிச ஸநம் தடுக்கப்பட்டிருப்பதால் இந்தப் பக்ஷம் இப்பொழுது பரி க்ரஹிக்கத் தக்கதில்லை.

யத்யுத்ஸ்ருஜேத் உபாம்சூத்தரான் ஜபித்வோமுத்ஸ்ருஜதேத்யுச்சை: ॥ கள ॥

பூஜையைப் பெறுபவன் பசுவிசஸநம் வேண்டாமென்று நினைத்துப் பசுவை தன்னிஷ்டப்படிப் போக விட்டுவிடலாம் என்று கூறுவானுனல், பசுவை அவிழ்த்துவிட்டு, தன்னிஷ்டப்படி போகவிட்டுவிடலாம். அப்பொழுது அடுத்துள்ள 'யஜ்ஞோவர்த்ததாம்' என்ருரம்பிக்கும் நான்கு மந்த்ரங்களை உபாம்சுவாகச் சொல்லி ஜபித்து 'ஓம் உத்ஸ்ருஜத' என்று உரக்கச் சொல்ல வேண்டும்.

அந்நம் ப்ரோக்தம் உபாம்சூத்தரைரபிமந்த்ர்யோம் கல்பயதேத்யுச்சை: ॥ கஅ ॥

அந்நம் ஸித்தமானவுடன் 'பூதம்' என்று பூஜை செய்பவன் பூஜை பெறுபவனிடம் தெரிவிக்கவேண்டும். உடனே அவன் அடுத்துள்ள 'ஸபூதம் ஸாவிராட் தந்மாக்ஷாயி தஸ்யதேஶீய தந்மஊர்ஜம்தா:' என்ற ஐந்து மந்த்ரங்களால் ஸித்தமான அந்நத்தை அபிமந்த்ரணம் பண்ணி 'ஓம் கல்பயத' என்றுரக்கச் சொல்லவேண்டும். பிறகு போஜநம் செய்யவேண்டும். போதாயநருடைய ஸூத்ரப்படி முன்னல் நான்கு ப்ராஹ்மணர்களுக்குப்போஜநம் செய்வித்துப் பிறகு அந்நத்தை இவனுக்குக் கொண்டுவரவேண்டும்.

ஆசார்யாயர்த்விஜே ச்வசுராய ராஜ்ஞ இதி பரிஸம்வத்ஸராதுபதிஷ்ட்டத்ப்ய: ஸக்ருத் கார்ய: ॥ ககூ ॥

இவ்விதம் ஸ்நாதனுக்கு ஒரே தடவை மதுபர்க்கம் கொடுக்க வேண்டும். ஆனுல் ஆசார்யன், ருத்விக், ச்வசுரன்(மாமனுர்), ராஜா இவர்களுக்கு வர்ஷத்திற்கொருதடவை மதுபர்க்கம் கொடுக்க வேண்டும். மதுபர்க்கம் கொடுத்து ஒரு வர்ஷத்திற்குள் இவர்கள் மறுபடி க்ருஹத்திற்கு வந்தால் மறுபடியும் மதுபர்க்கம் கொடுக்க வேண்டியதில்லை. தர்மஸூத்ரத்திலும் மதுபர்க்கம் சொல்லப்பட்டிருந்தாலும் மூன்று த்ரவ்யங்கள், ஐந்து த்ரவ்யங்கள் இவைகளின் விகல்பம் கிடைப்பதற்காக இங்கு மறுபடியும் யார் யாருக்கு மதுபர்க்கம் கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிருர். ஸ்நாதகன், வேதாத்யயனம் செய்தவன் இவர்களுக்கு ஒரே தடவை மதுபர்க்கம். ஆசார்யாள் முதலியவர்களுக்கு வர்

ஷத்திற்கொரு தடவை மதுபர்க்கம் கொடுக்கலாம் என்பதைத் தெரிவிக்கவும் இங்கு மறுபடியும் விதி காணப்படுகிறது.

𑌸𑌕𑍃𑌤𑍍 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑍇 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯 ॥ ௨௦ ॥

லோகப்ரஸித்தனுகவும், தோஷமில்லாமல் சப்தப்ரயோகம் செய்து சாஸ்த்ர விரோதமில்லாமல் பேசுபவனுயுமிருப்பவனுக்கு ஒரே தடவை மதுபர்க்கம் கொடுக்கவேண்டும். ப்ரதிவர்ஷமில்லை.

மதுபர்க்கம் தர்மஸூத்ரத்திலும் விதிக்கப்பட்டிருந்தாலும் அங்குத் தர்மங்கள் சொல்லப்படவேஇல்லை. இங்குத்தான் மதுபர்க்கத்தின் தர்மங்கள் பூர்ணமாகச் சொல்லப்படுகின்றன. அதனுல் தர்மங்களை உபதேசிப்பதற்காகவே ஸூத்ரகாரர் இங்கு மதுபர்க்கவிதியைச் சொல்லுகிருர். தர்மஸூத்ரத்தில் தர்மங்கள் சொல்லப்படாவிட்டாலும் அங்குள்ள மதுபர்க்கத்திற்குத் தர்மங்கள் இங்கிருந்தே கிடைக்கின்றன.

𑌇𑌤𑌿 𑌤𑍍𑌰𑌯𑍋𑌦𑌶𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

**பதின்மூன்ருவது கண்டம் முற்றிற்று.**

---

𑌅𑌥 𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

## பதினுன்காவது கண்டம்.

---

𑌸𑍀𑌮𑌨𑍍𑌤𑍋𑌨𑍍𑌨𑌯𑌨𑌂 𑌪𑍍𑌰𑌥𑌮𑍇 𑌗𑌰𑍍𑌭𑍇 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍇 𑌮𑌾𑌸𑌿 ॥ ௧ ॥

ஏகாக்நிகாண்ட மந்த்ரங்களின் க்ரமத்தைப் பின்பற்றி அடுத்தாற்போல் ஸீமந்தம் முதலியவைகளைச் சொல்லுகிருர். 'ஸீமந்தோந்நயநம்' என்ற கர்மாவை முதல் கர்ப்பத்தில் நான்காவது மாதத்தில் செய்யவேண்டும். ஸ்த்ரீகளுடைய சிரஸ்ஸிலுள்ள கேசங்களுடைய மத்யத்தில் கல்பிக்கப்படும் ரேகைக்கு "ஸீமந்தம்" என்று பெயர். இவ்வித ரேகையை உண்டாக்க ஏற்பட்ட கர்மாவுக்கு ஸீமந்தோந்நயநம் என்று பெயர். இது கர்ப்பிணியான ஸ்த்ரீக்குச் செய்யப்படும் ஸம்ஸ்காரம். கர்ப்பத்தை உத்தேசித்து கர்ப்பாதாரத்திற்குச் செய்யப்படும் ஸம்ஸ்காரம். கர்ப்பத்திற்காதாரமான ஸ்த்ரீக்கு இந்த ஸம்ஸ்காரத்தை ஒரு தடவை செய்துவிட்டால், இந்த ஸம்ஸ்காரமுள்ள ஸ்த்ரீயிடத்தில் உண்டாகும் எல்லாக் கர்ப்பங்களுக்கும் ஸம்ஸ்காரம் ஏற்பட்டு

விடும். அதனுல் ஒவ்வொரு கர்ப்பங்களிலும் ஸீமந்தோந்நயநம் செய்யவேண்டுமென்பது கிடையாது.

ப்ராஹ்மணாந் போஜயித்வாऽऽஶிஷோ வாசயித்வாऽக்நே ர்பஸ்சாத்ருஹ்யா ஜ்யாஹுதீர் ஜுஹோதி தாதாததாது நோ ரயிம் இத்யேதாபிரஷ்டாபிர்ஜயாதி ப்ரப்ருதி ஸித்தமா தேநு தாநாத் ॥ ௨ ॥

முதல் நாளில் நாந்தீச்ராத்தத்தைச் செய்து, அன்றையதினம் ப்ராம்ஹண போஜனம் செய்வித்து, ஆசீர்வாதங்களை ப்ராம்ஹணர்களைச் சொல்லச்செய்துவிட்டு, அக்நிமித்வா என்ற பூர்வ தந்த்ரத்தை ஆரம்பித்து, ஆஜ்யபாகம் முடியச் செய்துகொண்டு, உடனே கர்ப்பிணியால் தொடப்பட்டவனுக அடுத்ததாயுள்ள 'தாதா ததாது நோ ரயிமிதி பதஸ்ர:' 'யஸ்த்வா ஹ்ருதா கீரிணேதி பதஸ்ர:' என்று சொல்லப்படும் எட்டு மந்த்ரங்களால் எட்டு ஹோமங்களைச் செய்துவிட்டு, ஜயாதி ஹோமங்கள் முதலிய உத்தர தந்த்ரங்களைச் செய்யவேண்டும்.

பரிஷேசநாந்தம் க்ருத்வாऽபரேணாக்நிம் ப்ராசீமுபவேஶ்ய த்ரேண்யா ஶலல்யா த்ரிபிஶ்ச தர்பபிஞ்ஜூலைஶ்ஶலாடுக்லப்ஸேநேதி ஸீமந்தமுந்நயதி வ்யாஹ்ருதீபிருத்தராப்யாம் ச ॥ ௩ ॥

பரிஷேசனம் முடியச் செய்துகொண்டு, அக்நியின் மேற்குப் புறத்தில் கர்ப்பிணியை கிழக்குமுகமாக உட்காரவைத்து, பதி மேற்குமுகமாக நின்றுகொண்டு, முள்ளம்பன்றியின் மூன்று இடங்களில் வெளுப்பு வர்ணமுள்ள முள், மூன்று தர்ப்ப புஞ்ஜீலங்கள் (தோகையோடு கூடிய தர்ப்பத்தின் தட்டைக்கு தர்ப்ப புஞ்ஜீலம் என்றுபெயர்) பேயத்திக்காயின் கொத்து, இவைகளைச் சேர்த்துக்கொண்டு கர்ப்பிணியின் சிரஸ்ஸில் கேசங்களுக்கு நடுவில் ரேகையை உண்டுபண்ணவேண்டும். மூன்று வ்யாஹ்ருதிகளும், அடுத்துள்ள 'ராகாமஹம், யாஸ்த்தேராகே' என்ற இரண்டு ருக்குகளும் இதற்கு மந்த்ரங்கள்.

காயதமிதி வீணாகாயிநௌ ஸம்ஶாஸ்தி ॥ ௪ ॥

வீணையைக்கொண்டு கானம் செய்பவர் இருவர்களைப் பார்த்து "பாடுங்கள்" என்று உத்தரவு இடவேண்டும்.

உத்தரயோ: பூர்வா ஸால்வாநாம் ப்ராஹ்மணாநாமிதரா ॥ ௫ ॥

அவர்கள் அடுத்த மந்த்ரங்களால் கானம் பண்ணவேண்டும். அவைகளில், 'யௌகந்தரிரேவநः' என்ற ருக்கைக்கொண்டு ஸால்வதேசத்தைச்சேர்ந்த ப்ராம்ஹண க்ஷத்ரியவைச்யர்களுக்கு கானம் செய்யவேண்டும். மற்றத் தேசங்களில் வஸிக்கும் ப்ராம்ஹணர்களுக்கு அடுத்த 'ஸோமஏவநோ ராஜேதி' என்ற மந்த்ரத்தால் கானம் பண்ணவேண்டும். மற்றத் தேசத்தைச் சேர்ந்த க்ஷத்ரிய வைச்யர்களுக்கு ஆச்வலாயந க்ருஹ்ய ஸூத்ரத்தில் (11-2-7) சொல்லப்பட்டபடி 'ஸோமோ நோ ராஜாZவது' என்ற மந்ரத்தால் கானம் பண்ணவேண்டும்.

நதீம் நிர்திஶேத்யஸ்யாம் வஸந்தி ॥ ௬ ॥

இரண்டு மந்த்ரத்தால் கானப் செய்யும் காலத்தில் அந்த மந்த்ரத்தில் உள்ள அஸௌ என்ற சப்தத்தின் ஸ்தானத்தில் அவரவர்கள் வஸிக்கும் தேசத்தில் உள்ள நதியைக் குறிப்பிட வேண்டும்.

யவாந் விரூடா⁴நாப³த்⁴ய வாக்³யதா நக்ஷத்ரேப்⁴ய: ॥ ௭ ॥

முளைகண்டுள்ள யவங்களை நூலில் கட்டி, கர்ப்பிணியின் சிரஸ்ஸில் சொருகவேண்டும். அதிலிருந்து நக்ஷத்ரோதயம் ஆகும்வரை பேசக்கூடாது. மௌனத்துடன் இருக்கவேண்டும்.

உதி³தேஷு நக்ஷத்ரேஷு ப்ராசீமுதீ³சீம் வா தி³ஶமுப நிஷ்க்ரம்ய வத்ஸமந்வாரப்⁴ய வ்யாஹ்ருதீர் ஜபித்வா வாசம் விஸ்ருஜேத் ॥ ௮ ॥

நக்ஷத்ரங்கள் உதயமான பிறகு புருஷன் கிழக்குப்புறமாகவாவது வடக்குப்புறமாகவாவது வெளிக்கிளம்பி, காளைக்கன்றை அந்வாரம்பணம் செய்துவிட்டு, வ்யாஹ்ருதிகளையும் ஜபித்துவிட்டுப் பேச ஆரம்பிக்கவேண்டும். சிலருடைய அபிப்ராயப்படி மௌனமாகத் தம்பதிகள் இருவர்களுமே இருக்கவேண்டும்.

பும்ஸவநம் வ்யக்தே க³ர்பே⁴ திஷ்யேண ॥ ௯ ॥

பும்ஸவநம் என்ற கர்மாவை கர்ப்பம் வ்யக்தமாக ஆனபிறகு புஷ்ய நக்ஷத்ரத்தில் செய்யவேண்டும். எந்தக் கர்மாவைச் செய்தால் கர்ப்பிணீ பிள்ளைக் குழந்தையையே ப்ரஸவிப்பாளோ, அதற்குப் பும்ஸவனம் என்று பெயர். கர்ப்பம் வ்யக்தமாகத் தெரியும் காலம் மூன்று அல்லது நான்காவது மாதம். நான்காவது

மாதத்தில் பும்ஸவநம் செய்வதானல் பும்ஸவநத்தைச் செய்த பிறகு ஸீமந்தத்தைச் செய்யவேண்டும். சிலருடைய அபிப்ராயப்படி ஸீமந்தத்தைச் செய்த பிறகுதான் அங்கும் பும்ஸவநத்தைச் செய்யவேண்டும்.

𑌨𑍍𑌯𑌗𑍍𑌰𑍋𑌧𑌸𑍍𑌯 𑌯𑌾 𑌪𑍍𑌰𑌾𑌚𑍍𑌯𑍁𑌦𑍀𑌚𑍀 𑌵𑌾 𑌶𑌾𑌖𑌾 𑌤𑌤𑌸𑍍𑌸𑌵𑍃𑌷𑌣𑌾𑌂 𑌶𑍁𑌙𑍍𑌗𑌾𑌮𑌾𑌹𑍃𑌤𑍍𑌯 𑌸𑍀𑌮𑌨𑍍𑌤𑌵𑌦𑍁𑌪𑌸𑌮𑌾𑌧𑌾𑌨𑌾𑌦𑌿 ॥ ௧௦ ॥

ஆலமரத்தின் கிழக்கு முகமாக அல்லது வடக்குமுகமாக உள்ள கிளையிலிருந்து நுனி முளையைப் பழத்தோடு எடுத்துக் கொண்டு, பிறகு ஸீமந்தம் போல் 'அக்நிமித்வா' என்ற பூர்வ தந்த்ரத்தை ஆரம்பித்துப் பரிஷேசநாந்தம் செய்யவேண்டும். ஸீமந்தத்தில் சொல்லப்பட்டவைபோலவே இங்கும் ப்ரதாந ஹோமங்கள்.

𑌅𑌨𑌵𑌸𑍍𑌨𑌾𑌤𑌯𑌾 𑌕𑍁𑌮𑌾𑌰𑍍𑌯𑌾 𑌦𑍃𑌷𑌦𑍍𑌵𑌤𑍍𑌸𑍇 𑌦𑍃𑌷𑌦𑍍𑌵𑌤𑍍𑌸𑍇𑌨 𑌪𑍇𑌷𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌪𑌰𑌿𑌪𑍍𑌲𑌾𑌵𑍍𑌯𑌾𑌪𑌰𑍇𑌣𑌾𑌗𑍍𑌨𑌿𑌂 𑌪𑍍𑌰𑌾𑌚𑍀𑌮𑍁𑌤𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌨𑌿𑌪𑌾𑌤𑍍𑌯𑌾𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑍇𑌨 𑌯𑌜𑍁𑌷𑌾 𑌪𑍁𑌂𑌸𑍁𑌵𑌨𑌮𑌸𑍀𑌤𑌿 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌨𑌾𑌸𑌿𑌕𑌾𑌚𑍍𑌛𑌿𑌦𑍍𑌰𑍇𑌽𑌵𑌨𑌯𑌤𑌿 ॥ ௧௧ ॥

ப்ரௌடையாகாத பெண்ணைக்கொண்டு, சிறிய பாராங்கல்லில் சிறிய பாராங்கல்லால் ஆலங்காய்களையும் மொக்கையும் நன்றாக நசுக்கி, வஸ்த்ரத்தின் நுனியில் சிறிதுபாகத்தை நனைத்து அதில் அதை எடுத்து, அக்நிக்கு மேல்புறமாகக் கர்ப்பிணியை நிமிர்ந்து மேல் நோக்கின முகத்தோடு இருக்கும்படி செய்து, அடுத்த 'பும்ஸுவநமஸி' என்ற மந்த்ரத்தால் கட்டை விரலைக் கொண்டு ஆலங்காயின் மொக்குகளின் ரஸத்தை வலது மூக்கின் த்வாரத்தில் பிழியவேண்டும்.

𑌪𑍁𑌮𑌾𑌂𑌸𑌂 𑌜𑌨𑌯𑌤𑌿 ॥ ௧௨ ॥

இந்தக் கர்மாவைச் செய்வது மூலம் கர்ப்பிணீ பிள்ளையையே உண்டு பண்ணுவாள்.

𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌂𑌸𑍁𑌵𑌨𑌮𑍍 ॥ ௧௩ ॥

இங்குச் சீக்ரமாக ப்ரஸவிப்பதற்கான கர்மா சொல்லப்படுகிறது.

68305

அநாப்ரீதேந ஶராவேணாநுஸ்ரோதஸமுதகமாஹ்ருத்ய பத்தஸ்தூர்யந்தீம் நிதாய மூர்தஞ்சோஷ்யந்தீம் உத்தரேண யஜுஷாऽபிம்ருஶ்யைதாபிரத்பிருத்தராபிரவோக்ஷேத் ॥ ௧௪ ॥

புதிதாகவும் ஜலஸம்பந்தம் இதுவரை இல்லாததாகவுமுள்ள பாத்ரத்தைக்கொண்டு, நதியில் ஜலம் போகும் வழியிலேயே ஜலத்தை எடுத்து, ப்ரஸவ வேதனையுள்ள கர்ப்பிணியின் இரண்டு கால்களின் கீழ் தூர்யந்தீ என்ற ஓஷதியை வைத்து, ப்ரஸவ பீடையால் வாடும் கர்ப்பிணியின் சிரஸ்ஸை ‘ஆபிஷ்ட்வாஹம்’ என்ற யஜுர்மந்த்ரத்தால் தொட்டு, இங்குக்கொண்டுவரப்பட்ட ஜலத்தால் ‘யதைவ ஸோம:’ என்றாரம்பிக்கும் மூன்று ருக்குகளால் அவோக்ஷணம் செய்யவேண்டும். அவோக்ஷணம் என்பது நிமிர்ந்துள்ள கைகளால் ஜலத்தைத் தெளிப்பது.

சிலருடைய அபிப்ராயப்படி ‘சோஷ்யந்தீம்’ என்ற பதமும் ஓஷதியைக் குறிப்பிடுகிறது. அதனால் கர்ப்பிணியின் கால்களில் ‘தூர்யந்தீ’ என்ற ஓஷதியையும், சிரஸ்ஸில் ‘சோஷ்யந்தீ’ என்ற ஓஷதியையும் வைத்து அபிமந்த்ரணம் செய்யவேண்டும்.

யதி ஜராயு ந பதேதேவம்விஹிதாபிரேவாத்பிருத்தராப்யாமவோக்ஷேத் ॥ ௧௫ ॥

கர்ப்பக்கொடி விழாமல் போனால் கீழே சொல்லப்பட்டபடி கொண்டுவரப்பட்ட ஜலங்களால் ‘திலதேவபத்யஸ்வ’ ‘நிரைது’ என்ற இரண்டு மந்த்ரங்களால் அவோக்ஷணம் செய்யவேண்டும்.

இதி சதுர்தஶ: கண்ட: ॥

**பதினான்காவது கண்டம் முற்றிற்று.**

---

அத பஞ்சதஶ: கண்ட: ॥

## பதினைந்தாவது கண்டம்.

---

ஜாதம் வாத்ஸப்ரேணாபிம்ருஶ்யோத்தரேண யஜுஷோபஸ்த ஆதாயோத்தராபிரபிமந்த்ரணம் மூர்தந்யவக்ராணம் தக்ஷிணே கர்ணே ஜப: ॥ ௧ ॥

இங்குக் குழந்தை பிறந்தவுடன் செய்யவேண்டிய ஜாதகர்மா சொல்லப்படுகிறது.

பிறந்த குழந்தையை 'வத்ஸப்ரீ' என்ற மஹர்ஷியால் கண்டுபிடிக்கப்பட்ட 'திவஸ்பரி ப்ரதமம்' என்ற அனுவாகத்தால் அபிமர்சனம் செய்து, அடுத்த 'அஸ்மிந்நஹம்' என்ற மந்த்ரத்தால் குழந்தையை மடியில் எடுத்துவைத்துக்கொண்டு 'அங்காதங்காத்' 'அச்மாபவ' என்ற இரண்டு மந்த்ரங்களாலும் குழந்தையை அபிமந்த்ரணம் செய்யவேண்டும். அவ்விதமே மேற்சொல்லப்பட்ட இரண்டு மந்த்ரங்களாலேயே சிரஸ்ஸில் மோக்கவேண்டும். இந்த இரண்டு மந்த்ரங்களையும் குழந்தையின் வலது காதில் ஜபிக்கவேண்டும்.

சிலருடைய அபிப்ராயப்படி 'உத்தராப்யாமபிமந்த்ரணம், மூர்த்தந்யவக்ராணம், தக்ஷிணே கர்ணே ஜாப:' என்று ஸூத்ரத்தின் அமைப்பு. இதனால் 'அங்காதங்காத்'என்ற மந்த்ரத்தால் அபிமந்த்ரணம், 'அச்மாபவ' என்ற மந்த்ரத்தால் உச்சி மோப்பது, 'மேதாம்தே தேவ:' என்ற மந்த்ரத்தால் வலது காதில் ஜபம் என்று ஏற்படுகிறது. ஆச்வலாயந ஸூத்ரத்தில் 'மேதாம்தே தேவ:' என்ற மந்த்ரத்தால் காதில் ஜபிக்கவேண்டுமென்று சொல்லப்படுவதால் இந்த வ்யாக்யாநம் ஆச்வலாயநக்ருஹ்யத்தோடு பொருந்துகிறது. மேதாஜநநம் என்று இதற்குப் பெயர்.

நக்ஷத்ரநாமைவ நிர்திசதி ॥ உ ॥

உச்சி மோப்பதற்காக ஏற்பட்டுள்ள மந்த்ரத்தில் உள்ள 'அஸௌ' என்ற சப்தத்தின் ஸ்தானத்தில் அந்தந்த நக்ஷத்ரத்தில் பிறந்தவன் என்ற அடையாளத்துடன் நக்ஷத்ரத்தைக் குறிப்பிடவேண்டும். உதாஹரணமாக 'ரோஹிணீ, ரேவதீ, மகம், ம்ருகசீர்ஷம், ஜ்யேஷ்டா, சித்ரா' இந்த நக்ஷத்ரங்களில் பிறந்த குழந்தைகளை, ரௌஹிண, ரைவத, மாக, மார்கசீர்ஷ, ஜ்யைஷ்ட, சைத்ர என்று குறிப்பிடவேண்டும். ப்ரோஷ்டபதத்தில் பிறந்ததை 'ப்ரௌஷ்டபாத' என்றும், அபபரணீ, ச்ரவணம், சதபிஷக், அச்வதீ இவைகளில் பிறந்த குழந்தைகளை அபபரண, ச்ரவண, சதபிஷக், அச்வயுக், என்றாவது, ஆபபரண, ச்ராவண, சாதபிஷக், ஆச்வயுஜ என்றாவது சொல்லலாம். க்ருத்திகை, புஷ்யம், ஆச்லேஷம், பூரம், உத்திரம், ஹஸ்தம், விசாகம், அநூராதம், பூராடம், உத்திராடம், அவிட்டம் இவைகளில் பிறந்த குழந்தைகளை க்ருத்திக, திஷ்ய, ஆச்லேஷ, பல்குந, ஹஸ்த, விசாக, அநூராத, அஷாட, ச்ரவிஷ்ட என்று குறிப்பிடவேண்டும்.

திருவாதிரை, மூலம் இவைகளில் பிறந்த குழந்தைகளை ஆர்த்ரக, மூலக என்று சொல்லவேண்டும். ஸ்வாதீ, புநர்வஸூ இதில் பிறந்தவர்களை ஸ்வாதே, புநர்வஸோ என்று சொல்ல வேண்டும். ஜாதகர்மாவில் அஸௌ சப்தத்தில் ஸம்புத்யந்த மாகவே குறிப்பிடவேண்டும்.

𑌤𑌦𑍍𑌰𑌹𑌸𑍍𑌯𑌂 𑌭𑌵𑌤𑌿 ॥ ௯ ॥

அந்த நக்ஷத்ர நாமம் எப்பொழுதும் ரஹஸ்யமாகவே உச்சரிக்கப்படவேண்டும்.

𑌮𑌧𑍁 𑌘𑍃𑌤𑌮𑌿𑌤𑌿 𑌸𑌂𑌸𑍃𑌜𑍍𑌯 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌦𑌰𑍍𑌭𑍇𑌣 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌂 𑌨𑌿𑌷𑍍𑌟𑌰𑍍𑌕𑍍𑌯𑌂 𑌬𑌦𑍍𑌧𑍍𑌵𑌾𑌵𑌧𑌾𑌯𑍋𑌤𑍍𑌤𑌰𑍇𑌣 𑌯𑌜𑍁𑌷𑌾 𑌕𑍁𑌮𑌾𑌰𑌂 𑌪𑍍𑌰𑌾𑌶𑌯𑌿𑌤𑍍𑌵𑍋𑌤𑍍𑌤𑌰𑌾𑌭𑌿𑌃 𑌪𑌞𑍍𑌚𑌭𑌿𑌃 𑌸𑍍𑌨𑌾𑌪𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌦𑌧𑌿 𑌮𑌧𑍁 𑌘𑍃𑌤𑌮𑌿𑌤𑌿 𑌸𑌂𑌸𑍃𑌜𑍍𑌯 𑌕𑌾𑌂𑌸𑍍𑌯𑍇𑌨 𑌪𑍃𑌷𑌦𑌾𑌜𑍍𑌯𑌂 𑌵𑍍𑌯𑌾𑌹𑍃𑌤𑍀𑌭𑌿𑌰𑍋𑌙𑍍𑌕𑌾𑌰𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌾𑌭𑌿𑌃 𑌕𑍁𑌮𑌾𑌰𑌂 𑌪𑍍𑌰𑌾𑌶𑌯𑌿𑌤𑍍𑌵𑌾𑌽𑌦𑍍𑌭𑌿𑌃 𑌶𑍇𑌷𑌂 𑌸𑌂𑌸𑍃𑌜𑍍𑌯 𑌗𑍋𑌷𑍍𑌠𑍇 𑌨𑌿𑌨𑌯𑍇𑌤𑍍 ॥ ௰ ॥

தேன், நெய் இவைகளைக் கலந்து வெண்கலப் பாத்ரத்தில் வைத்து, நிஷ்டர்க்யத்தில் ஹிரண்யத்தைக் கட்டி அதனால் கலந்துள்ள ரஸத்தை எடுத்து, அடுத்துள்ள 'மேதாம்தே தேவ:' என்ற ருக்கினாலும், 'த்வயி மேதாம்' என்றாரம்பிக்கும் நான்கு யஜுர் மந்த்ரங்களாலும் குழந்தைக்கு ப்ராசநம் செய்துவைக்க வேண்டும். பிறகு அடுத்த 'க்ஷேத்ரியைத்வா' என்றாரம்பிக்கும் ஐந்து மந்த்ரங்களால் ஸ்நாநம் செய்துவைக்கவேண்டும். ப்ரா சநம், ஸ்நாநம் இவைகளை எல்லா மந்த்ரங்களையும் சொல்லிவிட்டு, கடைசியில் ஒரு தடவை செய்துவைக்கவேண்டும். பிறகு தயிர், நெய் இவைகளை வெண்கலப் பாத்ரத்தில் கலந்து அந்தப் பாத் ரத்தைக்கொண்டே அந்த ப்ருஷதாஜ்யத்தை பூ: ஸ்வாஹா, புவ: ஸ்வாஹா, ஸுவ: ஸ்வாஹா, ஓம் ஸ்வாஹா என்ற நான்கு மந்த்ரங்களாலும் குழந்தைக்கு ஒரே தடவை ப்ராசனம் பண்ணிவைத்துப் பாத்ரத்தில் மிகுந்துள்ளதை ஜலத்தோடு கலந்து மாட்டுக் கொட்டிலில் கொட்டிவிடவேண்டும்.

சிலருடைய அபிப்ராயப்படி 'த்வயி மேதாம்' என்றாரம் பிக்கும் மூன்று மந்த்ரங்களாலேயே ப்ராசநம், ஸ்நாநம் இவை களையும் ஒவ்வொரு மந்த்ரத்திற்கொருதடவை செய்யவேண்டும்.

𑌉𑌤𑍍𑌤𑌰𑌯𑌾 𑌮𑌾𑌤𑍁𑌰𑍁𑌪𑌸𑍍𑌥 𑌆𑌧𑌾𑌯𑍋𑌤𑍍𑌤𑌰𑌯𑌾 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂
𑌸𑍍𑌤𑌨𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌧𑌾𑌪𑍍𑌯𑍋𑌤𑍍𑌤𑌰𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌮𑌭𑌿𑌮𑍃𑌶𑍍𑌯𑍋𑌤𑍍𑌤
𑌰𑍇𑌣 𑌯𑌜𑍁𑌷𑌾 𑌸𑌂𑌵𑌿𑌷𑍍𑌟𑌂 ॥ ௫ ॥

பிறகு குழந்தையை 'மாதே குமாரம்' என்ற மந்த்ரத்தால் தன் மடியிலிருந்து எடுத்து, தாயாரின் மடியில் வைத்து, 'அயம் குமார:' என்ற மந்த்ரத்தால் வலது ஸ்தனத்தைப் பானம் பண்ணும்படி செய்து, 'யத்பூமே:' என்றாரம்பிக்கும் இரண்டு மந்த்ரங்களால் பூமியைத் தொடவேண்டும். அபிமந்த்ரணம் பண்ணிய இடத்தில் குழந்தையைப் படுக்கவைக்கவேண்டும். படுத்துக்கொண்டிருக்கும் குழந்தையை 'நாமயதி' என்ற மந்த்ரத்தால் தொடவேண்டும்.

𑌉𑌤𑍍𑌤𑌰𑍇𑌣 𑌯𑌜𑍁𑌷𑌾 𑌶𑌿𑌰𑌸𑍍𑌤 𑌉𑌦𑌕𑍁𑌮𑍍𑌭𑌂 𑌨𑌿𑌧𑌾𑌯 𑌸𑌰𑍍𑌷-
𑌪𑌾𑌨𑍍 𑌫𑌲𑍀𑌕𑌰𑌣𑌮𑌿𑌶𑍍𑌰𑌾𑌨𑌞𑍍𑌜𑌲𑌿𑌨𑍋𑌤𑍍𑌤𑌰𑍈𑌰𑍍𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍈𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿
𑌸𑍍𑌵𑌾𑌹𑌾𑌕𑌾𑌰𑌂 𑌹𑍁𑌤𑍍𑌵𑌾 𑌸𑌂𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌤𑌰𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑍇 𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑍇
𑌚 𑌤𑍂𑌷𑍍𑌣𑍀𑌮𑌗𑍍𑌨𑌾𑌵𑌾𑌵𑌪𑌤𑍇𑌤𑌿 ॥ ௬ ॥

அடுத்த 'ஆபஸ்ஸுப்தேஷு' என்ற மந்த்ரத்தால் குழந்தையின் தலையின் ஸமீபத்தில் உதகும்பத்தை வைக்கவேண்டும். பிறகு லௌகிகமான அக்நியை ப்ரதிஷ்டை பண்ணி, தவிடுகளுடன் கடுகைக் கலந்து, 'அயம்கலிம்' என்றாரம்பிக்கும் எட்டு மந்த்ரங்களால் அஞ்சலியினால் ஒவ்வொரு ஸ்வாஹாகாரத்திற்கும் மூன்று தடவை ஹோமம் செய்யவேண்டும். மூன்று ஹோமங்களில் முதலில் ஸ்வாஹாகாராந்தமான மந்த்ரத்துடனும், பிறகு மந்த்ரமில்லாமல் வெறும் ஸ்வாஹாகாரத்தோடு மட்டும் இரண்டு தடவை ஹோமம் செய்யவேண்டும். பிறகு, கர்ப்ப க்ருஹத்தைக் காவல் புரிபவர்களைப் பார்த்து நீங்கள் ஒவ்வொரு தடவையிலும் கர்ப்ப க்ருஹத்திற்குள் ப்ரவேசித்த உடனேயே மந்த்ரமில்லாமல் தவிடு கலந்த கடுகை அக்நியில் போடவேண்டும், என்று உத்தரவிடவேண்டும்.

𑌏𑌵𑌮𑌹𑌰𑌹𑌰𑌾𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌮𑌣𑌾𑌤𑍍 ॥ ௭ ॥

இவ்விதம் குழந்தை பிறந்து பத்துத்தினங்கள் முடியும்வரை ப்ரதிதினமும் செய்யவேண்டும். சிலருடைய அபிப்ராயப்படி கர்ப்ப க்ருஹத்தில் ப்ரவேசிப்பவர்கள் மந்த்ரமில்லாமல் தவிடு, கடுகு இவைகளைக் கலந்து அக்நியில் போடுவதைச் செய்யவேண்

டும். மற்றுஞ் சிலருடைய அபிப்ராயப்படி மந்த்ரத்துடன் எட்டு ஹோமங்களையும் முன்சொன்னபடி ப்ரதிதினமும் செய்து இதையும் செய்யவேண்டும்.

தசம்யாமுத்திதாயாம் ஸ்நாதாயாம் புத்ரஸ்ய
நாம ததாதி பிதா மாதேதி ॥ ௮ ॥

இங்கு நாமகரணம் சொல்லப்படுகிறது. பத்து நாட்கள் கழிந்து, ப்ரஸவித்தவள் ஸ்நாநம் செய்தபிறகு, குழந்தையின் மாதா பிதா இருவரும் சேர்ந்து குழந்தைக்கு நாமகரணம் செய்யவேண்டும். இந்தக் கர்மாவுக்கு அங்கமாக ப்ராம்ஹண போஜநம் புண்யாஹம் இவைகளைச் செய்யவேண்டும்.

த்வ்யக்ஷரம் சதுரக்ஷரம் வா நாமபூர்வமாக்யாதோத்தரம்
தீர்காபிநிஷ்டாநாந்தம் கோஷவதாத்யந்தரந்தஸ்தம் ॥ ௯ ॥

குழந்தைக்கு இடப்படும் பெயர் பின்வருமாறு இருக்க வேண்டும். இரண்டு அல்லது நான்கு எழுத்துள்ளதாயும், இரண்டு பதங்கள் உள்ளதாயும், அவைகளில் முதல் பதம் பெயர்ச்சொல்லாயும், உத்தர பதம் க்ரியா வாசகமாயும் இருக்க வேண்டும். தீர்க்கமான வர்ணத்திற்குப்பிறகு வரும் விஸர்க்கத்தை முடிவில் கொண்டதாயுமிருக்கவேண்டும். வர்க்கங்களுடைய மூன்றும், நான்காம் வர்ணங்கள் ஹகாரம் இவைகளை ஆதியில் கொண்டதாயும், நடுவில் அந்தஸ்தை எழுத்தைக் கொண்டதாயுமிருக்கவேண்டும். 'கோப்ரீ:' 'கோஸ்ரீ:' 'த்ரவிணோதா:' 'வரிவோதா:' என்பதுபோல் பெயர் இருக்கவேண்டும்.

அபி வா யஸ்மிந்ஸ்வித் ப்ரத்யவஸர்கஸ்ஸ்யாத்தத்தி ப்ர
திஷ்டிதமிதி ஹி ப்ராஹ்மணம் ॥ ௧௦ ॥

அல்லது எந்தப்பெயரில் 'ஸு' என்ற உபஸர்க்கம் இருந்து வருகிறதோ அதுதான் சாச்வதமாக இருக்கும் என்று ப்ராஹ்மணம் கூறுகிறது. இவ்விதப் பெயர் 'ஸுபத்ரன்' 'ஸுமுகன்' 'ஸுப்ரஹ்மண்யன்' 'ஸுதர்சனன்' போன்றது. போதாயநர், 'ருஷிகள், தேவதைகள், பூர்வபுருஷர்கள் இவர்களின் பெயர்களையும் குழந்தைக்கு வைக்கலா'மென்று கூறுகிறார்.

அயுஜாக்ஷரம் குமார்யா: ॥ ௧௧ ॥

ஒற்றைப்படை எழுத்துக்கள் உள்ள பெயர்களைப் பெண் குழந்தைக்கு வைக்கவேண்டும். 'பார்வதீ' 'ருக்மிணீ' 'கமலா' இவை உதாஹரணம்.

ஜாதகர்மாமுதல் சௌளம் வரையுள்ள எல்லாக் கர்மாக்களை யும் பெண் குழந்தைக்கு மந்த்ரமில்லாமல் செய்யவேண்டும்.

ப்ரவாஸாதே3த்ய புத்ரஸ்யோத்தராப்4யாமபி4மந்த்ரணம் மூர்த4ந்யவக்4ராணம் த3க்ஷிணே கர்ணே உத்தராந் மந்த்ராந் ஜபேத் ॥ ௧௨ ॥

வெளியூர்களுக்குப் போய் திரும்பிவந்ததும் "அங்காதங் காத்" "அச்மாபவ" என்ற இரண்டு மந்த்ரங்களால் பிள்ளைக் குழந்தையை அபிமந்த்ரணம் செய்து உச்சி மோக்கவேண்டும். பிறகு வலது காதில் "அக்நிராயுஷ்மாந்" என்றாரம்பிக்கும் ஐந்து மந்த்ரங்களை ஜபிக்கவேண்டும். சிலருடைய அபிப்ராயப்படி முன் போல் இங்கும் "அங்காதங்காத்" என்றதால் அபிமந்த்ரணமும் "அச்மாபவ" என்பதால் உச்சி மோப்பதும் செய்யப்பட வேண்டும்.

குமார்யா உத்தரேண யஜுஷாபி4மந்த்ரயதே ॥ ௧௩ ॥

ஊரிலிருந்து திரும்பிவந்த பிதா பெண்குழந்தையை "ஸர்வஸ்மாதாத்மந:" என்ற மந்த்ரத்தால் அபிமந்த்ரணம் செய்ய வேண்டும். விவாஹமாகும்வரை பெண்ணை அபிமந்த்ரணம் செய்யலாம். புத்ரனை எப்பொழுதும் அபிமந்த்ரணம் செய்யலாம்.

இதி பஞ்சத3ஶ: க2ண்ட3: ॥

## பதினைந்தாவது கண்டம் முற்றிற்று.

---

அத2 ஷோட3ஶ: க2ண்ட3: ॥

## பதினாறாவது கண்டம்

---

ஜந்மநோ(அ)தி4 ஷஷ்டே2 மாஸி ப்3ராஹ்மணாந் போ4ஜயித்வா ஆஶிஷோ வாசயித்வா த3தி4 மது4 க்4ருதமோத3நமிதி ஸம்ஸ்ருஜ்யோத்தரைர்மந்த்ரை: குமாரம் ப்ராஶயேத் ॥ ௧ ॥

இங்கு அந்ந ப்ராசநம் சொல்லப்படுகிறது:

பிறந்தது முதல் 6-ஆவது மாதத்தில் இது செய்யப்பட வேண்டும். இங்கு மாதங்களைக் கணக்கிடும்பொழுது பிறந்த நாளிலிருந்தே நாள் கணக்கில் 6-ஆவது மாதத்தில் அந்ந ப்ராசநம் செய்யவேண்டும்.

ப்ராம்ஹணர்களுக்குப் போஜநம் செய்வித்து, அவர்களைக் கொண்டு ஆசீர்வாதம் செய்யச்சொல்லி, தயிர், தேன், நெய், அந்நம் இவைகளைக் கலந்து, ‘பூராபாம்த்வௌஷதீநாம்’ என்றாரம்பிக்கும் நான்கு மந்த்ரங்களால் குழந்தைக்கு அந்ந ப்ராசநம் செய்துவைக்கவேண்டும். மந்த்ரத்திலுள்ள ‘அஸௌ’ என்ற சப்தத்தின் ஸ்தானத்தில் குழந்தையின் பெயரை ஸம்புத்யந்தமாக க்ரஹிக்கவேண்டும். ஒவ்வொரு மந்த்ரத்திற்கொருதடவை ப்ராசநம் உண்டென்று சிலர் கூறுகிறார்கள். எல்லா மந்த்ரங்களையும் சொல்லிக் கடைசியில் ஒரே தடவை ப்ராசநம் என்றும் சிலர் கூறுகின்றனர்.

𑌤𑍈𑌤𑍍𑌤𑌿 (𑌰𑍇) 𑌣𑍇𑌤𑍍𑌯𑍇𑌕𑍇 ॥ ௨ ॥

சில மகர்ஷிகளின் அபிப்ராயப்படி, தித்திரி பக்ஷியின் மாம்ஸத்தைக்கொண்டு அந்ந ப்ராசநம் செய்துவைக்கவேண்டும்.

𑌜𑌨𑍍𑌮𑌨𑍋𑌽𑌧𑌿 𑌤𑍃𑌤𑍀𑌯𑍇 𑌵𑌰𑍍𑌷𑍇 𑌚𑍌𑌲𑌂 𑌪𑍁𑌨𑌰𑍍𑌵𑌸𑍍𑌵𑍋𑌃 ॥ ௩ ॥

இங்குச் சௌளகர்மா சொல்லப்படுகிறது.

பிறந்தது முதல் நாட்களை எண்ணி மூன்றாவது வர்ஷத்தில் புநர்வஸூ நக்ஷத்ரத்தில் செய்யப்படவேண்டும்.

குழந்தையின் சிரஸ்ஸில் உள்ள கேசங்களை ஒழுங்குபடுத்தி, சிகை வைக்க வழி தேடுவது “சூடாகர்மா”.

𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌨𑌾𑌂 𑌭𑍋𑌜𑌨𑌮𑍁𑌪𑌨𑌯𑌨𑌵𑌤𑍍 ॥ ௪ ॥

ப்ராஹ்மண போஜநம், ஆசீர்வாதம், குமார போஜநம் இவைகளை உபநயநத்தில் செய்வதுபோல் செய்யவேண்டும்.

𑌸𑍀𑌮𑌨𑍍𑌤𑌵𑌦𑍁𑌪𑌸𑌮𑌾𑌧𑌾𑌨𑌾𑌦𑌿 ॥ ௫ ॥

ஸீமந்தம்போல் ப்ரதான ஹோமங்களுடன் பூர்வோத்தர தந்த்ரங்களைப் பரிஷேசநம் முடியச் செய்யவேண்டும்.

𑌅𑌪𑌰𑍇𑌣𑌾𑌗𑍍𑌨𑌿𑌂 𑌪𑍍𑌰𑌾𑌙𑍍𑌮𑍁𑌖𑌸𑍍𑌯 𑌤𑍍𑌰𑍇𑌣𑍍𑌯𑌾 𑌶𑌲𑌲𑍍𑌯𑌾
𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌰𑍍𑌦𑌰𑍍𑌭𑌪𑌿𑌞𑍍𑌜𑍂𑌲𑍈𑌃 𑌶𑌲𑌾𑌟𑍁𑌗𑍍𑌲𑌪𑍍𑌸𑍇𑌨𑍇𑌤𑌿 𑌤𑍂𑌷𑍍𑌣𑍀𑌂
𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌵𑌿𑌨𑍀𑌯 𑌯𑌥𑌰𑍍𑌷𑌿 𑌶𑌿𑌖𑌾 𑌨𑌿𑌦𑌧𑌾𑌤𑌿 ॥ ௬ ॥

அக்நிக்கு மேல்புறத்தில், கிழக்குமுகமாகக் குமாரனை உட்காரவைத்து, முள்ளம்பன்றியின் முள்ளினாலும், “தர்ப்ப புஞ்ஜீலங்”களாலும், பேயத்திக்காயின் கொத்தினாலும் மந்த்ரமில்லா

மல் மௌநத்துடன் சிகை வைப்பதற்கான கேசங்களையும் க்ஷௌரம் மூலம் கழிக்கவேண்டிய கேசங்களையும் தனிப்படுத்தி, அவரவர்களுடைய ப்ரவரருஷிகளின் எண்ணிக்கைக்கனுகுணமாக சிகைகளை வைக்கவேண்டும்.

யதா வைஷாம் குலதர்மஸ்ஸ்யாத் ॥ ௭ ॥

அல்லது அவர்களுடைய குலதர்மப்படி சிகையை வைத்துக் கொள்ளலாம்.

ஶீதாஸ்வப்ஸு ஸம்ஸ்ருஜ்ய நாத்யாகௌ நியாநாத் ஸ்நாநீ ॥ ௮ ॥

உபநயநம்போல் ‘உஷ்ணேநவாயோ’ என்ற மந்த்ரத்தால் உஷ்ணஜலத்தை சீதஜலத்தில் சேர்த்துக் கலப்பதுமுதல் வபந கர்மாவை, வபநம் செய்யப்பட்ட கேசங்களை அத்திமரத்திலாவது தர்ப்ப ஸ்தம்பத்திலாவது வைக்கும்வரை செய்யவேண்டும்.

க்ஷுரம் வ்ருக்ஷாஸ்ய நிதயாதி ॥ ௯ ॥

கத்தியை அலம்பிவைக்கவேண்டும்.

தேந த்ர்யஹம் கர்ம நிவ்ருத்தி: ॥ ௧௦ ॥

அந்தக் கத்தியைக்கொண்டு மூன்று நாட்களுக்கு வேறு உபகர்மாவைச் செய்யக்கூடாது.

வரம் ததாதி ॥ ௧௧ ॥

இந்தக் கர்மா முடிந்தவுடன் ப்ராம்ஹணனுக்கு வரம் கொடுக்கவேண்டும். பசுவைத் தக்ஷிணையாகக் கொடுக்கவும்.

ஏவம் கோதாநம் அந்யஸ்மிந்நபி நக்ஷத்ரே ஷோடசே வர்ஷே ॥

இவ்விதமே சௌளம்போல் கோதானம் என்றகர்மாவைப் பிறந்ததுமுதல் 16-ஆவது வயதில் செய்யவேண்டும். வேறு நக்ஷத்ரங்களிலும் இதைச் செய்யலாம்.

அக்நிகோதாநோ வா ஸ்யாத் ॥ ௧௩ ॥

அக்நிகோதானமாகவாவது இதைச் செய்யலாம். அதன்படி ‘அக்நயேகாண்டருஷயேஸ்வாஹா’ என்ற ஒரே ப்ரதான ஆகுதியுடன் பூர்வோத்தர தந்த்ரங்களைச் சௌளம்போல் செய்யவேண்டும். வபந கர்மாவையும் க்ஷுரத்தை அலம்பும்வரை செய்யவேண்டும்

பூர்வோத்தராங்கங்களைச் சௌளம்போல் செய்துகொண்டு

ப்ராதன ஹோமஸ்தானத்தில் ஆக்நேய உபாகரணம்போல் ஹோமாதிகளைச் செய்யவேண்டுமென்று சிலர் கூறுகின்றனர்.

ஸம்வத்ஸரம் கோ³தா³னவ்ரதமேக உபதி³ஶந்தி ॥ ௧௪ ॥

கோதானகர்மா முடிந்தபிறகு ஒரு வர்ஷம் கோதான வ்ரதத்தை அனுஷ்டிக்கவேண்டுமென்று சில மகர்ஷிகள் கூறுகின்றனர். ஏகே என்று கூறுவதால் இது விகல்பிதம் என்று ஏற்படுகிறது.

ஸஶிகா²ன் கேஶான் வாபயதே ॥ ௧௫ ॥

கோதான கர்மாவில் சிகையுடன்கூட எல்லாக்கேசங்களையும் வபநம் செய்து கொள்ளவேண்டும். இது சௌளத்தைக் காட்டிலும் இதற்குள்ள பேதம். எல்லாக்கேசங்களையும் வபநம் செய்வதால் கேசங்களை ஒழுங்குபடுத்தி வபநத்திற்கான கேசங்களைப் பிரிக்க ஏற்பட்ட பன்றிமுள் முதலியவைகள் வேண்டாம். கோதானகர்மாவை ஆசார்யனே செய்து வைக்கவேண்டும். அவனிடமே தக்ஷிணையைக் கொடுக்கவேண்டும். சிலருடைய அபிப்ராயப்படி இங்கே சிகைக்கு வபநம் கிடையாது.

உத³கோபஸ்பர்ஶநமிதி ச²ந்தோ³கா³꞉ ॥ ௧௬ ॥

கோதான வ்ரதத்தில் ப்ரதிதினமும் "உதகஉபஸ்பர்சநம்" செய்யவேண்டும் என்று சந்தோகர்கள் கூறுகிறார்கள். இதுவும் விகல்பிதம்.

இதி ஷோட³ஶ꞉ க²ண்ட³꞉ ॥

## பதினாருவது கண்டம் முற்றிற்று.

---

௧௭ ஸப்தத³ஶ꞉ க²ண்ட³꞉ ॥

## பதினேழாவது கண்டம்.

---

த³க்ஷிணாப்ரத்யக்ப்ரவணமகா³ராவகாஶமுத்³த⁴த்ய வா
பாலாஶேந ஶமீமயேந வோத்³த⁴ந்யேதேநைதா³வேவ தி³ஶௌ
த்³ரவ்யோத்³த⁴ந்திதி ॥ ௧ ॥

இதுவரை புருஷனுடைய தேஹம் பரிசுத்தமாவதற்கான ஸம்ஸ்காரங்கள் சொல்லப்பட்டன. இந்த ஸம்ஸ்காரங்களை அநேகமாக க்ருஹத்திலேயே செய்யவேண்டும்.

விதிபூர்வமாக க்ருஹம் நிர்மாணிக்கப்பட்டு அதனுடைய சுத்திக்கான கர்மாக்களைச் செய்தால்தான் க்ருஹம் சுத்தமானதாகும். மேலும் வஸிக்கவேண்டிய இடத்திற்கு க்ருஹப்ரவேச கர்மாவைச் செய்தால் ஆயுராரோக்யாதி ப்ரயோஜநங்களும் கிட்டும். அதற்காக க்ருஹப்ரவேச கர்மாவைச் செய்யவேண்டும்.

ஏகாக்நிகாண்டத்திலும் இதற்குமேல் க்ருஹப்ரவேச மந்த்ரங்கள் படிக்கப்படுகின்றன. ஸூத்ரகாரர் மந்த்ரங்கள் படிக்கப்படும் க்ரமத்திலேயே கர்மாக்களின் ப்ரயோகத்தைச் சொல்வதால் அந்த ரீதியில் இங்கு க்ருஹப்ரவேச கர்மாவைச் சொல்லுகிறார்.

தென்மேற்குப் பக்கத்தில் பள்ளமாக இருக்கும்படி க்ருஹம் கட்டுவதற்குக் குறிப்பிட்ட இடத்தை நிச்சயித்து, அவ்வித இடத்தை மண்வெட்டியால் கொத்தவேண்டும். பிறகு பலாச வ்ருக்ஷத்தினாலோ, சமீ வ்ருக்ஷத்தைச்சேர்ந்ததாகவுள்ள மட்டப் பலகையினாலோ 'யத்பூமே: க்ரூரம்' என்ற அடுத்த மந்த்ரத்தால் மண்களை நன்றாகப்பரப்பி க்ருஹம் கட்டுமிடத்தை ஸமமாகச் செய்யவேண்டும்.

ஶவம் த்ரி: ॥ ௨ ॥

இவ்விதம் மூன்று தடவை ஸமப்படுத்தவேண்டும். மூன்று தடவையும் மந்த்ரங்களாலேயே இந்தக் கார்யத்தைச் செய்யவேண்டும்.

ஶளவு உத்தரயாஹிரண்ய வ்ருக்ஷிணம் ஷுணா
மதம்ரா வாநயிகாஹ்ருதம் வாஸநரவெத்ரா
த்ராஹ்ராம் உக்ஷிணாம் ஆரஷுணாவெஶயாதி ॥ ௩ ॥

இவ்விதம் பூமியை மட்டமாகச் செய்தபிறகு அந்த இடத்தை 'ஸ்யோநாப்ருதிவி' என்ற மந்த்ரத்தால் அபிமர்சனம் செய்யவேண்டும். பிறகு தூண்களை நடுவதற்காகக் குழிகளை வெளியில் ஆரம்பித்து உள்ளில் முடியும்படி வெட்டச் செய்யவேண்டும். எவ்வளவு தூண்களுக்கு அபேக்ஷை உண்டோ அவ்வளவு குழிகளை வெட்டச் சொல்லவேண்டும். பிறகு மண்களை ஓரிடத்தில் தனியாகக்குவித்து 'இஹைவ திஷ்ட' என்று ஆரம்பிக்கும் இரண்டு மந்த்ரங்களால் க்ருஹத்தின் வலது பக்கத்து வாசல் தூணைக் குழியில் நடவேண்டும்.

𑌏𑌵𑌮𑍁𑌤𑍍𑌤𑌰𑌾𑌂 ॥ ௪ ॥

இவ்விதமே இதே இரண்டு மந்த்ரங்களால் இடது பக்கத்தி லுள்ள வாயிலின் வடக்குத்தூணையும் குழியில் நிறுத்தவேண்டும்.

𑌯𑌥𑌾𑌵𑌕𑌾𑌶𑌮𑌿𑌤𑌰𑌾 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌸𑍁 𑌵𑌂𑌶𑌮𑌾𑌧𑍀𑌯𑌮𑌾𑌨𑌮𑍁𑌤𑍍𑌤
𑌰𑍇𑌣 𑌯𑌜𑍁𑌷𑌾𑌽𑌭𑌿𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌯𑌤𑍇 ॥ ௫ ॥

குழி வெட்டப்பட்டுள்ள க்ரமத்தில் மற்றக் குழிகளிலும் தூண்களை மந்த்ரமில்லாமல் நடவேண்டும். இவ்விதம் எல்லாத் தூண்களும் நடப்பட்டபிறகு தூண்களுக்குமேல் வைக்கப்படும் மூங்கிலை "ருதேநஸ்தூணௌ" என்ற அடுத்த மந்த்ரத்தால் அபி மந்த்ரணம் செய்யவேண்டும். மந்த்ரத்தில் 'ஸ்தூணௌ' என்ற த்விவசனம் பஹுவசனஸ்தானத்தில் வந்துள்ளது.

𑌸𑌂𑌮𑌿𑌤𑌮𑍁𑌤𑍍𑌤𑌰𑍈𑌰𑍍𑌯𑌥𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌮𑍍 ॥ ௬ ॥

இவ்விதம் நிர்மாணம் செய்யப்பட்டுள்ள க்ருஹத்தை அடுத்தாற்போலுள்ள 'ப்ரஹ்மச தே க்ஷத்ரம்ச' என்று ஆரம் பிக்கும் ஐந்து மந்த்ரங்களைக்கொண்டு அந்தந்த மந்த்ரங்களில் சொல்லப்படும் இடங்களுக்கனுகுணமாக மந்த்ரங்களைச் சொல்லி அபிமந்த்ரணம் செய்யவேண்டும். 'ப்ரஹ்மச தே நக்ஷத்ரம் ச' என்ற மந்த்ரத்தால் கிழக்குப் பக்கத்திலுள்ள தூண்களையும் 'யஜ் ஞஶ்ச தக்ஷிணாஶ்ச' என்றமந்த்ரத்தினால் தெற்குப்பக்கத்துத்தூண் களையும் 'இஷஶ்சோர்ஜஶ்சாபரே' என்று மேற்குப் பக்கத்துத் தூண்களையும் 'மித்ரஶ்ச வருணஶ்சோத்தரே' என்பதால் வடக்குப் பக்கத்துத் தூண்களையும் 'தர்மஸ்தே ஸ்தூணாராஜ:' என்பதால் முக்யமான நடுத்தூணையும் 'ஸ்ரீஸ்தே ஸ்தூப:' என்று கம்பங்கள்மீது போடப்பட்டுள்ள மூங்கிலையும் அபிமந்த்ரணம் பண்ணவேண்டும். சிலருடைய அபிப்ராயப்படி 'ஸ்தூணே அபிரக்ஷது' என்று முதல் மந்த்ரத்திலுள்ள பாகத்தை மற்ற மந்த்ரங்களில் காட்டிக் கொள்ளவேண்டும். மற்றும் சிலர் அநு ஷங்கம் வேண்டாமென்றும் 'யஜ்ஞஶ்ச தக்ஷிணாஶ்ச தக்ஷிணே' என்பதுபோல் அந்தந்த மந்த்ரங்களை முடித்துவிடலாமென்றும் கூறுகிறார்கள்.

𑌵𑌾𑌰𑌣𑌂 𑌶𑌮𑍀𑌮𑌯𑌂 𑌵𑍈𑌭𑍀𑌦𑌕𑍀𑌮𑍌𑌦𑍁𑌮𑍍𑌬𑌰𑌂 𑌵𑌾𑌽𑌗𑍍𑌨𑌿𑌸𑍂𑌤𑍍𑌰
𑌮𑍌𑌤𑍍𑌤𑌰𑍇𑌣 𑌯𑌜𑍁𑌷𑌾𑌽𑌗𑌾𑌰𑌂 𑌪𑍍𑌰𑌪𑌾𑌦𑍍𑌯𑍌𑌤𑍍𑌤𑌰𑌪𑌶𑍍𑌚𑌿𑌮𑍇
𑌦𑍇𑌶𑍇𑌽𑌗𑌾𑌰𑌸𑍍𑌯𑍌𑌤𑍍𑌤𑌰𑌯𑌾𑌽𑌗𑍍𑌨𑌿𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌪𑌯𑌤𑌿 ॥ ௭ ॥

பலாசவ்ருக்ஷத்தையோ, சமீவ்ருக்ஷத்தையோ சேர்ந்த இத்மத்தை ஔபாஸனாக்னியால் ஜ்வலிக்கும்படி செய்து, 'உத்ரிய மாண:' என்ற மந்த்ரத்தால் அக்னியை எடுத்துக்கொண்டு, 'இந்த்ரஸ்ய க்ருஹா:' என்ற அடுத்த மந்த்ரத்தால் க்ருஹத்தை அடைந்து, க்ருஹத்திற்குள் ப்ரவேசித்து, க்ருஹத்தினுடைய வடகிழக்கில் 'அம்ருதாஹுதிம்' என்ற மந்த்ரத்தால் அக்னியை வைக்கவேண்டும். க்ருஹப்ரவேசம் செய்யும்பொழுது குடும்பத்தை நடத்துவதற்கான எல்லா ஸாமான்களோடும் ப்ரவேசிக்கவேண்டுமென்று (ஆச்வலாயன க்ரு. 2-10-2) ஏற்படுகிறது. ஔபாஸனாக்னியில் கொளுத்தவேண்டிய இத்மத்திற்கு அளவு நியமம் கிடையாது. பகலில் க்ருஹப்ரவேசம் நடந்தால் 'ராத்ர்யாயதேந:' என்றும், இரவில் க்ருஹப்ரவேசம் நடந்தால் 'அஹ்நாயதேந:' என்றும் மந்த்ரத்தைச் சொல்லவேண்டும். க்ருஹப்ரவேசத்திற்கு உத்தராயணம் முதலிய நியமங்கள் உண்டு என்ற பக்ஷத்தில் ராத்ரியில் க்ருஹப்ரவேசம் கிடையாது.

சிலருடைய அபிப்ராயப்படி இங்கே சொல்லப்படும் அக்னி லௌகிகமான சமையலுக்காக ஏற்பட்டுள்ள அக்னியே. வைச்வதேவத்தில் சொல்வதுபோல் சமையலுக்கான அக்னியிலும் ஹோமங்களைச் செய்யலாம். அப்படிச் செய்தாலும் தேசஸம்ஸ்காரம் ஏற்படுவதில் ஸந்தேஹம் கிடையாது. மற்றும் சிலருடைய அபிப்ராயப்படி ஔபாஸனாக்னியே இங்கே குறிப்பிடப்படுகிறது.

தஸ்ய த³க்ஷிணதோ(அ)பாம் ஸ்தா²நம் ப⁴வதி ॥ அ ॥

இப்படி வைக்கப்பட்டுள்ள அக்னிக்குத் தெற்குப் பக்கத்தில் ஜலத்தை வைக்கும் பாத்ரத்திற்கு இடத்தை ஏற்படுத்த வேண்டும்.

தஸ்மிந் த³ர்பா⁴ந் ஸர்வதோமுகா²நாஸ்தீர்ய 'அங்கபதே' இதி வ்ரீஹியவாம்ஶ்ச ந்யுப்ய தஸ்மிந்நுதா³பாத்ரம் ப்ரதிஷ்டா²பயதி ॥ கூ ॥

அந்த இடத்தில் தர்ப்பங்களை எல்லா முகமாகவும் பரப்பி, அந்தத்தர்ப்பங்கள்மீது 'அங்கபதே' என்ற அடுத்த மந்த்ரத்தால் நெல்லையும், யவதான்யத்தையும் பரப்பி, அங்கு ஜலத்தொட்டியை வைக்கவேண்டும்.

𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍁𑌤𑍍𑌤𑌰𑍇𑌣 𑌯𑌜𑍁𑌷𑌾 𑌚𑌤𑍁𑌰 𑌉𑌦𑌕𑍁𑌮𑍍𑌭𑌾𑌨𑌾𑌨𑌯𑌤𑌿 ॥௧௦॥

ஜலத்தொட்டியில் அடுத்த 'அரிஷ்டா அஸ்மாகம்' என்ற மந்த்ரத்தால் நான்கு குடங்களால் ஜலத்தைச் சேர்க்கவேண்டும். ஒவ்வொரு கும்பத்தின் ஜலத்தைச் சேர்க்கும் காலத்திலும் மந்த்ரத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்லவேண்டும்.

𑌭𑌿𑌨𑍍𑌨𑍇 𑌭𑍂𑌮𑌿𑌰𑍍𑌭𑍂𑌮𑌿𑌮𑌿𑌤𑍍𑌯𑌨𑍁𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌯𑌤𑍇 ॥ ௧௧ ॥

ஜலத்தொட்டி உடைந்துபோனுல் 'பூமிர்ப்பூமிம்' என்ற மந்த்ரத்தால் உடைந்த ஜலத்தொட்டியை அநுமந்த்ரணம் செய்ய வேண்டும்.

𑌅𑌗𑍍𑌨𑌿𑌮𑌿𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 𑌵𑌾𑌸𑍍𑌤𑍋𑌷𑍍𑌪𑌤𑍀𑌯𑌾𑌨𑍍 𑌉𑌤𑍍𑌤𑌰𑌾𑌞𑍍𑌜𑍁𑌹𑍋
𑌤𑌿 𑌸𑍍𑌥𑌾𑌲𑍀𑌪𑌾𑌕𑌵𑌰𑍍𑌜𑌂 𑌜𑌯𑌾𑌦𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 ॥ ௧௨ ॥

'அக்நிமித்வா' என்ற பூர்வதந்த்ரத்தை ஆரப்பித்து ஆஜ்ய பாகம் வரை செய்து, அடுத்தாற்போலுள்ள 'வாஸ்தோஷ்பதே ப்ரதிஜாநீஹி' 'வாஸ்தோஷ்பதேஶக்மயா' 'வாஸ்தோஷ்பதே ப்ரதரண:' 'அமீவஹாவாஸ்தோஷ்பதே' என்ற நான்கு மந்த்ரங்களால் ப்ரதானஹோமத்தைச் செய்து, ஜயாதி ஹோமங்களைச் செய்யவேண்டும். கல்பாந்த்ரங்களில் இங்கே ஸ்தாலீபாகம் சொல்லப்பட்டிருந்தாலும் இங்கே ஸ்தாலீபாகம் கிடையாது. நான்கு ஹோமங்களையும் ஆஜ்யத்தாலேயே செய்யவேண்டும்.

𑌪𑌰𑌿𑌷𑍇𑌚𑌨𑌾𑌨𑍍𑌤𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑍋𑌤𑍍𑌤𑌰𑍇𑌣 𑌯𑌜𑍁𑌷𑍋𑌦𑌕𑍁𑌮𑍍
𑌭𑍇𑌨 𑌤𑍍𑌰𑌿𑌃 𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌮𑍁𑌦𑌧𑌾𑌰𑌾𑌂 𑌨𑌿𑌵𑍇𑌶𑌨𑌂 𑌵𑌾
𑌪𑌰𑌿𑌷𑌿𑌚𑍍𑌯 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌨𑍍 𑌭𑍋𑌜𑌯𑍇𑌦𑌪𑍂𑌪𑍈𑌃 𑌸𑌕𑍍𑌤𑍁
𑌭𑌿𑌰𑍋𑌦𑌨𑍇𑌨𑍇𑌤𑌿 ॥ ௧௩ ॥

பரிஷேசனம் முடியச் செய்து, உத்தரதந்த்ரத்தையும் முடித்து, ஜலம் நிறைந்த குடத்தைக்கொண்டு 'சிவம் சிவம்' என்ற யஜுர்மந்த்ரத்தைக் கொண்டு வீடுமுழுவதையுமாவது, அல்லது படுக்குமிடத்தை மட்டுமாவது, மூன்று தடவை ப்ரதக்ஷிணமாகப் பரிஷேசனம் பண்ணவேண்டும். பிறகு அபூபம், ஸக்து, ஓதனம் இவைகளால் ப்ராம்ஹண போஜனம் செய்து வைக்கவேண்டும்.

𑌇𑌤𑌿 𑌸𑌪𑍍𑌤𑌦𑌶𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

பதினேழாவது கண்டம் முற்றிற்று.

𑌅𑌥 𑌅𑌷𑍍𑌟𑌾𑌦𑌶𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

## பதினெட்டாவது கண்டம்.

𑌶𑍍𑌵𑌗𑍍𑌰𑌹𑌗𑍃𑌹𑍀𑌤𑌂 𑌕𑍁𑌮𑌾𑌰𑌂 𑌤𑌪𑍋𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌜𑌾𑌲𑍇𑌨 𑌪𑍍𑌰𑌚𑍍𑌛𑌾𑌦𑍍𑌯 𑌕𑌂𑌸𑌂 𑌕𑌿𑌙𑍍𑌕𑌿𑌣𑍀𑌂 𑌵𑌾 𑌹𑍍𑌰𑌾𑌦𑌯𑌨𑍍𑌨𑌪𑌦𑍍𑌵𑌾𑌰𑍇𑌣 𑌸𑌭𑌾𑌂 𑌪𑍍𑌰𑌪𑌾𑌦𑍍𑌯 𑌸𑌭𑌾𑌯𑌾 𑌮𑌧𑍍𑌯𑍇𑌽𑌧𑌿𑌦𑍇𑌵𑌨 𑌉𑌦𑍍𑌧𑌤𑍍𑌯𑌾𑌵𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌨𑍍𑌯𑍁𑌪𑍍𑌯𑌾𑌕𑍍𑌷𑍇𑌷𑍁 𑌶𑌾𑌯𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌦𑌧𑍍𑌨𑌾 𑌲𑌵𑌣𑌮𑌿𑌶𑍍𑌰𑍇𑌣𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌨𑍋𑌤𑍍𑌤𑌰𑍈𑌰𑌵𑍋𑌕𑍍𑌷𑌤𑌿 𑌪𑍍𑌰𑌾𑌤𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑌨𑍍𑌦𑌿𑌨𑍇 𑌸𑌾𑌯𑌮𑌿𑌤𑌿 ॥ ௧ ॥

மந்த்ரப்ரச்நத்தில் படிக்கப்பட்ட க்ரமத்தில் அடுத்தாற்போல் உள்ள மந்த்ரங்களுக்கு ப்ரயோகம் சொல்லப்படுகிறது.

முதலில் "ச்வக்ரஹத்" தால் பீடிக்கப்பட்டவனுக்குச் சாந்தி சொல்லப்படுகிறது. எந்தப் பிசாசு பிடித்தால் நாய்போல் கத்தித் திரிவானோ அந்தத் துஷ்டதேவதைக்கு "ச்வக்ரஹம்" என்றுபெயர். "ச்வக்ரஹம்" என்ற துஷ்டதேவதையால் பீடிக்கப்பட்ட குமாரனை ப்ரம்ஹசர்யம் முதலிய தபஸ்ஸுகள் நிறைந்துள்ள ப்ராம்ஹணன் மீன் பிடிக்கும் வலையால் மறைத்து, வெண்கலத்தையாவது மணியையாவது அடித்துச் சப்தம் செய்துகொண்டு, சூதாட்டம் நடக்குமிடத்திற்கு அந்தக் குமாரனை அழைத்து வந்து, வாசல்படி வழியல்லாமல் வேறுவழியாகக் குமாரனைக் கொண்டுபோய், ஸபைநடுவில் சூதாடுமிடத்தில் 'உத்தநநம்', 'அவோக்ஷணம்' என்ற (ஸமித்தால் பூமியைக் கொத்துவது உத்தனனம், கையை நிமிர்த்திக்கொண்டு ஜலத்தைத் தெளிப்பது அவோக்ஷணம்) ஸம்ஸ்காரங்களைச் செய்து, சூதாட்டக்காய்களைப் பரப்பி, அதன்மீது குமாரனை மல்லாந்து படுக்கவைத்து, உப்புக் கலந்த தயிர் நிறைந்துள்ள அஞ்ஜலியால் 'கூர்க்குரஸ்ஸுகூர்க்குர:' என்று ஆரம்பிக்கும் மந்த்ரங்களால் ப்ராதக்காலம், மத்யாஹ்னம், ஸாயங்காலம் என்ற மூன்று வேளைகளிலும் அவோக்ஷணம் செய்யவேண்டும். அவோக்ஷணம் முடியும்வரை மணி அல்லது வெண்கலத்தின் ஓசை இருந்துவரவேண்டும். ச்வக்ரஹத்தால் பீடிக்கப்பட்டவனை மூடவும் வேண்டும்.

𑌅𑌗𑌦𑍋 𑌭𑌵𑌤𑌿 ॥ ௨ ॥

இவ்விதம் செய்தால் அவனுக்குள்ள வ்யாதி போய்விடும். வ்யாதி நிவ்ருத்தி ஆகும்வரை இதைச்செய்யவேண்டும்.

ஶ்வக்³ரஹம் குமாரம் தபோவாயம் க்ருத்வா உத்தராப்⁴யாமபி⁴மந்த்ர்யோத³கம் கம்ஸேந ஶிரஸ்யவநயேத் ப்ராதர்மத்⁴யந்தி³நே ஸாயம் ॥ ௩ ॥

“சங்கக்ரஹ” த்தால் பீடிக்கப்பட்டுள்ள குமாரனுக்குக் கீழ்க் கண்டபடி சாந்தி செய்யவேண்டும். எந்தத் துஷ்டதேவதையால் பீடிக்கப்பட்டால் சங்குபோல் ஊதுவானோ அதற்கு “சங்கக்ரஹம்” என்றுபெயர். அவ்விதப் பீடையுள்ள குமாரனை ‘தேதே ப்ரதித்ருச்யேதே’ என்று ஆரம்பிக்கும் இரண்டு மந்த்ரங்களால் அபிமந்த்ரணம் பண்ணி, ‘ருஷிர்போத: ப்ரபோத:’ என்ற மந்த்ரத்தினால் காலை, மத்யாஹ்னம், ஸாயங்காலம் என்ற மூன்றுவேளைகளிலும் சிரஸ்ஸில் ஜலத்தைச் சேர்க்கவேண்டும்.

அக³தோ ப⁴வதி ॥ ௪ ॥

இவ்விதம் செய்தால் அவனுக்கு வ்யாதி நிவ்ருத்தி ஆகிவிடும்.

ஶ்ராவண்யாம் பௌர்ணமாஸ்யாம் ஸ்தா²லீபாக: ॥ ௫ ॥

இங்கு ஸர்ப்பபலி என்ற கர்மா சொல்லப்படுகிறது. இது ஒரு நித்யகர்மா. ச்ராவணமாத பூர்ணிமையில் இதை ஆரம்பிக்க வேண்டும். மார்கசீர்ஷ மாத பூர்ணிமையில் முடிக்கவேண்டும்.

ச்ர்வண பூர்ணிமையில் ஸாயங்கால ஔபாஸனத்தை முடித்துக்கொண்டு ஸ்தாலீபாகத்தைச் செய்யவேண்டும். அவஹனனம் முதல் ஸ்தாலீபாக ஹவிஸ்ஸைப் பக்வம்பண்ணி இறக்கி அபிகாரணம் பண்ணுகிறவரையில் செய்து கொள்ள வேண்டும். ஹவிஸ்ஸை நிர்வாபம் செய்யும் காலத்தில் ச்ராவணீ பௌர்ணமாஸீ தேவதையை உத்தேசித்து நிர்வாபம் செய்ய வேண்டும்.

பார்வணவதா³ஜ்யபா⁴கா³ந்தே ஸ்தா²லீபாகாஜ்ஜு ஹுத்வோத்தரை: ப்ரதிமந்த்ரம் கிம்ஶுகாநி ஜுஹோதி ॥ ௬ ॥

பார்வணம்போல் பிறகு “அக்நிமித்வா” என்று ஆரம்பிக்கும் பூர்வ தந்த்ரத்தை ஆஜ்யபாகம் முடியச்செய்து, பக்வம் செய்யப்பட்டுள்ள ஸ்தாலீபாக ஹவிஸ்ஸிலிருந்து ‘ஶ்ராவண்யை பௌர்ணமாஸ்யை ஸ்வாஹா’ என்ற மந்த்ரத்தால் ஹோமத்தைச் செய்து, ‘ஜக்தோ மசக:’ என்று ஆரம்பிக்கும் மூன்று மந்த்ரங்களால் ஒவ்வொரு மந்த்ரத்தாலும் இரண்டுகைகளினாலும் பலாச

புஷ்பங்களை ஒவ்வொரு மந்த்ரத்தால் ஒவ்வொரு தடவை ஹோமம் செய்யவேண்டும். மொத்தத்தில் இங்கு மூன்று மந்த்ரங்களால் ஹோமம் பண்ணவேண்டும். இங்கு அஞ்ஜலி, ஹோமம் செய்வதற்கு ஸாதனமாக வருவதால், தர்விக்குப்போல் ஸம்ஸ்காரம் செய்யவேண்டும். சிலருடைய அபிப்ராயப்படி ஸம்ஸ்காரம் கிடையாது.

𑌉𑌤𑍍𑌤𑌰𑌾𑌭𑌿𑌸𑍍𑌤𑌿𑌸𑍃𑌭𑌿𑌰𑍍𑌰𑌾𑌜𑌵𑍃𑌕𑍍𑌷𑌸𑌮𑌿𑌧𑌃 ॥ ௭ ॥

அடுத்துள்ள "இந்த்ர ஜஹி தந்தசூகம்" என்று ஆரம்பிக்கும் மூன்று மந்த்ரங்களால் ராஜவ்ருக்ஷத்தின் ஸமித்துக்களை ஹோமம் பண்ணவேண்டும். ஒவ்வொரு ருக்குக்கும் ஒவ்வொரு ஹோமம் பண்ணவேண்டும்.

𑌆𑌜𑍍𑌯𑌾𑌹𑍁𑌤𑍀𑌰𑍁𑌤𑍍𑌤𑌰𑌾𑌃 ॥ ௮ ॥

'தத்ஸத்யம் யத்தே' என்ற மந்த்ரத்தாலும் 'நமோ அஸ்து ஸர்ப்பேப்ய:' என்றாரம்பிக்கும் மூன்று மந்த்ரங்களாலும் ஆஜ்ய ஹோமம் செய்யவேண்டும்.

𑌜𑌯𑌾𑌦𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 ॥ ௯ ॥

பிறகு ஜயாதி ஹோமங்களைச் செய்யவேண்டும். இங்கே சொல்லப்பட்ட பதினொரு ஹோமங்களும் ப்ரதான ஹோமங்கள். ஸ்விஷ்டக்ருத்ஹோமம் செய்துவிட்டு ஜயாதியைச் செய்ய வேண்டுமென்று சிலர் கூறுகின்றனர். மற்றுஞ்சிலர் ஜயாதி முடிந்தவுடன் ஸ்விஷ்டக்ருத் ஹோமம் செய்யவேண்டும் என்று கூறுகின்றனர்.

𑌪𑌰𑌿𑌷𑍇𑌚𑌨𑌾𑌨𑍍𑌤𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌵𑌾𑌗𑍍𑌯𑌤𑌃 𑌸𑌹 𑌜𑌾𑌯𑌯𑌾
𑌪𑍍𑌰𑌾𑌚𑍀𑌮𑍁𑌦𑍀𑌚𑍀𑌂 𑌵𑌾 𑌦𑌿𑌶𑌮𑍁𑌪𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌮𑍍𑌯 𑌸𑍍𑌥𑌣𑍍𑌡𑌿𑌲𑌂 𑌕𑌲𑍍𑌪𑌯𑌿𑌤𑍍𑌵𑌾
𑌤𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌾𑌚𑍀𑌰𑍁𑌦𑍀𑌚𑍀𑌶𑍍𑌚 𑌤𑌿𑌸𑍍𑌰𑌸𑍍𑌤𑌿𑌸𑍍𑌰𑍋 𑌲𑍇𑌖𑌾 𑌲𑌿𑌖𑌿𑌤𑍍𑌵𑌾
𑌅𑌦𑍍𑌭𑌿𑌰𑌵𑌨𑌿𑌨𑍀𑌯 𑌤𑌾𑌸𑍍𑌵𑌗𑍍𑌰𑌤𑌃 𑌸𑌕𑍍𑌤𑍂𑌨𑍍𑌨𑌿𑌵𑌪𑌤𑌿 ॥

பரிஷேசநம் முடிய பூர்வதந்த்ரத்தைச்செய்து முடித்துக்கொண்டு, சப்தம்செய்யாமல் மௌனத்துடன் வறுத்த அரிசியின் மாவு, பொரி, அஞ்ஜநம், அப்யஞ்ஜநம், வாஸனைஸாமான், ஜலம் நிறைந்த பாத்ரம் இவைகளை எடுத்துக்கொண்டு கிழக்குப் பக்கமாகவாவது வடக்குப் பக்கமாகவாவது வெளிக்கிளம்பி, அங்கு ஒருமேடையைக் கல்பித்து, அங்குக்கிழக்குமுகமாகவும் வடக்கு

முகமாகவும் கோடுகளைக் கிழித்து, அவைகளில் "நமோ அஸ்து ஸர்ப்பேப்யோ யே பார்த்திவா:" என்ற அடுத்த மந்த்ரத்தால் மாவைப் பரப்பவேண்டும். ஸ்வாஹாகாரமில்லாமல் ஒரே தடவை மந்த்ரத்தைச் சொல்லி ஒவ்வொரு ரேகையிலும் லேகநம் செய்தக்ரமத்தில் மாவைப் பரப்பவேண்டும்.

𑌤𑍂𑌷𑍍𑌣𑍀𑌂 𑌸𑌂𑌵𑌾𑌪𑍋𑌽𑌕𑍍𑌷𑌤𑌸𑌕𑍍𑌤𑍂𑌨𑌾𑌂 𑌲𑌾𑌜𑌾𑌨𑌾𑌮𑌞𑍍𑌜𑌨𑌾𑌭𑍍𑌯𑌞𑍍𑌜𑌨𑍇
𑌉𑌶𑍀𑌰𑌸𑍍𑌯𑍇𑌤𑌿 ॥ கக ॥

மந்த்ரமில்லாமல் முழு அரிசியில் செய்யப்பட்ட அக்ஷதை, வறுத்த அரிசியின் மாவு, பொரி, அஞ்ஜநம், அப்யஞ்ஜநம், விலாமிச்சம்வேர் இவைகளைப் பரப்பவேண்டும்.

𑌉𑌤𑍍𑌤𑌰𑍈𑌰𑍁𑌪𑌸𑍍𑌥𑌾𑌯𑌾𑌪𑌃 𑌪𑌰𑌿𑌷𑌿𑌚𑍍𑌯𑌾𑌪𑍍𑌰𑌤𑍀𑌕𑍍𑌷𑌂 𑌤𑍂
𑌷𑍍𑌣𑍀𑌮𑍇𑌤𑍍𑌯𑌾𑌪𑌶𑍍𑌵𑍇𑌤𑌪𑌦𑍇𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌤𑌰𑌾𑌭𑍍𑌯𑌾𑌮𑌨𑍍𑌤𑌃
𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌮𑍁𑌤𑍍𑌤𑌰𑍇𑌣 𑌨𑌿𑌵𑍇𑌶𑌨𑌂 𑌵𑌾 𑌪𑌰𑌿𑌷𑌿𑌚𑍍𑌯
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌨𑍍𑌭𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 ॥ கஉ ॥

பிறகு அடுத்துள்ள "தக்ஷகவைசாலேய" என்று ஆரம்பிக்கும் பதினெட்டு மந்த்ரங்களால் பலிதேவதையை உபஸ்தானம் செய்யவேண்டும், 'ஸமீசீநாமாஸி' 'ஹேதயோ நாமஸ்த்த' என்ற இரண்டு இடங்களில் சொல்லப்படும் பர்யாயங்களை அநுஷங்கத்துடன் சொல்லவேண்டும். இவ்விதம் உபஸ்தானம் செய்துவிட்டு, வைத்துள்ள பலியை ஜலத்தைக்கொண்டு பரிஷேசநம் செய்து, திரும்பிப் பார்க்காமல் க்ருஹத்தையடைந்து, "அபச்வேதபதா" என்றாரம்பிக்கும் இரண்டு மந்த்ரங்களால் உள்பக்கத்தில் க்ருஹத்தையாவது சயநக்ருஹத்தையாவது பரிஷேசநம் செய்து, இரட்டைப்படை எண்ணிக்கையுள்ள ப்ராம்ஹணர்களுக்குப் போஜநம் செய்துவைக்கவேண்டும்.

இதி கஷ்டாதஶ: கண்ட: ॥

பதினெட்டாவது கண்டம் முற்றிற்று.

அத ஏகோநவிம்ஶ: கண்ட: ||

## பத்தொன்பதாவது கண்டம்.

---

யாநா: ஸக்தவஸ்தாந் ப்ராஶயந்தி || க ||

பலிஹரணத்தில் உபயோகப்பட்டது போக பாக்கி உள்ள வறுத்த அரிசியின் மாவைக் குழந்தைகளுக்குச் சாப்பிடக் கொடுக்கலாம்.

ஏவமத ஊர்த்வம் யதஶநீயஸ்ய ஸக்தூநாம் வைதம் பலிம் ஹரேதாமார்கஶீர்ஷ்யா: || உ ||

இவ்விதமே இதற்குப்பிறகு மார்கழி மாதத்தின் பூர்ணிமைவரை ஆஹாரத்திற்காக க்ருஹத்தில் செய்யப்படும் அந்நம் முதலியதைக்கொண்டு அல்லது மாவைக்கொண்டாவது பலிஹரண கர்மாவைச் செய்யவேண்டும்.

ஸர்ப்பபலிகர்மாவில் "ஸ்தாலீபாகம்" "பலிஹரணம்" இரண்டு கார்யங்கள் சொல்லப்பட்டன. இவைகளில் ஸ்தாலீ பாகத்திற்கு ஆவ்ருத்தி கிடையாது. பலிஹரண கர்மாவுக்கு மட்டும்தான் ஆவ்ருத்தி. பலிஹரணத்திற்காக ஸம்பாரங்களை எடுத்துக்கொண்டு வீட்டைவிட்டுக் கிளம்புவது முதல், பலிஹரணம்செய்து வீட்டுக்குத் திரும்பும்வரை உள்ள கர்மாவை ப்ரதி தினமும் செய்யவேண்டும். முதல் பலிஹரணத்தில் சொல்லப்பட்ட பலித்ரவ்யத்திற்குப் பதிலாக இங்கே சாப்பிடும் த்ரவ்யமாவது ஸக்துவாவது விகல்பிதமாகச் சொல்லப்பட்டிருப்பதால் இவைகளைக் கொண்டும் செய்யலாம். க்ருஹத்திற்கு வந்த பிறகு செய்யப்படும் பரிஷேசநம் ஸ்தாலீபாகத்திற்கே அங்கமானதாகையால் ப்ரதிதினம் பலிஹரணத்தில் அதைச் செய்ய வேண்டியதில்லை. பலிஹரணத்தை ப்ரதிதினமும் இரவில்தான் செய்ய வேண்டும். ஆச்வலாயநஸூத்ரத்தை அநுஸரித்து இரண்டு வேளைகளிலும் பலிஹரணம் செய்யவேண்டுமென்று சிலர் கூறுகின்றனர்.

மார்கஶீர்ஷ்யாம் பௌர்ணமாஸ்யாம் அஸ்தமிதே ஸ்தாலீபாக: || ௩ ||

மார்கசீர்ஷ மாதத்தின் பூர்ணிமையில் அஸ்தமயத்திற்குப் பிறகு முன்போல் ஸ்தாலீபாகம் செய்யவேண்டும். 'மார்கசீர்ஷ பௌர்ணமாஸீ' ஸ்தாலீபாகதேவதை. நிர்வாபம் அவகாதம்

செய்வது முதல் எல்லாவற்றையும், வறுத்த மாவைக் குமாரர்கள் ப்ராசநம் செய்யும்வரை செய்யவேண்டும்.

उत्तमस्य तु बलिमहार्षमिति बलिशेषस्य स्थाने ॥ ४ ॥

கடைசித்தடவையாக பலிஹரணம் செய்யும்பொழுது உபஸ்தானகாலத்தில் 'பலிமஹார்ஷம்' என்று மந்த்ரத்தை முடிக்கவேண்டும். 'தேப்ய இமம் பலி மஹார்ஷம்' என்ற பாகம் உத்ஸர்ஜநகாலத்திற்காக வேதத்தில் படிக்கப்படுவது. அதனால் முதல் பலிஹரணம் முதல் இதற்கு முந்திய பலிஹரணம்வரை உபஸ்தானகாலத்தில் 'பலிம் ஹரிஷ்யாமி' என்பதோடு அந்த மந்த்ரத்தை முடித்துவிட வேண்டுமென்று ஏற்படுகிறது. மந்த்ரத்திற்கு மூன்று பாதங்கள்தான். உத்ஸர்ஜநகாலத்தில் செய்யப்படும் பலியில் 'தேப்ய இமம் பலிம் ஹரிஷ்யாமி' என்றதின் ஸ்தானத்தில் மூன்றும்பாதமாக 'தேப்ய இமம் பலிமஹார்ஷம்' என்பதைச் சேர்க்கவேண்டும்.

उपरिष्टान्न प्रत्यवरोहति ॥ ५ ॥

மார்கசீர்ஷ பூர்ணிமையில் ஸ்தாலீபாகத்திற்குப்பிறகு செய்யப்படும் பலிஹரணத்தோடு பலிஹரணத்தை விட்டுவிட வேண்டும். அடுத்த ச்ராவணபூர்ணிமையில்தான் மறுபடியும் பலியின் ஆரம்பம். காலத்தை முன்னிட்டுக்கொண்டு ஸர்ப்பபலி ஏற்பட்டிருப்பதால் உயிருள்ளவரை ப்ரதிவர்ஷமும் செய்தாக வேண்டும். இது நித்யகர்மா.

अनाहिताग्नेराग्रयणम् ॥ ६ ॥

ஆஹிதாக்னியாக இல்லாதவர்களுக்கு "ஆக்ரயணம்" என்ற கர்மா இங்குச் சொல்லப்படுகிறது. ஆஹிதாக்னியாக உள்ளவர்கள் ச்ரௌதஸூத்ரத்தில் சொல்லப்பட்ட ஆக்ரயணேஷ்டியையே செய்யவேண்டும். அவர்களுக்கு இந்த ஆக்ரயண ஸ்தாலீபாகம் கிடையாது. இந்தக்கர்மாமூலம் புதிதாக உண்டான த்ரவ்யம் முதலில் தேவதைகளை அடையும்படி செய்ய இந்தக் கர்மா ஏற்பட்டதால் இதற்கு ஆக்ரயணம் என்று பெயர்.

नवानां स्थालीपाकं श्रपयित्वाऽऽग्रयणदेवता
भ्यः स्विष्टकृच्चतुर्थाभ्यो हुत्वा तण्डुलानां
ग्रासं प्राशयित्वा पीत्वाऽऽचम्य नवानां संवृ
त्याधारेण यज्ञोपवीत्यप्सुदेवे उत्पिबेत् ॥ ७ ॥

புதிதான த்ரவ்யங்களைக்கொண்டு ஸ்தாலீபாக ஹவிஸ்ஸைப் போல் ச்ரபணம் பண்ணி, 'இந்த்ராக்நீ', 'விச்வேதேவா:', 'த்யாவாப்ருதிவீ', 'அக்நி: ஸ்விஷ்டக்ருத்', என்ற நான்கு ஆக்ரயண தேவதைகளை உத்தேசித்து ஹோமம் செய்யவேண்டும். ஸ்தாலீபாக சருவை ச்ரபணம் பண்ணி, அபிகாரணம் பண்ணி இறக்கிப் பிறகும் அபிகாரணம் பண்ணி, "அக்நிமித்வா" என்றாரம்பிக்கும் பூர்வதந்த்ரத்தை 'அக்நயேஸ்வாஹா' என்ற முக ஹோமம் வரை செய்து, 'இந்த்ராக்நீ', 'விச்வேதேவா:', 'த்யாவாப்ருதிவீ', என்ற மூன்று ஆக்ரயண தேவதைகளுக்கும் ஸ்விஷ்டக்ருத்துக்கும் இந்த ஹவிஸ்ஸினால் ஹோமம் பண்ண வேண்டும். பார்வணம்போல் "லேபகார்யம்" முதலிய உத்தர தந்த்ரத்தை பிறகு முடிக்கவேண்டும். பிறகு புதுத் தண்டுலங்களை வாய்நிறையப் போட்டுக்கொண்டு சாப்பிடவேண்டும். பிறகு ப்ராசநத்திற்கங்கமாக ஒரு தடவை ஜலத்தை உட்கொண்டு, பிறகு சுத்திக்காக மூன்று தடவை ஆசமநம் செய்யவேண்டும். பிறகு பாக்கி உள்ள ஹோம ஹவிஸ்ஸைக்கொண்டு த்ருடமான பிண்டம் ஒன்றைச்செய்து, 'பரமேஷ்ட்யஸி' என்ற மந்த்ரத்தால் வீட்டின் உச்சிமோட்டு மூங்கிலில் விழும்படி எறிந்துவிட வேண்டும். சிலரது அபிப்ராயப்படி ப்ரதானஹோமத்தோடும் ஸ்விஷ்டக்ருத் ஹோமத்தோடும் ப்ரயோகத்தை முடித்து விட்டு, தண்டுலத்தைச் சாப்பிடவேண்டுமென்று கூறுகிறார்கள். மற்றுஞ்சிலர் ஸ்விஷ்டக்ருத்துக்குப்பிறகு உத்தரதந்த்ரம் முழுவதையும் செய்யவேண்டுமென்றும் கூறுகிறார்கள். ஹவிஸ்ஸினுடைய சேஷத்தையே சாப்பிடவேண்டுமென்று சிலர் கூறுகின்றனர். ஆஹிதாக்நிகள் செய்யும் ஆக்ரயணேஷ்டியில் பழைய அரிசியைக்கொண்டு அக்நிசரு தனியாக யாகம் செய்யப்படுகிறது. அநாஹிதாக்நிகளுக்கு புது அரிசியைக்கொண்டே ஆக்ரயணம் விதிக்கப்படுவதால் பழைய அரிசியைக்கொண்டு செய்ய வேண்டிய ஆக்நேய யாகம் கிடையாது. "ஸ்விஷ்டக்ருத்தை நான்காவதாக உடைய மூன்று ஆக்ரயண தேவதைகள்" என்று சொல்லிவிட்டதால் ஆக்ரயணேஷ்டியில் போல் நான்காவதான ஸோமதேவதை இங்கே கிடையாது என்று ஏற்படுகிறது. சிலர் ஒரேகாலத்தில் 'வ்ரீஹி' 'ச்யாமை' இவைகளைக்கொண்டு ஒரே ப்ரயோகத்தில் வேறுவேறு தேவதைகளுக்கு யாகம் செய்யக் கூடாது என்றும் அந்தந்தக் காலங்களில் மற்ற ஆக்ரயணங்களை

அநாஹிதாக்நியும் செய்தாகவேண்டும் என்றும் கூறுகிறார்கள். அதனால் அவர்கள் அபிப்ராயப்படி வர்ஷாகாலத்தில் "ச்யாமாகாக்ரயண"மும், வஸந்தகாலத்தில் "யவாக்ரயணமும்", சரத்காலத்தில் "வ்ரீஹி" ஆக்ரயணமும் உண்டென்று ஏற்படுகிறது.

ஹேமந்தப்ரத்யவரோஹணம் ॥ அ ॥

உத்தரேண யஜுஷா ப்ரத்யவருஹ்யோத்தரைர்தக்ஷிணை: பார்ச்வைஸ்ஸ்வஸ்தரே ஸம்விசந்தி ॥ கூ ॥

இங்கு ஹேமந்த ப்ரத்யவரோஹணம் என்ற கர்மா சொல்லப்படுகிறது. ஹேமந்தருது வந்ததும் கட்டிலைவிட்டுக்கீழிறங்கி, படுக்கையில் கீழ் படுத்துக்கொள்ள ஏற்பட்ட கர்மாவே ஹேமந்த ப்ரத்யவரோஹணம் என்று சொல்லப்படுகிறது. இது ஹேமந்த ருதுவின் முதல் ராத்ரியில் செய்யப்படவேண்டிய கர்மா. ஒரு சிலர் மார்கசீர்ஷ பூர்ணிமையில் ஸ்தாலீபாகம் கீழ் சொல்லப்பட்டிருப்பதால் அப்பொழுதே இதைச் செய்யவேண்டுமென்று கூறுகின்றனர். "ப்ரத்யவரூடோந:" என்ற அடுத்த மந்த்ரத்தால் க்ருஹஸ்தன் பத்நீ எல்லாரும் கட்டிலை விட்டுக் கீழே இறங்கி, புதுப்படுக்கையில் 'ப்ரதிக்ஷத்ரே' என்றாரம்பிக்கும் ஐந்து மந்த்ரங்களால் வலது பக்கத்தால் படுத்துக்கொள்ளவேண்டும்.

தக்ஷிணத: பிதா ததோ மாதைவம் வசிஷ்டானாம் ஜ்யேஷ்டோ ஜ்யேஷ்டோऽனந்தர: ॥ க0 ॥

படுக்கையில் படுக்கும் காலத்தில் பிதாவாக உள்ளவர் தெற்குப் பக்கத்திலும், மாதா வடக்குப்பக்கத்திலும், இவ்விதம் மற்றவர்களிலும் பெரியவர்களாக உள்ளவர்கள் பிதாவுக்குத் தெற்கிலும், சிறியவர்களாக உள்ளவர்கள் மாதாவுக்கு வடக்கிலும் படுத்துக்கொள்ளவேண்டும். ஒரு சிலர் மாதாவின் வடக்குப் பக்கத்திலேயே ஜ்யேஷ்ட க்ரமமாக வரிசையாகப்படுத்துக் கொள்ளவேண்டுமென்று கூறுகிறார்கள். எல்லோரும் கிழக்கில் தலைவைத்து வடக்குமுகமாகப் படுத்து மந்த்ரத்தைச் சொல்ல வேண்டும்.

ஸம்ஹாயோத்தராப்யாம் ப்ருதிவீமபிம்ருசந்தி ॥ கக ॥

சிறிதுகாலம் சேர்ந்து எல்லோரும் படுத்துக்கொண்டு இருந்து பிறகு எழுந்திருந்து அவரவர்கள் ஆசமநம்செய்து "ஸ்யோநாப்ருதிவி" "படித்தா" என்ற இரண்டு மந்த்ரங்களாலும் தனித்தனியாகப் பூமியைத் தொடவேண்டும்.

ஸர்வம் ஸம்வேஶநாதி த்ரி: ॥ ௧௨ ॥

இவ்விதம் படுத்துக்கொள்வதையும் பிறகு எழுந்து பூமியை அபிமந்த்ரணம் செய்வதையும் மூன்று தடவை செய்யவேண்டும். மறுநாட் காலையில் ப்ராம்ஹண போஜநம் செய்துவைக்க வேண்டும்.

இங்குப் புதிதாக ஸம்வேசநம் சொல்லப்படவில்லை. ஆனல் ஹேமந்தருதுவில் இயற்கையாக இரவில் படுக்கும் காலத்தில் இந்த மந்த்ரம் சொல்லப்படவேண்டும்.

ஶம்ஸாநாய ஸ்வாஹீவாகம் ஶ்ருவயித்வா க்ஷைத்ரவத்யா
வ ப்ராவீ ஶீர்ஷ்ணீம் வா திஶோ வநிஷ்க்ருத்ய ஸ்வஞ்ஜநம் க்ஷய்வயி
த்வா சுக்ரேண வஸோயாநாதி ॥ ௧௩ ॥

அடுத்தாற்போல் ஈசாநபலி என்ற கர்மா சொல்லப்படுகிறது. இதற்குக் காலவிசேஷம் குறிப்பிடப்படாததால் இதை ஓரே தடவை செய்தால் போதும். இது ஒரு நித்யகர்மா. ப்ரமாணாந்தரத்தால் பசுக்களுடைய சாந்திக்குச் செய்யப்படுகிறது. புத்ரகாமனும் இதைச் செய்யலாம். ஸூத்ராந்தரங்களில் கோவைப் பசுவாக இங்கு ஆலம்பநம் செய்ய விதி காணப்படுகிறது. சரத்காலத்திலாவது வஸந்தருதுவிலாவது இதைச் செய்யலாம். திருவாதிரை நக்ஷத்ரத்தில் செய்யவேண்டும். பூர்வபக்ஷநியமமுமுண்டு. அதனல் பங்குனி மாதம் பூர்வபக்ஷத்தில் அஷ்டமீதிதியில் "ஆர்த்ரா" நக்ஷத்ரம் சேருவதால் அது முக்யகாலம் ஆகிறது.

இதைப் பின்வருமாறு செய்யவேண்டும்.

"ஈசாந"தேவதையையும் "க்ஷைத்ரபத்ய"தேவதையையும் உத்தேசித்து ஹவிஸ்ஸை ச்ரபணம்பண்ணி, அபிகாரணம் பண்ணி, உத்வாஸனம்பண்ணி, கீழே இறக்கி வைத்து அபிகாரணம் பண்ணி, இந்த ஹவிஸ்ஸு 'ஔபாஸநாக்நி' முதலியஇவைகளேயும் எடுத்துக்கொண்டு கிழக்குப் புறமாகவோ, வடக்குப்புறமாகவோ வீட்டைவிட்டு வெளிக்கிளம்பி, வெளியில் எங்கேயாவது ஓரிடத்தில் ஹோமத்தைச் செய்ய அக்நியை வைப்பதற்கும் "தேவகுடி" நிர்மாணத்திற்கும் போதுமான "ஸ்தண்டிலத்தை" கல்பித்து, அக்நிமித்வா என்றாரம்பிக்கும் பூர்வதந்த்

ரத்தைச் செய்யவேண்டும். சிலருடைய அபிப்ராயப்படி க்ஷேத்ர பதிசருவை லௌகிகாக்னியில் செய்யவேண்டும்.

சுவரெணாமிூ செ கூபீ கூுகூா ॥ கச ॥

பூர்வதந்த்ரத்தை ஆஜ்யபாகம், அதற்கடுத்தபடியாக அக்நயேஸ்வாஹா என்ற முகஹோமம்வரை செய்துகொண்டு அக்னிக்குமேல்புறத்தில் கிழக்குப்பக்கமாக வாயில்உள்ள இரண்டு க்ருஹங்களை வடக்குத்திக்கில் முடியும்படி செய்யவேண்டும்.

ஐதி வலகொ-நவிஂஶ: வண்டு: ॥

## பத்தொன்பதாம் கண்டம் முற்றிற்று.

---

சுயு விஂஶ: வண்டு: ॥

## இருபதாவது கண்டம்.

---

உதூரயா உக்ஷிணஸ்யா ஶீஶாநாவாஹயதி ॥ க ॥

அடுத்துள்ள "ஆத்வாவஹந்து" என்ற மந்த்ரத்தால் தெற்குக்குடியில் ஈசானனை மூர்த்திமானாக இங்கு வரவேண்டுமென்று த்யானம்பண்ணி ஆவாஹநம் செய்யவேண்டும்.

லௌகிகு்யா வாவொதூரஸ்யாஂ ஶீஶுஷீமு ॥ உ ॥

"ஆயாஹிமீடுஷி" என்ற லௌகிகமான வாக்யத்தால் வடக்குக்குடியில் தேவியை ஆவாஹநம் செய்யவேண்டும்.

ஶெஜு ஜயநூு ॥ ங ॥

இரண்டு குடிக்குமிடையில் "ஆயாஹிஜயந்த" என்று ஜயந்தனை ஆவாஹநம் செய்யவேண்டும். ஸூத்ரத்தில் சொல்லப்படாமல் போனாலும் ஆவாஹநம் பண்ணியவர்களுக்கு ஆஸநாதிகளை ஸமர்ப்பிக்கவேண்டும்.

யயொஉஶ-உகாநி வூஉாய தீூ நொஉ-நாநு கூஉ யிகூா
ஏமிஹூா-நீயொதூரொ வஸூ-யிகெூாதூரெய-யொ
வூஶொஉநெஹூா ஹகூா ஸவ-த வூஶவஉாயொதூ
ரெண யஜுஷாஏமிஂ வூிஷுகுதூ ॥ ச ॥

ஆவாஹநம் பண்ணிய க்ரமத்திலேயே "அர்க்யம்" "பாத்யம்" இவைகளை ஸமர்ப்பித்து, ஸ்தாலீபாக ஹவிஸ்ஸிலிருந்து

ஒரு பாகத்தை எடுத்து, மூன்றுபாகமாகச்செய்து, "ஈசானன்" "தேவீ" "ஜயந்தன்" இம்மூன்று தேவதைகளுக்கும் ஹோமத்திற்கும் பலிக்கும் வைத்துக்கொள்ளவேண்டும். பாத்ரத்தில் பாக்கியுள்ளதை ப்ராம்ஹண போஜநத்திற்கு வைத்துக்கொள்ள வேண்டும். மூன்றுதேவதைகளுக்காக ஒதுக்கப்பட்ட ஹவிஸ்ஸிலிருந்து ஒரு பாகத்தை மூன்றாகப் பிரித்து, "உபஸ்ப்ருசது மீட்வான்" என்ற மந்த்ரத்தால் ஈசாநதேவதைக்காக ஒரு பாகத்தை நிர்த்தேசம் செய்து, "உபஸ்ப்ருசது மீடுஷீ" என்றதால் தேவிக்கு ஒரு பாகத்தை நிர்த்தேசம் செய்து, "ஜயந்தோபஸ்ப்ருச" என்று ஜயந்தனுக்கு ஒரு பாகத்தை நிர்த்தேசம் செய்யவேண்டும். பிறகு அடுத்தாற்போலுள்ள "பவாயதேவாய ஸ்வாஹா" என்றாரம்பிக்கும் எட்டு மந்த்ரங்களால் ஈசாநனுக்கு அவனுக்கு நிர்த்தேசம் பண்ணப்பட்ட அந்நத்திலிருந்து ஹோமம் பண்ணவேண்டும். "பவஸ்ய தேவஸ்ய பத்ந்யை ஸ்வாஹா" என்றாரம்பிக்கும் எட்டு மந்த்ரங்களால் தேவியை உத்தேசித்து தேவிக்கு நிர்த்தேசம் பண்ணப்பட்ட அந்நத்திலிருந்து ஹோமம் பண்ணி, "ஜயந்தாயஸ்வாஹா" என்ற மந்த்ரத்தால் ஜயந்தனுக்காக நிர்தேசம் பண்ணப்பட்ட அந்நத்திலிருந்து ஜயந்தனுக்கு ஹோமம் பண்ணவேண்டும். பிறகு மூன்று அந்நங்களிலிருந்தும எடுத்து ஸ்விஷ்டக்ருத்ஹோமத்தைச் செய்யவேண்டும். "அக்நயே ஸ்விஷ்டக்ருதே ஸ்வாஹா" என்ற மந்த்ரம் ஸ்விஷ்டக்ருத்ஹோமத்திற்கானது.

உத்தரேண யஜ்ஞோபவீதவத் ... நாநி
வண ... ஸேநா
ஹ்யா ... ஹ்ய: ॥ ரு ॥

அடுத்துள்ள "ஸ்வஸ்திந:பூர்ணமுக:" என்ற மந்த்ரத்தால் ஈசாநனை உபஸ்தானம் செய்து, அடுத்துள்ள "க்ருஹபோபஸ்ப்ருச க்ருஹபாய ஸ்வாஹா" என்பது முதலாக உள்ள ஏழு மந்த்ரங்களாலும் ஒவ்வொரு மந்த்ரத்தாலும் ஓதநத்துடன்கூடிய இரண்டிரண்டு பர்ணங்களை மந்த்ரங்களில் சொல்லப்படும் தேவதையை உத்தேசித்துக் கொடுத்துத் தேவஸேநைகளை உத்தேசித்து முன்சொன்னபடி பத்துப்பர்ணங்களைக்கொடுத்து 'யாஆக்யாதா:' என்ற மந்த்ரத்தில் சொல்லப்படும் தேவதைகளை உத்தேசித்துப் பத்துப் பர்ணங்களைக் கொடுக்கவேண்டும். அதன்படி

பின் வருமாறு பரயோகம் ஸித்திக்கிறது. உத்தர தந்த்ரத்தைப் பரிஷேசனம் முடியச் செய்துகொண்டு, "க்ருஹபோபஸ்ப்ருச" என்ற மந்த்ரத்தினல் தெற்குக்குடியிலும், "க்ருஹப்யுபஸ்ப்ருச" என்ற மந்த்ரத்தால் வடக்குக்குடியிலும், 'கோஷிண உபஸ்ப்ருசத' என்பதால் நடுவிலும், இவ்விதமே 'ச்வாஸிந:, விசிந்வந்த:, ப்ரபுந் வந்த உபஸ்ப்ருசத' என்ற மந்த்ரங்களால் தெற்கு, வடக்கு, நடு, இவைகளிலும் பர்ணங்களைக் கொடுக்கவேண்டும். "ஸமச்நந்த:" என்ற மந்த்ரத்தாலும் பர்ணத்தைத் தக்ஷிணத்தில் கொடுக்க வேண்டும். அவரவர்கள் அந்நத்திலிருந்து அதையதைச் செய்ய வேண்டும். இப்படி இந்த ஏழு மந்த்ரங்களால் பர்ணதானம் பண்ணியபிறகு, தெற்குப் பக்கத்திலேயே "தேவஸேனு உபஸ்ப்ருசத" என்ற மந்த்ரத்தால் பத்துப் பர்ணங்களைக் கொடுக்க வேண்டும். 'யா ஆக்பாதா: என்ற மந்த்ரத்தாலும் பத்துப்பர்ணங்களைத் தெற்குப் பக்கத்திலேயே கொடுக்கவேண்டும்.

[illegible] ॥ ௬ ॥

பிறகு தெற்குக்குடியிலேயே ஈசாநனுக்கு "த்வாரபோபஸ்ப்ருச த்வாரபாயஸ்வாஹா" என்று இரண்டு பர்ணங்களைக் கொடுக்கவேண்டும். "த்வாராப்யுபஸ்ப்ருச" என்றடுத்த மந்த்ரத்தால் தேவியை உத்தேசித்து வடக்குக் குடியில் இரண்டு பர்ணங்கள். "அங்வாஸாரிண:" என்ற மந்த்ரத்தால் ஜயந்தனுக்கு நடுவில் இரண்டு பர்ணங்களைக் கொடுக்கவேண்டும். மறுபடியும், "நிஷங்கிந்நுபஸ்ப்ருச" என்பதால் ஈசாநனை உத்தேசித்து தெற்குக் குடியில் இரண்டு பர்ணங்கள் கொடுக்கவேண்டும். அந்தந்த மந்த்ரங்களில் தேவதைகள் ஸ்பஷ்டமாகத் தெரியாமல் போனாலும் 'ஈசாநனன்' 'மீடுஷீ' 'ஜயந்தன்' மூன்று தேவதைகளைக்குறித்தே இங்கு ஓதநத்துடன் கலந்த பர்ணங்கள் அர்ப்பிக்கப்படுவதால் அந்தந்த மந்த்ரங்களுக்கு இவர்களே தேவதையாகத் தடையில்லை. இங்குச் சொல்லப்படும் ஈசானன் ஸாக்ஷாத் "மஹேச்வரனே". 'மீடுஷீ' என்ற தேவதையும் ஸாக்ஷாத் பரமேச்வரியே. அவ்விதமே ஸ்கந்தன்தான் இங்கு ஜயந்த சப்தத்தால் சொல்லப்படுகிருன்.

ओदनपिण्डं संवृत्य पर्णपुटेऽवधायोत्तरेण यज्ञोपवीती वृक्ष आसजति ॥ ௭ ॥

அந்த அந்நத்திலிருந்தே த்ருடமாகப் பிண்டத்தைப் பிடித்து, பர்ணத்தால் செய்யப்பட்ட தொன்னையில் வைத்து, அடுத்த

"நமோ நிஷங்கிண இஷுதிமதே" என்றுமட்டும் உள்ள மந்த்ரத்தால் அதை ஏதாவது வ்ருக்ஷத்தில் உறியில் வைத்துக் கட்டிவிட வேண்டும்.

சது ரூத்ராநு ஜபேசு ॥ அ ॥

இந்தக் காலத்தில் "நமஸ்தே ருத்ரமந்யவே" என்றாரம்பிக்கும் பதினொரு அநுவாகங்களை ஜபிக்கவேண்டும். இது தான் இங்கு உபஸ்தான மந்த்ரம். கடைசியநுவாகத்தின் மந்த்ரங்களில் ஆநுஷங்கமுண்டு.

பூயமொ துரூ வா ॥ கூ ॥

அல்லது முதலிலும் கடைசியிலும் உள்ள அநுவாகங்களை ஜபித்தால் போதும்.

கூஹித வா தூரிநீ ம ஸாவயதி யமெநா ய ஒஃ

பூாவூயாசு ॥ ௨௦ ॥

இங்கு ஹோமங்கள் நடக்கும்பொழுது அக்நியைச் சுற்றி பசுக்களை நிறுத்தி வைக்கவேண்டும். அக்நியின் தூமம் அடையும்படி பசுக்களைக் கட்டவேண்டும்.

தா மமெயடி ஹரு ஷூநாவோகூதி வூஷா

ணமெவாமெ ॥ ௨௧ ॥

அந்தப் பசுக்களை பெரிய தர்ப்பமுஷ்டியைக்கொண்டு நல்ல வாஸனையுள்ள சந்தனாதிகளால் அவோக்ஷணம் செய்யவேண்டும். காளைமீதே முதலில் சந்தனத்தைத் தெளிக்கவேண்டும்.

மவாம ஊமெநரூளா கெஷூதூஸ வதிம யஜதெ ॥ ௨௨ ॥

இங்கு க்ஷேத்ரபதியை உத்தேசித்துச் செய்யவேண்டிய ஸ்தாலீபாகம் சொல்லப்படுகிறது.

பசுக்களின் மார்க்கத்தில் அக்நி இல்லாத இடத்தில் பூமியிலேயே க்ஷேத்ரபதிக்கு யாகம் செய்யவேண்டும். 'மார்க்க' என்பதில் தீர்க்கத்தின் ஸ்தானத்தில் 'மர்க்க' என்று ஹ்ரஸ்வம் வந்திருக்கிறது.

ஸமாநவஷாவாஹநது ॥ ௨௩ ॥

"ஆத்வாவஹந்து" என்ற மந்த்ரத்தாலேயே ஈசானனுக்குப்போல் க்ஷேத்ரபதிக்கு ஆவாஹநம் செய்யவேண்டும்.

வதஷ ஸவூஸ வா வணெஷ நாரொஷெமம ஷயாதி॥

ஆவாஹநம் செய்யப்பட்ட க்ஷேத்ரபதிக்கு அர்க்யம் முதலான ஸகல உபசாரங்களையும் செய்யவேண்டும். பிறகு பூமியில் நான்கு அல்லது ஏழு பர்ணங்களை வைத்து, அவைகளின்மீது "க்ஷேத்ரஸ்ய பதயே த்வா ததாமி" என்று சதுர்த்தீ விபக்தியோடு நாமாவைச்சொல்லி, க்ஷேத்ரபதியின் ஸ்தாலீபாகத்திலிருந்து அந்நத்தை எடுத்துவைக்கவேண்டும். சிலர் 'நம:' என்பதில்லாமல் "ஸ்வாஹா" என்பதைச் சேர்த்து "க்ஷேத்ரஸ்ய பதயேஸ்வாஹா" என்று சொல்லி, பலியை வைக்கிறார்கள்.

க்ஷிப்ரம் யஜேத பாகோ தேவ: ॥ கரு ॥

க்ஷேத்ரபதி தேவதை சிறிய தேவதை யாதலால் வெகு சீக்ரத்தில் கர்மாவைச் செய்யவேண்டும். இதனால் பலிஹரணத்தை வேகமாகச் செய்துவிட்டுப் பிறகு க்ஷேத்ரபதிக்கு உபசாரங்கள் செய்யலாம் என்று சிலர் கூறுகின்றனர்.

உத்தராப்யாமுபதிஷ்டேத ॥ கசு ॥

அடுத்துள்ள "க்ஷேத்ரஸ்யபதிநாவயம்" "க்ஷேத்ரஸ்ய பதே" என்ற இரண்டு மந்த்ரங்களாலும் உபஸ்தானம் செய்யவேண்டும்.

ஸ்தாலீபாகம் ப்ராஹ்மணாந் போஜயேத் ॥ சஎ ॥

ஸ்தாலீபாகஹவிஸ்ஸில் நெய்யைநிறையச் சேர்த்து அதைக்கொண்டு ப்ராம்ஹண போஜநம் செய்துவைக்கவேண்டும்.

க்ஷேத்ரபதேர்ஹவிஷ்ய: ஸநாபயோ பவந்தி ॥ கஅ ॥

க்ஷேத்ரபதியாகத்தின் ஹவிஸ்ஶேஷத்தை ஸபிண்டர்கள் சாப்பிடவேண்டும்.

யதா வா குலதர்மஸ்ஸ்யாத் ॥ ககூ ॥

அல்லது அவரவர்களுடைய குலதர்மங்களுக்கிணங்க யார் யாரைப் போஜநம் செய்விக்கவேண்டுமோ அவர்கள் எல்லோருக்கும் போஜநம் செய்து வைக்கலாம்.

இதி விம்ஶ: கண்ட: ॥

இருபதாவது கண்டம் முற்றிற்று.

---

𑌅𑌥 𑌏𑌕𑌵𑌿𑌂𑌶𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

## இருபத்தோராவது கண்டம்.

---

𑌮𑌾𑌸𑌿𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌸𑍍𑌯𑌾𑌪𑌰𑌪𑌕𑍍𑌷𑍇 𑌯𑌥𑍋𑌪𑌦𑍇𑌶𑌂 𑌕𑌾𑌲𑌾𑌃 ॥ ௧ ॥

அஷ்டகை முதலானவைகளுக்கு ப்ரக்ருதியாக உள்ள மாஸிச்ராத்தம் இங்குச் சொல்லப்படுகிறது. இது ப்ரதிமாதத்திலும் அபரபக்ஷத்தில் செய்யவேண்டிய பித்ருகர்மா. இதைச்செய்ய வேண்டிய காலம் தர்மஸூத்ரத்தில் சொல்லப்பட்டிருப்பதால் அங்குச் சொல்லப்பட்ட காலங்களில் இதைச் செய்யவேண்டும். அபரபக்ஷத்தின் அபராஹ்ணம் ச்ராத்தகாலமாக அங்குச் சொல்லப்படுகிறது.

ப்ரதமை முதலிய திதிகளில் செய்வதால் ஏற்படக்கூடிய விசேஷமும் அங்குச்சொல்லப்படுகிறது. காலம்அங்குச்சொல்லப் பட்டு விட்டதால் அதன் ப்ரயோகம் மட்டும்தான் இங்குச் சொல்லப்படுகிறது. மாஸிச்ராத்தத்திற்குத் தர்மஸூத்ரத்தில் காலம் சொல்லப்பட்டிருந்தும், இங்கு மறுபடியும் அதை அநுவாதம் செய்வதால், அபரபக்ஷத்திலேயே மாஸிச்ராத்தத்தைச் செய்யவேண்டும். தைவிகமான அல்லது மாநுஷமான தோஷம் காரணமாக மாஸிச்ராத்தம் தடைப்பட்டால் அதை வேறுகாலங்களில் செய்யக்கூடாது. பூர்வபக்ஷம் இதற்கு கௌணகாலமல்ல. அபரபக்ஷத்தில் செய்யமுடியாமல் போனால் ப்ராயச்சித்தத்தை மட்டும்தான் செய்துகொள்ள வேண்டும். 'பூர்புவஸ்ஸுவ: ஸ்வாஹா' என்று செய்யப்படும் ஸர்வ ப்ராயச்சித்த ஹோமமே ப்ராயச்சித்தம். மாஸ பரிமாணத்தை ப்ரதீக்ஷிக்காமல் அபரபக்ஷமே காலமாக விதிக்கப்படுவதால் மாஸபேதம் ஏற்பட்டாலும் அபரபக்ஷத்தின் ஏதாவது ஒரு திதியில் எப்பொழுதாவது செய்யலாம் என்று ஏற்படுகிறது. சிலருடைய அபிப்ராயப்படி எந்தத்திதியில் அபரபக்ஷத்தில் ச்ராத்தத்தைச் செய்ய ஆரம்பித்தானோ, அதே திதியிலேயே பிற்காலத்திலும் செய்யவேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லை. அபரபக்ஷத்தில் என்றாவது செய்யலாம்.

𑌶𑍁𑌚𑍀𑌨𑍍 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌵𑌤𑍋𑌽𑌯𑍋𑌨𑌿𑌗𑍋𑌤𑍍𑌰𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍇𑌵𑌾𑌸𑍍𑌯𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌾𑌨𑍍
𑌯𑍁𑌗𑍍𑌮𑌾𑌂𑌸𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌵𑌰𑌾𑌨𑌨𑌰𑍍𑌥𑌾𑌵𑍇𑌕𑍍𑌷𑍋 𑌭𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 ॥ ௨ ॥

சுத்தர்களாயும், வேதாத்யயந ஸம்பந்நர்களாயும், யோநி,

கோத்ரம், மந்த்ரம் இவைகளுடைய ஸம்பந்தமில்லாதவர்களாயுமுள்ள ப்ராம்ஹணர்களை ஒற்றைப்படை எண்ணிக்கையில் மூன்று பேருக்குக்குறையாமல் ப்ரத்யுபகாரமூலம் ஒருவித ப்ரயோஜனத்தையும் ப்ரதீக்ஷிக்காமல் மாஸிச்ராத்தத்தில் போஜநம் செய்துவைக்கவேண்டும். மாஸிச்ராத்தத்திற்கு இங்குச் சொல்லப்படும் யோக்யதையே மிகவும் முக்யமானது. மூன்றுபேருக்குக் குறையாமல் என்பது பித்ரு பிதாமஹ ப்ரபிதாமஹவிஷயம். அதனால் பித்ருவரணத்திற்காக, போஜநம் செய்விக்கப்படும் ப்ராம்ஹணர்கள் மூன்று பேருக்குக் குறையாமல் இருக்கவேண்டுமென்று ஏற்படுகிறது. ச்ராத்தத்தில் தேவர்களுக்கு இரண்டுபேரையும் பித்ருக்களுக்கு மூன்றுபேரையும், போஜநம் செய்துவைக்க வேண்டும். மூன்றுபேருக்குக் குறையாமல் என்று ஸூத்ரகாரர் சொல்லுவதால். ஐந்து ப்ராம்ஹணர்களையாவது, ஏழு ப்ராம்ஹணர்களையாவது போஜநம் செய்துவைக்கலாம் என்று ஏற்படுகிறது. ஆனால் மநு ச்ராத்தத்தை விஸ்தரிக்கக்கூடாதென்று சொல்லுவதால் ஐந்து ப்ராம்ஹணர்கள் வரைதான் போஜநம் செய்துவைக்கலாம். கடைசிப்பக்ஷமாக, தேவர்களுக்கு ஒரு ப்ராம்ஹணனுக்கும், பித்ருக்களுக்கு ஒரு ப்ராம்ஹணனுக்கும் போஜநம் செய்துவைக்கலாம். பிண்டதானத்தில் மாதா முதலிய ஸ்த்ரீகளுக்கு ஸம்பந்தமிருந்தாலும், அவர்களை உத்தேசித்து ப்ராம்ஹண போஜநம் கிடையாது. அவர்களுக்குத் தனியாக ப்ராம்ஹணனை வரித்தால் எண்ணிக்கை இரட்டைப் படையாகிவிடும். மேலும், அஷ்டகை, வ்ருத்திச்ராத்தம், கயாச்ராத்தம், இறந்துபோன திதியில் செய்யப்படும் ச்ராத்தம் இவைகளில் மாதாவுக்குத் தனியாக ச்ராத்தம் செய்யவேண்டும். மற்ற இடங்களில் மாஸிச்ராத்தம் முதலிய இடங்களில் மாதாவுக்குத் தனியாக, ச்ராத்தம் கிடையாது. ஸூத்ரத்தில் விச்வேதேவர்களை உத்தேசித்து, ப்ராம்ஹணபோஜநம் செய்துவைக்கவேண்டுமென்று சொல்லப்படாவிட்டாலும் மற்ற ஸ்ம்ருதிகளை அநுஸரித்து, தேவர்களுக்காகவும் ப்ராம்ஹணபோஜநம் செய்துவைக்கவேணும். ப்ராம்ஹணர் கிடைக்காமலிருந்தால் ஒரே ப்ராம்ஹணனை வரித்தும் ச்ராத்தம் செய்யலாம். ஆனால் அவனை பித்ரு ஸ்தானத்திலேயே வைக்கவேண்டும். விச்வேதேவர்களுடைய இடத்தில் அந்நத்தைத் தத்தம் பண்ணி அக்நியில்

சேர்த்துவிடலாம், அல்லது ப்ரம்ஹசாரிக்குக் கொடுத்து விடலாம். மாதாமஹாதிகளுக்கு ச்ராத்தம் செய்யும்பொழுதும், போஜநம் செய்துவைக்கவெண்டிய ப்ராம்ஹணர்களின் ஸங்க்யை விஷயத்திலும் இப்படியே கண்டுகொள்வது.

சுஷெஸ்யா தூராவிஜ-ஃஹொதி ॥ ரு ॥

'அக்நிமித்வா' என்றாரம்பிக்கும் பூர்வதந்த்ரத்தை ஆரம்பித்து ஆஜ்யபாகம் முடியச் செய்துகொண்டு 'அக்நயேஸ்வாஹா' என்ற முகாஹுதியைச் செய்துகொண்டு பிறகு ஆவாஹநாதிகளைச் செய்து முடித்துக்கொண்டபிறகு, பித்ருவரணத்தில் வரிக்கப்பட்ட ப்ராம்ஹணனிடம் அநுமதிபெற்று அடுத்துள்ள 'யந்மேமாதா' என்றாரம்பிக்கும் ஏழு மந்த்ரங்களால், அந்ந ஹோமம் செய்யவேண்டும். ப்ராம்ஹண போஜநத்திற்காக ஏற்பட்டுள்ள அந்நம் முதலியவைகளிலிருந்து ஹோமத்திற்கான அந்நத்தை எடுத்து இந்த ஹோமங்களைச் செய்யவேண்டும். ஏழு மந்த்ரங்களில் ஒவ்வொரு மந்த்ரத்தாலும் ஒவ்வொரு தடவை ஹோமம் செய்யவேண்டும். ஒவ்வொரு தடவையிலும் பார்வணப்போல் உபஸ்தரணம், அபிகாரணம், இவைகளோடு இரண்டு தடவை ஹவிஸ்ஸை அவதானம் செய்துகொள்ள வேண்டும். முதல் இரண்டு மந்த்ரங்களில் உள்ள 'அமுஷ்மை ஸ்வாஹா' என்ற இடத்தில் சதுர்த்தீ விபக்தியோடு பிதாவின் பெயரைச்சேர்த்துக் கொள்ளவேண்டும். மூன்றாவது, நான்காவது மந்த்ரங்களில் முன்போல் பிதாமஹனின் பெயரையும், ஐந்தாவது ஆறாவது மந்த்ரங்களில் முன்போல் ப்ரபிதாமஹன் பெயரையும் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

இரண்டு கோத்ரங்களுக்கு ச்ராத்தங்களைச்செய்யும் 'த்வ்யாமுஷ்யாயணன்' முதலியவர்கள் பித்ரு, பிதாமஹ, ப்ரபிதாமஹர்களின் பெயரைக் குறிப்பிடும் இரண்டு கோத்ரத்தைச் சேர்ந்தவர்கள் பெயரை இரண்டு இரண்டாகக் குறிப்பிடலாம். ஆனால் கலியுகத்தில் "த்வ்யாமுஷ்யாயணர்" கிடையாது. மாதாமஹாதிகளுக்கு ச்ராத்தம் செய்பவன் மந்த்ரத்தில் அதற்குத் தகுந்தாற்போல் ஊஹம் செய்துகொள்ளவேண்டும். ச்ராத்தம் செய்பவனின் பிதாமஹன் முதலியவர்கள் உயிரோடிருந்தால், அவனை விட்டு ப்ரபிதாமஹன் முதலியவர்களைச்சேர்த்து ஊஹம்செய்து கொள்ளவேண்டும்.

ஆஜ்யாஹுதீர்ஹுத்வா ॥ ௪ ॥

அடுத்தாற்போல்உள்ள 'ஸ்வாஹாபித்ரே' என்ற ஆறு ஹோமமந்த்ரங்களால் ஆறு ஆஜ்யஹோமங்களைச் செய்ய வேண்டும். மாதாமஹன் முதலியவர்களின் ச்ராத்தத்தில் ஹோமமந்த்ரத்தில் இடத்திற்குத் தகுந்தாற்போல் ஊஹம் செய்துகொள்ளவேண்டும்.

மாஸிச்ராத்தத்தில் ப்ராம்ஹண போஜநம் ப்ரதானகர்மா. அக்நியில் ஹோமம்பண்ணுவதும் பிண்டதானமும் அதற்கு அங்கம் என்று நிர்ணயித்து ஜீவத்பிதா கொடுக்கக்கூடாதென்ற நிஷேதத்தைப் பின்பற்றி, பிதா உயிரோடு இருக்குமவரை மாஸி ச்ராத்தம் செய்யவேண்டாம் என்று சிலர் கூறுகின்றனர். பிண்ட பித்ரு யக்ஞத்தில் ஹோமம் ப்ரதானமானதால் அங்கு ஜீவத்பிதா ஹோமத்தைச் செய்வதோடு கர்மாவை முடித்து விடலாம். மற்றும் சிலர், பிதாயாருக்கு ச்ராத்தாதிகளைப் பண்ணு கிறாரோ அவர்களை உத்தேசித்து "ஜீவத்பித்ருகன்" மாஸிச்ராத் தத்தைச் செய்யலாம் என்று கூறுகின்றனர். வேறு சிலர் ச்ராத் தத்தில் "ப்ராம்ஹணபோஜநம்" "அக்நியில் ஹோமம்செய்வது" "பிண்டதானம்" மூன்றும் ப்ரதானமானதால் "ஜீவத்பித்ருகன்" மாஸிச்ராத்தத்தையும் ஹோமத்தோடு நிறுத்திவிடலாம் என்று கூறுகிறார்கள்.

யதா வா விபரீதம் ॥ ௫ ॥

அல்லது முதலில் உள்ள ஏழு மந்த்ரங்களால் ஆஜ்ய ஹோமங்களைச் செய்துவிட்டு, பிறகு உள்ள ஆறு மந்த்ரங்களால் அந்த ஹோமத்தைச் செய்யலாம்.

ஸம்ஸ்தாப்யோத்தராபிரபிம்ருஶதி ॥ ௬ ॥

இவ்விதம் ப்ரதாந ஆஹுதிகளையும், ஸ்விஷ்டக்ருத்ஹோமத்தையும்செய்து முடித்துக்கொண்டு உத்தரதந்த்ரத்தையும் பார்வணம்போல் முடித்துக்கொண்டு ப்ராம்ஹண போஜநத் திற்காக உள்ள அந்நம் முதலியவைகள் எல்லாவற்றையும் 'ஏஷதேததமதுமாந்' என்றாரம்பிக்கும் மூன்று மந்த்ரங்களால் அபிமர்சனம் பண்ணவேண்டும். மாதாமஹன் முதலியவர்களை உத்தேசித்துச் செய்யப்படும் ச்ராத்தத்தில் இங்கும் ஊஹ முண்டு. ஒரே ப்ரயத்னத்தில் எல்லாவற்றையும் அபிமர்சனம்

செய்ய முடியாததால், முடியாத அந்நபாகத்தை அபிமர்சனம் செய்ய மந்த்ரத்தை ஆவ்ருத்தி செய்யலாம். சிலருடைய அபிப்ராயப்படி ஸ்விஷ்டக்ருத் ஹோமம் ஆனவுடன் ஜயாதி ஹோமத்தைச் செய்யவேண்டும்.

ஸர்வாணி வா ப்ரதிவேஷ்ட்ய ॥ ௭ ॥

போஜநபாத்ரத்தில் அந்நம் முதலியவைகளைப் பரிமாறிய பிறகாவது பித்ரு வரணக்காரர்களின் பாத்ரங்களில் உள்ளதை அபிமந்த்ரணம் செய்யலாம். இங்கும் ஒரே ப்ரயத்நத்தில் அபிமர்சனம் செய்யமுடியாத இடங்களில் மந்த்ராவ்ருத்தி பண்ணி அபிமர்சனம் பண்ணவேண்டும்.

உத்தரேண யஜுஷோபஸ்பர்ஶயித்வா ॥ ௮ ॥

அடுத்துள்ள 'ப்ருதிவீதே' என்ற மந்த்ரத்தால் ப்ராம்ஹணர்களைக்கொண்டு அந்நத்தைத் தொடச்செய்ய வேண்டும். 'ப்ராம்ஹணாநாம்த்வா' என்று பஹுவசனமிருந்தாலும் ஒவ்வொரு ப்ராம்ஹணனிடத்திலும் மந்த்ரத்தை ஆவ்ருத்தி செய்ய வேண்டும்.

புக்தவதோऽநுவ்ரஜ்ய ப்ரதக்ஷிணீக்ருத்ய த்வைதம் தக்ஷிணாக்ராந் தர்பாந் ஸம்ஸ்தீர்ய தேஷூத்தரைரபோ தத்த்வோத்தரைர்தக்ஷிணாபவர்காந் பிண்டாந் தத்த்வோத்தரைரபோ தத்த்வோத்தரைருபஸ்தாயோத்தரயோபஸ்தாய ப்ரஸவ்யம் பரிஷிச்ய ந்யுப்ஜ்ய பாத்ராணி யதாந்யாஸம் ப்ரத்யாஹ்ருத்ய ஸவ்யஸ்தாயோத்தரேண யஜுஷா ஶேஷஸ்ய ப்ராஶநம் ப்ரார்ஜ்யாத் ॥ ௯ ॥

போஜநம் ஆனபிறகு ப்ராம்ஹணர்கள் தங்கள் க்ருஹத்திற்குப் புறப்படும் காலத்தில் அவர்களைப் பின்தொடர்ந்து சிறிது தூரம் சென்று ப்ரதக்ஷிணம் பண்ணித் திரும்பி, கர்த்தா ச்ராத்தம் நடக்கும் இடத்திற்கு வந்து ப்ராசீநாவீதியாய் தர்ப்பங்களை இரண்டு வகையாகப் பிரித்து அவைகளைத் தக்ஷிணாக்ரமாக (தெற்குப்பக்கத்தில் நுனி இருக்கும்படி) கிழ்பக்கம், ஒருபாகத்தையும், மேல்பக்கம் ஒருபாகத்தையும் பரப்பி அவைகளின் மீது அடுத்து 'மார்ஜயந்தாம்மமபிதர:' என்றாரம்பிக்கும் மந்த்ரங்களால்

அந்தந்த மந்த்ரங்களில் சொல்லப்பட்டபடி பிதா முதலியவர்களை உத்தேசித்து உதகதானம் செய்யவேண்டும். பரப்பியுள்ள தர்ப்பங்களில் கீழ்பக்கத்து தர்ப்பங்களில் பிதா, பிதாமஹன், ப்ரபிதாமகன் இவர்களை உத்தேசித்து உதகதானம் பண்ண வேண்டும். மேல்பக்கத்திலுள்ள தர்ப்பங்களில் மாதா, பிதாமஹீ, ப்ரபிதாமஹீ, இவர்களுக்கு உதகதானம் செய்ய வேண்டும். பிறகு பிதா முதலானவர்களை உத்தேசித்து அடுத்த மந்த்ரங்களால் தெற்கில் முடியும்படி பிண்டதானம் பண்ணவேண்டும். முன்போல் இங்கும் பிதா முதலியவர்களுக்குக் கிழக்குப் பக்கத்திலும், மாதா முதலானவர்களுக்கு மேற்குப் பக்கத்திலும் தெற்கில் முடியும்படி பிண்டதானத்தை 'ஏதத்தே ததயேசத்வாமநு' என்றாரப்பிக்கும் மந்த்ரங்களால் அவரவர்களுக்குப் பிண்டதானம் பண்ணவேண்டும். முன்போலவே 'மார்ஜயந்தாம்மமபிதர:' என்றாரம்பிக்கும் மந்த்ரங்களால் ஜலதானம் செய்து, 'யேசவோZத்ர' என்றாரம்பிக்கும் மந்த்ரங்களால் உபஸ்தானம் செய்யவேண்டும். பும்லிங்கமுள்ள மந்த்ரத்தால் பிதா முதலானவர்களையும், ஸ்த்ரீலிங்க மந்த்ரத்தால் மாதா முதலானவர்களையும் உபஸ்தானம் செய்யவேண்டும். பிறகு ஜலம் நிறைந்த பாத்ரத்தைக் கொண்டு அடுத்துள்ள 'புத்ராந் பௌத்ராந்' என்ற மந்த்ரத்தால் இரண்டு வகைப் பிண்டங்களையும் மூன்று தடவை அப்ரதக்ஷிணமாகப் பரிஷேசநம் பண்ணி பாத்ரங்களைக் கவிழ்த்து, அடுத்துள்ள 'த்ருப்யத' என்ற மந்த்ரத்தை மூன்று தடவைக்குக் குறையாமல் மூச்சு விடாமல் ஆவ்ருத்தி பண்ணி, பாத்ரங்களை ப்ரோக்ஷணம்பண்ணி இரண்டு இரண்டாக எடுத்து, பாக்கியுள்ள அந்நத்திலிருந்து எடுத்து "ப்ராணேநிவிஷ்டோப்ருதம்" என்ற மந்த்ரத்தால் ஒரு பிடிக்குக் குறைவில்லாமல் அந்நத்தை ப்ராசனம் பண்ண வேண்டும். இங்குச் செய்யப்படும் ப்ராசநம் ச்ராத்தத்திற்கு அங்கமானதால் ப்ராசீநாவீதத்துடன் இதைச் செய்யவேண்டும்.

இங்கு ஸூத்ரகாரர் ச்ராத்தத்திலுள்ள முக்யமான பாகங்களை, மந்த்ரப்ரச்நத்தில் படிக்கப்பட்ட மந்த்ரங்களைப் பின்பற்றி நிரூபித்தார். இதில் சொல்லப்படாத அம்சங்களை மற்ற ஸ்ம்ருதிகளிலிருந்தும் நிபந்தனங்களிடமிருந்தும் எடுத்துக்கொள்ள வேண்டும். ச்ராத்தப்ரயோகம், பலவிதமாக இருப்பதால் அவர

வர்கள் ஸம்ப்ரதாயப்படி அதைச் செய்யவேண்டும். அதனால் நாம் இங்கு அதை நிரூபிக்கவில்லை.

𑌯𑌾 𑌮𑌾𑌘𑍍𑌯𑌾𑌃 𑌪𑍌𑌰𑍍𑌣𑌮𑌾𑌸𑍍𑌯𑌾 𑌉𑌪𑌰𑌿𑌷𑍍𑌟𑌾𑌦𑍍𑌵𑍍𑌯𑌷𑍍𑌟𑌕𑌾
𑌤𑌸𑍍𑌯𑌾𑌮𑌷𑍍𑌟𑌮𑍀 𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌯𑌾 𑌸𑌂𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 𑌤𑌾𑌮𑍇𑌕𑌾𑌷𑍍𑌟𑌕𑍇
𑌤𑍍𑌯𑌾𑌚𑌕𑍍𑌷𑌤𑍇 । ௧௦ ॥

மாஸிச்ராத்தவிதியை முடித்துவிட்டு, "அஷ்டகா" என்ற கர்மாவை இங்கு ஸூத்ரகாரர் நிரூபிக்கிறார். முதலில் இந்தக் கர்மாவின் காலம் சொல்லப்படுகிறது. மாகமாஸத்தின் பூர்ணிமைக்குமேல்வரும் அஷ்டமியை ஏகாஷ்டகா என்று சொல்லுகிறார்கள். இந்த அஷ்டமீ ஜ்யேஷ்டா நக்ஷத்ரத்துடன் சேர்ந்தாலும் சேராவிடினும் ஏகாஷ்டகா என்ற பெயர் உண்டு. அன்றைய தினம் அஷ்டகா கர்மாவைச் செய்யவேண்டும். இது நித்யகர்மா. ப்ரதிவர்ஷமும் செய்யப்படவேண்டும். ஜ்யேஷ்டா நக்ஷத்ர ஸம்பந்த மில்லாதுபோனாலும் அஷ்டமியில் செய்தாகவேண்டும்.

𑌤𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌸𑌾𑌯𑌮𑍌𑌪𑌕𑌾𑌯𑌃 ॥ ௧௧ ॥
𑌚𑌤𑍁𑌶𑍍𑌶𑌰𑌾𑌵𑌮𑌪𑍂𑌪𑌂 𑌶𑍍𑌰𑌪𑌯𑌤𑌿 ॥ ௧௨ ॥

இவ்வித ஏகாஷ்டகைக்குக்கூடச் செய்யவேண்டிய அங்கமான கர்மாவை முதல்நாள் ஸப்தமியன்று ஸாயங்காலத்தில் செய்யவேண்டும்.

நான்கு பாத்ரங்கள் (சராவங்கள்) நிறைந்த வ்ரீஹியை நிர்வாபம் செய்து 'அவகாதாதி' களைச் செய்து ச்ரபணம் பண்ணி அபூபமாகச் செய்யவேண்டும். (அடைபோல் செய்யவேண்டும்.) பிறகு அபிகாரணம் பண்ணி இறக்கிவைத்த பிறகும் அபிகாரணம் செய்யவேண்டும்.

𑌅𑌷𑍍𑌟𑌾𑌕𑌪𑌾𑌲𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌕𑍇 ॥ ௧௩ ॥

சில மஹர்ஷிகளின் பக்ஷப்படி இந்த ஹவிஸ்ஸை எட்டுக் கபாலங்களில் ச்ரபணம் பண்ணப்பட்ட புரோடாசமே லௌகிகமான ப்ரகாரத்தில் ஔபாஸன அக்நியில் பக்வம் பண்ணவேண்டும்.

𑌇𑌤𑍍𑌯𑍇𑌕𑌵𑌿𑌂𑌶𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

இருபத்தோராவது கண்டம் முற்றிற்று.

அத த்வாவிம்ஶ: கண்ட: ॥

## இருபத்திரண்டாவது கண்டம்.

பார்வணவதாஜ்யபாகாந்தே(அ)ஞ்ஜலினா(அ)பூபம் ஜுஹோதி ॥ ௧ ॥

பிறகு "அக்நிமித்வா" என்ற ப்ரயோகத்தை ஆரம்பித்து "அக்நயேஸ்வாஹா" என்ற முகாஹுதிவரைச்செய்து அஞ்ஜலியினால் "யாம்ஜநா: ப்ரதிநந்தந்தி" என்ற மந்த்ரத்தால் அபூபத்திலிருந்து எடுத்து ஹோமம் பண்ணவேண்டும். அஞ்ஜலி ஸம்ஸ்காரத்தை இவன் செய்து கொள்ளமுடியாததால், வேறு யாராவது செய்யவேண்டும். "ஸ்விஷ்டக்ருத்" ஹோமத்தைத் தர்வியினாலேயே செய்யவேண்டும். பார்வணம்போல் உத்தரதந்த்ரத்தை முடிக்கவேண்டும்.

ஶிஷ்டமஷ்டதா க்ருத்வா ப்ராஹ்மணேப்ய உபஹரதி ॥

பாக்கியுள்ள அபூபசேஷத்தை எட்டு விதமாகச்செய்து ப்ராம்ஹணர்களுக்குக் கொடுக்கவேண்டும். இவ்விதம் அஷ்டகையின் அங்கமான கர்மாவை முடித்துக்கொண்டபிறகு அஷ்டகாச்ராத்தத்திற்கு ப்ராம்ஹணர்களை வரிக்கவேண்டும்.

ஶ்வோபூதே தர்பேண காமுபாகரோதி பித்ருப்யஸ்த்வா ஜுஷ்டாமுபாகரோமீதி ॥ ௩ ॥

பிறகு மறுநாள் ப்ராம்ஹணர்களை க்ருஹத்திற்கழைத்து மாஸிச்ராத்தம்போல் அக்நிமுகாந்தம் பூர்வதந்த்ரத்தை முடித்துக்கொண்டு ஒரு தர்ப்பத்தால் பசுவை, "பித்ருப்யஸ்த்வா ஜுஷ்டாமுபாகரோமி" என்று உபாகரணம் பண்ணவேண்டும்.

தூஷ்ணீம் பஞ்சாஜ்யாஹுதீர்ஹுத்வா பஶுவத் ஸம்ஜ்ஞப்ய வபாம் ஶ்ரபயித்வோபஸ்தீர்ணாபிகாரிதாம் [illegible] வபாஶ்ரபண்யோர்ஹுத்வா ஜுஹோதி ॥ ௪ ॥

உபாகரணம் ஆனஉடன் மந்த்ரமில்லாமல் தூஷ்ணீமாக ஐந்து ஆஜ்ய ஹோமங்களைச்செய்து பசுபந்தத்தில் செய்வதுபோல் ஸம்ஜ்ஞபநாதிகளைச்செய்து வபையை உத்தாணம் பண்ணி வபா ச்ரபணிகளைக்கொண்டு வபையைக் கொண்டுவந்து ஔபாஸநத்தில், ச்ரபணம் பண்ணி, அபிகாரணம் பண்ணி,

பலாசபர்ணத்தின் நடு இலையினாலாவது கடைசி இலையினாலாவது எடுத்து "வஹ வபா:" என்ற மந்த்ரத்தால் வபையை ஹோமம் பண்ண வேண்டும்.

ஶாංஸஊஉநஶ~தூபாஹி: ॥ ௫ ॥

வபாஹோமம் முடிந்தபிறகு, பசுவை விசஸநம்பண்ணி, அந்வஷ்டகைக்காக மாம்ஸத்தைப் பாக்கி வைத்துக்கொண்டு, மற்ற மாம்ஸத்தைப் பக்வம் பண்ணி, ஓதநத்துடன் கலந்து, மாஸிச்ராத்தம்போல் ப்ராம்ஹணபோஜநார்த்தமான அந்நத்திலிருந்து எடுத்து, "யாம்ஜநா: ப்ரதிநந்தந்தி" முதலான ஏழு மந்த்ரங்களால் ஒவ்வொரு மந்த்ரத்தாலும் ஒவ்வொரு ஹோமம் செய்யவேண்டும்.

விஷாளுஶ~தூபயா ॥ ௬ ॥

"உக்த்யஶ்சாஸ்யதிராத்ர:" என்ற மந்த்ரத்தால் பாலில் பக்வமான பிஷ்டத்தை ஹோமம் செய்யவேண்டும்.

ஆஜ்யாஹு~தீர~தூபா: ॥

ஷிஷ்டக்ருஸ்வூஹூதி ஸஶாநஶாவிஜ்ஞநியாநாஸ ॥ ௭ ॥

மேலுள்ள எட்டு மந்த்ரங்களால் ஆஜ்யஹோமம் செய்யவும்.

ஸ்விஷ்டக்ருத் ஹோமத்தை முடித்துக்கொண்டு மாஸிச்ராத்தம்போல் பிண்டதானம் முடியச் செய்யவேண்டும்.

சுநஷ்டகாயாமெவெகெ விஜ்ஞநியாநஶ~வஹிஶக்தி ॥ ௮ ॥

சில மஹர்ஷிகள் அபிப்ராயப்படி அந்வஷ்டகையிலேயே பிண்டதானம் செய்யவேண்டும்.

கலியுகத்தில் கோவைக்கொண்டு யாகம் செய்வது நிஷேதிக்கப்பட்டிருப்பதால் கோ ஸம்பந்தமில்லாமல் கோ ஸ்தானத்தில் ஆஜ்யத்தைக்கொண்டு ஹோமம் செய்து அஷ்டகா கர்மாவைச் செய்யலாம்.

சுமெதஉவாபං உஞ வனவாஜூரி நா ஜ~ஹொதி யயா
zவ ஙிவழ ॥ ௯ ॥

இங்கே பசு ஸம்பந்தமில்லாமல் அஷ்டகையில் உள்ள மற்றொரு கல்பம் உண்டு. அது பின்வருமாறு:- பார்வணம்போல் முகாந்தமாக பூர்வ தந்த்ரத்தைச் செய்துகொண்டு, "யாம்ஜநா:" என்ற மந்த்ரத்தாலேயே அஞ்ஜலியில் தயிரை நிரப்பிக்கொண்டு, அஞ்ஜலியினால் ஹோமம் செய்து, ஸ்விஷ்டக்ருத் முதலிய உத்தராங்கத்தைச் செய்யவேண்டும். இதை அஷ்டமியன்று

பூர்வாஹ்ணத்தில் செய்யவேண்டும். இந்தப் பக்ஷத்திலும் நவமியில் அந்வஷ்டகை செய்யவேண்டும். அபராஹ்ணத்தில் அன்றைய தினமே ப்ராம்ஹண போஜநம் செய்விக்கவேண்டும்.

கூத வனவ யயாாய-ிம ஊாமஸம ஶிஷ்வா ஶ்வோஹூ௦தெzநஷ்டகாழ் ॥

முதல்நாள் உபயோகிக்கப்பட்ட பசுவின் மாம்ஸத்தைக் கொண்டே மறுநாள் அந்வஷ்டகையைச் செய்யவேண்டும்.

தஸ்ா ஊாஸிஶ்ராஜெூந கல்வொ வ்ாவ்ாதஃ ॥ ௧௧ ॥

மாஸிச்ராத்தம்போல் அந்வஷ்டகையைச் செய்யவேண்டும்.

ஸநிஜிகெவாத்தூாாநு ஜவிகூாzய-ிம ஶ்ருமிபாகூ ॥ ௧௨ ॥

மந்த்ரப்ரச்நமான ஏகாக்நிகாண்டத்தில் இதுவரை மந்த்ர பாடத்தை அனுஸரித்துப் பல கர்மாக்களைச் சொன்னார். இதற்கு மேல் உள்ள மந்த்ரங்கள் பயன்படும் கர்மாக்களை இங்கிருந்து சொல்லுகிறார். யாசநத்திற்காகப் பிறரிடம் செல்லும் காலத்தில் பிறரிடம் சென்று "அந்நமிவ தே த்ருசே பூயாஸம்" என்று ஆரம்பிக்கும் ஏழு மந்த்ரங்களை ஜபித்துவிட்டு தான் வந்துள்ள கார்யத்தைச் சொல்லவேண்டும்.

ரயம ஸ்வா யொஜயிகூா ஶ்ராஷுவேஷூாவெ்ாத்தூரயா
ரயவகெூ கூஷிஶூஶதி வக்ஷஸீ வா ॥ ௧௩ ॥

யாசநம் செய்த இடத்தில் ரதம் கிடைத்தால் அதைப் பெற்று ரதத்தின் குதிரைகளைப் பூட்டும்படிசெய்து, கிழக்கு முகமாக நிறுத்திவைத்து, "அங்கௌஙயங்கௌ" என்ற மந்த்ரத்தால் ரதத்தின் சக்ரங்களை அபிமர்சநம் செய்யவேண்டும். ரதத்தின் பக்கத்துப் பலகைகளையாவது அபிமந்த்ரணம் பண்ணலாம்.

உத்தூரெண யஜுஷாzயிரு்ஹ்ெோத்தூரயா ஶ்ராவீசீம்
வீம வா ஜிஶஶவிஶுயாய யயாய-ிம யாயாகூ ॥ ௧௪ ॥

அடுத்துள்ள "அத்வநாமத்வபதே" என்ற மந்த்ரத்தால் ரதத்தில் ஏறி "அயம்வாமஶ்விநா" என்ற மந்த்ரத்தால் கிழக்கு முகமாகவாவது வடக்குமுகமாகவாவது யாத்ரைசெய்து இஷ்டப்படி போகலாம்.

அஶ்வஂ த்வேநாரோஹேத் ॥ ௧௫ ॥

யாசித்த இடத்தில் குதிரை கிடைத்தால் "அஶ்வோஸி" என்ருரம்பிக்கும் மந்த்ரங்களால் குதிரைமீது ஏறவேண்டும்.

ஹஸ்திநஂ த்வாயா ॥ ௧௬ ॥

"ஹஸ்தியசஸமஸி" என்ற மந்த்ரத்தால் யானை கிடைத்தால் யானைமீது ஏறவேண்டும்.

தா஭்யாஂ ரேஷணே வஶ்வவஶ்வஂ வ்யாயிவீமஹிஶ்யேத் ॥ ௧௭ ॥

குதிரை யானை இரண்டுக்கும் சரீரபாதை ஏற்பட்டால் "ஸ்யோநா ப்ருதிவி பவத்தா" என்ற மந்த்ரங்களால் பூமியை அபிமர்சநம் செய்யவேண்டும்.

ஸஂவாதமேஷ்யந் ஸவ்யேந பாணிநா ஛த்ரஂ தண்டஂ சாததீத ॥

பிறருடன் ஸம்வாதம் செய்ய நேரிடும் காலத்தில் ஜயத்தை அடைய நினைப்பவன் இடது கையால் குடையையும் தண்டத்தையும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இதி த்வாவிஂஶஃ கண்டஃ ॥

## இருபத்திரண்டாவது கண்டம் முற்றிற்று.

---

அத த்ரயோவிஂஶஃ கண்டஃ ॥

## இருபத்து மூன்ருவது கண்டம்.

---

தக்ஷிணேந ஹஸ்தேந பூர்ணமுஷ்டிஂ த்வாயா
ஹுத்வா ப்ரத்யாகச்சந் ஜபேத் ॥ ௧ ॥

சத்ரம், தண்டம் இரண்டையும் இடதுகையில் வைத்துக் கொண்டே வலது கையினுல் தவிடு நிறைந்த முஷ்டியை அடுத்த "அவஜிஹ்வக" என்ற மந்த்ரத்தால் ஹோமம் செய்துவிட்டு, வாதம் நடக்குமிடத்தை அடைந்து எதிரியைப்பார்த்து "ஆதேவாசமாஸ்யாம்" என்ற மந்த்ரத்தை ஜபிக்கவேண்டும். மந்த்ரத்திலுள்ள "அஸௌ" சப்தஸ்தானத்தில் எதிரியின் பெயரை ப்ரதமாவிபக்தியால் க்ரஹிக்கவேண்டும். இங்கே சொல்லப்பட்ட ஹோமத்திற்குப் பூர்வோத்தர தந்த்ரங்கள் கிடையாது.

க்ருத்தஂ த்வாபாஂ மஹீமஹுஂ வ்யேத விக்ரோதோ பவதி ॥ ௨ ॥

எதிராளி, அல்லது மத்யஸ்தன், கோபத்துடன் இருந்தால் "யாத ஏஷாரராட்யா" என்றாரம்பிக்கும் இரண்டு மந்த்ரங்களால் அபிமந்த்ரணம் பண்ணவேண்டும். இப்படிச் செய்தால் கோபமில்லாதவனாகிவிடுவான்.

சுஸம்ஹவெஸ்ஷு: வரெஷாம் ஸூமெஷாஜாஸிகாஜீவவுமெணாநி
காரயிக்வாத்ரயா ஸாஸ்த்வாயாஸம்பாய உவவவெக ॥ ௩ ॥

பிறருடன் தன்னுடைய ஸ்திரீ போகம் செய்யாமல் செய்ய நினைப்பவன் "ஸ்தூலாடாரிகா" என்ற உயிருள்ள ஜந்துவின் சூர்ணத்தைச்செய்து தன் ஸ்த்ரீ தூங்கும்பொழுது அவளுடைய ரஹஸ்யஸ்தானத்தில் சேர்த்துவிடவேண்டும். இது "வேச்யா" விஷயம் என்று சிலர் கூறுகின்றனர்.

வியூஜெ-ஃ பஹுமெக்ஷண வு.க்ஷாஹயீத ॥ ௪ ॥

பிறகு தனக்கு கார்யஸித்தியை நினைத்தால் கபிலகோவின் மூத்ரத்தால் சுத்தம் செய்துவிட வேண்டும்.

விஜ்யெ-ஃ யஉஸ்ய ஶ்ருஹெ வண்யும் ஸ்யாக தத
உத்ரயா ஜுஹுயாக ॥ ௫ ॥

வ்யாபாரத்திற்காக உள்ள த்ரவ்யம் வ்யாபாரமாகாமல் தங்கி நிற்குமானால் அவை வ்யாபாரமாவதற்குக் கீழ்க்கண்ட படி செய்யவேண்டும்.

"அக்நிமித்வா" என்றாரம்பித்து முகாந்தம் அக்நி கார்யங்களைச் செய்துகொண்டு "யதஹம் தநேந" என்ற மந்த்ரத்தால் வ்யாபாரமாகவேண்டிய த்ரவ்யத்தில் சிறிது ஹோமம் செய்ய வேண்டும். மேல் ப்ரயோகம் கிடையாது.

யம் காமயெத நாயம் மஹிஹ்யெதெதி ஜீவவிஷாணெ ஸ்வமூ
த்ராநீயஸ்த்வமுத்ராஹ்யாம் த்ரி: ப்ரஸவ்யம் பரிஷிஞ்சேக ॥

வேலைக்காரன் தன்னைவிட்டு விலகாமல் இருக்கவேண்டுமென்று நினைப்பவன், உயிரோடுள்ள பசுவின் கொம்பைக் கொண்டுவந்து, அதில் தன் மூத்ரத்தை வைத்து, அதைக் கொண்டு "பரித்வா கிரோமிஹம்" என்று ஆரம்பிக்கும் இரண்டு மந்த்ரங்களால் வேலைக்காரன் தூங்கும்பொழுது அவனை மூன்று தடவை ப்ரதக்ஷிணமாகப் பரிஷேசநம் பண்ணவேண்டும்.

யேந வேயாத்³தா³ஸகர்மகரா: பலாயேரந் தஸ்மிந்நிக³டா³நி
ந்யவஸாயோத்தரா ஜுஹோதி ஜுஹோம்யாந் ॥ ௭ ॥

தாஸர்களும் சம்பளத்திற்கு வேலை செய்பவர்களும் வேலையை நிறுத்திவிட்டு ஓடிவிட்டால், எந்த வழியால் ஓடினர்களோ அங்கு மரவிலங்குகளை வைத்து, அடுத்துள்ள "ஆவர்த்தநவர்த்தய" என்றாரம்பிக்கும் நான்கு மந்த்ரங்களால் நான்கு ஹோமங்களைச் செய்யவேண்டும். இதுவும் அபூர்வகர்மா. முன் பின் அங்கங்கள் கிடையாது.

யத்³யேநம் வ்ருக்ஷாத் ப²லமபி⁴நிபதேத் வயோ வாऽபி⁴
விக்ஷிபேத் உபவிஷ்டகேப்⁴யோ வா பி³ந்து³ரபி⁴நிபதேத்
தத்தத்³யதா²லிங்க³ம் ப்ரக்ஷாலயீத ॥ ௮ ॥

ப்ராம்ஹணன் போகும் பொழுது மரத்திலிருந்து பழம் எதிர்பாராமல் அவன்மீது விழுந்தாலும், பக்ஷி தன் பக்ஷத்தால் வீசினாலும், மழை எதிர்பாராத இடத்தில் ஆகாசத்திலிருந்து ஜலபிந்து மேல் விழுந்தாலும் அவைகளை அடுத்துள்ள "யதிவ்ருக்ஷாத்" என்றாரம்பிக்கும் மந்த்ரங்களால் அந்தந்த இடத்திற்கனுகுணமான மந்த்ரத்தைச் சொல்லி அலம்பவேண்டும். மரத்திலிருந்து பழம் விழுந்தால் "யதிவ்ருக்ஷாத்" என்ற மந்த்ரத்தையும், பக்ஷியின் இறக்கைகள்மேல்பட்டால் "யேபக்ஷிண:" என்பதையும், ஜலபிந்து விழுந்தால் 'திவோநுமா" என்பதையும் சொல்லி அலம்பவேண்டும்.

அகா³ரஸ்தூ²ணாவிரோஹணே மது⁴ந உபவேஶநே
கும்ப்⁴யாநாம் கபோதபத³த³ர்ஶநே அஹோராத்ராணாம் ஶரீரே
ஷண்ணிருத்யா வாஸ்தோஷ்பதே ஶத்ருவாஸ்யாயாம்
நிஶாயாம் யத்ராவாந் ந ஶ்ருணுயாத் தத்³ரேணுவ்யஸநே
யாநாத்³யாஜ்யஹோமாந்த உத்தரா ஜுஹோதி ஹோமா ஜயாதி³
ப்ரதிபத்³யதே ॥ ௯ ॥

இங்கு அத்புதம், உத்பாதம் இவைகளுக்குச் சாந்தி சொல்லப்படுகிறது.

வீட்டில் தூணில் முளை தென்பட்டாலும், வீட்டில் தேன்கூடு வைக்கப்பட்டிருந்தாலும், சமையலறையில் புறுவின்கால் தென்

பட்டாலும், புத்ராதிகளுக்குச்சரீரபாதை ஏற்பட்டாலும், இவை போன்ற மற்ற எந்த அத்புதங்களும் உத்பாதங்களும் ஏற்பட்டாலும் கீழ்க்கண்ட சாந்தியைச் செய்யவேண்டும். அமாவாஸ்யையன்று நிசியில் ஜலசப்தம் காதில் கேட்காத இடத்தில் "அக்நிமித்வா" என்ற பூர்வதந்த்ரத்தை ஆரம்பித்து ஆஜ்யபாகம் முடியச் செய்து, "இமம்மேவருண" என்று ஆரம்பிக்கும் பதினொரு ஹோமங்களைச் செய்து ஜயாதியான உத்தரதந்த்ரத்தை முடிக்க வேண்டும்.

பரிஷேசநாந்தம் க்ருத்வாऽபிப்ரேதேப்ய உத்தரயா தக்ஷிண
தோऽஶ்மாநம் பரிதிம் ததாதி ததாதி ॥ ௧௦ ॥

பரிஷேசநம் முடியச் செய்துகொண்டு க்ருஹத்தில் இறந்தவர்களைக் குறித்துப் பயந்து தாங்களும் மாணத்தினின்று பயந்தால் அதைப் போக்கிக்கொள்ள அடுத்துள்ள 'இமம்ஜீவேப்ய:' என்ற மந்த்ரத்தால் ம்ருத்யுவை மறைக்கக் கல்லை வைக்கவேண்டும். ஸ்திரமாக இந்தக் கல் இருக்கச் செய்யவேண்டும். ஸூத்ரம் முடிவதற்கடையாளமாக 'ததாதி' என்பது திருப்பிச்சொல்லப் படுகிறது.

இதி த்ரயோவிம்ஶ: கண்ட: ॥

இருபத்து மூன்ருவது கண்டம் முற்றிற்று.

---

ஆபஸ்தம்பக்ருஹ்யஸூத்ரம் ஸமாப்தம் ॥

ஆபஸ்தம்ப க்ருஹ்யஸூத்ரம் முற்றிற்று.

---

7142
21
163